
ஆப்பிரிக்கா

(தென் கண்டங்கள்)



எஸ். முத்துக்கிருஷ்ணக்கரையாளர்

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு-அரசாங்கம்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—89

ஆப்பிரிக்கா

(தென் கண்டங்கள்)

(SOUTHERN CONTINENTS—AFRICA)

எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்,
பி.ஏ. (ஆனர்ஸ்) (இலண்டன்), எல்.டி., எஃப்.ஆர்.சி.எஸ்.,
உயர் விரிவுரையாளர், புவியியல்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—March 1966

B.T.P. No. 89

SOUTHERN CONTINENTS—AFRICA

S. MUTHUKRISHNA KARAYALAR

Price Rs. 3-25

Printed by
Sri B.L.S. Press,
65/1, Arcot Road.
Kodambakkam, Madras-24.

அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்லமெல்ல மறைந்து வருகின்றன. நாடு முழுதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம், 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'தென் கண்டங்கள்—ஆப்பிரிக்கா' என்ற இந் நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் 89ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 124 நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ் வன்னையை வாழ்த்துவோமாக. உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும்; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

எம். பக்தவத்ஸலம்

முன்னுரை

உலகத்து பூகண்டங்கள் யாவற்றிலும், உருவத்தில் மிகப் பெரியது ஆசியா. அதற்கு அடுத்தபடியாக ஆப்பிரிக்காவைச் சொல்லவேண்டும். ஆப்பிரிக்கா சமீபகாலத்தில்தான் அதிக விழிப்படைந்துள்ளது. உலக சமாதானத்திற்காக ஆசிய ஆப்பிரிக்க மக்கள் பெரிதும் முயன்றுவரும் இக் காலத்தில், நாம் ஆப்பிரிக்காவைப்பற்றி நன்ருக அறிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியம்.

என்னை இப் புத்தகம் எழுத ஊக்குவித்த சென்னை அரசாங்கத்துத் தமிழ் வெளியீட்டுக் கழகத்தாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புவி இயல் பிரிவு,
சென்னைப் பல்கலைக் கழகம்
1—9—1965

S. முத்துக்கிருஷ்ணாக் கரையாளர்

பொருளடக்கம்

ஆப்பிரிக்கா

(தென் கண்டங்கள்)

1. ஆப்பிரிக்கா — பொது விமரிசனம்

உலகத்திலுள்ள பூகண்டங்கள் எல்லாவற்றிலும், ஆப்பிரிக்கா ஒரு தனித்தன்மை வாய்ந்தது. அது பூமத்திய ரேகைக்கு இரு பக்கத்திலும் சமமான ஒரே தூரத்துக்கு வியாபித்திருக்கிறது. மற்ற பூகண்டங்களிலுள்ளது போல மலைத் தொடர்களும் சமவெளிகளுமாக இல்லாமல், மொத்தையாக ஒரே பீடபூமியாக அமைந்திருக்கிறது. சற்று முற்காலம்வரை அதை ஓர் 'இருண்ட கண்டம்' என்று குறிப்பிட்டு வந்தனர். அதற்குக் காரணம் அந்த தேசத்தைப்பற்றிப் பிற நாட்டாருக்கு உண்மையான விவரம் கிடைக்கவில்லை என்பதாகும். அங்கு நாகரிக மக்கள் சென்று விஷயங்களை நேரில் கண்டறிய முடியவில்லை. பொதுவாக அதைப்பற்றிய வெளிச்சம் ஏற்படவில்லை என்பதாகும். அதனுடன் அதிகக் கறுப்பு நிறமுள்ள மக்கள் வசிக்கும் பூகண்டம் என்ற சிலேடை அர்த்தமும் அதில் உண்டு.

ஆனால், தற்காலத்தில் ஆப்பிரிக்காவை 'விழிப்படைந்து வரும் பூகண்டம்' என்றும், 'குமுறிக்கொண்டிருக்கும் பூகண்டம்' என்றும் குறிப்பிடுகின்றனர் (Awakening Continent; A Continent in Ferment). ஏனெனில், 1945ஆம் வருடத்தில் நடந்த உலக மகா யுத்தத்திற்குப்பின் இந்தியா உட்படப் பல ஆசிய நாடுகளும் சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து, ஆப்பிரிக்க நாடுகளிலும் ஐரோப்பிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டு, ஒவ்வொரு நாடாகச் சுதந்திரமடைந்துவருகின்றன. ஆங்கில, ஃபிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த பல நாடுகளும் சுதந்திரமடைந்துவிட்டன. போர்ச்சுகலுக்கு எதிராகக் கடும் எதிர்ப்புப் போர் நடந்துகொண்டிருக்கிறது. தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள் அதிகம் குடியேறிக் கறுப்பு மனிதர்கட்கு, அதாவது, ஆப்பிரிக்கர்களுக்கும் அங்குச் சென்று குடியேறிய அநேக இலட்சம் இந்தியர்களுக்கும் ஓட்டுரிமை வழங்க மறுத்து, அவர்

களுக்கு அநேக இன்னல்கள் விளைவித்துவருகின்றனர். அதற்கு எதிராக உலகத்து நாடுகள் எல்லாமே அமெரிக்காவி லுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் முறையிட்டு நியாயம் வழங்கப் பாடுபடுகின்றன. இக் காரணங்களால்தான் ஆப்பிரிக்காவை விழிப்படைந்துவரும் பூகண்டம் என்று கூறுகின்றனர்.

ஆப்பிரிக்காக் கண்டத்தில், அதிலும் முக்கியமாகக் கடக ரேகைக்கும் மகரரேகைக்கும் மத்தியிலுள்ள உஷ்ணமண்டலப் பிரதேசத்தில் பதினைந்து கோடி நீக்ரோ மக்கள் வசிக்கின்றனர். சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு நீக்ரோ மக்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருந்தார்கள். அநேக மக்கள் அரைநிர்வாணமாகவும் முழுநிர்வாணமாகவுமாக இருந்தார்கள் என்று கூறப்பட்டது. ஆனால், தற்காலத்தில் அவர்கள் நாகரிகத்தில் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். ஆணும்பெண்ணும் ஐரோப்பிய முறையில் ஆடை அணிந்து வருகிறார்கள். விழிப்படைந்துவரும் மக்கள் உலகத்தில் மிகவும் பெருமையான ஐரோப்பிய நாகரிகத்தையே பின்பற்றத் தீர்மானித்துவிட்டனர்.

ஆப்பிரிக்காவில் நீக்ரோக்கள் மட்டுமன்றி அரேபியர்களும், ஆசிய மக்களும் ஐரோப்பியர்களும் பெருமளவில் வசிக் கின்றனர். இவ்விதமாக நிறத்திலும் கலாசாரத்திலும் வேறுபாடு களுடைய பலர் கூடி வாழ்வதற்குச் சில இடைஞ்சல்கள் ஏற்பட்டாலும், சில சமயம் நிறத்துவேஷ, மத, கலாசார சச்சரவுகள் ஏற்பட்டாலும், அவர்கள் எந்த விதத்திலும் சமரஸம் கண்டு அங்கேயே ஒற்றுமையாக வாழ வேண்டிய வர்கள்தாம்.

ஆப்பிரிக்காவின் உலோகச் செல்வம்

ஆப்பிரிக்கா மிகவும் செல்வம் படைத்த நாடு. உலகம் முழுவதிலும் வெட்டி எடுக்கப்படும் தங்கத்தில் பாதி அங்குதான் கிடைக்கிறது. அதே போல உலகத்தில் கிடைக்கும் குரோம் உலோகத்தில் மூன்றில் ஒன்றும், கோபால்ட் உலோகத்தில் முக்கால் பாகமும் அங்குதான் வெட்டி எடுக்கப்படுகின்றன. உலகத்து ஆலைத் தொழில்கட்கு வேண்டிய வைரங்கள் (diamonds) யாவும் அங்குதான் கிடைக்கின்றன. கலவை உலோகங்களுக்கும் ஜெட் இன்ஜின்களுக்கும் வேண்டிய அலுமி னியத்தில் பத்தில் ஒன்பது பாகம் அங்குதான் கிடைக்கிறது. உலகத்தில் கிடைக்கும் செம்பு, நாகம், மாங்கனீசு ஆகியவற்றில்

ஐந்தில் ஒரு பாகம் ஆப்பிரிக்காவின் சுரங்கங்களில் வெட்டி யெடுக்கப்படுகிறது. அங்குள்ள இரும்புச் சுரங்கங்கள் இன்னும் முழுதும் பயன்படுத்தப்படவில்லை. ஆப்பிரிக்காவில்தான் எண் ணெய் விதைகள் ஏராளமாக உற்பத்தி ஆகின்றன ; உலகத்து உற்பத்தியில் 90 சதவிகிதம் என்றே சொல்லலாம்.

அதுபோலவே உலகத்தில் உற்பத்தியாகும் கொக்கோவில் அறுபது சதவிகிதமும், நிலக்கடலையில் அதே அளவும், உலகத்தில் உற்பத்தியாகும் கற்ருழை நாரில் 35 சதவிகிதமும், பருத்தி, கம்பளி, உரோமம் இவற்றில் பத்து சதவிகிதமும் அங்குதான் கிடைக்கின்றன. ஆனுல், இப் பொருள்களின் ஏற்றுமதி அளவு அதிகமில்லை என்றும் கூறப்படுகிறது.

ஆப்பிரிக்காவின் உலோகச் செல்வத்தைக் கவனித்தோம். ஆனுலும், அந்தத் தேசத்தைப் பாலும் தேனும் பொழியும் நாடு என்று சொல்வதற்கில்லை. அதற்குக் காரணம், அந்த பூகண்டத்தில் ஐந்தில் இரண்டு பாகம் பாலைவனமாக இருப்பது. தேசத்தின் ஐந்தில் நான்கு பாகத்தில் அநேக வருடங்களில் வறட்சி ஏற்பட்டுவிடும். தேசத்தின் பெரும் பாகத்திலும் மண் வகைகள் மிகவும் மட்டரகமானவை. ஆங்காங்கு உண்டாகும் பயிர்களையும், வெட்டுக்கிளிகள் நாசம் செய்யும் அபாயம் உண்டு. பயிர்களில் அநேக பாகம் தாவர நோய்களால் பாதிக்கப் படுவதோடு, பறவைகளாலும் எலிகளாலும் பாதிக்கப் படுகின்றன. அங்குள்ள ஆடுமாடுகளுக்கும் அடிக்கடி நோய்கள் ஏற்படுவதும், பூச்சி புழுக்களால் அதிக சேதம் ஏற்படுவதும் உண்டு. மலேரியா, மஞ்சட் காய்ச்சல், வயிற்றுப் போக்கு முதலிய வியாதிகளால் ஜனங்களுடைய ஆரோக்யத்திற்கும் அதிக சேதங்கள் ஏற்படுவதுண்டு. இவ் வியாதிகள் ஒருசில இடங் களில்தான் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தற்காலத்தில் இவ் வியாதிகளை ஒழிப்பதற்கும், மக்களிடையே நல்லியல்பைப் பரப்பு வதற்கும் தீவிர முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன.

ஆப்பிரிக்காவில் பெரும் பாகமும், அதாவது, மூன்றில் இரண்டு பாகமும் உஷ்ண மண்டலத்தில்தான் இருக்கிறது. உலகத்திலுள்ள உஷ்ணமண்டலத் தரைப்பிரதேசம் முழுவதிலும் இது நாற்பத்து மூன்று சதவிகிதமாகும். ஆனுல், உஷ்ண மண்டலத்திலுள்ள ஜனத்தொகையில், ஆப்பிரிக்க உஷ்ணமண் டலப் பிரதேசத்தில் பதினைந்து சதவிகிதமே காணப்படுகிறது.

உஷ்ண மண்டலத்தில் பொதுவாக ஜனநெருக்கம், முன்னேற்றம், அபிவிருத்தி முதலியவை குறைவு. உதாரணமாக,

ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா முதலிய கண்டங்களின் உஷ்ணப் பிரதேசத்தைக் கூறலாம். தென் இந்தியாவும் இந்தோனேசியா வும் இவ் விதிக்கு விலக்கு.

உலகத்து உஷ்ணமண்டலப் பிரதேசங்கள் முழுவதையும் கவனிக்கும்போது, ஆப்பிரிக்க உஷ்ணமண்டலம் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் பெறுமானத்திலும் மொத்த வியாபாரத்திலும் பத்துச் சதவிகிதமே பங்கு கொள்கிறது. இவ் விதம் ஆப்பிரிக்க உஷ்ணமண்டலப் பிரதேசம் பின் நோக்க மடைந்திருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அங்கு விசாலமும் செழிப்புமான நதிகள் பாயும் பிரதேசம் அதிக மில்லை. நைஜர், காங்கோ, சாம்பஸி முதலிய நதிகள் பாயும் பிரதேசங்கள்கூட மனித ஆரோக்கியத்திற்கு மிகவும் இன்னல் விளைவிக்கும் சீதோஷ்ண நிலையுள்ளவையாயும், கொசுகு முதலிய அணுவுயிர்கள் நிறைந்தவையாயும், துரிதப் போக்குவரத்துக்கு லாயக்கற்றவையாயும் இருப்பதால் அங்கு அபிவிருத்தி ஏற்பட வில்லை.

உஷ்ண மண்டலத்து ஆப்பிரிக்காவில் பெரும் பாகமும் வறட்சியானது. மூவாயிரம் மைலுக்கும் அதிகம் அகலமான ஸஹாரா பாலைவனம் அதன் வறட்சிக்கு உலகப் பிரசித்திபெற்றது. உஷ்ண மண்டலத்து ஆப்பிரிக்காவில் சுமார் பாதிபாகம்தான் பயிர்த் தொழிக்குப் பயன்படக்கூடிய நிலையில் இருக்கின்றது. அங்குள்ள சில நதிகளிலும் போக்குவரவு சுலபமன்று. நீர் வீழ்ச்சிகளும் துரித கதியில் செல்லும் நதியின் பாகங்களும் (rapids) படகுகள் செல்ல ஏற்றவையல்ல. தேசத்தின் செல்வப் பொருள்கள் பல பாகத்திலும் சிதறிக் கிடப்பதோடு, அவற்றைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய ஜனநெருக்கம் அங்குக் காணப் படவில்லை. அங்குள்ள மக்களுக்கிடையில் (tribes) அடிக்கடி கலகங்கள் ஏற்படுவதுண்டு. அடிமைத்தனங்கூட ஒரு காலத்தில் அங்கு அதிகமாக இருந்தது. வனப்பிரதேசங்களில் கொடு நோய்களை உண்டுபண்ணும் அணுஜீவன்களாலும், விஷ உயிர் களாலும், வியாதியினாலும் மக்கள் பலர் மடிகின்றனர். இவ்விதக் காரணங்களால் இப் பிரதேசங்கள் அபிவிருத்தியடைவதில் தடை ஏற்பட்டது.

இயற்கை ஏற்படுத்தியுள்ள பெரிய தடைகளில் சிலவற்றை இங்குக் குறிப்பிடலாம்: துறைமுகம் அமைப்பதற்கு வசதியற்ற கடற்கரைப் பிரதேசம், பெரிய பாலைவனப் பிரதேசம், போக்குவரவுக்கு வசதியற்ற நதிகள், பூச்சிகளும் நோய்களும் நிறைந்த பிரதேசங்கள், இவற்றுக்கும் மேலாக அங்குள்ள

மக்களின் அந்நியர் மேலுள்ள பகை, எதிர்ப்பு இவைகளே. இவற்றைக் கடந்து சில ஐரோப்பியர் உள்நாட்டில் சென்று அங்குள்ள நிலைமையை வெளியுலகுக்கு எடுத்துரைத்தனர். முதலில் இதை அந்நியரே பயன்படுத்தினரெனினும், பின்னர் ஆப்பிரிக்க மக்களுக்கும் இது பயன்பட்டது. தற்காலத்தில் ஆப்பிரிக்காவில் அநேக இராச்சியங்கள் சுதந்திரம் அடைந்து வருகின்றன. இராஜீய சுதந்திரத்தோடு பொருளாதார சுதந்திரமும் பெற இன்னும் சில காலம் பிடிக்கலாம்.

தற்சமயம் இந்தியர்களும் ஆப்பிரிக்கர்களும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்போன்ற காரியங்களில் ஒன்றுபட்டுச் செயற்படும் இந்த சந்தர்ப்பத்தில், ஆப்பிரிக்கா கண்டத்தின் மேம்பாட்டிலும் புது முயற்சிகளிலும் பங்குபெற இந்தியர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு உண்டு. அதில் நாம் அவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டியது நமது கடமையாகும். ஆப்பிரிக்காவின் பல பாகங்களிலும் இந்தியர்கள் பல துறைகளிலும் பணியாற்றி வருகிறார்கள். இன்னும் அதிகமான உதவி செய்வதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படலாம்.

ஆப்பிரிக்காவில் ஜனத்தொகை மிகக் குறைவு. இந்தியாவைப் போலப் பத்து மடங்கு விஸ்தீரணமுள்ள பூகண்டத்தில் இந்தியாவிலுள்ளதுபோலப் பாதி ஜனத்தொகைதான் உள்ளது. இங்குச் சதுர மைலுக்கு 384 பேர் வசிக்கின்றனர்; அங்குச் சதுர மைலுக்கு 19 பேரே வசிக்கின்றனர். இந்தியர்கள் குடியேறுவதற்கும் வசதியாக அந்நாடு சமீபத்திலேயே அமைந்திருக்கிறது.

ஆப்பிரிக்காவைக் கண்டுபிடித்தல்

கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே பினீஷியர்களும், கிரேக்கர்களும், ரோமர்களும் ஆப்பிரிக்காவின் வடக்குக் கடற்கரைப் பிரதேசத்தை நன்கு அறிந்திருந்தார்கள். ரோம சாம்ராச்சியம் நிலைத்திருந்த காலத்தில், அதாவது, முதல் நூற்றாண்டுக்குமுன், ஆப்பிரிக்காவின் வடக்குக் கடற்கரைப் பிரதேசத்தை, பார்பரி இராச்சியம்முதல் செங்கடல்வரை தங்கள் ஆதிக்கத்துக்கு உட்படுத்தியிருந்தார்கள். பினீஷியர்கள், ஆப்பிரிக்காவின் மேற்குக் கரைப் பிரதேசத்தில் ஸியாராலியோன் வரையிலும், கிழக்குக் கரையில் டெல்காடோ முனைவரையிலும் கப்பல் பயணம் செய்ததாக அறிகிறோம். கிரேக்கர்களும் நைல் நதியின் தெற்கில் வெகுதூரம் சென்றதாகக் கூறப்படுகிறது. ஆனால், அவற்றின் பிரதிபலன்கள் அதிக நாள் நீடிக்கவில்லை. இவற்றையெல்லாம்விட முக்கியமான சம்பவம் என்னவென்றால், 7ஆம் நூற்றாண்டில் அரேபியர்கள்

ஆப்பிரிக்காவின் வடபாகத்தைத் தம் வசப்படுத்தி அங்கு அவர்களது முகம்மதிய மதத்தையும் ஸ்தாபித்தார்கள். முகம்மதிய மதம்தான் இன்றும் அப் பிரதேசத்திலும், அதற்குத் தெற்கிலும் நிலைத்து நிற்கிறது. ஸஹாரா பாலைவனத்திற்குத் தெற்கிலும் நீக்ரோக்கள் அதிகம்பேரும் முகம்மதிய மதத்தைத் தழுவியுள்ளனர். 15ஆம் நூற்றாண்டில் வட ஆப்பிரிக்க, தென்மேற்கு ஆசியப் பிரதேசங்கள் துருக்கியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால், ஐரோப்பியர்களுக்குக் கிழக்காசிய நாடுகளுடன் வாணிபம் செய்வது கடினமாயிற்று. எனவே, ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கப்பலில் இந்தியாவை அடைய எண்ணினர். போர்ச்சுகீஸியர்தாம் இம் முயற்சியில் முதலில் ஈடுபட்டனர். வெற்றி காணாத அநேக முயற்சிகளுக்குப்பின் 1497ஆம் வருடத்தில் வாஸ்கோடகாமா ஆப்பிரிக்காவின் தென்கோடியிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றி, கிழக்குக் கரையிலுள்ள நேட்டால் கடற்கரையில் தங்கி, இந்தியாவை அடைந்து, கள்ளிக்கோட்டையில் காலடி வைத்தார். ஆனால், வாஸ்கோடகாமாவின் வெற்றியின் பயனாக ஆங்காங்கே கடற்கரைப் பிரதேசத்தில் சில வியாபார ஸ்தலங்களும் கிறிஸ்துவப் பாதிரி மடங்களும் ஏற்பட்டனவே ஒழிய, பெரிய பட்டணங்களோ அல்லது உள்நாட்டுப் போக்குவரத்தோ ஏற்படவில்லை. ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பிரதேசத்தில் சௌகரியமான துறைமுகங்கள் ஏற்படவில்லை. கடற்கரையை அடுத்துள்ள பிரதேசங்கள் வறட்சியாகவோ, அல்லது அடர்ந்த காடுகளாகவோ இருந்தன. நதிமுகத்தின் வழியாகக்கூட உள்நாட்டில் பிரவேசிக்க முடியவில்லை. ஏனெனில், நதிகளில் நீர்வீழ்ச்சிகளும் துரிதப் போக்கும் அதிகமாக இருந்தன. பாலைவனமோ, வனமோ இல்லாத பகுதிகளிலுங்கூட ஆள்சுமையாகப் பொருள்கள் கொண்டுசெல்ல வேண்டியிருந்ததாலும், விஷ ஜந்துக்கள் சாரணமாகவும் போக்குவரவு வசதிகள் இல்லை. உள்நாட்டில் நடந்து பார்க்கப் போனவர்களும், அங்குள்ள மக்களின் பகைமை மனப்பான்மையால் விரட்டப்பட்டனர். ஆகவே, 18, 19ஆம் நூற்றாண்டுகளில்தான் சிலர் வெகு தைரியமாக இம் முயற்சியில் ஈடுபட்டனர். அதில் பலர் தங்கள் உயிரை இழந்தனர். மஸ்கோபார்க் என்பவர் நைஜர் நதிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தைக் கண்டறிந்தபோது, 1806ஆம் வருடத்தில் அங்குள்ள மக்களின் பகைமை உணர்வால் கொல்லப்பட்டார். 1823ஆம் வருடத்தில் டென்ஹேறன், கிளார் பர்டென் என்ற இருவரும் ஸஹார பாலைவனத்தைக் கடந்து, குறிப்புகள் எழுதியுள்ளனர். லிவிங்ஸ்டன், கலஹாரிப் பாலைவனத்தைக் கடந்து ஸாம்பஸி நதிப் பள்ளத்தாக்கை 1853,

1856-ல் கண்டுபிடித்தார். 1857, 63ஆம் வருடங்களில் பர்டென், ஸ்பேக், கிரான்ட் முதலியோர் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் சுற்றுப்பயணங்கள் செய்து நைல்நதியின் உற்பத்திப் பிரதேசத்தைக் கண்டுபிடித்தனர். லிவிங்ஸ்டன் இருபது வருடங்களுக்குமேல் ஆப்பிரிக்காவிலேயே சுற்றுப் பயணங்கள் செய்து, அங்குப் பல பாகங்களிலுள்ள மக்களுக்கு வைத்திய உதவிகள் செய்து, அங்கேயே 1873ஆம் ஆண்டில் உயிர்நீத்தார். 1874, 77ஆம் வருடங்களில் ஸ்டான்லி, தங்கனீக்கா ஏரிமுதல் அதன் முகத்துவாரம், காங்கோ நதிப்பிரதேசம்வரை கண்டறிந்தார்.

அதன் பின்னரே ஐரோப்பிய சாம்ராச்சியங்கள் பல பகுதிகளைத் தம் வசப்படுத்திக்கொண்டன. அவர்கள் அப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்தார்கள். ஆனால், தற்சமயத்தில் ஆப்பிரிக்க நாடுகள் ஒவ்வொன்றுகச் சுதந்திரமடைந்துவருவதைக் காண்கிறோம்.

2. இயற்கை அமைப்பு

நதிகள், கடற்கரைப் பிரதேசம்

ஆப்பிரிக்கா பூமத்திய ரேகைக்கு இரு பாகத்திலும் சரிசமமாகவே பரந்து கிடக்கிறது. ஆப்பிரிக்காவின் வடக்கில் டுனிஸியாவிலுள்ள பிளாங்கோ முனை (Cape Blanco, 37° 20″ West) முதல் தெற்கில் அகுல்லாஸ் முனை (Cape Agullas, 34° 40″ South) வரை அது வியாபித்திருக்கிறது. ஆனால், வடக்கிலுள்ள பாகம் அதிக அகலமாயிருப்பதால், விஸ்தீரணத்தைக் கவனிக்கும் போது, பூமத்திய ரேகைக்குத் தெற்கிலுள்ளதைவிட வடக்கிலுள்ள நிலப்பரப்பு இருமடங்காகும். ஆப்பிரிக்க தேசப்படத்தில் கிரீன்விச் தீர்க்கரேகையையும் கவனிக்கவேண்டியது அவசியம். அட்லஸ் பிரதேசத்தின் மத்தியின் வழியாக மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் அக்ரா (Accra) பட்டணத்திற்குச் சற்றே கிழக்கில் செல்லும் இந்தத் தீர்க்க ரேகையின் கிழக்கில்தான் ஆப்பிரிக்காவின் பெரும் பாகமும் நிலைகொள்கிறது.

ஆப்பிரிக்காவின் விஸ்தீரணம் 115 இலட்சம் சதுரமைல். (மலாகாஸி முதலிய தீவுகளையும் சேர்த்தால் 119 இலட்சம்.) அதாவது, இந்தியாவைப்போல் பத்து மடங்கு பெரிய பூகண்டம். 1869ஆம் வருடத்தில் சூயஸ் கால்வாய் வெட்டப்படுமுன் இது ஒரு சிறிய பூசந்தியால் ஆசியாவோடு இணைக்கப்பட்டிருந்தது. இந்த பூசந்தியின் அகலம் 88 மைல் ; சூயஸ் கால்வாயின் நீளமும் அதுவே. ஆனால், இந்தச் சிறிய பூசந்தியின் சரித்திர முக்கியத்துவம் மிகப் பெரியது. இந்த பூசந்தியினால்தான் வாஸ்கோடகாமா இந்தியாவுக்கு வழி கண்டுபிடிக்க ஆப்பிரிக்காவைச் சுற்றி வரவேண்டியதாயிற்று. அதனால்தான் ஆப்பிரிக்காவின் முழு உருவமும் உலகிற்குத் தெரிய வந்தது. வாஸ்கோடகாமாவின் கப்பல் பயணம் 1497-ல் நடந்தது. ஆனால், அதற்குப்

பின் மூன்று நூற்றுண்டுகளுக்குப் பின்னுங்கூட ஆப்பிரிக்காவைப் பற்றிய சரியான அறிவு யாருக்கும் கிடைக்கவில்லை.

ஆப்பிரிக்காவின் வடக்கிலிருந்து தெற்கேயுள்ள நீளம் (Cape Blanco to Cape Agullas) 5,000 மைலாகச் சொல்லலாம். கிழக்கிலிருந்து மேற்கே அதன் மிகவும் அகலமான பாகத்தில், அதாவது, வெர்டு முனையிலிருந்து (Cape Verde) கிழக்கில் ராஸ் ஹாபூன் (Ras Hafun) வரை நாலாயிரம் மைலுக்கும் அதிகமாகும். ஆப்பிரிக்காவில் பூமத்தியரேகை உகாண்டாவிலுள்ள என்டபே (Entebbe) வழியாகவும், காங்கோவிலுள்ள கோகிலார்ட்வில் வழியாகவும் செல்வதைக் காணலாம். இந்த பூகண்டத்தின் கிழக்கு மேற்கு எல்லைகள் 20° மேற்கு, 50° கிழக்கு என்று சொல்லலாம்; 20° கி. தீர்க்கரேகையை இக் கண்டத்தின் மத்திய தீர்க்கரேகை என்று சொல்லாம். நமது தேசத்தில் மத்திய தீர்க்க ரேகை 88° 30″ கிழக்கு என்பது கவனிக்கத்தக்கது.

ஆப்பிரிக்காவில் பூமத்திய ரேகையிலிருந்து தென் கோடி வரையுள்ள நீளம் 2,400 மைல். அதேபோல் அங்கிருந்து வட கோடிவரையுள்ள நீளம் 2,580 மைல். ஆப்பிரிக்காவின் மொத்த விஸ்தீரணமான 115 இலட்சம் சதுர மைலில், 90 இலட்சம் சதுர மைல் உஷ்ண மண்டலத்தில்தான் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பிரதேசம் அதிக வளைவுகளில்லாமல் ஒரே சீராக அமைந்திருக்கிறது. அதன் சுற்றளவு 19,000 மைல் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. விஸ்தீரணத்தையும் கடற்கரைச் சுற்றளவையும் ஒப்பிட்டுப் பார்த்தால், பத்து இலட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள மற்ற எல்லாக் கண்டங்களையும்விட ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பிரதேசம்தான் மிகவும் சொற்பமானது என்பது தெளிவாகும். கடற்கரையில் அதிக வளைவுகளோ உட்கடல்களோ இல்லாததால், நல்ல துறை முகங்கள் அமைப்பது சாத்தியமில்லை. தென் கோடியிலுள்ள கேப் டவுன் முதல் வடக்கே மத்தியதரைக் கடல்வரையுள்ள மேற்குக்கரைப் பிரதேசத்தில் ஏழு துறைமுகங்களே இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆப்பிரிக்காவின் கூட்டமைப்பில் (structure) சில முக்கிய அம்சங்களை இங்குக் கவனிப்போம். அந்தத் தேசத்தின் வடமேற்கிலுள்ள மடிப்பு மலைகளான அட்லஸ் மலைப் பிரதேசமும், தெற்கிலுள்ள கேப் மலைப் பிரதேசமும் தவிர ஆப்பிரிக்கா முழுவதும் பழங்காலத்திலிருந்தே ஒரே பீடபூமியாக அமைந்துள்ளது. அந்தப் பீடபூமியின் வயதைக் கணக்கிடுவதில் அதைக் காம்பரி

யன் யுகத்துக்கும் முற்பட்டதாகச் சொல்லலாம்; அதாவது, உலகம் தோன்றிய காலத்திலேயே ஏற்பட்ட பழங்காலக் கற்களாலானவை என்று சொல்லலாம். இவ் விஷயத்தில் அதன் கூட்டமைப்பு தென்னிந்தியா, அரேபியா, பிரேஸில் ஆகிய நாடுகளைப்போலவே அமைந்துள்ளது. காம்பிரியன் யுகத்துக்குப் பின் ஆங்காங்கே சில இடங்கள் தாழ்ந்துபோனதன் காரணமாக இப்பொழுது ஆப்பிரிக்காவின் கூட்டமைப்பில் ஒரு விசாலமான பீடபூமியையும் ஆங்காங்கே சில உட்குழிந்த பிரதேசங்களையும் (basins) காண்கிறோம். உட்குழிந்த பிரதேசமானாலும், அவற்றில் சில கடல் மட்டத்துக்கும் ஆயிரம் அடிக்குமேல் உயர முள்ளவை. இவ்வுட்குழிந்த பகுதிகள் சிலவற்றில் ஏரிகள் காணப்படுகின்றன. உதாரணமாக, சாட் ஏரி (Lake Chad), இங்காமி ஏரி (Lake Ngami). இவற்றில் சில சிற்றாறுகள் ஓடி ஏரியில் கலக்கின்றன; ஆனால், அங்கிருந்து ஓடிக் கடலுடன் கலப்பதில்லை. வேறு சில உட்குழிந்த பிரதேசங்களில், உதாரணமாக, காங்கோ உட்குழிந்த பிரதேசம், மத்திய நைஜர் உட்குழிந்த பிரதேசம் இவற்றில் ஆறுகள் பாய்ந்து, உட்குழிந்த பிரதேசத்தையும் கடந்து கடலில் கலக்கின்றன. ஆப்பிரிக்காவின் உட்குழிந்த பிரதேசங்களில் முக்கியமானவை லிபியா, சாட், மத்திய நைஜர், காங்கோ, இங்காமி, மக்கரிகரி, காலஹாரி, காரூ முதலியவை.


கிழக்கு ஆப்பிரிக்காவின் பீடபூமிப் பிரதேசத்தில் அநேகப் பிளவுப் பள்ளத்தாக்குகள் காணப்படுகின்றன. இவைகட்கு சமீபத்தில் எரிமலையால் ஏற்பட்ட சில மலைகளும் காணப்படுகின்றன. உதாரணமாக, கிலிமினியாரோ (19,820′), கென்யா (17,040′), மலை எல்கன் (14,126′).

ஆகவே, ஆப்பிரிக்காவின் கூட்டமைப்பை மூன்று விதமாகப் பிரிக்கலாம்:

1. ஆப்பிரிக்காவின் வடமேற்குக் கரையிலும் தென்கரையிலுமுள்ள மடிப்பு மலைகள். வடமேற்கிலுள்ள மலைகள் ஐரோப்பாவின் ஆல்ப்ஸ் மலைகள் உண்டானபோது ஏற்பட்டவை.

2. ஆப்பிரிக்காவின் மீதிப் பகுதிகள்—பூமியின் ஆரம்ப காலத்திலேயே உண்டான பழங்காலக் கற்களால் ஆன மொத்தையான பீடபூமிப் பிரதேசம்.

3. கிழக்கு ஆப்பிரிக்கா—இது ஆப்பிரிக்காவின் பீடபூமியின் பாகமே ஆனாலும், சில பிரத்தியேகத் தன்மைகள் கொண்டது. உதாரணமாக, பிளவுப் பள்ளத்தாக்குகள், எரிமலை காரணமான மலைச்சிகரங்கள் என்பன.



ஆப்ரிக்கா — இயற்கை அமைப்பு

படம் 1

இயற்கை அமைப்பு

இயற்கை அமைப்பில் ஆப்பிரிக்கா ஒரு மொத்தையான பீடபூமிப் பிரதேசம் என்று சொல்லலாம். அந்தப் பீடபூமியைச் சுற்றி ஒரு குறுகிய கடற்கரைப் பிரதேசம் காணப்படுகிறது. ஆப்பிரிக்காவில் 600 அடி உயரத்துச்குக் குறைவான பரந்த சமநிலங்கள் காணப்படுகின்றன. அந்தத் தேசத்தில் பெரிய பீடபூமியிலுங்கூட மலைத்தொடர்கள் ஒன்றும் காணப்படவில்லை; ஆசியாக் கண்டத்தின் இமாலயமலைகளைப்போலவோ, ஐரோப்பாவின் ஆல்ப்ஸ் மலைகளைப்போலவோ பெரிய மலைத் தொடர்கள் அங்கு இல்லை.

இயற்கை அமைப்புப் படத்தை நன்ருகக் கவனித்தால், தேசத்தின் வடக்கில் சில சிறிய மலைத்தொடர்களும், தெற்கில் பீடபூமியும், கிழக்கில் சில மலைகளும், மேற்கில் சில உயர்ந்த பிரதேசங்களும் காணப்படுகின்றன. கிழக்கு ஆப்பிரிக்காவில் சில மலைகள் 14,000 அடி உயரத்துக்கும் மேற்பட்டவை. சில மலைச்சிகரங்களில் பனிக்கட்டி உறைந்திருப்பதைக்கூடக் காணலாம். உதாரணமாக, ரூவன்ஸோரி (Ruwen zori). கிழக்கு ஆப்பிரிக்காவில் பீடபூமியின் உயரம் பொதுவாக 4,000 அடிக்கும் மேற்பட்டிருக்கும். மேற்கு ஆப்பிரிக்காவில் முக்கியப் பீடபூமிப் பிரதேசங்களாவன கினி பீடபூமிப் பிரதேசம் (Guinea highlands), டோகோலந்து, அட்டக்கோரா மலைகள், காமரூன் மலைகள் என்பன. இவற்றின் பொது உயரம் கடல் மட்டத்துக்குமேல் சுமார் 1,000 அடி.

தென் ஆப்பிரிக்காவில் சிறிய மடிப்பு மலைகளான காரூ மலைகளைத் தவிர மற்றப் பிரதேசத்தை ஒரு பெரிய பீடபூமி என்றே சொல்லலாம். அந்தப் பீடபூமியின் ஓரத்தில்தான் டிரேக்கன்ஸ்பர்க் மலை இருக்கிறது (6,000′). ஆப்பிரிக்காவின் தெற்கிலும் கிழக்கிலுமுள்ள உயரமான பீடபூமி வடக்கில் மூன்று பிரிவாகச் செல்கிறது. வட கிழக்கில் சென்று இத்தியோப்பிய மலைகளாகவும், நேர் வடக்கில் சென்று டிபஸ்ற்றி, டார்ஃபூர் (Tibesti, Darfur) முதலிய பீடபூமிகளாகவும், வடமேற்கில் இடைவிட்டுக் காமரூன்ஸ், வடக்கு நைஜீரியா முதலிய பீடபூமிகளாகவும் செல்கிறது.

கடல் மட்டத்துக்குமேல் 600 அடிக்கும் குறைவான சமநிலங்கள் அதிகம் இல்லை என்று சொன்னேம். அவை முக்கியமாகக் கடற்கரையை அடுத்த குறுகிய சமநிலைப் பிரதேசமும், நதிப் பள்ளத்தாக்குகளை அடுத்த தாழ்ந்த நிலங்களுமாகும்.

கடற்கரைச் சமவெளிப் பிரதேசம் மிக அகலமாக இருப்பது, தேசத்தின் மேற்கே செனிகல் பிரதேசத்திலும், நைஜர் தாழ் வரைப் பிரதேசத்திலும், கிழக்கே மொஸாம்பிக், ஸொமா லியா கடற்கரைப் பிரதேசத்திலும், வடக்கே நைல் நதியின் தாழ்வரைப் பிரதேசத்திலும் மட்டுமேயாகும்.

நதிகள்.

ஆப்பிரிக்காவின் நதிகளை இருவிதமாகப் பிரிக்கலாம் :

1. கடற்கரையையடுத்துப் பாயும் சிறு நதிகள். இவை அதிக வளைவில்லாமல் மிகவும் விரைவாகப் பாய்வதோடு, கப்பல் போக்குவரத்துக்கும் ஏற்றவையல்ல. உதாரணமாக, தென்னுப் பிரிக்காவிலுள்ள ஸண்டேய்ஸ், கிரேட் ஃபிஷ் முதலிய நதிகளைக் கூறலாம்.

2. மிகவும் நீளமான பெரிய நதிகள்: முக்கியமானவை நைல் நதி (4,150 மைல்), காங்கோ (3,000 மைல்), நைஜர், சாம் பஸி (1,300 மைல்), ஆரஞ்சு (1,200 மைல்), செனிகல் (1,000 மைல்) முதலியன.

ஆப்பிரிக்காவின் மிக முக்கிய நதிகளான நைல், காங்கோ, நைஜர் சாம்பஸி இந் நான்கு நதிகளிலும் அநேக நீர்வீழ்ச்சி களும் துரிதப் போக்குகளும் காணப்படுவதால், அவற்றின்மூலம் நதிப் போக்குவரத்தும் பிரதேச அபிவிருத்தியும் வெகுகாலம் தடைப்பட்டிருந்தது. மேலும், மழைக் காலத்தில்தான் இவற் றில் நீர் நிரம்பியிருக்கும்; மற்றக் காலங்களில் நீர் குறைந்து போவதால், இவை படகுப் போக்குவரத்துக்கும் பயிர்த் தொழி லுக்கும் உபயோகமற்றவை. நைல் நதியும் நைஜர் நதியும் உதாரணங்கள். இந் நதிகள் பாயும் கடற் பிரதேசத்தில் வேலி ஏற்றம் இல்லாததால், இந் நதிகளின் முகத்துவாரத்தில் டெல்டா ஏற்படக் காரணமாயிற்று. காங்கோ நதி தவிர மற்ற நதி களுக்கு டெல்டாப் பிரதேசங்கள் உண்டு. இந்த டெல்டாப் பிரதேசங்கள் பெரும்பாலும் சதுப்பு நிலங்களாகவும், ஆரோக் கியத்திற்கு ஊறு விளைவிப்பனவாகவுமுள்ளன.

ஆப்பிரிக்காவின் மூன்றில் ஒரு பாகம் உட்குழிந்த பிரதேசங் களாக இருப்பதால், அங்குப் பாயும் நதிகளோ சிற்றுறுகளோ கடலில் கலப்பதில்லை. ஆப்பிரிக்க நதிகளில் மிகப் பெரியது நைல். அதன் நீளம் 4,150 மைல். இதில் நீர்வீழ்ச்சி காரணமாகப் போக்குவரவுக்குத் தடை ஏற்பட்டாலும், ஆங்காங்கு சிறு தூரங்கட்குப் படகுகள் செல்ல வசதியுண்டு.

காங்கோ நதி (3,000 மைல் நீளம்): இதன் வெகு நீளமான உபநதிகளையும் சேர்த்து 11,000 மைல் நீளம் படகுப் போக்கு வரத்துக்குப் பயன்படுகிறது. ஆனால், படகுப் போக்குவரத்து லியோபோல்வில் பட்டணத்திற்கு மேலேதான் நடக்க முடிகிறது. மற்ற நதிகளைப்போல் இது கோடைக்காலத்தில் வறண்டுபோவ தில்லை. இந் நதியிலுள்ள லிவிங்ஸ்டன் நீர்வீழ்ச்சி இப் பிரதேசத் தின் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கிறது.

நைஜர் நதி (2,000 மைல்): இது மழைக் காலத்தில்மட்டும் மிகவும் பயன்படுகிறது. இதன் உபநதி பென்யூ (Benue); இதுவும் படகுப் போக்குவரத்துக்குப் பயன்படுகிறது.

சாம்பஸி (1,300 மைல்) : இதன் உபயோகமும் நீர்வீழ்ச்சி களால் தடைப்படுகிறது.

ஆரஞ்சு நதி (1,000 மைல்): இது படகுப் போக்குவரத்துக் குப் பயனற்றது என்றே கூறவேண்டும். மற்ற நதிகளான செனி கல், காம்பியா என்பவற்றில் மழைக் காலங்களில் படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது.

நதிகளில் நீர்வீழ்ச்சி இருப்பதால் அதைப் பயன்படுத்தி மின் சக்தி உற்பத்தி செய்யலாம் என்று நினைக்கலாம். ஆனால், இந் நதிகள் மழைக் காலத்தில்மட்டுமே நிரம்பி இருப்பதால், அவற் றின் பயன்கள் மிகக் குறைவாகும். எங்கு மின்சக்தி உற்பத்தி செய்யலாமோ அப் பிரதேசங்கள் ஜனநெருக்கமான இடங்களி லிருந்து அதிக தூரத்திலிருப்பதால், இம் முயற்சிகள் தடைப்பட்டு வருகின்றன. இருந்தாலும், வடமேற்கு, மேற்கு, மத்திய ஆப்பிரிக்கப் பிரதேசங்களில் சிறு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. நீர்ப்பாசன வசதிகட்குப் பெரிய அணைகள் கட்டுவது கூட இந் நதிகளின் போக்கினாலும் தேசத்தின் பொதுக் கட் டமைப்பினாலும் தடைப்படுகிறது. நைல் நதிப் பிரதேசத்தில் மட்டும் நீர்ப்பாசன வேலைகள் அபிவிருத்தி யடைந்துள்ளன. மத்திய நைஜர் பகுதியிலும் முயற்சிகள் நடந்துவருகின்றன. வடமேற்கு ஆப்பிரிக்காவிலும் தென் ஆப்பிரிக்காவிலும் சிறிய அளவில் நீர்ப்பாசன வசதிகள் செய்ய முயற்சிகள் நடந்து வருகின்றன.

ஏரிகள்

ஆப்பிரிக்காவின் உட்குழிந்த ஏரிப்பிரதேசங்களை இரு வகை யாகப் பிரிக்கலாம். முதல் வகையில் சாதாரணமாகத் தாழ்ந்த கரைகளால் சூழப்பட்டு அங்குப் பெய்யும் மழை, அங்கேயே ஏரியில் கலக்கும் தன்மையுடையது. உதாரணமாக, சாடு ஏரி,

இங்காமி ஏரி. இவைகளில் சில இடங்கள் உவர்நீர்ப் பிரதேசமாகவும், உப்பு எடுக்கக்கூடிய பகுதிகளாகவுமுள்ளன. உதாரணமாக, மக்கரிக்கரி உப்பளங்கள். இவை வருடந்தோறும் விஸ்தீரணத்தில் மாறுவதுமுண்டு.

வேறு சில உட்குழிந்த பிரதேசங்களில் நதிகள் பாய்ந்து ஏரிகளும் சதுப்பு நிலங்களுமாயிருப்பதுடன், ஏதேனும் ஒரு மார்க்கமாக நீர் வடிவதுமுண்டு. உதாரணமாக, திம்புக்துவுக்கு (Timbuktu) மேற்கிலும் தென்மேற்கிலுமுள்ள டேபோ (Debo) முதலிய ஏரிகளைச் சொல்லலாம். மத்திய காங்கோ பிரதேசத்திலுள்ள லியோபோல்ட் ஏரியையும் இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மற்றொரு சிறந்த உதாரணமாகும், விக்டோரியா-நியோன்ஸா ஏரி (Lake Victoria Nyanza).

ஆப்பிரிக்காவின் மற்றப் பெரிய ஏரிகளை மேற்கூறிய இரண்டாவது வகையில் சேர்க்கலாம். அவை உற்பத்தியிலும் நன்மையிலும் முற்றிலும் வேறுபட்டவை. அவை நிலைகொள்ளுவது ஆப்பிரிக்காவின் பிளவுப் பள்ளத்தாக்குப் பகுதியிலாகும். அவை அதிக நீளமும் ஆழமும் கொண்டவை. அவற்றின் கரைகள் சில சமயம் செங்குத்தான பாறைகளால் ஆனவை. இவ் ஏரிகள் சில வற்றில், உதாரணமாக, உடால்ஃப், ஸ்ற்றிபான் ஏரிகளின் நீர் கடலில் கலப்பதில்லை. தாங்கனிக்கா ஏரி, ஆல்பர்ட் ஏரி, நியாஸா ஏரி, உடால்ஃப் ஏரி யாவும் இந்தப் பிளவுப் பள்ளத்தாக்குப் பகுதியில்தான் நிலைகொள்கிறது. இந்த ஆப்பிரிக்கப் பிளவுப் பள்ளத்தாக்கு வடக்கில் வெகு தூரம் சென்று, செங்கடல் வழியாக இஸ்ரேல் நாட்டிலுள்ள சாக்கடல் (Dead Sea) வரை வியாபித்திருக்கிறது.

ஆப்பிரிக்காவின் ஏரிகளில் மிகப் பெரியது விக்டோரியா ஏரி. ஆனால், இது பிளவுப் பள்ளத்தாக்குப் பிரதேசத்திலில்லை. இது ஆப்பிரிக்கப் பீடபூமியில் மிக ஆழமில்லாத உட்குழிந்த பிரதேசத்திலிருக்கிறது. இது ஏறக்குறைய சமசதுர வடிவமானது. இந்த ஏரிகளின் நீர்மட்டம் பெரும்பாலும் மழைக் காலத்தைப் பொறுத்து உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படுகிறது. மழை இல்லாத காலங்களில் சூரிய வெப்பத்தால் நீர் அதிகம் வறண்டு போகிறது.

மண்வகைகள்

ஆப்பிரிக்காவின் மண்வகைகளைப் பற்றி அதிகமாக இன்னும் ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை. ஆனால், பொதுவாக அங்குள்ள மண் வகைகள் வளமானவையல்ல என்று கருதப்படுகிறது.

உஷ்ணமண்டலப் பிரதேசத்தில் பசையற்ற செம்மண்ணும், செம் பாறுங்கல் (laterite) நிலமுமே காணப்படுகிறது. மழை அதிக முள்ள மேற்கு ஆப்பிரிக்கா, கிழக்கு மடகாஸ்கர், காங்கோ பிர· தேசம் இவற்றில் மண்வகைகள் அதிக செழிப்பற்றவை. ஸவானு பிரதேசத்தில் அல்லது உஷ்ணமண்டலப் புல் பிரதேசத்தில் செம் மண் அதிக மணல் கலந்து காணப்படுகிறது. நல்ல வகையான மண்வகைகள் சூடான் பிரதேசத்தின் வடக்கிலும், டிரான்ஸ் வால், தென்ரொடீஷியாவின் பாகங்களிலும் ஒருவிதக் கரிசல் மண் காணப்படுகிறது. பாலைவனப் பிரதேசத்திலுள்ள மண்வகைகள் சில இடங்களில் மிகச் செழிப்புள்ளவையாக உள்ளன. நீர்ப் பாசன வசதி ஏற்பட்டால் பயிர்த் தொழிலுக்கு நல்ல பலன் தரும். தென்னுப்பிரிக்காவில் சுண்ணும்புச் சத்துக் குறைவான தவிட்டு நிற மண்வகைகள் சில இடங்களில் காணப்படுகின்றன. நைஜர் நதியின் தாழ்வரைகளிலும், காங்கோவும் அதன் உப நதிகள் பாயும் பிரதேசத்திலும், நைல் நதி பாயும் பிரதேசங் களிலும் வண்டல் மண்வகைகள் மிக முக்கியமானவை.

3. சீதோஷ்ண நிலை

பூமத்திய ரேகைக்கு வடக்கே 37° வரையிலும் தெற்கே 35° வரையிலும் வியாபித்துக் கிடக்கும் பூகண்டத்தில் பலவிதமான சீதோஷ்ண நிலைகள் ஏற்படுவது இயற்கைதான். பூகண்டத்தின் முக்கால் பாகமும் (90 இலட்சம் சதுரமைல்) உஷ்ணமண்டலத்தி லேயே ஸ்திதி செய்வதும் கவனிக்கத்தக்கது. அதன் பயனுகச் சில மலைச்சிகரங்களில் தவிரக் குளுமையான தட்பவெப்பநிலை காணப் படுவது அரிது. பூமத்திய ரேகை ஆப்பிரிக்காவின் நடுப்பாகம் வழிகடந்து செல்வதால், பூமத்திய ரேகைக்கு வடக்கே என்ன சீதோஷ்ண நிலை ஏற்படுகிறதோ அதே காலநிலை தெற்கேயும் காணப்படுகிறது. ஆப்பிரிக்கா முழுவதற்கும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலம் குளிர்காலமா, கோடைக் காலமா என்று சொல்வதற்கில்லை. வடக்கே கோடைக் காலமாயிருக்கும்போது தெற்கே குளிர் காலமாயிருக்கும். இது அந்தப் பூகண்டத்து ஸ்தானத்தின் விசேஷமாகும்.

ஆப்பிரிக்காக் கண்டத்தின் உருவத்தைப் பார்க்கும்போது பூமத்திய ரேகைக்கு வடக்கில்தான் அது மிகப் பருமனுகத் தோன்றுகிறது. அங்குக் கிழக்கு மேற்கு விசாலம் அதிகம். அக் கண்டத்தின் மூன்றில் இரண்டு பாகம் வடக்கில்தான் உள்ளது. அதுமட்டுமல்லாமல் ஆப்பிரிக்காவின் வடக்கிலும் வடமேற்கிலும் ஐரோப்பா, ஆசியா முதலிய பெரிய நிலப்பரப்புகள் கிடக் கின்றன. ஆனல், தென்பாகம் கடலால் சூழப்பட்டது. நிலப் பகுதியின் மேலிருந்து வரும் காற்று ஈரப்பசையற்றதாகவும், கடலிலிருந்து வரும் காற்று ஈரத்தன்மையதாகவும் இருப்பது யாவரும் அறிந்த விஷயம். மேலும், தென் அமெரிக்காவின் ஆன்டீஸ் மலையும், இந்தியாவுக்கு வடக்கே இமாலயமும் இருப் பதுபோல் ஆப்பிரிக்காவுக்கு வடக்கே பெரிய மலைத்தொடர் கள் அதிகமில்லை. அதனல் ஈரப்பசையுள்ள காற்றைத் தடுத்து

நிறுத்தி மழை பொழியச் செய்ய வசதிகள் இல்லையெனலாம். ஆப்பிரிக்காவின் கிழக்கிலும் தெற்கிலும் உள்ள பீடபூமி 3,000 அடி உயரத்துக்கும்மேல் இருக்கலாம். அதன் பலனாகச் சற்றே வெப்பம் குறைந்ததும் மழை குறைந்ததுமான பிரதேசங்கள் ஏற்படுகின்றன.

கடல் நீரோட்டத்தின் விளைவுகள்

ஆப்பிரிக்காவைச் சுற்றியுள்ள கடல்களில் ஏற்படும் கடல் நீரோட்டம் வெப்ப நிலையையும் மழையையும் வெகுவாகப் பாதிக்கிறது. வட ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் கனரீஸ் நீரோட்டம் என்ற குளிர் நீரோட்டம், அக் கடற்கரைப் பகுதியின் வெப்ப நிலையைச் சமனப்படுத்துகிறது. இதேபோல பூமத்திய ரேகைக்குத் தெற்கே பெங்குவலா நீரோட்டம் மற்றொரு குளிர்ந்த நீரோட்டமாகும். இது ஆப்பிரிக்காவின் தென்கிழக்குக் கடற்கரையில் வடதிசைநோக்கிப் பாய்ந்து அங்கும் வெப்பநிலையைக் குறைக்கிறது.

இதற்கு மாருக, தென்னாப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் மொஸாம்பிக் என்ற உஷ்ண நீரோட்டம் வடக்கு நோக்கிப் பாய்கிறது.

ஆப்பிரிக்காவின் பருவக் காலங்கள்

ஆப்பிரிக்காவின் முக்கால் பாகமும் உஷ்ணமண்டலத்திலேயே இருப்பதாகச் சொன்னோம். சூரியன் மார்ச்சு 21ஆம் தேதி பூமத்திய ரேகையினின்று வடக்கு நோக்கிச் சென்று, கடகரேகையில் ஜூன் 21ஆம் தேதி சேர்ந்து, திரும்பவும் பூமத்திய ரேகைக்கு செம்டம்பர் 21ஆம் தேதி வந்து சேருகிறது. அதன் பின் தெற்கு நோக்கிச் சென்று, மகரரேகையில் டிஸம்பர் 21ஆம் தேதி சேர்ந்து, மீண்டும் பூமத்திய ரேகைக்கு மார்ச்சு 21ஆம் தேதி வந்து சேருகிறது.

சூரியன் ஏதாவது ஓர் இடத்தில் நேராகக் கிரணங்களைப் பாய்ச்சும்போது, அவ்விடம் மிக்க உஷ்ணமாகி, அங்குள்ள காற்று மேல்நோக்கிக் கிளம்பி, அங்கு வாயு அழுத்தம் குறைகிறது. வாயு அழுத்தம் குறைந்த பிரதேசத்தில், சுற்றியுள்ள பிரதேசத்திலிருந்து காற்று வீசி, வாயு அழுத்தத்தைச் சரியாக்குகிறது. சுற்றியுள்ள பிரதேசத்திலிருந்து வரும் காற்று ஈரப்பசை உள்ளதா, இல்லையா என்பதைப் பொறுத்து, மழை அல்லது வெப்பக் காற்று ஏற்படுகிறது. வாயு அழுத்தம் அதிகமான பிரதேசத்திலிருந்து குறைந்த பிரதேசத்

திற்குக் காற்று வீசும்போது, அக் காற்றின் திசை அது புறப்பட்ட இடத்திலிருந்து எதை நோக்கி வீசுகிறதோ, அதற்குச் சற்றே வலப்பகுதியில் சென்று சேருகிறது. இது பூமியின் சுழற்சியால் ஏற்படுவதாம். வடகோளார்த்தத்தில் வலதிசையிலும், தென் கோளார்த்தத்தில் இடதிசையிலுமாகச் சரிந்து வீசுகிறது. இதுவே Ferrel's Land.

மேமுதல் அக்டோபர்வரையுள்ள காலநிலே (முக்கிய மாதம் ஜூலே)


இந்த மாதங்களில் சூரியன் பூமத்திய ரேகைக்கு வடக்கே சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது. ஆப்பிரிக்காவின் வடபாகத்தில் உஷ்ணம் அதிகமாயிருக்கும். ஸஹாரா பாலேவனத்தில் சில சமயங்களில் 120° F வெப்பங்கூட ஏற்படுவதுண்டு. உஷ்ணமான பகுதியில் காற்று அழுத்தம் குறைகிறது. அதனுல் கினி வளே குடாவிலிருந்து ஈரப்பசையுள்ள காற்று உள்நாட்டில் வீசி மேற்கு ஆப்பிரிக்காவுக்கு நல்ல மழையைக் கொடுக்கிறது. அதனுல் கடற்கரைப் பகுதியிலிருந்து வடகிழக்கே போகுந்தோறும் மழை குறைவு.

கானு கடற்கரைப் பகுதியின் கிழக்குப் பாகத்தில் மழை குறைவாயிருப்பது கவனிக்கத் தக்கது. அக்ரா பட்டணத்தில் வருட மழை 29" தான். அதற்குக் காரணம் தென்மேற்கிலிருந்து வீசும் ஈரக்காற்று அங்குச் சென்று சேரும் சமயம் ஈரத்தன்மை குன்றிவிடுகிறது. இத்தியோப்பியாவில் கன மழை பெய்யக் காரணம், அங்கு மலேகள் மிக்க உயரமாயிருப்பதும், வெகு சமீபத்தில் ஈரக்காற்று வீசுவதும்தான். இத்தியோப்பியா வில் நல்ல மழை இருக்கும்போது, ஆப்பிரிக்காவின் கிழக்குக் கொம்புப் பிரதேசம் (Eastern Horn) ஒரு மழைநிழல் பிரதேச மாகி, அங்கு மழை அதிகம் பெய்வதில்லே.

இந்த மாதங்களில் தென்னுப்பிரிக்காவில் குளிர்காலமாகும். சூரியன் பூமத்திய ரேகைக்கு வடக்கில் சஞ்சரிப்பதால், தென் கோளார்த்தத்தில் வீசும் மேற்குக் காற்றுகள் (westerlies) சற்றே வடக்கில் இழுக்கப்பட்டு, நன்னம்பிக்கை முனே, பிரா வின்ஸ் முனே முதலிய இடங்களில் நல்ல குளிர்கால மழை (winter rainfall) பெய்கிறது.


நவம்பர்முதல் ஏப்ரல்வரையுள்ள காலநிலே (முக்கிய மாதம் ஜனவரி)

இம் மாதங்களில் பூமத்திய ரேகைக்குத் தெற்கில் சூரியன் சஞ்சரிப்பதால், தெற்கில் கோடைகாலமும் வடக்கில் குளிர்கால



ஆப்ரிக்கா – ஜூலை மாதத்திய வெப்பநிலை அழுத்தம், காற்றுகள்

படம் 2



ஆப்ரிக்கா – ஜனவரி மாதத்திய வெப்பநிலை,
அழுத்தம், காற்றுகள்

படம் 8

முமாகும். மத்தியத் தென் ஆப்பிரிக்காவில் சூரிய உஷ்ணம் அதிகமாகிக் காற்று அழுத்தம் குறைந்து, கடற்காற்று அதை நோக்கி வீசுகின்றது. தென்கிழக்கிலிருந்தும் வடகிழக்கிலிருந்தும் வீசும் வியாபாரக் காற்றுகள் தென் ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் முதலிய பிரதேசங்களுக்கு மழையைக் கொடுக்கிறது.

சூரியன் தென்கோளார்த்தத்தில் சஞ்சரிக்கும்போது காற்று மண்டலம் சற்றே தென்திசையில் வீசுவதால், ஐரோப்பாவில் வீசும் மேற்குக் காற்றுகள் (westerlies) ஆப்பிரிக்காவின் வடமேற்கிலுள்ள அட்லாஸ் பிரதேசத்தில் மழையைக் கொடுக்கிறது.

ஆப்பிரிக்காவின் வெப்ப நிலையைக் கவனிக்கும்போது, சோமாலி குடியரசுப் பிரதேசம் வருடம் முழுவதும் மிக உஷ்ண மாக உள்ளது (80°F-க்குமேல்). சூடான் பிரதேசத்தில் பெரும் பாகமும், ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பிரதேச மும், எரிடிட்ரியா பிரதேசமும் ஜூலை மாதத்தில் மிக உஷ்ண மாகவும் (80°F-க்குமேல்), ஜனவரி மாதத்தில் சற்றுக் குறை வான உஷ்ணமாகவும் (70° முதல் 80° வரை) இருக்கின்றன. கினி பள்ளத்தாக்குப் பிரதேசம், நைல் பள்ளத்தாக்குப் பிரதேசம் முதலியனவற்றில் மழையில்லாத காலத்தில் அதிக உஷ்ணமும், மழைக்காலத்தில் சற்றுக் குறைந்த உஷ்ணமும் காணப்படுகிறது. காங்கோ பிரதேசத்தில் வருடம் முழுவதும் 70°முதல் 80°வரைஉஷ் ணம் ஏற்படுகிறது. ஸஹாரா பிரதேசத்திலும், தென் ஆப்பிரிக்க வெல்ட் பகுதியிலும் (டிரேக்கன்ஸ்பர்க் மலையைத் தவிர), மட காஸ்கர் மத்தியத் தென்பாகத்திலும் கோடைகாலத்தில் வெகு உஷ்ணமாகவும், குளிர்காலத்தில் சற்றுக் குறைந்தும் (50°—70° வரை) இருக்கிறது. ஆப்பிரிக்காவின் தென்மேற்குக் கடற்கரை யில் குளிர்ந்த பெங்குவலா நீரோட்டம் ஓடுவதால், அங்கு வருடம் முழுவதும் உஷ்ணம் குறைவாக (50°முதல் 70°வரை) இருக்கின்றது. அதுபோலக் கிழக்கு ஆப்பிரிக்கா, இத்தியோப் பியா மலைப்பிரதேசத்திலும் உஷ்ணம் குறைவு. வடமேற்கு ஆப்பிரிக்காவில் ஷார்ட்ஸ் (Shortts) பீடபூமியிலும், தெற்கே டிரேக்கன்ஸ்பர்க் மலைகளிலும் கோடைகாலத்தில் 50°முதல் 70° வரையும், குளிர்காலத்தில் 50°-க்கும் குறைவாகவும் குளிர் இருக்கும். மத்திய ஆப்பிரிக்காவில் கிலிமினியாரோ போன்ற சில மலைச்சிகரங்களில் பனிக்கட்டி உறைந்து கிடப்பதுண்டு.


ஆப்பிரிக்காவின் மழை அளவு

ஆப்பிரிக்காக் கண்டத்தில் பூமத்திய ரேகையை அடுத்துள்ள பாகத்திலும், மடகாஸ்கர் தீவின் கிழக்குப் பாகத்திலும் வருடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மழை உண்டு. வடக்கு-மத்திய ஆப்பிரிக்காவிலும், சூடான், இத்தியோப்பியா பிரதேசத்திலும், தென் ஆப்பிரிக்காவின் கேப் மாகாணத்தின் மேற்குப் பாகத்திலும் முக்கியமாக மே மாதம்முதல் அக்டோபர்வரையில்தான் மழை பெய்கிறது. தெற்கு-மத்திய ஆப்பிரிக்காவிலும், அட்லாஸ் பிரதேசத்திலும் நவம்பர்முதல் ஏப்ரல்வரையில்தான் மழை பெய்கிறது. கடைசியாக ஸஹாரா, காலஹாரி பாலைவனங்களிலும், ஆப்பிரிக்காவின் கிழக்குக் கொம்புப் பிரதேசத்திலும் வருடம் முழுவதும் சொற்பமாக மழை பெய்கிறது. சில வருடங்களில் மழையே இராது.

ஒரு தேசத்தின் சீதோஷ்ண நிலையைப்பற்றிக் கவனிக்கும் போது, அதன் பல பாகங்களிலும் பெய்யும் மழை அளவு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். மொத்த மழை அளவைப் பொறுத்துதான் தாவர அபிவிருத்தி, பயிர்த் தொழில் மேம்பாடு என்பன ஏற்படுகின்றன. இதில் மழை எப்பொழுது பெய்கிறது, எந்த விதமாகப் பெய்கிறது, எவ்வளவு பெய்கிறது, ஒவ்வொரு வருடமும் ஒரேவிதமாகப் பெய்கிறதா என்பதையும் கவனிக்கவேண்டும். திடீரென்று பெய்யும் அதிக மழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்படுமானால் நாசம்தான் ஏற்படும். மழை அதிக நாட்களுக்கு நின்று பெய்யுமானால் பயிர்த் தொழிலுக்கு நன்மை ஏற்படுகிறது. மழை அதிகம் பெய்யும் பகுதிகளில் நல்ல சிவப்பு மண்வகைகள் காணப்படும்; மழை குறைவான பகுதிகளில் சாம்பல் நிற மண்வகைகள் ஏற்படும்.

ஆப்பிரிக்காவின் வருட மழை அளவைக் குறிக்கும் படத்தைக் கவனித்தால், அப் பூகண்டத்தில் பாதிக்குமேலான பகுதிகளில் வருட மழை 2″-க்கும் குறைவாகும். பொதுவாக பூமத்திய ரேகையை அடுத்த பகுதிகளில்தான் அதிக மழை பெய்கிறது. தென் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் தென்கிழக்கு வியாபாரக் காற்றுகள் வீசுவதால் அங்கும் மழை அதிகம். ஆப்பிரிக்காவின் மேற்குப் பகுதியில், காமரூன் பகுதியில் மழை அதிகம். அங்குத் தென்மேற்குப் பருவக் காற்று வீசுவதால், அது மலைகளால் தடுத்து நிறுத்தப்பட்டு மழையை அதிகம் பெய்விக்கிறது. அங்கு வருட மழை 400″ ஆகும்.

இதுவரையில் ஆப்பிரிக்காவின் பொது சீதோஷ்ண நிலையைக் கவனித்தோம். நவீன வானிலை ஆராய்ச்சியாளர்கள், இந்த



ஆப்ரிக்கா - வருட மழை அளவு

படம் 4

சீதோஷ்ண நிலைகள் ஏற்படும் காரணத்தை, வாயுக்கூட்டங்கள் (air masses) எதிர்த்து முட்டி அதனால் ஏற்படும் விளைவாகக் கூறுகிறார்கள். அவை ஒன்றோடொன்று மோதும் பகுதியை 'ஃபிரன்ட்' (front) என்கிறார்கள். இவ் விவரங்கள் முக்கியமாக மேற்கு ஐரோப்பாப் பகுதியில் அதிகமாகக் கவனிக்கப்பட்டு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இவ்விதப் புதுச் சிற்றலைகளை ஆப்பிரிக்க சீதோஷ்ண நிலையோடு சேர்த்துக் கவனிக்கும்போது, ஜூலை மாதத்தில் இந்த வாயுக்கூட்டங்களின் மோதல் ஏகதேசம் வட அட்சாம்ச ரேகை 20° வடக்கே ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்றது. ஜனவரி மாதத்தில் அதை அவ்வளவு திட்டமாகச் சொல்ல முடியாவிட்டாலும், சுமாராகத் தென் அட்சாம்சம் 20°-யில் ஏற்படுவதாகக் கூறலாம்.

ஆப்பிரிக்காவில் சில பிரதேசக் காற்றுகள்
(Local Winds in Africa)

ஆப்பிரிக்காவின் முக்கியப் பிரதேசக் காற்றுகள் ஹெர்மற்றான் (Harmattan), ஸிராக்கோ (Sirocco), கம்ஸின், (Khamsin), பெர்க் (Berg) முதலியன.

ஹெர்மற்றான் : ஆப்பிரிக்காவின் வடபாகத்தில் நவம்பர் முதல் பிப்ரவரிவரை கோடைக்காலத்தில் ஸஹாரா பாலைவனத்திலிருந்து வீசும் வடகிழக்கு வியாபாரக் காற்று அதிகத் தூசி நிறைந்ததும் மிக வறட்சியானதுமாயிருக்கிறது. இது மேற்கு ஆப்பிரிக்காவை நோக்கி வீசுகிறது. இதன் பலன் கினி கடற்கரைவரை அனுபவப்படுகிறது. இக் காற்று வீசும்போது மனித சருமங்கூட வறண்டு வெடிப்புகள் ஏற்படுகின்றன. மரங்களும் பயிர் வகைகளும் வாடி வதங்கிப் போகின்றன. புழுதியினால் அதிக தூரம் பார்க்க முடிவதில்லை. ஆனால், இக் காற்று வீசுவதனால் உஷ்ணம் தணிகிறது. கோன்கோ முதலியவை உலரவைப்பதற்கு இக் காற்றுப் பயன்படுகிறது.

ஸிராக்கோ: இதுவும் புழுதி மண்டிய வெப்பக் காற்றாகும். ஸஹாராவிலிருந்து வடக்கு நோக்கி வீசுகிறது. இது முக்கியமாகக் கோடைக்காலத்தில்தான் வீசுகிறது. ஆனால், வருடத்தின் பெரும் பகுதியிலும் வீசலாம். இது வடக்கு நோக்கி, மத்திய தரைக் கடற்கரைப் பிரதேசத்தை நோக்கி வீசுவதால், அங்குள்ள முந்திரிப் பயிருக்கும் ஆலிவ் மரங்களுக்கும் தீமை செய்கிறது.

மாதவாரி வெப்பமும் மழை அளவும்

(ஆப்பிரிக்காவின் சில முக்கிய இடங்களின் மாதவாரி வெப்ப அளவும் மழை அளவும் கீழே குறிக்கப்பட்டுள்ளன.)

இடம்	—	அடி	—	ஜ	பி	மா	ஏ	மே	ஜூ	ஜூலை	ஆ	செ	அ	ந	டி	வருட வெப்பம் (பா °)	வருட மழை அளவு (இ)
அலெக்ஸாண்டிரியா	32°வ	105	பா° இ	56 2	57 1	60 ½	64 0·1	69 —	74 —	77 —	79 —	77 —	73 0·2	67 1	60 0·2	23 —	— 7.2
கெய்ரோ	30°வ	67	பா° இ	54 0·2	56 0·2	61 0·2	68 0·1	75 0·1	80 —	81 —	81 —	77 —	72 0·1	65 0·1	57 0·2	27 —	— 1·2
அல்ஜியர்ஸ்	37°வ	194	பா° இ	53 5	54 4	57 3	60 2	65 2	71 1	75 0·1	77 0·2	74 2	65 3	60 5	55 5	24 —	— 32
பிஸ்க்ரா	35°வ	410	பா° இ	51 1	55 0·4	60 1	67 0·3	75 0·9	84 0·2	89 0·1	88 0·4	82 1	70 1	59 1	52 1	38 —	— 8
கார்ட்டூம்	16°வ	1247	பா° இ	74 —	77 —	83 —	89 —	92 0·1	92 0·4	89 2	87 3	90 1	90 0·2	83 —	77 —	18 —	— 7
ஜூபா	4°வ	1509	பா° இ	84 0.2	85 0·6	85 1	84 5	81 6	80 5	78 5	78 5	80 4	81 2	82 1	83 0·7	7 —	— 37
லாகோஸ்	7°வ	10	பா° இ	81 1	83 2	83 4	83 6	82 11	79 19	78 11	78 3	79 5	80 8	81 3	82 1	5 —	— 74
இஸமு		3769	பா° இ	75 2	76 3	75 7	75 6	73 8	72 4	71 2	73 4	73 2	75 2	75 4	75 3	5 —	— 47

லியோ போல்ட் வில்	4°தெ	1066	பா° இ	79 5	79 6	80 8	80 8	79 6	75 0·3	73 0·1	74 0·1	77 1	79 5	79 9	78 6	7 —	— 54
டார்ஸெஸ் அலாம்	7°தெ	47	பா° இ	81 3	82 3	81 6	80 12	78 7	76 1	75 1	75 1	75 1	76 2	79 3	81 3	7 —	— 43
டபோரா	5°தெ	4151	பா° இ	73 5	73 5	73 7	73 5	72 1	70 0.1	71 —	72 —	76 0·3	78 1	76 4	73 7	8 —	— 35
மொஸாம் பிக்யூ	15°தெ	49	பா° இ	81 9	81 9	81 6	79 3	76 1	73 0·7	72 0·4	73 0.5	75 0·4	78 0·2	82 0·9	82 4	10 —	— 35
ஸாலிஸ்பரி	18°தெ	4831	பா° இ	69 8	69 7	68 5	65 1	61 0·4	57 0·1	58 —	59 0·1	66 0·2	71 1	70 4	69 7	14 —	— 33
டர்பன்	30°தெ	50	பா° இ	76 5	76 5	75 6	72 4	68 3	64 2	63 2	65 2	67 3	69 5	71 5	74 5	13 —	— 47
பிரிட்டோ ரியா	26°தெ	4376	பா° இ	72 5	71 4	69 4	63 1	57 0·6	52 0·1	51 0·3	57 0·5	63 0·6	69 2·5	70 5	71 4	21 —	— 28·8
வால் விஸ்பே	22°தெ	24	பா° இ	66 —	67 —	66 0·1	65 0·1	63 —	61 —	58 —	57 —	58 —	59 0·1	62 —	65 —	10 —	— 0·3
போர்ட் எலிஸபெத்	34°தெ	176	பா° இ	70 1	71 1	68 2	66 2	62 2	59 2	58 2	59 2	60 2	63 2	65 2	69 2	13 —	— 22
கேப் டவுன்	34°தெ	40	பா° இ	70 0·7	71 0·6	69 1	64 2	60 4	57 4	55 4	56 3	58 2	62 2	66 1	69 1	16 —	— 25

கம்ஸின் : இதுவும் ஸஹாராவிலிருந்து வீசும் வறண்ட காற்றுகும். ஆனல், எகிப்தை நோக்கி வீசுகிறது; மனிதனுக்கும் பயிர்களுக்கும் திமை செய்கிறது.

பெர்க் : இது வெப்பமான வறட்சியான வடக்கு நோக்கி வீசும் காற்று. இது தென்னுப்பிரிக்காவில் கேப் மாகாணத்தில் ஏற்படுகிறது. பயிர்களுக்கு மிகவும் தீமை செய்கிறது.

ஸிமூன் (Simoon) : ஆப்பிரிக்காவில் வீசும் பிரதேசக் காற்றுகளில் இதுதான் மிகவும் அபாயகரமானது. இது ஸஹாரா விலேயே ஏற்படும் ஒரு சுழற் காற்று. அதிகப் புழுதி மண்டிய இக் காற்று அதிக தூரம் பார்க்க முடியாமல் செய்கிறது.

மேலே சொன்ன காற்றுகளெல்லாம் வறட்சியானவை. பெர்க் காற்றைத் தவிர மற்றவையெல்லாம் ஸஹாரா பாலே வனத்திலேயே உற்பத்தியாகின்றன.

4. இயற்கைத் தாவரம்

ஆப்பிரிக்காவில் வனங்கள், புல்பிரதேசங்கள், பாலைவனங்கள் இவை பொதுவாக மழை அளவைப் பொறுத்து அமைந்துள்ளன. மழை அதிகமுள்ள இடங்களில் வனங்களும், மழை குறைவான பகுதிகளில் பாலைவனங்களும், குளிர்காலத்தில் மழையற்ற பகுதி களில் புல் பிரதேசங்களும் அமைந்துள்ளன.

மத்தியதரைக் கடலையடுத்த வடமேற்கு ஆப்பிரிக்கப் பகுதி யின் மலைகளில் கார்க் மரங்களும், மற்றவிதமான ஒக் மரங்களும், எப்பொழுதும் பச்சை நிறமான செடிகளும் அதிகமாகக் காணப் படுகின்றன. இவ்விதமான மரங்களும் செடிகளும் அப் பிரதேசத்தின் சீதோஷ்ணநிலைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. ஆலிவ் மரம் இப் பிரதேசத்தில் செழிப்பாக வளருகிறது. கிருஷி செய்யப்படும் பயிர்களில் முக்கியமானவை கோதுமை, திராட்சை, ஆரஞ்சு என்பன. இதுபோன்ற சீதோஷ்ண ஸ்திதி தான் ஆப்பிரிக்காவின் தென்மேற்கே கேப் மாகாணத்திலும் ஏற்படுகிறது. அதனால் அங்கும் இதுபோன்றே பயிர்த் தொழில் நடைபெறுகிறது. பழவகைகள் பயிர் செய்வது தற்காலத்தில் அதிகம் நடைபெறுகிறது. அங்குள்ள புல்வெளிகள் ஆடுமாடு வளர்த்தலுக்கு ஏற்றவையாகும்.

மிதமண்டல வனங்கள் : இவை ஆப்பிரிக்காவில் அதிகமில்லை. இத்தியோப்பிய மலைகளின் தாழ்வரைகளில் சற்றே காணப் படுகின்றன.

பூமத்திய ரேகையை அடுத்த வனப்பிரதேசம் : இவை அதிக உஷ்ணமும், அதிக மழையுமான பகுதிகளில் காணப்படுகின்றன. சூரிய வெளிச்சம் தரையில் படாதவாறு அடர்த்தியாக இக் காடுகள் இருக்கின்றன. தரையிலும் அநேக விதமான செடிகொடிகள் வளர்ந்து, மிக உயர்ந்த மரக்கிளைகளைப்

பற்றிக்கொண்டு, இலகுவில் நடமாட முடியாதபடி நெருக்கமாக அமைந்துள்ளன. இந்த வனப்பிரதேசம் சற்று இடைவிட்டுக் காம்பியா நதி முகத்துவாரம்முதல் காங்கோ நதிப் பிரதேசம்வரை வியாபித்துக் கிடக்கிறது. கினி கடற்கரைப் பிரதேசத்தின் வடக்கில் மழை குறைவானதால் வனப்பிரதேசமும் அதிகமில்லை. காங்கோ நதியின் முகத்துவாரத்தை அடுத்தும் வனங்கள் அதிகமில்லை. ஆனால், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் மடகாஸ்கர் தீவின் கிழக்குக் கடற்கரையிலும் இம்மாதிரி வனங்கள் காணப்படுகின்றன. உஷ்ணமண்டலப் பிரதேசத்தில் நதி முகத்துவாரங்களில் சதுப்பு நிலங்கள் (swamps) அதிகம் காணப்படுகின்றன. நேட்டால் பிரதேசத்தின் கடற்கரையிலும் இவ்வித வனங்கள் காணப்படுகின்றன. ஆனால், அவை அதிகம் அடர்த்தியாக இல்லை.

மத்திய ஆப்பிரிக்காவிலும் மேற்கு ஆப்பிரிக்காவிலும் உள்ள வனங்களில் மஹாகனி, எண்ணெய்ப்பனை, பல ரகமான ரப்பர் மர வகைகள் முதலியவை மிக அதிகமாகக் காணப்படுகின்றன. ஆப்பிரிக்காவில் பிளவுப் பள்ளத்தாக்குப் பகுதியின் மேற்கில்தான் எண்ணெய்ப்பனை அதிகமாகக் காணப்படுகிறது. பல இடங்களிலும் வாழை அதிகமாகப் பயிரிடப்படுகிறது. கொக்கோ கிருஷியும் இப் பகுதியில் மிகவும் அபிவிருத்தியடைந்துள்ளது. நெல் கிருஷியும் ஆங்காங்கே நடைபெறுகிறது. மரச்சீனிபோன்ற கிழங்கு வகைகளும் (ஏழிலைக் கிழங்கு) ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன. ஆடுமாடு வளர்த்தல் அதிகமில்லை.

ஸவான்ா பிரதேசம்: ஆப்பிரிக்காவின் மத்தியிலுள்ள வனப்பிரதேசத்துக்கு இருபுறத்திலும் அதிக விஸ்தீரணத்தில் ஸவான்ா அல்லது உஷ்ணமண்டலப் புல் பிரதேசங்கள் அமைந்துள்ளன. ஆனால், இந்தப் புல்பிரதேசத்தில் எங்கும் ஒரே மாதிரித் தாவரங்கள் காணப்படுவதில்லை. ஆங்காங்குப் பெய்யும் மழை அளவு, பிரதேசத்தின் உயரம் என்பனவற்றைப் பொறுத்து அதில் வேறுபாடு காணப்படுகிறது. வனப்பிரதேசத்தை அடுத்துள்ள புல் பிரதேசத்தில் புல் சில வேளைகளில் 5′-க்குமேல் 8′வரை உயரமாக வளருகிறது. ஆங்காங்கே மரங்களும் காணப்படுகின்றன. வடக்கே ஸஹாரா பாலையை நோக்கிச் செல்லுந்தோறும் புல்லின் உயரம் 2, 3 அடியாகக் குறைவதோடு மரங்களும் சிதறியே காணப்படும். ஸஹாரா பாலைக்கருகில் இப் புல்பிரதேசம், முட்புதர்கள் அடர்ந்த பிரதேசமாகவே காணப்படுகிறது.

ஆப்பிரிக்காவில் சீதோஷ்ணநிலை பூமத்திய ரேகைக்கு வடக்கே எவ்விதம் மாறுதலடைகிறதோ, அது போலவே

பூமத்திய ரேகைக்குத் தெற்கிலும் மாறுபடுகிறதென்று முன்னமே கூறியுள்ளோம். சீதோஷ்ண நிலையைப்பற்றிக் கூறியது தாவர வர்க்கங்களுக்கும் பொருந்தும். பூமத்திய ரேகைக்கு வடக்கே என்னென்ன தாவர வித்தியாசங்கள் ஏற்படுகின்றனவோ அதேபோல்தான் பூமத்திய ரேகைக்குத் தெற்கிலும் ஏற் படுகிறது (Duplicate system of climate and vegetation in north and south of the equator of Africa).

ஆப்பிரிக்காவின் ஸவான்ஞ பிரதேசத்தில் காணப்படும் தாவரம் பொதுவாகப் புல் வகைகளும், ஆங்காங்கு மரங்களும் கொண்டவையாக இருக்கும். மழை குறைவான இடங்களில் பெரிய போபாப் மரங்கள் காணப்படுகின்றன. அதன் அடிப் பாகத்தைக் குடைந்து இருப்பிடங்களாகப் பயன்படுத்து கின்றனர். மரப்பட்டையிலிருந்து நார் உரித்துக் கயிறு திரிக்கவும் ஆடை நெய்யவும் பயன்படுத்துகின்றனர். இதன் பழங்கள் உணவுப் பொருளாகின்றன. இது தவிர வேலமரங்களும் அதிகம் காணப்படுகின்றன. அவை குடைபோன்று இருப்பதால் அவற்றைக் குடைமரங்கள் என்று கூறுகின்றனர்.

சூடான் பிரதேசத்தில் இவ்வித மரங்களிலிருந்து கோந்து (gum) சேகரிக்கிறார்கள். ஆப்பிரிக்காவின் தெற்கில் இது போலவே ஏரிப்பீடபூமியிலிருந்து டிரேக்கன்ஸ்பர்க் மலைவரை இந்த ஸவான்ஞ பிரதேசம் வியாபித்திருக்கிறது. கலாஹாரி மலைக்குச் சமீபத்தில் இது முட்புதர்ப் பிரதேசமாக மாறுகிறது.

ஸவான்ஞ பிரதேசத்தில் தினை, சோளம் வகைகள் பயிர் செய்யப்படுகின்றன. நிலக்கடலை ஏராளமாகப் பயிர் செய்யப் படுகிறது. பருத்தியும் வெகு காலமாகப் பயிர் செய்யப்படு கிறது. மிகவும் விசாலமான இப் பிரதேசத்தில் பயிர்த் தொழிலில் ஆங்காங்கே வேறுபாடுகளிருந்தாலும், அநேகமாக எல்லா இடத் திலும் ஆடுமாடு வளர்த்தல் ஒரு முக்கியத் தொழிலாகும்.

மிதமண்டலப் புல் பிரதேசம்: இதை 'வெல்டு (Veld) பிர தேசம்' என்றும் சொல்லுவார்கள். இப் பிரதேசத்தில் சோளம், பார்லி, புகையிலை என்பன கிருஷி செய்யப்படுகின்றன. நீர்ப் பாசன வசதியுள்ள இடங்களில் பழவகைகள் பயிரிடப்படு கின்றன; முக்கியமாகத் திராட்சை, ஆரஞ்சு என்பன. ஆடு மாடு வளர்த்தலும் இங்கு முக்கியமான தொழிலாகும்.


உஷ்ணப் பிரதேசங்களிலுங்கூடப் பல இடங்களில், உயர மான பீடபூமிப் பிரதேசங்களில் புல்தரைகள் காணப்படுகின்றன. உதாரணமாக, இத்தியோப்பியன் பீடபூமிகளிலும் மடகாஸ்கர் பீடபூமிகளிலும் உள்ளோரின் தொழில் ஆடுமாடு வளர்த்தலே.

பூகண்டத்தின் பெரும் பாகத்தில் பாலைவனங்களும், முட்புதர்களுமே காணப்படுகின்றன. முட்புதர்கள் தொடர்ச்சியாக இருப்பதில்லை. பூமத்திய ரேகைக்கு வடக்கிலுள்ள முட்புதர்ச் செடிகள் சிலவற்றில் நறுமணம் தோன்றுவதுண்டு. மடகாஸ்கர் தீவின் தென்மேற்குப் பாகத்திலும் இவ்வித முட்செடிகள் காணப்படுகின்றன. ஸஹாரா பாலைவனத்தின் உயரமான பாகங்களிலும் இவ்வித முட்செடிகள் வளருகின்றன. வடமேற்கு ஆப்பிரிக்காவில் ஷார்ட்ஸ் பீடபூமியிலும் இவ்விதமே. முழுவதும் பாலைவனமான பிரதேசம் பூமத்தியரேகைக்கு வடக்கில் தான் அதிகம். தெற்கில் அவ்வளவு அதிகமில்லை. ஸஹாரா பாலையின் பெரும் பாகமும் கற்களாலும் மணலாலும் ஆனவை. தண்ணீர் கிடைக்குமிடத்துச் சிறிது பயிர்பச்சை தோன்றுகிறது; ஜனவாசமும் ஏற்படுகிறது. பாலைவனத்தில் ஜனவாசமுள்ள இடத்தை 'ஒயஸிஸ்' என்று சொல்கிறார்கள். அங்குச் சில வேளைகளில் பேரீச்சை, கோதுமை என்பன பயிர்செய்யப்படுகின்றன. நைல் நதி பாயும் பிரதேசத்தின் இருபுறங்களிலும் கிருஷி செய்யப்படும் பிரதேசங்களைக்கூட ஸஹாரா பாலையின் மிகப் பெரிய 'ஒயஸிஸ்' என்றே சிலர் கருதுகிறார்கள்.

மிருகங்கள்

ஆப்பிரிக்காவில் உஷ்ண மண்டல வனப்பிரதேசங்களில் பல விதமான குரங்கு வகைகளும், பல வர்ண நிறமான பறவைகளும் காணப்படுகின்றன. உலகத்திலேயே மிகப் பெரிய 'கொரில்லாக்' குரங்கு இங்குதான் காணப்படுகிறது. நதிக் கரைகளிலும் சதுப்பு நிலங்களிலும் நீர்யானை, பாம்புகள் முதலியன காணப்படுகின்றன. புல் பிரதேசங்களில் மிகவும் வேகமாக ஓடக்கூடிய மான்வகைகள், ஒட்டைச் சிவிங்கிகள், காட்டு எருமை, எருமை மாடு, காண்டாமிருகம், யானை முதலிய மிருகங்களும், அவற்றை வேட்டையாடும் சிங்கம், ஓநாய் என்பனவும் காணப்படுகின்றன. மற்றப் பிரதேசங்களில் ஆடு மாடுகள், குதிரைகள் என்பன காணப்படுகின்றன. ஆனால், ஸெட்ஸ் ஈயின் (Tsetse-fly) தொல்லையால் தூங்கும் வியாதி (sleeping disease) ஏற்படுகிறது. வடமேற்கு ஆப்பிரிக்காவிலும் தென் ஆப்பிரிக்காவிலும் பல இடங்கள் ஆடு வளர்த்தலுக்கு மிகவும் ஏற்றவையாக இருக்கின்றன.

ஆப்பிரிக்காவில் காணப்படும் காட்டு மிருகங்கள், உலகத்தின் வேறு பாகங்களில் அவற்றில் பெரும் பகுதியை வேட்டையாடி அழித்துவிட்டபடியால், தற்காலத்தில் அவற்றை வேட்டையாடுவது தடுக்கப்பட்டுவருகிறது. ஆப்பிரிக்காவி



ஆப்ரிக்கா — இயற்கைத் தாவர பிரதேசங்கள்.

படம் 5

லுள்ள காட்டு யானைகள், இந்தியாவிலுள்ளவைபோல அலங்காரமானவையல்ல. ஆப்பிரிக்காவின் காட்டு எருமையும் வரிக் குதிரையும் மனித உபயோகத்திற்குப் பழக்க முயற்சி செய்யப் பட்டாலும், அது வெற்றிபெறவில்லை.

ஆப்பிரிக்காவின் உஷ்ணப் பிரதேசங்களில் பூச்சிகளின் தொந்தரவு அதிகம். முக்கியமாகக் கொசுகும் ஸெட்ஸ் ஈயும் (mosquito and tsetse-fly) மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் மிகவும் தீங்கு செய்கின்றன. ஸெட்ஸ் ஈயினால் தூங்கும் வியாதியும், கொசுகினால் மலேரியா நோயும் ஏற்படுகின்றன. இந்தப் பூச்சிகள் தற்காலத்தில் பூச்சிகொல்லி மருந்துகளினால் ஒழிக்கப் பட்டுவருகின்றன. இந்தப் பூச்சிகள் இல்லாத இடங்களில் வசிக்கும் ஜனங்கள் ஆரோக்கியமாக இருக்கின்றனர். ஆனால், சில சமயங்களில் மோட்டார், பஸ் வழியாகவும், ஏரோப்ளேன் வழியாகவும்கூட இப் பூச்சிகள் ஆரோக்கியமான இடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்குத் தீங்கு செய்கின்றன. கொசுகின் மூலம் மஞ்சட் காய்ச்சல் (yellow fever) ஏற்படுகிறது. இந் நோயாளிகள் பலதடவை வாந்தி எடுப்பதனால், இருதய அதிர்ச்சி ஏற்பட்டு மாண்டுபோவதுண்டாம்.

உஷ்ணப் பிரதேசங்களிலுங்கூட 4000′ உயரத்துக்குமேல் இப் பூச்சிகளின் தொல்லை இல்லை. இவை தவிரக் கறையான், செல் முதலிய பூச்சிகளால் மரப்பொருள்களுக்கும் சிறிய மரங்களுக்கும் நாசம் ஏற்படுகிறது. சிறிய பூச்சிகள் ஆடுகட்குத் தொல்லை செய்யாமல் இருக்கும்படி அவற்றை மருந்து கலந்த நீரில் முக்கி எடுப்பதுண்டு.

ஆப்பிரிக்கப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு இப் பூச்சிகள் பெரிதும் தடையாக இருந்துவருகின்றன. தற்சமயத்தில், உலக சுகாதார ஸ்தாபனங்கள் மூலமாகக் கொசுகுகளையும் ஸெட்ஸ் ஈக்களையும் ஒழிக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. இப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தினாலன்றி, ஆடுமாடு வளர்த்தலை முன்னேற்ற முடியாது. இவை தவிர வெட்டுக்கிளியினாலும் பயிர்கட்குப் பெருஞ் சேதம் ஏற்படுகிறது. அதிக மழை பெய்யும் அடர்ந்த வனப்பிரதேசங்களைத் தவிர மற்றப் பாகங்களில் இந்தத் தொல்லை அதிகமாக ஏற்படுவதால், அவற்றைப் பல தேச முயற்சியால் கட்டுப்படுத்த முயல்கின்றனர்.

5. ஜனங்களும் ஜனநெருக்கமும்

ஆப்பிரிக்காவில் ஜனங்கள் பல்வேறு ஜாதி, இனம், நிறம், மதம், கலாசாரம் முதலியவற்றில் வேறுபட்டவர்களாய் இருக்கிறார்கள். மிகவும் பழங்காலத்தில் ஆப்பிரிக்காவில் இருந்த மக்கள் என்று சொல்லப்படுபவர்கள் தென்மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள புஷ்மேன் (Bushman) என்னும் ஜாதியார். நீக்ரோ ஜாதியார் அரேபியா பிரதேசத்திலிருந்து அங்குச் சென்றவர்கள் என்றே கூறப்படுகிறது. அவர்கள் பல பிரிவுகளாக ஸஹாரா பாலையிலும் அதற்குத் தெற்கேயும் குடியேறியவர்கள். அவர்கள் சென்ற ஸஹாரா பாலையும் செழிப்பாக இருந்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. அங்குக் கறுப்பு ஜாதியார் என்று குறிப்பிடப்படுவோரில் முக்கியமாக நீக்ரோ ஜாதியார் 2,000 வருடங்களுக்குமுன் அங்குச் சென்றிருக்கலாம். வட ஆப்பிரிக்காவில் சென்று குடியேறியவர்கள் ஐரோப்பாவிலிருந்தோ, மேற்கு ஆசியாவிலிருந்தோ வந்திருக்கலாம். அவர்கள் ஹெமட்டிக் (Hamitic) இனத்தைச் சேர்ந்தவர்கள்.

வடமேற்கில் பார்பரி இராச்சியங்களில் வசிக்கும் ஸெனிட்டிக் ஜாதியார் அரேபியா பிரதேசத்திலிருந்து வந்து, வடஆப்பிரிக்காவிலும் கிழக்கு ஆப்பிரிக்காவிலும் குடியேறினர். வடமேற்கு ஆப்பிரிக்காவில் கார்த்தேஜ் இராச்சியத்தை ஸ்தாபித்த பினிஷியர்கள் ஸெனிட்டிக் இனத்தைச் சேர்ந்தவர்கள். மடகாஸ்கர் தீவில் குடியேறியவர்கள் மலேயா, இந்தோனேசியா முதலிய பிரதேசங்களிலிருந்து எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன் இந்து மகாசமுத்திரத்திலுள்ள பல தீவுகளின் வழியாக அங்குச் சென்று குடியேறினார்கள். சமீப காலத்தில் ஐரோப்பியர்களும் இந்தியர்களும் ஆப்பிரிக்காவின் பல பாகங்களிலும் குடியேறியுள்ளனர்.

பல நூற்றுண்டுகளாக ஹெமட்டிக், ஸெனிட்டிக் ஜாதியார்களும் நீக்ரோக்களும் கலந்து பழகியதனுல் ஏற்பட்ட ஓர் இனத்தவரைத் தவிட்டு நிறமுள்ளோர் அல்லது பொது நிறமுள்ளோர் எனலாம். ஐரோப்பியரை வெள்ளேயர் என்றும், நீக்ரோக்களேக் கறுப்பர் என்றும், மற்றவர்களேப் பொதுநிறத்தவர் அல்லது தவிட்டு நிறத்தவர் என்றும் சொல்வது பொருத்தமாகும். இவர்கள்பெரும்பாலும் நைல் நதிப் பள்ளத்தாக்கில் அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆனுல், கறுப்பு நிறத்தவர் பொதுவாக ஈஜிப்டின் வட பாகத்திலும் கிழக்கு ஆப்பிரிக்காவிலும் அதிகமாகக் காணப்படுகின்றனர். நீக்ரோக்கள் பெரும்பாலும் ஸஹாரா பாலேவனத்துக்குத் தெற்கில்தான் காணப்படுகின்றனர். அவர்களில் இரு பிரிவினரைச் சொல்லலாம்: (1) சூடான் நீக்ரோக்கள், (2) பாண்டூர்கள்.

காங்கோ பள்ளத்தாக்கின் வடக்கில் காணப்படும் சூடான் நீக்ரோக்கள் தோற்றத்தில் ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும், பலவித மொழிகள் பேசுகின்றனர்.

நீக்ரோக்கள் அநேகமாக ஒரே மொழியான பாண்டுதான் பேசுகின்றனர். ஆனுல், அவர்களில் அதிகக் கலப்பு ஏற்பட்டிருப்பதால், தோற்றத்தில் அதிக வித்தியாசம் காணப்படுகிறது. இவர்களேத் தவிர புஷ்மேன் இனத்தவரைப்பற்றி முன்னமே குறிப்பிட்டோம். அவர்கள் குள்ளமான மஞ்சள் கலந்த தவிட்டு நிறமுள்ளோர். இவர்களேத் தவிர ஹாட்டென்டாட் (Hattentot) என்ற இனத்தாரும் இங்கு உண்டு. இவர்கள் புஷ்மேன், நீக்ரோ ஆகியோரின் கலப்பு இனமாகலாம். காங்கோ சமநிலத்தில் வசிக்கும் பிக்மிகள் குள்ளமாகக் கறுப்பாக இருக்கிருர்கள். இவர்கள் குடிசைகள் கட்டாமல் மரக்கிளேகளில் வசிப்பதாகத் தெரிகிறது. இவர்களது எண்ணிக்கை குறைந்துவருவதாகவும் தெரிகிறது. பிக்மி, புஷ்மேன், ஹாட்டென்டாட் இந்த மூன்று வித இனத்தாரும் வெகு காலத்துக்கு முன்பிருந்த ஆதிக்குடிகளின் கடைசிப் பரம்பரை என்றே கருதப்படுகிருர்கள். இவர்களால் தேசத்துக்கு முன்னேற்றம் ஏற்படுவதாகச் சொல்லமுடியாது.

ஆப்பிரிக்க ஜனங்கள் பலவிதமான வேறுபாடுகளுள்ள கலாசார நிலேயில் இருக்கிருர்கள். பிக்மி, புஷ்மேன் முதலியோர் இன்னும் காடுகளில் வேட்டையாடி ஜீவிக்கின்றனர். நீக்ரோக்கள் பொதுவாக விவசாயம் செய்கின்றனர். வடமேற்கிலுள்ள பர்பர்கள் விவசாயம் செய்கின்றனர். ஆனுல், விவசாயத்தில் இப்போதும் பழங்கால முறைகளேயே கடைப்பிடித்துவருகின்றனர். அதில் இன்னும் முன்னேற்றமடையவில்லே.

ஒரு காலத்தில் ஸஹாரா பாலைக்குத் தெற்கில் செழிப்பான இராச்சியங்கள் இருந்ததாகத் தெரிகிறது. தற்காலத்திலுள்ள கானா, மாலி முதலிய இராச்சியங்கள், பழங்காலத்தில் இருந்து மறைந்துபோன பெரிய இராச்சியங்களின் பெயரையே ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பியர்கள் ஆப்பிரிக்காவுக்கு முதலில் வந்தபோது, முக்கியமாகப் போர்த்துகீஸியர் பல இராச்சியங்களை இழந்ததோடு, நீக்ரோக்களைக் கப்பலில் ஏற்றி அமெரிக்காவில் அடிமை வியாபாரம் நடத்தினர். ஏகதேசம் 500 இலட்சம் நீக்ரோக்களை நாடுகடத்தினர். சமீப காலம்வரையில் நீக்ரோ ஜாதியார் சிறு கிராமங்களிலேயே வசித்துவந்தனர். அவர்கள் வசிக்கும் பகுதிகளில் பட்டணங்கள் ஒன்றும் இல்லை. மத்தியதரைக் கடலையடுத்த வடமேற்குப் பிரதேசத்திலும், சூடானின் வடபாகத்திலும் கிழக்குப் பிரதேசம் அரேபியர்கள் வசித்த பிரதேசமாகும். இவையெல்லாம் சுதந்திர நாடுகளாயின.

ஆப்பிரிக்காவில் 60 இலட்சம் ஐரோப்பியர்களும் 8 இலட்சம் ஆசியாக்காரர்களும் வசிக்கிறார்கள். ஆசியாவினர் முக்கியமாக மூன்று பிரதேசங்களில் அதிக அளவில் குடியேறியிருக்கின்றனர். அவை தென்னாப்பிரிக்க யூனியன், கிழக்கு—மத்திய ஆப்பிரிக்கா, வட ஆப்பிரிக்கா. தென்னாப்பிரிக்காவில் 29 இலட்சம் வெள்ளையர் இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலோர் பிரிட்டிஷ், டச்சு இனத்தைச் சேர்ந்தவர்கள். பிரிட்டிஷ்காரர்கள் தங்கச் சுரங்கங்கள் இருக்கும் என்று பிரதேசத்திலும் கடற்கரைப் பட்டினங்களிலும் வசிக்கின்றனர். டச்சுக்காரர்கள் முக்கியமாகப் பயிர்த் தொழில் செய்கின்றனர். தென்னாப்பிரிக்காவில் நிறத் துவேஷம் தாண்டவமாடுகிறது. வெள்ளையரல்லாதாருக்கு ஓட்டுரிமை இல்லை. உலக நாடுகளின் அபிப்பிராயத்திற்கு எதிராகத் தென்னாப்பிரிக்க வெள்ளையர் அதிக காலம் நிலைக்கமுடியாது.

கிழக்கு, மத்திய ஆப்பிரிக்காவில் வட, தென் ரொடீஷியா, காங்கோ, கென்யா, தாங்கனிக்கா, உகாண்டா, போர்ச்சுகீசிய கிழக்கு ஆப்பிரிக்கா, அங்கோலா முதலிய பகுதிகளில் சுமார் 7 இலட்சம் வெள்ளையர் வசிக்கின்றனர். கென்யா, தென்ரொடீஷியா முதலிய பகுதிகளில் நில உயரத்தின் காரணமாகக் காலநிலை அநுகூலமாக இருந்ததால், பிரதேசங்களில் சில பட்டணங்கள் மட்டுமே ஏற்பட்டிருந்தன. அரேபியர்கள் குடியேறிய பிரதேசங்களில் அவர்களது மதத்தையும் பரப்பினர். முக்கியமாக சூடான், கிழக்கு ஆப்பிரிக்கா, உகாண்டா, நியாஸாலாந்து அல்லது மாலி முதலிய பிரதேசங்களில் கிறிஸ்துவப் பாதிரிகள் தங்கள் மதத்தைப் பரப்ப முயற்சி செய்கின்றனர். மற்றப் பகுதிகளில் நீக்ரோக்கள்

பெரும்பாலும் தங்களது ஆதிமதத்தையே பின்பற்றுகின்றனர்.

15ஆம் நூற்றுண்டில் சூடான் பகுதிக்கு வடக்கிலுள்ள ஆப்பிரிக்காவும், அரேபிய வியாபாரிகள் நடமாடிய கிழக்கு ஆப்பிரிக்காவின் சில பாகங்களும்மட்டுமே வெளியுலகுக்குத் தெரியும். ஆப்பிரிக்காவின் இதர பாகங்களில் ஜனங்கள் தமக்கு வேண்டியதைத் தாமே உற்பத்தி செய்துகொண்டு, மக்கள் கூட்டத்தார் பலரும் தமக்குள்ளே பகைமை காட்டிப் பல வேறுபாடுகளுள்ள கலாசாரத்துடன் வசித்துவந்தனர். ஐரோப்பியர்களில் போர்த்துகீஸியர்தாம் முதன் முதலில் ஆப்பிரிக்காவில் நுழைந்தனர். அங்கு கிடைக்கும் தங்கத்தையும் தாமே வியாபாரம் செய்ய எண்ணினர்.

அரேபியர்கள் அவர்களுக்குப் போட்டியாகக் கிழக்கு ஆப்பிரிக்காவில் நின்றனர். 17ஆம் நூற்றுண்டில் போர்த்துகீஸியர் அங்கோலாப் பகுதியில் குடியேறினர். டச்சுக்காரர்கள் தென்னுப்பிரிக்காவில் குடியேறினர். ஆப்பிரிக்கா தேசத்துப் பொருள்களை வியாபாரம் செய்வதில் எல்லாத் தேசத்தவரும் போட்டியிட்டனர். ஆப்பிரிக்காவின் கடற்கரையில் சில பாகங்களுக்கு Gold Coast, Ivory Coast, Slave Coast என்று பெயரிட்டதிலிருந்தே அவை என்ன வியாபாரத்துக்கு ஏற்பட்டவை என்பது தெளிவாகும். ஐரோப்பியர் முதலில் கடற்கரையில்மாத்திரம் குடியேறினர்; உள்நாட்டிற்குச் செல்லவில்லை. அவர்களது முக்கிய வியாபாரம் அடிமை வியாபாரமே. ஐரோப்பியர்கள் மேற்கு ஆப்பிரிக்காவிலும், அரேபியர்கள் கிழக்கு ஆப்பிரிக்காவிலும் இதைச் செய்தனர். தென் ஆப்பிரிக்காவிலும் காலநிலை அநுகூலமாயிருந்ததால் வெள்ளையர்கள் அங்கு குடியேறினர். அதனால் உஷ்ணமண்டலப் பிரதேசத்தில் அவர்கள் செல்வது 19ஆம் நூற்றுண்டுவரை நடைபெறவில்லை. 19ஆம் நூற்றுண்டில் தமது பொருள்களை அங்கு விற்க வசதி ஏற்படுத்த வேண்டும் என்று இங்கிலாந்தும், ஃபிரான்சும், பெல்ஜியமும் மத்திய ஆப்பிரிக்காவில் பல இடங்களைத் தங்கள் வசப்படுத்தினர். ஜெர்மானியரும் இத்தாலியரும் இதில் சற்றுப் பின்தங்கினர். 1916ஆம் வருடத்தில், யுத்தத்துக்குப்பின், ஜெர்மானியரின் பகுதிகளை இங்கிலாந்தும் ஃபிரான்சும் பிரித்தெடுத்துக்கொண்டன.

1939ஆம் வருடத்து யுத்தத்துக்குப்பின் ரொடீஷியாவிலும் காங்கோவிலும், ஆங்கிலேயர் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள். வடமேற்கு ஆப்பிரிக்காவில் தென் ஐரோப்பாவைப் போலுள்ள சீதோஷ்ணநிலை அநுகூலமாயிருப்பதால், ஃபிரஞ்சு

நாட்டார் கடந்த ஒரு நூற்றுண்டுக் காலமாக அங்குச் சென்று குடியேறியுள்ளனர். அவர்கள் விவசாயத்திலும் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளனர். சமீப காலத்தில் இப் பகுதியிலுள்ள நாடுகள், ஃபிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரமடைந்தது நாம் அறிந்ததே.

ஆப்பிரிக்காவில் 8 இலட்சம் ஆசிய நாட்டவர் வசிக்கின்றனர். முக்கியமாகத் தென்னுப்பிரிக்காவிலும் கிழக்கு ஆப்பிரிக்காவிலும் வசிக்கின்றனர். கிழக்கு ஆப்பிரிக்காவில் மட்டும் 7¾ இலட்சம் பேர். இதில் பெரும்பாலோர் இந்தியர்கள். இவர்கள் வியாபாரம் செய்கின்றனர். நேட்டால் பகுதியில், இவர்கள் ஜனத்தொகையில் 10% இருக்கிறுர்கள் என்று சொல்லப்படுகிறது. அரேபியர்கள் ½ இலட்சம் பேர். கிழக்கு ஆப்பிரிக்காவிலும் வடக்கு ஆப்பிரிக்காவிலும் வசிக்கிறுர்கள். லெபனுன், ஸிரியா தேசத்தவர் சிலர் மேற்கு ஆப்பிரிக்காவில் வசிக்கின்றனர். அவர்களும் வியாபாரம் செய்கின்றனர்.

ஜனநெருக்கம்

ஆப்பிரிக்காவின் மொத்த ஜனத்தொகை 26 கோடி. அதாவது, சதுர மைலுக்கு 23 பேர் வசிக்கின்றனர். எல்லாத் தேசங்களையும்போல் ஜனங்கள் சில இடங்களில்தான் நெருக்கமாகக் கூடி வசிக்கின்றனர். ஜனவாசமே இல்லாத பகுதிகளும் உண்டு. இது நிலப்பரப்பு, காலநிலை, மழை என்பனவற்றைப் பொறுத்து இருக்கிறது. ஸஹாரா, காலஹாரி பாலைகளில் ஜனவாசமே வெகு குறைவு. அதற்குக் காரணம் நீர் அரிதாயிருப்பதுதான். எங்குச் சற்று நீரூற்று அகப்படுமோ, அங்குச் சிலர் பேரிச்சம்பழம் முதலியன பயிர் செய்து வாழ்கின்றனர். இங்கு ஜனவாசம் சதுர மைலுக்கு 2 பேருக்கும் குறைவு. நைல் பள்ளத்தாக்குப் பிரதேசம் ஓர் ஓயஸிஸ் பிரதேசம் என்று சொல்லலாம். அங்கு நைல் நதியின் நீரைப் பயன்படுத்தி ஏராளமாகக் கோதுமை பயிர்செய்வது அதிக ஜனநெருக்கம் ஏற்படக் காரணமாயிற்று. வடமேற்கு ஆப்பிரிக்காவில், கடற்கரைப் பிரதேசத்திலும் பள்ளத்தாக்குகளிலும்தாம் ஜனங்கள் வெகு நெருக்கமாக வசிக்கின்றனர். சூடான் பகுதியில் ஆடுமாடு வளர்த்தலே மிக முக்கியத் தொழில் ஆனதால், அங்கு அதிக ஜன நெருக்கம் இல்லை. நைஜர் பகுதியில் கிருஷி அதிகம்.

ஆப்பிரிக்காவின் கிழக்குக் கொம்புப் பிரதேசத்திலும் இத்தியோப்பியாவின் சில பாகங்களிலும் ஜனநெருக்கம் குறைவாகக் காணப்படுகிறது. ஆனல், பிளவுப் பள்ளத்தாக்குப் பிரதேசத்

திலும் ஏரிப்பீடபூமியிலும் நல்ல மழையும் மண்வளமும் இருப்பதால், அங்குக் கிருஷியும் ஆடுமாடு வளர்த்தலும் நடைபெறுகின்றன. ஜனவாசமும் அதிகம். அதுபோலவே மடகாஸ்கர் தீவிலும் பீடபூமியிலும் ஜனநெருக்கம் அதிகம். மழை அதிகமுள்ள பிரதேசங்களில், பொதுவாக ஜனநெருக்கம் அதிகம். உதாரணமாக, காங்கோ பிரதேசம், மேற்கு ஆப்பிரிக்கா, ஸாம்பஸி நதிப் பிரதேசம் முதலியன.


தென்னாப்பிரிக்காவில் மழை குறைவான இடங்களில் ஜன நெருக்கம் குறைவு. மழை அதிகமுள்ள இடங்களிலும் சுரங்கத் தொழில் நடக்குமிடங்களிலும் ஜனவாசம் அதிகம். அங்குள்ள புல்தரைப் பிரதேசம் ஆடுமாடு வளர்த்தலுக்கு ஏற்றதேயொழிய ஜனவாசம் குறைவு.

ஆப்பிரிக்காவில் ஜனநெருக்கம் குறைவு என்று முன்பே குறிப்பிட்டோம். ஆனால், சமீப காலத்தில் ஐரோப்பியர்களின் தொடர்பினால் வைத்திய வசதிகள் ஏற்பட்டன. மக்களிடையே (tribes) பகைமை குறைந்தது. அடிமை வியாபாரம் நிறுத்தப் பட்டது. அதன் காரணமாக இப்போது ஆப்பிரிக்காவில் ஜனத் தொகை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. அடிமை வியாபாரத்தை அரேபியரும் போர்த்துகீசியரும்தாம் நடத்தினர் எனக் குறிப் பிட்டோம். அரேபியர் அதன்மூலம் முகம்மதிய மதத்தை மக்க ளிடையே பரப்பினர். ஆப்பிரிக்க மக்களை நெல்லும் கரும்பும் பயிர் செய்யப் பழக்கினர். போர்த்துகீஸியர்தாம் மரச்சீனி, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, சோளம் முதலிய பயிர்வகைகளை அங்குக் கொண்டுவந்தனர்.

பொதுவாக ஆப்பிரிக்காவில் அதிக ஜனநெருக்கமான பகுதி கள் நைல் நதி பாயும் பகுதியும், நைஜர் நதி பாயும் பகுதியும், தென்கிழக்கு ஆப்பிரிக்காவில் கடற்கரைப் பகுதியும், கென்யாவில் சில பாகங்களும், வடமேற்கு ஆப்பிரிக்காவுமாகும். நைல் நதி பாயும் பிரதேசத்தில் வண்டல் மண் செழிப்பாயிருப்பதாலும் நீர்ப்பாசன வசதி இருப்பதாலும், எகிப்தின் இப் பாகத்தில் மைலுக்கு 1000 பேர் வசிக்கின்றனர். ஆப்பிரிக்காவிலேயே இங்கு தான் ஜனநெருக்கம் அதிகம். நைஜீரியாவில் கொக்கோ, எண்ணெய்ப் பனை விவசாயம் அதிகம் நடைபெறுவதாலும், தற்காலத்தில் அடிமை வியாபாரம் நிறுத்தப்பட்டு, மக்களின் பகைமைப் போர்கள் விலக்கப்பட்டு, வைத்திய வசதிகள் அதிகமாவதாலும் ஜனநெருக்கம் அதிகம்.

தென்கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதிகளிலும் நல்ல மழை பெய்வதால் கரும்பும் சோளமும் உற்பத்தியாகின்றன;

ஆடுமாடு வளர்த்தலும் அதிகம் நடைபெறுகிறது. ஜோகன்னஸ் பர்க்கைச் சுற்றித் தங்கச் சுரங்கங்களிருப்பதால், அங்கும் ஜன நெருக்கம் அதிகம். கென்யாவின் உயரமான பகுதிகளிலும், விக்டோரியா ஏரியின் வடப்பக்கத்திலும் நல்ல காலநிலை அமைந் திருப்பதால், அங்கும் ஜனவாசம் அதிகம். வடமேற்கு ஆப்பிரிக்கா வில் நல்ல காலநிலை அமைந்துள்ளதாலும், ஐரோப்பாவிற்கு சமீபத்தில் இருப்பதாலும், அநேக ஐரோப்பியர் அங்குச் சென்று குடியேறியதாலும் அங்கும் ஜனநெருக்கம் அதிகம்.



ஆப்ரிக்கா — ஜனங்களில் முக்கிய இனத்தவர்

படம் 6

6. போக்குவரவு மார்க்கங்கள்

எந்தப் பிரதேசமும் அபிவிருத்தி அடைவதற்கு சுலபமான போக்குவரவு மார்க்கங்கள் மிக அவசியம். ஆப்பிரிக்காவில் பழங் காலத்தில் போக்குவரவு மார்க்கங்கள் அதிக அபிவிருத்தி அடையவில்லை. மேற்குப் பாகம், மத்திய பாகம் முதலிய வனப் பிரதேசங்களில் ஸெட்ஸ் ஈயின் உபத்திரவத்தால் ஆடுமாடுகள் அதிகம் காணப்படவில்லை. ஆகையால், மனிதர் தலைச்சுமையாகவே பொருள்கள் கொண்டுசெல்லப்பட்டன. நதியில் சிறு படகுகள் விடப்பட்டன. இத்தியோப்பியா, தென்னாப்பிரிக்கா, அட்லாஸ் பிரதேசப் புல்பகுதிகளில் கழுதைகள், ஆடுகள், கோவேறு கழுதைகள் பயன்படுத்தப்பட்டன. பாலைகளில் ஒட்டகங்களும் கழுதைகளும் பயன்படுத்தப்பட்டன. நைல்நதியின் வடபகுதியில் பாய்மரக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. தற்காலத்தில் தலைச்சுமையாகப் பொருள்கள் கொண்டுசெல்வது அநேகமாக நிறுத்தப்பட்டது. ஸைக்கிள்மூலம் சிறு பாதைகளில் போக வசதியிருப்பதால், ஸைக்கிள் அதிகமாகப் பயன்படுத்தப்படு கிறது.

ஜனவாசம் அதிகமான இடங்களில் நல்ல சாலைகளும் மோட்டார் வசதிகளும் மிகவும் அவசியம். ரயில் மார்க்கத்தி லிருந்து பிரிந்துசெல்லப் போடப்பட்ட அநேக சாலைகள் தற்சமயம் பிரயாணிகளையும் பொருள்களையும் பல இடங்களிலிருந்தும் ரெயில் பாதைக்குள் கொண்டுவந்து சேர்க்கின்றது.

ஆப்பிரிக்காவில் ஏற்பட்டிருக்கும் மாறுதல் என்னவென்றால், எங்கு நோக்கினும் சைக்கிள்களும், மோட்டார்களும், பஸ்களும் காணப்படுகின்றன. பலர் ரெயில் பயணத்தைவிடச் சாலை வழிப் பயணத்தையே விரும்புகின்றனர். ஆனால், வேண்டும் அளவுக்கு இன்னும் சாலை வசதி ஏற்படவில்லை. சில வழிகளில் நல்லவிதமான சாலைகள் இல்லாமல், அவை கோடைக்காலத்தில் தவிர மழைக்

காலத்தில் பயன்படுவதில்லை. சூடான் மாதிரிப் பிரதேசங்களில் கோடைக்காலத்தில் வெப்பத் தூசிக் காற்றுகள் வீசும்போது, சாலைப்பயணம் சௌகரியமாயிராது.

ரெயில் வழி

அந்நிய தேசத்தவர்களே அங்கு ரெயில் பாதைகள் ஏற்படுத்தினார்கள். அதனால் அவை கடற்கரையிலுள்ள ஒரு பட்டணத்திலிருந்து புறப்பட்டு, உள்நாட்டில் அவசியத்திற்குத் தக்கபடி ஒரு விவசாயப் பகுதிக்கோ அல்லது சுரங்கப் பகுதிக்கோ சென்று, அங்குள்ள சாமான்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவே உதவுகிறது. தென்னாப்பிரிக்க யூனியன் பிரதேசத்தில் தவிர மற்றப் பாகங்களில் ரெயில் பாதைகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருக்கின்றன. அமெரிக்காவிலோ, ஐரோப்பாவிலோ அல்லது நம் நாட்டிலோ இருப்பதுபோல 1000 மைல்களுக்குத் தொடர்ச்சியான ரெயில் பாதைகள் இல்லை. தெற்கிலுள்ள கேப் பட்டணம் முதல் வடக்கிலுள்ள கெய்ரோ பட்டணம்வரை ரெயில் பாதை ஏற்படுத்தப் பல வருடங்கட்குமுன் ஆலோசித்தும் இன்றுவரை அது ஏற்படவில்லை. அதற்குக் காரணங்கள் பலவற்றைக் கூறலாம். ஆப்பிரிக்கா கண்டத்தின் வியாபாரத் தொடர்பு முழுவதும்மேற்கு ஐரோப்பாவுடன் இருப்பதால், கெய்ரோவுக்கு ரெயில் பாதை போடுவதால் அந்த வியாபாரம் அதிகம் அபிவிருத்தி அடையப் போவதில்லை. தற்சமயத்தில் துரிதப் பயணத்திற்கும் பொருள்கள் அனுப்பவும் ஆகாய விமானம் அதிகம் பயன்படுவதும் ஒரு காரணமாகும்.

ஆப்பிரிக்காவின் ரயில்வே படத்தைப் பார்த்தால், மேற்கு ஆப்பிரிக்காவிலும், காங்கோ பிரதேசத்திலும், கிழக்குக் கொம்புப் பிரதேசத்திலும் ரயில் பாதைகள் அதிகமில்லை என்பது தெரியவரும். காங்கோ பகுதியில் நதியே நல்ல போக்குவரத்து மார்க்கமாகும். எங்கு நீர்வீழ்ச்சி இருக்கிறதோ, அதை ஒரு சிறிய ரெயில் பாதைமூலம் கடக்கிறார்கள்.

நதி மார்க்கம்

ஆப்பிரிக்காவில் நதிப் போக்குவரவு அதிக அபிவிருத்தி அடையவில்லை. அநேக நதிகளில் நீர்வீழ்ச்சிகளும் துரிதப் போக்கும் காணப்படுவதுதான் காரணம். நல்லபோக்குவரவுக்கு நைல், காம்பியா, நைஜர், காங்கோவும் அதன் உபநதிகளும், ஸாம்பஸி நதியின் அடிப்பாகம் முதலியவையே காரணம். அங்குள்ள நதிகளில் கால்வாய்களே இல்லை. சில முக்கிய ஏரிகளிலும்

படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது. முக்கியமாகத் தாங்கனீக்கா, விக்டோரியா, நியாஸா ஏரிகள்.

விமான மார்க்கம்

விமானப் போக்குவரவு மிகப் பெரிய அளவில் ஆப்பிரிக்காவின் பல பாகங்களிலும் நடைபெறுகிறது. பிரயாணிகளும் தபாலும் அதிக தூரத்துக்குப் பயணம் செய்கின்றனர். கேப் டவுனிலிருந்து லண்டனுக்குச் செல்ல இரண்டு வாரத்துக் கப்பல் பயணத்தை, விமான மார்க்கத்தில் ஒரே நாளில் முடிக்கலாம். ஆப்பிரிக்காவில் விமானப் போக்குவரவு ஆற்றும் கம்பெனிகளை, முக்கியமாகப் பிரிட்டிஷ், ஃபிரெஞ்சு, பெல்ஜியக் கம்பெனிகளே நடத்துகின்றன. பிரிட்டிஷ் கம்பெனிகள் இங்கிலாந்திலிருந்து கிழக்கு, தெற்கு, மேற்கு ஆப்பிரிக்காவுக்கும், ஃபிரெஞ்சுக் கம்பெனிகள் ஃபிரான்ஸிலிருந்து மத்திய, மேற்கு ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் ஆகிய இடங்களுக்கும், பெல்ஜியம் கம்பெனிகள் பெல்ஜியம் காங்கோவுக்கும் விமானங்களை அனுப்புகின்றன. இவை தவிர அமெரிக்க, டச்சு, போர்த்துகீஸியக் கம்பெனிகளும் தினமும் விமானங்கள் அனுப்புகின்றன.

பிரிட்டிஷ் விமானங்களின் முக்கிய மார்க்கம் ரோம், கெய்ரோ, கார்ட்டூன், நைரோபி வழியாக ஜோகனஸ்பர்க்குக்குச் செல்கிறது. இன்னொரு முக்கிய மார்க்கம் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள அக்ரா அல்லது லாகோஸுக்குச் செல்கின்றது. ஃபிரெஞ்சு விமான மார்க்கங்கள் டுனிஷியா, அல்ஜீரியா, மொராக்கோ முதலிய பிரதேசங்கட்கும், பிராஸாவில் வழியாக மடகாஸ்கருக்கும் செல்கிறது. பெல்ஜியம் விமான மார்க்கம் முக்கியமாக லியோபோல்வில் பட்டணத்துக்குச் செல்கிறது.

இப் பூகண்டத்தின் முக்கியத் துறைமுகங்கள் : கேப் டவுன், போர்ட் ஸயத், சூயஸ் இவை பெரிய கப்பல் போக்குவரத்துக்கும் உலக வியாபாரத்துக்கும் துறைமுகங்களாக விளங்குகின்றன. அங்குள்ள மற்றத் துறைமுகங்கள் ஜிகோதி, பம்பாஸா, பெய்ரா, லாரன்ஸோ மார்க்கஸ், டர்பன், லோபீற்ரு பே, லாகாஸ், தக்கோராடி, மன்ரேவியா, ஃபிரீ டவுன், டர்க்கர், காஸா பிளாங்கா, அல்ஜியர்ஸ், அலெக்ஸாண்டிரியா முதலியன.

7. இயற்கைப் பிரதேசங்கள்


ஆப்பிரிக்காவின் பொது விவரணத்தைப்பற்றி முதலில் கவனித்தோம். இனி, அப் பூகண்டத்தின் பல இயற்கைப் பிரதேசங்களையும் ஒவ்வொன்ருகக் கூர்ந்து பார்த்தால், அவற்றின் தனித் தன்மை விளங்கும். ஆப்பிரிக்காவைச் சுமார் 8 இயற்கைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம். மொத்தம் 117 இலட்சம் சதுரமைல் விஸ்திரணமுள்ள ஒரு பூகண்டத்தை எட்டுப் பாகங்களாகப் பிரிக்கும்போது, ஒவ்வொரு பிரிவும் சராசரி 15 இலட்சம் சதுர மைல் விஸ்தீர்ணமுள்ளதாகும். (இந்தியாவின் விஸ்தீர்ணம்12·36இலட்சம் சதுரமைல்.) இதன்மூலம் ஒவ்வொரு பிரதேசத்தின் பிரம்மாண்டமான அளவையும், அவை ஒவ்வொன்றையும் இன்னும் அதிக நுணுக்க முறையில் படிக்கவேண்டிய அவசியத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

ஆப்பிரிக்காவின் இயற்கைப் பிரதேசங்கள் என்று சொல்வதைவிடப் பொருளாதார மேகலைகள் என்று சொல்வது இன்னும் பொருத்தமாகும் என்று சிலர் கருதுகின்றனர்.

ஆப்பிரிக்காவின் முக்கியப் பிரதேசங்களாவன:

1. எகிப்து, சூடான் பிரதேசம்.
2. வடமேற்கு ஆப்பிரிக்காவும் அதனையடுத்த ஸஹாரா பாலையும்.
3. மேற்கு ஆப்பிரிக்கா.
4. மத்திய ஆப்பிரிக்கா.
5. கிழக்குக் கொம்புப் பிரதேசம்.
6. கிழக்கு ஆப்பிரிக்கா.
7. தென் ஆப்பிரிக்கா.
8. மடகாஸ்கர் முதலிய தீவுகள்.

ஆப்ரிக்கா — பொருளாதாரப் பிரிவுகள்



1. வடமேற்கு ஆப்ரிக்காவும், ஸஹாராவும்.
2. எகிப்தும் சூடானும்.
3. கிழக்குக் கொம்புப்பிரதேசம்.
4. மேற்கு ஆப்ரிக்கா.
5. மத்திய ஆப்ரிக்கா.
6. கிழக்கு ஆப்ரிக்கா.
7. மடகாஸ்கர்
8. தென்னாப்ரிக்கா.

படம் 7

1. எகிப்து, சூடான் பிரதேசம்

இப் பிரதேசத்தில் நைல் நதி பாய்வதால் இங்கு ஒருவித ஒற்றுமையைக் காணலாம். கால நிலை தெற்கே செல்லுந் தோறும் சற்று மாறுதலடைந்தாலும், இங்குள்ள முக்கிய விவசாயப் பொருள் பருத்தியாகும். அதற்கு அடுத்தபடியாக நெல். இங்குப் பயிர்த் தொழில் அபிவிருத்தி அடைய நைல் நதியே பெரிதும் உதவுகிறது. இப் பிரதேசத்தில் எகிப்து, சூடான் என்ற வெவ்வேறு இராச்சியப் பிரிவுகள் இருந்தாலும், நைல் நதி இவற்றைக் கூட்டிச் சேர்க்கும் ஒரு முக்கிய அம்சமாக இருக்கிறது.

2. வடமேற்கு ஆப்பிரிக்காவும் ஸஹாரா பாலையும்

வடமேற்கு ஆப்பிரிக்காவின் கண்ணோட்டம் முழுவதும் மெடிட்டரேனியன் கடற்கரைப் பிரதேசத்தையும், அதற்கு வடக்கிலுள்ள ஃபிரஞ்சு, இத்தாலிய தேசத்தையும் வெகு காலமாகச் சார்ந்திருந்தது. மொராகோ, டுனீசியா, அல்ஜீரியா இந் நாடுகள் சமீப காலம்வரை ஃபிரஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. அதேபோல் லிபியா, இத்தாலியர் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இங்குள்ள கடற்கரைப் பிரதேசம் செழிப்பான முன்னேற்றமடைந்த பிரதேசம். ஷாரட்ஸ் (Shortts) பீடபூமியும், அதற்குத் தெற்குள்ள ஸஹாரா பாலையும் அதிகம் வித்தியாசப் பட்டவை. இப் பகுதியில் ஃபிரெஞ்சுக்காரர்கள் ரெயில் பாதைகளை அபிவிருத்தி செய்துள்ளனர்; லிபியாவிலும் அதேபோல் இத்தாலியர் அபிவிருத்தி செய்துள்ளனர்.

3. மேற்கு ஆப்பிரிக்கா

இதன் எல்லைகள் வடக்கில் ஸஹாரா பாலையும், மேற்கிலும் தெற்கிலும் அட்லான்டிக் கடலும், கிழக்கே அதிக அபிவிருத்தி அடையாத மத்திய ஆப்பிரிக்கப் பிரதேசமும் ஆகும். இப் பிரதேசத்தில் போர்த்துகீஸியருக்குச் சொந்தமான கினி பிரதேசமும், முன்பே சுதந்திரமாயிருந்த நீக்ரோ இராச்சியமான லைபீரியாவும் தவிர, மேற்கு ஆப்பிரிக்கா வெகு காலமாகவே பிரிட்டிஷ், ஃபிரெஞ்சு ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. ஆனால், தற்காலத்தில் ஒவ்வோர் இராச்சியமாகச் சுதந்திரமடைந்துவருகிறது. நைஜர் நதி பாயும் பிரதேசம் இங்கு வெகு முக்கியமானது. ஃபிரெஞ்சு தேசத்தவர் நைஜர் நதியைப் போக்குவரவுக்கு நன்கு பயன்படுத்தினர். டாக்கர் பட்டணத்திலிருந்து பூமாக்கோவிற்கு (Bumoko) ரெயில் பாதையும் அமைத்தனர். சாடு ஏரியிலிருந்து கோல்டுகோஸ்ட் பிரதேசம்வரையில் பயிர்த் தொழில் அபிவிருத்தி அடைந்திருப்பதுடன் ஜனநெருக்கமும் அதிகம்.

4. மத்திய ஆப்பிரிக்கா

இயற்கை அமைப்பின் காரணமாக இப் பிரதேசம் பொருளாதாரத் துறையில் அதிக முன்னேற்றமடையவில்லை. ஜன நெருக்கமும் குறைவு. இங்குள்ள காங்கோ பிரதேசத்தில் உஷ்ண மண்டல வனங்களும், அதையடுத்து ஸவானு புல் பிரதேசமும் காணப்படுகின்றன. காங்கோ பிரதேசத்து வனங்களிலும், அது போலவே காமரூன்ஸ் பிரதேசத்திலும் பொருளாதார முன்னேற்றம் காண்பது சிரமமாக உள்ளது. ஆனால், அதன் கிழக்கு, தெற்கு ஓரங்களில் அபிவிருத்தி காணப்படுகிறது; சுரங்கத் தொழிலும் நடைபெறுகிறது. நல்ல போக்குவரவு மார்க்கங்கள் அமையாததுதான் இப் பகுதியின் அபிவிருத்திக்குத் தடையாக அமைந்துள்ளது.

5. கிழக்குக் கொம்புப் பிரதேசம்

இப்பிரதேசத்தில் பலவிதத்தில் இயற்கைஅமைப்பு, மழை என்பவற்றில் வித்தியாசப்பட்ட பல்வேறு பிரதேசங்கள் காணப்படுவதால், இங்கு அபிவிருத்தி வேகம் குறைவாக இருக்கிறது. இத்தியோப்பியாவில் போதுமான மழை பெய்வதால், அங்கு ஜனநெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. அதைத் தவிர மற்றப் பகுதிகள் மழை குறைவானவையாகவும், ஆடுமாடுகள் மேய்க்கமட்டுமே ஏற்றவையாகவும் உள்ளன. இங்கு ஜிகோதியிலிருந்து ஹாடிஸ் அபாபாவரை ரெயில் மார்க்கம் உண்டு. இங்கு இத்தியோப்பியாவும் ஸோமாலியும் சுதந்திர நாடுகளாம். ஜிகோதியை அடுத்த ஒரு சிறிய பிரதேசம்மட்டும் ஃபிரெஞ்சு ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கிறது.

6. கிழக்கு ஆப்பிரிக்கா

இப் பிரதேசத்தில் தடாகப் பீடபூமியும் அதன் கிழக்கேயுள்ள பாகமும் சேர்ந்திருப்பதால், இங்கு இயற்கை அமைப்பிலும் காலநிலையிலும் பல வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ஸவானு பீடபூமி தவிரப் பிளவுப் பள்ளத்தாக்குகளும் கிழக்கே ஒரு விசாலமான கடற்கரைச் சமநிலப் பிரதேசமும் காணப்படுகின்றன. சமநிலப் பிரதேசத்தில் நல்ல மழை ஏற்படுவதால் அங்கு ஜனநெருக்கம் அதிகம். கென்யா பகுதியின் வடபாகத்தில் மழை குறைவு. இங்குள்ள கென்யா, தாங்கனிக்கா, உகாண்டா, ருவாண்டா, புருண்டி முதலிய இராச்சியங்கள் சமீப காலத்தில் சுதந்திரம் அடைந்தன. ஜான்ஸிபார் இராச்சியத்தில் அரேபியர்கள் அதிகம் குடியேறியுள்ளனர் இப் பிரதேசத்தில் ஐரோப்பியர் உயரமான பாகங்

களில் குடியேறித் தம் நிலைகளை ஸ்தாபித்திருக்கின்றனர். இந்தியர்களும் இப் பிரதேசத்தில் அதிகமாக வசிக்கின்றனர். இங்கு முக்கியப் பயிர்த் தொழில் காப்பியும் சுற்றுழை நாரும் (hemp) ஆகும்.

7. தென்னுப்பிரிக்கா

இப் பெரிய பிரதேசத்தில் தென்னுப்பிரிக்கக் குடியரசும், போர்த்துகீஸியருக்குச் சொந்தமான கிழக்கு ஆப்பிரிக்கப் பிரதேசமும், மற்றும் வடதென் ரொடீஷியா, நியாஸாலாந்து முதலிய பிரதேசங்களும் இதில் அடங்கியுள்ளன. இங்கும் இயற்கை அமைப்பு, காலநிலை, இயற்கைத் தாவரம் முதலியவற்றில் வித்தியாசமான பல பிரிவுகள் காணப்படுகின்றன. இதில் ஸாம்பஸி நதி பாயும் பிரதேசமும், லிம்போப்போ, ஆரஞ்சு நதி முதலியன பாயும் பிரதேசங்களும் காணப்படுகின்றன. தென்னுப்பிரிக்கக் குடியரசில் ரெயில் பாதைகள் மிகவும் நல்ல முறையில் அபிவிருத்தி அடைந்துள்ளன. கேப் டவுன்முதல் காங்கோ பகுதியின் வடபாகம்வரை ரெயில் பாதைகள் செல்கின்றன. தென்மேற்கு ஆப்பிரிக்காவுக்கும் கேப் மாகாணத்துக்கும் ரெயில் பாதைகள் உண்டு. இப் பிரதேசத்தில் வெள்ளையர்கள் அதிக அளவில் குடியேறி பலமாகத் தங்கள் நிலையை ஸ்தாபித்துள்ளனர். சுரங்கத் தொழில் இப் பிரதேசத்தின் முன்னேற்றத்துக்கு ஒரு முக்கியக் காரணம். இங்குதான் ஆப்பிரிக்காவின் தங்கம், வைரம், நிலக்கரி முதலிய தாதுப்பொருள்கள் அதிக அளவில் வெட்டி எடுக்கப்படுகின்றன. காலநிலை அநுகூலமாயிருப்பதால், பயிர்த்தொழிலும் ஆடுமாடு வளர்த்தலும் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளன. இங்கு வெள்ளையரின் நிறத்திமிர் அதிகம். கறுப்பு நிறத்தவருக்கும் மற்ற ஆசிய மக்களுக்கும் ஓட்டுரிமை மறுக்கப்பட்டிருந்தது. வித்தியாசமான இனத்தவரிடையே மோதல் ஏற்படும்போது வெப்பம் அதிகமாகும். அதிலிருந்து சிறிது ஒளியும் பிறக்கலாம்.

8. மடகாஸ்கர் முதலிய தீவுகள்

சிறிது காலம் முன்புவரை இப் பெரிய தீவு ஃபிரஞ்சு ஆதிக்கத்திலிருந்தது. தற்சமயம் சுதந்திர நாடாக விளங்குகிறது. இயற்கை அமைப்பிலும் காலநிலையிலும் பல இடங்களிலும் வேறுபாடுகள் உள்ள இப் பகுதியில் போக்குவரவு மார்க்கங்கள் இன்னும் அபிவிருத்தி அடையவில்லை. இதனை அடுத்துள்ள மொரிசியஸ், ரீயூனியன் முதலிய தீவுகள் தற்காலத்தில் பொருளாதார முக்கியத்துவம் அடைந்துவருகின்றன.

இனி, இப் பிரதேசங்கள் ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனிப்போம்.

எகிப்தும் சூடான் பிரதேசமும்

ஆப்பிரிக்காவிலேயே பொருளாதாரவிஷயங்களிலும் இராஜீய விஷயங்களிலும் மிக முக்கியமானது இப் பிரதேசம்; அதிலும் முக்கியமானது எகிப்து நாடாகும். இப் பிரதேசம் சுமார் 7 இலட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ளதானாலும், எகிப்து நாட்டில் ஜனவாசமுள்ள பிரதேசம் சுமார் 13,000 சதுர மைலாகும்.

ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்திலுள்ள தாங்கனிக்கா ஏரியின் அருகில் நைல் நதி உற்பத்தியாகி, விக்டோரியா தடாகத்தில் பாய்ந்து, அத் தடாகத்தின் வடகோடியிலிருந்து 'விக்டோரியா நைல்' என்ற பெயருடன் வடக்கு நோக்கிச் செல்கிறது. இந் நதியின் முழுநீளம் 4,150 மைல். இது ஓவன் நீர்வீழ்ச்சியாகவும் ரிப்பன் நீர்விழ்ச்சியாகவும் பாய்ந்து, கியோகா (Kyoga) தடாகம் வழியாகச் சென்று, மறுபடியும் முர்ச்சிஸன் (Murchisan) நீர்விழ்ச்சியாகப் பாய்ந்து, ஆல்பர்ட் ஏரிக்குச் செல்கிறது. ஆல்பர்ட் ஏரியிலிருந்து நிமுலே (Nimule) வரையில் அதற்கு 'ஆல்பர்ட் நைல்' என்று பெயர். நிமுலேயில்தான் இந் நதி சூடான் பிரதேசத்தில் பிரவேசிக்கிறது. நிமுலே முதல் கார்டூன் வரையில் இந் நதிக்கு 'வெள்ளை நைல்' (White Nile) என்று பெயர்.

ஆல்பர்ட் ஏரியைவிட்டுச் செல்லும் இந் நதி பிளவுப் பள்ளத்தாக்கு வழியாக 200 மைல் தூரம்வரை சென்று, அதன்பின் ஓர் அகன்ற சதுப்பு நிலப் பகுதியாகிய சுட் (Sudd) வழியாகச் செல்கிறது. இப் பகுதி ஓர் உட்குழிந்த பிரதேசமானபடியால் அங்குச் சதுப்பு நிலச் செடிகளும், மூங்கில் களும், உயரமான கோரைப்புல் வகைகளும் வளர்ந்து, நதி எந்தத் திசையில் ஓடுகிறது என்பதைக்கூட மறைக்கும்படி ஒரு விசாலமான தடாகம் போல் காட்சியளிக்கிறது.

தற்காலத்தில் இந்த சுட் பிரதேசத்தில் ஆங்காங்குச் செடிகளையும் மூங்கிற் புதர்களையும் வெட்டிப் படகுப் போக்குவரவுக்கு ஏற்றபடி கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும், வெகு விரைவில் இச் செடிகள் அதிகம் வளர்ந்து கால்வாயை மறைத்து விடுவதால், அந்தப் போக்குவரவு மார்க்கத்தை வெகு சிரமத்துடனேயே காப்பாற்றிவர வேண்டியிருக்கிறது. தற்காலத்தில் இந்த சுட் பகுதியைச் சுற்றி வளைத்து ஒரு புதுக் கால்வாய்

அமைத்துவிடலாம் என்று யோசனை செய்யப்பட்டுவருகிறது. இவ்விதம் 100 மைல் தூரத்துக்குப் புதிதாகக் கால்வாய் வெட்டப்பட்டால், போக்குவரவு மார்க்கத்தைச் சரிப்படுத்துவதுடன் தற்சமயம் சதுப்பு நிலமாக உள்ள சுட் பிரதேசத்திலுள்ள நீரை வடித்து, அப் பகுதியைப் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுத்தலாம்.

நைல் நதியின் இடப்பக்கத்தில் பாஹர்-எல்-காஸெல் (Bahar-El-Ghazal) என்ற உபநதி வந்து சேருவதைக் கவனிக்கவும். ஆனுல், நைல் நதியின் வடக்குப் பாகத்தில் இத்தியோப்பியாவிலிருந்து மூன்று முக்கிய உபநதிகள் வந்து சேருகின்றன. அவைகளின் பெயர் ஸோபாத் (Sobat), நீல நைல் (Blue Nile), அட்பாரா (Atpara) என்பன.

கார்ட்டூன் நகர்வரையில் நைல் நதி மெதுவாகவே பாய்ந்து செல்கிறது. ஆனுல், கார்ட்டூன் பட்டணத்துக்கு வடக்கே கருங்கற் பாதைகள் காணப்படுவதால், அப் பகுதிகளில் நதி பாயும்போது துரிதப் போக்கு (rapids) ஏற்படுகிறது. இவ்விதம் கார்ட்டூன் நகருக்கும் ஆஸ்வான் நகருக்குமிடையில் ஆறு துரிதப் போக்குப் பிரதேசங்கள் காணப்படுகின்றன. ஆஸ்வான் பட்டணத்துக்குத் தெற்கில் சுமார் 200 மைல் தூரத்துக்கு நைல் நதி ஒரு குறுகிய பள்ளத்தாக்கு வழியாகவே பாய்கிறது. அப் பள்ளத்தாக்கு மணற்கல் பிரதேசத்திலிருப்பதால் (sand-stone region) அகலம் 2 மைலுக்கும் குறைவாகவே உள்ளது. ஆனுல், ஆஸ்வான் பட்டணத்துக்கு வடக்கில் சுண்ணும்புக்கல் பிரதேசமாகையால் (lime-stone region), அங்கு நைல் நதி மிகவும் விசாலமான பிரதேசத்தில் பாய்கிறது. அங்கு அது பாயும் பிரதேசம் சில இடங்களில் 14 மைலுக்கும்மேல் அகலமாக இருக்கிறது. நதியின் இரு கரைகளிலும் சில இடங்களில் 1,000 அடிக்கும்மேல் உயரமான பாறைகள் காணப்படுகின்றன. நைல் நதியின் முகத்துவாரப் பிரதேசம் வெகு விசாலமான டெல்டா பிரதேசமாகும்; கடற்கரையில் 150 மைல் அகலமும், உள்நாட்டில் 100 மைல் தூரமும் வியாபித்திருக்கிறது. இப் பிரதேசத்தில் சதுப்பு நிலங்கள் பெரும் பாகமும் நீர் வடியவைத்துப் பயிர்த் தொழிலுக்கேற்ற நிலமாகப் பயன்படுத்தப்படுகிறது.

எகிப்து நாட்டை நைல் நதியின் கொடை என்று சொல்வதுண்டு. அதாவது, நைல் நதி அங்குப் பாய்வதால்தான் எகிப்து என்ற நாடே ஏற்பட்டது. நைல் நதியே எகிப்து நாட்டின் ஜீவ நாடி. 4,000 மைலுக்குமேல் நீளமுள்ள இந்த நைல் நதி பூமத்திய ரேகையை அடுத்த பகுதியில் உற்பத்தி ஆவதால், அதன் உற்பத்தி

ஸ்தானத்தில் வருடம் முழுவதும் நல்ல மழை ஏற்படுகிறது. அதன் ஆரம்ப ஸ்தானத்திலேயே விக்டோரியா, எட்வர்ட், ஆல்பர்ட் முதலிய மூன்று தடாகங்களினூடே செல்வதால், நதியில் எப்போதும் தண்ணீர் ஓட வசதியாக இருக்கிறது. இவ்வித இயற்கை வசதிகள்மாத்திரமல்லாமல் எகிப்து, சூடான் நாடுகளும் இந் நதியின் நீரை அதிகம் பயன்படுத்த, அணைகள் அமைக்க முயற்சி செய்துவருகின்றன. விக்டோரியா ஏரியின் நீர்மட்டத்தைக் கட்டுப்படுத்தும் வேலைகள் முடிவடைந்துள்ளன. அதன்மூலம் எகிப்து, சூடான் பிரதேசங்களின் நீர்ப்பாசன வசதிகள் முன்னேற்றமடைந்ததோடு, உகாண்டா நாட்டின் தேவைக்கு வேண்டிய மின்சக்தியும் உற்பத்தி செய்யப்படுகிறது.

எகிப்து, சூடான் இராச்சியங்களின் நீர்ப்பாசன வசதிக்கு வேண்டிய தண்ணீர், நைல் நதியில் பாயும் நீரைத் தவிர அதன் உப நதிகள் பாயும் பிரதேசங்களில் ஏற்படும் மழையையும் பொறுத்திருக்கிறது. சூடான் நாட்டில் கோடைக் காலத்தில் மழை அதிகம். அதனால் அங்குள்ள உபநதிகள் நைல் நதியில் அதிக வெள்ளம் ஏற்படக் காரணமாகிவிடும். அதுபோலவே இத்தியோப்பியா நாட்டிலிருந்து வரும் முக்கிய உபநதிகளான ஸோபாட், நீல நைல், அன்பாரா முதலிய நதிகளும் கோடைக் கால மழையில் அதிக வெள்ளம் ஏற்படக் காரணமாகும். சில வருடங்களில் நீல நைல் நதியால் அதிக வெள்ளச் சேதம் ஏற்படுவதும் உண்டு. நீல நைல் நதி இந்தியோப்பியப் பீடபூமியில் உள்ள டானு தடாகத்தில் (Lake Tana) உற்பத்தியாகிறது என்பது கவனிக்கத்தக்கது. டானு ஏரியில் தற்காலத்தில் அணைகள் கட்டப்பட்டு, நீல நைல் மூலமாக ஏற்படும் வெள்ளச் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது.

1902ஆம் வருடம் ஆஸ்வான் என்னுமிடத்தில் அணை கட்டப்பட்டு, நைல் நதியில் வரும் வெள்ளம் சீராக்கப்பட்டது. 1912-ல் இந் நதி பெரிதும் சீரமைக்கப்பட்டது.

அணைகள் கட்டி வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதில் இப் பகுதியில் பெரிய சிரமம் ஏற்படுகிறது. நைல் நதியிலும் நீல நைல் நதியிலும் நீர் அதிகம் ஓடும் காலங்களில், நீருடன் வண்டல் மண்ணும் அடித்துவரப்படுகிறது. இம் மண், அணையில் குவிந்துவிடுவது தடுக்கப்படுகிறது. இதற்காக நீல நைல் நதியில் வெள்ளம் ஏற்படும்போது அணையின் கதவுகள் முழுவதும் திறந்து வைக்கப்பட்டு, வண்டல் மண் முழுவதும் அணையைக் கடந்தபின் கதவுகள் (sluice gates) மூடப்படுகின்றன. அதுபோலவே

நதியின் பல பாகங்களிலும் அணைகள் கட்டப்பட்டு வெள்ளத்தால் ஏற்படும் சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. கெய்ரோ பட்டணத்துக்கு வடக்கிலுங்கூட டெல்டா பிரதேசத்தில் பாயும் நீரை ஒழுங்குபடுத்துவதற்காக அணைகள் கட்டப்பட்டுள்ளன. இப்போது ஆஸ்வான் அணைக்கு 7 மைல் தெற்கில் ஓர் அணை அமைக்கப்பட்டுவருகிறது. இது கட்டி முடியும்போது இன்னும் அதிகமாகப் பத்து இலட்சம் ஏக்கர் பூமி பயிர்த் தொழிலுக்குப் பயன்படும் என்றும், இதில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் பயன்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூடான் பிரதேசத்தில் சென்னர் (Sennar) என்னுமிடத்தில் நீல நைல் நதியில் கட்டப்பட்டுள்ள அணைமூலம் பாசன வசதி ஏற்பட்டு, கஸிரா சமவெளிப் பகுதியில் பயிர்த் தொழிலுக்குப் பயன்படுகிறது.

எகிப்து

எகிப்து நாட்டின் வடபாகத்தில் நாகரீக மக்கள் இன்றைக்கு சுமார் 8,000 வருடங்களாகவே வசித்துவந்திருக்கின்றனர். சுமார் 6,000 வருடங்களுக்கு முன்பே அங்கு அரசர்களின் ஆட்சி ஏற்பட்டிருந்தது. ஜனங்கள் ஆடுமாடு வளர்த்தும், பயிர்த் தொழில் செய்தும், மரவேலை, உலோக வேலை, நெய்தல், மட்பாண்டங்கள் செய்தல் முதலிய தொழில்களிலும் மிகவும் முன்னேற்றமடைந்திருந்தனர். நைல் நதியின் வடபாகம் செழிப்பான பிரதேசமாக இருந்தது. வடக்கில் கடலும், மேற்கிலும் கிழக்கிலும் பாலைவனமும் ஆனபடியால், எதிரிகள் வந்து தாக்குவார்களோ என்ற பயமில்லாதிருந்தது. மனிதனுக்குக் கப்பலோட்டும் திறமை ஏற்படும்வரை கடல் ஒரு பாதுகாப்பாக இருந்தது. நைல் நதியின் தென்பாகத்தில் நைல் நதிப் பள்ளத்தாக்கு மிகவும் குறுகலாயிருப்பதோடு, அதில் சதுப்பு நிலங்களும் துரிதப் போக்குகளும் ஏற்படுவதால் தெற்கிலிருந்தும் எதிரிகள் வரமுடியாது. இவ்விதமாக இயற்கையால் பாதுகாக்கப்பட்ட சூழ்நிலையால் எகிப்திய மக்கள் சண்டை சச்சரவுகளின்றிச் சமாதானமாகவே 4,000 வருடங்களுக்கும்மேல் அமைதியாக வாழ்ந்துவந்தனர். மக்களும் அரசர்பால் அன்பு செலுத்தி வந்தனர். அரசர்களும் மக்களுக்கு நீதிநியாயம் வழங்கி, அவர்களுக்கு இன்பமான வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் அளித்தனர். மக்களும் பயிர்த் தொழிலில் அபிவிருத்தியடைந்து தங்கள் அவசியத்துக்கதிகமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ததோடு, இரும்பு, தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களில் பொருள்கள் செய்யவும் அறிந்திருந்தனர்.

பிற்காலத்தில் மக்களுக்குப் படகுகள் மூலமும் கப்பல் மூலமும் கடலில் சஞ்சரிக்கும் சக்தி ஏற்பட்டபோது, வடக்கி லிருந்தும் கிழக்கிலிருந்தும் எதிரிகள் படையெடுப்பால் கி.மு. 330ஆம் வருட சமீபத்தில் அவர்கள் நாகரிகம் அழிக்கப்பட்டு நாடும் பிறர் கைவசப்பட்டது. அக் காலத்தில் இழந்த சுதந் திரத்தை, எகிப்தியர்கள் சமீபகாலத்தில் கி.பி. 1922ஆம் வருடத் தில்தான் திரும்பப்பெற்றனர். சூயஸ் கால்வாய்ப் பகுதியிலும் அதன்பின்னும் தொடர்ந்த பிரிட்டிஷ்காரர்களின் அதிகாரம் 1956-ல் முடிவடைந்தது. அதற்கு முன்பே 1953-ல் மன்னர் ஆட்சியைக் கவிழ்த்து நாடு குடியரசாயிற்று. குடியரசு நாடானபின் நிலச் சீர்திருத்தங்களும், நீர்ப்பாசன வசதிகளும், ஆலைத் தொழில் முன்னேற்றமும், கல்வி அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளன. ஆனாலும், மற்றக் கிழக்கத்திய தேசங்களைப்போல் பிரச்சினைகள் பல சமாளிக்க வேண்டியிருக்கின்றன. நாடு எவ்வளவு முன்னேற்ற மடைந்தாலும் செல்வம் ஓரிடத்தில்தான் குவிந்திருக்கிறது. ஜனங்கள் பெரும்பாலும் ஏழைகளாக உள்ளனர். பட்டணங் களில் மாடமாளிகைகள் காணப்பட்டாலும், அதனருகிலேயே சேரிகுடிசைகள் காணப்படுகின்றன.

வடக்கில் மத்தியதரைக் கடற் பகுதியிலிருந்து தெற்கே 22° வடக்கு அட்சாம்சம்வரை வியாபித்திருக்கும் எகிப்து நாட்டின் மொத்த விஸ்தீரணம் 3¾ இலட்சம் சதுரமைலாகும். அதில் பெரும்பாகமும் பாலைவனமே. நைல் நதியின் பள்ளத்தாக்கும், டெல்டா பிரதேசமும் சேர்ந்து 13,400 சதுரமைல்கள்தாம். இதில் ⅛ பாகம் தண்ணீராகவும் சதுப்பு நிலமாகவுமிருக்கிறது. இந் நாட்டின் ஜனத்தொகை 270 இலட்சம். பட்டணங்களிலுள்ள ஜனநெருக்கத்தைக் கணக்கெடுக்காமல் மக்கள் பயிர்த் தொழில் செய்து வாழும் பகுதியைமட்டும் கணக்கெடுத்தால், அந்நாட்டின் ஜனத்தொகையைச் சதுர மைலுக்கு 1,000 பேர் எனலாம். ஜனங் களில் பெரும்பாலோர், அதாவது, 60% பேர் பயிர்த் தொழில் செய்தே வாழ்கின்றனர். தற்காலத்தில் இவர்களில் அநேகம் பேர் நகரங்களில் சென்று குடியேறியுள்ளனர்.

ஐரோப்பியர்கள், முக்கியமாக கிரேக்க, இத்தாலிய இனத் தைச் சார்ந்த அதிகம் பேர் இந் நாட்டில் வசிக்கின்றனர். இது தவிர சுமார் ½ இலட்சம் அரேபிய இனத்தவர் நாடோடிகளாக ஒட்டகங்களை ஓட்டிச் சென்று பாலையின் பல பாகங்களிலும் வாழ் கின்றனர்.

கி.பி. 1869ஆம் வருடத்தில் பெர்டினண்டு-டீ-லீசப்ஸ் (Ferdinend-de-Leesseps) என்ற ஃபிரெஞ்சு நாட்டு இஞ்சினியரின்

ஆலோசனையின் பேரில் சூயஸ் கால்வாய் வெட்டப்பட்டது. முதலில் அதை எதிர்த்தபோதிலும், பிரிட்டிஷார் பின்னர் அதை வரவேற்று அதன்மூலம் கால்வாய்ப் பிரதேசத்தையும் எகிப்தையும் தங்கள் ஆதிக்கத்துக்கு உள்ளாக்கினர். ஆனால், 1922-ல் எகிப்து சுதந்திரமடைந்தபோது கால்வாய்ப் பகுதியைமட்டும் தம் கையில் அடக்கிவைத்திருந்தனர். ஆனால், 1956-ல் ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக அப் பிரதேசத்தையும் கைவிட்டனர். ஆனால், 1958-ல் எகிப்து அரேபிய நாடான ஸிரியாவுடன் சேர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசை ஸ்தாபித்தது. தற்சமயத்தில் ஈரான் நாடும் இக் குடியரசில் சேரப்போவதாகக் கூறப்படுகிறது.

பயிர்த் தொழில்

எகிப்து நாட்டின் நிலம் மிக்க வளம் பொருந்தியது. நைல் நதியின்மூலம் நல்ல பாசன வசதி கிடைப்பதாலும், சூரிய வெப்பம் போதுமளவுக்கு இருப்பதாலும் பயிர்த் தொழில் இங்கு மிகவும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. நீர்பாய்ச்ச வேண்டிய நிலம் உயரத்திலிருப்பதாலும், நதி ஜலம் பள்ளத்தில் ஓடுவதாலும் நதி ஜலத்தை மேட்டுப் பாங்கான இடங்களில் பாய்ச்சுவது சில இடங்களில் பிரச்சினையாக உள்ளது. பழங்கால முறைப் படியே சிலர் கிணற்றிலிருந்து நீரை இறைப்பதுபோல இறைத்துப் பாய்ச்சுகின்றனர். பணவசதியுள்ளவர்கள் கமலை முதலிய மிருகங்களைப் பயன்படுத்துகின்றனர். சிலர் இயந்திரங்களையும் பயன்படுத்தி நீர்ப்பாசனம் செய்கின்றனர். இப் பகுதியில் பயிர்த் தொழிலுக்கு அதிக இரசாயன உரங்கள் பயன்படுத்துகின்றனர். மிகவும் நல்ல முறையில் பயிர்த் தொழில் நடைபெறுவதால், இங்கு பயிர் செய்யப்படும் 13,000 சதுர ஏக்கர் நிலத்திலிருந்து இங்குள்ள 270 இலட்சம் மக்களுக்கும் உணவுப் பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது.

எகிப்தில் உற்பத்தியாகும் கோடைக்காலப் பயிர்களில் முக்கியமானது பருத்தி. எகிப்தியப் பருத்தி தரத்தில் மிக உயர்ந்ததாகையால், நிலத்தில் பெரும்பாகமும் அப் பயிருக்கே பயன் படுத்தப்பட்டுச் சில வருடங்களில் அவசியமான உணவுப் பொருளாகிய கோதுமை இறக்குமதி செய்யப்படுகிறது. பருத்தியில் பெரும் பாகமும் நைல் நதியின் டெல்டா பகுதியிலேயே உற்பத்தியாகிறது. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பருத்தி சேகரிக்கப்பட்டு, அலெக்ஸாண்டிரியா துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. எகிப்தில் விளையும் பருத்தி மிகவும் நேர்த்தியாகவும் பட்டுப்போன்று மென்மையுடையதாகவும் இருக்கும் என்று கூறப்படுகிறது. சில வருடங்களில் பருத்திச் செடியில் பூச்சி

புழு தொல்லையால் சேதம் ஏற்படுவதுண்டு. தற்சமயம் மருந்துகள் தெளிக்கப்பட்டுப் பயிர்கள் நன்ருகப் பாதுகாக்கப்படுகின்றன. இதர கோடைக்காலப் பயிர்கள் சோளம், நெல், கரும்பு என்பன.

குளிர்காலத்தில் எகிப்துப் பயிர்கள் கோதுமை, பார்லி, மொச்சை வகைகள், வெங்காயம், பருப்பு, கீரைவகைகள் முதலியன. நைல் நதிப் பள்ளத்தாக்கின் ஓரங்களிலும் பாலைவனங்களின் ஒயஸிஸ்களிலும் ஈச்சமரங்கள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றிலிருந்து ஈச்சம்பழமும் விறகும் கிடைக்கின்றன. ஆடுமாடு வளர்த்தல் அதிக முக்கியமில்லையாளுலும், ஆங்காங்கு எருமையும், கழுதையும், ஒட்டகங்களும் வண்டிகள் இழுக்கப் பயன்படுத்தப்படுகின்றன. சில இடங்களில் ஆடு வளர்த்தல் நடைபெறுகிறது. கோழி வளர்த்தல் முக்கியமானபடியால், முட்டை அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

எகிப்து நாட்டில் உலோகச் செல்வம் அதிகம் என்று கூறுவதற்கில்லை. செங்கடற்கரையையடுத்த பிரதேசங்களில் பாஸ்ஃபேட் வெட்டியெடுக்கப்படுகிறது. அது முழுவதும் எகிப்திலேயே உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஸினே (Sinai) தீபகற்பத்தில் மாங்கனீஸ் வெட்டியெடுக்கப்படுகிறது. செங்கடலை அடுத்த பிரதேசத்தில் எண்ணெய்க் கிணறுகள் காணப்படுகின்றன. அங்கு வருட உற்பத்தி 35 இலட்சம் டன் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

எகிப்து நாட்டில் உற்பத்தியாகும் பருத்தியில் $\frac{1}{8}$ பாகம் அங்குள்ள நூற்பு ஆலைகளிலேயே பயன்படுத்தப்படுகிறது. பருத்தி நூலும் சிறிதளவு ஏற்றுமதியாகிறது. பருத்தியைத் தவிரப் பட்டுக் கம்பளம் செய்யும் ஆலைகளும் அங்குக் காணப்படுகின்றன. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சர்க்கரை இங்கு ஆலைகளில் சுத்திகரிக்கப்படுகிறது. கிரீஸ், துருக்கி முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் புகையிலையைப் பயன்படுத்திச் சுருட்டு, சிகரெட் தயாரிப்பது இங்குள்ள முக்கியத் தொழிலாகும். பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெய், பிண்ணக்கு முதலியன செய்வதும், அந்த எண்ணெயைப் பயன்படுத்தி சோப்பு தயாரிப்பதும் நடைபெறுகிறது. இரஸாயன உரங்களும், சிமெண்ட், செங்கல் என்பனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந் நாட்டுக்கு வேண்டிய ரெயில்வே பொருள்கள் பெரும்பாலும் அங்கேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. அலெக்ஸாண்டிரியா, போர்ட் ஸயத் என்ற இடங்களில் சிறிதளவு கப்பல் கட்டும் தொழிலும், கப்பல் பழுது பார்க்கும் தொழிலும் நடைபெறுகின்றன. அந்நிய நாடுகளின் உதவியால் தற்காலத்தில் பருத்தி ஆலைத் தொழில்களும், எண்

ணெய் சுத்திகரிப்பும், இரும்பு உருக்கு தொழிற்சாலையும், இரஸாயன உரத் தயாரிப்பும் அதிக முன்னேற்றமடைந்துவருகிறது. இவை தவிர்த் தற்காலத்தில் உல்லாசப் பிரயாணிகள் அதிகம் பேர் வருடந்தோறும் அங்கு வந்துசேருவதால், அவர்களுக்குப் பிரயாணத்துக்கும் தங்குவதற்கும் வேண்டிய வசதிகள் செய்வதும் ஒரு முக்கியத் தொழிலாக நடைபெறுகிறது.

உல்லாசப் பிரயாணிகள் அங்கு வருவது அந் நாட்டின் சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்களையும் பழங்காலச் சின்னங்களையும் பார்ப்பதற்காக மட்டுமல்லாமல், அங்கு குளிர்காலத்தில் காலநிலை இரம்மியமாக இருப்பதும் ஒரு முக்கியக் காரணமாகும்.

பட்டணங்கள்

தேசத்தின் தலைநகரம் கெய்ரோ. அதன் ஜனத்தொகை 33½ இலட்சம். எகிப்தின் வடக்கில் டெல்டா பிரதேசத்தின் முனையில் அமைந்திருக்கும் இப் பட்டணத்திலிருந்து நாட்டின் பல பாகங்களுக்கும் ரோடுகளும் ரெயில்வேக்களும் செல்வதோடல்லாமல், ஆகாயவிமானங்களின் போக்குவரவுக்கும் இது ஒரு முக்கிய இடமாகும். இங்கு அநேக தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன. பருத்தி ஆலைகளும், ரெயில்வே சாதனங்கள் செய்யும் ஆலைகளும், சீனி ஆலைகளும், சோப்பு, காகிதம், சுருட்டு, சிகரெட் முதலிய ஆலைகளும் இங்குக் காணப்படுகின்றன. கெய்ரோ பட்டணத்துக்கு 8 மைல் தெற்கில் ஹெல்வான் (Helvan) என்னுமிடத்தில் சிமெண்டு ஆலைகளும், இரும்பு, உருக்கு ஆலைகளும் காணப்படுகின்றன.

அலெக்ஸாண்டிரியா

இந்தத் துறைமுகம் கி. பி. 332ஆம் வருடத்தில் மஹா அலெக்ஸாண்டரால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். இங்குள்ளது 15 இலட்சம் ஜனத்தொகை. இங்கிருந்து நாட்டின் பல பாகங்களுக்கும் ரெயில் பாதைகள் செல்கின்றன. இங்குப் பருத்தி ஆலைகளும் சீனி ஆலைகளும் அதிகம் நடைபெறுகின்றன. இத் துறைமுகம் வழியாகவே எகிப்து நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தின் பெரும்பாகமும் நடைபெறுகிறது. நூல் நூற்பும், நெசவும், எண்ணெய் ஆலைகளும், அரிசி மில்களும், காகிதம், சோப், செங்கல் தயாரித்தலும் இங்குள்ள முக்கியத் தொழில்களாகும். ரோஸெட்டா, டாமியேட்டா (Rosetta, Damietta) முதலியன இப் பிரதேசத்திலுள்ள சிறு துறைமுகங்களாகும்.

இதர முக்கியப் பட்டணங்களில் ஆஸ்வான் அணைக்கட்டின் சமீபத்திலுள்ள ஆஸ்வான் பட்டணத்தைக் கூறவேண்டும். இங்கு

வருடந்தோறும் அதிக அளவில் உல்லாஸப் பிரயாணிகள் வந்து போவதுண்டு. இதன் ஜனத்தொகை 1¼ இலட்சம்.

போக்குவரவு மார்க்கங்கள்

நைல் நதியே இங்கு இயற்கையாக அமைந்துள்ள ஒரு முக்கியப் போக்குவரவு மார்க்கம். இந்தத் தேசம் முழுவதும் நைல் நதிமூலமாகப் படகுகளில் செல்லலாம். பாய்மரப் படகுகள் அநேகம் அங்குமிங்கும் செல்வது ஓர் அழகான காட்சியாகும். நைல் நதியின் டெல்டா பிரதேசத்தில் ரெயில்வே போக்குவரத்துதான் அதிகம். இங்கும் சிறிதளவு நதியிலும் கால்வாயிலுமாகப் போக்குவரவு நடைபெறுகிறது. கெய்ரோவுக்குத் தெற்கே ஆஸ்வான்வரையில் ரெயில் பாதை செல்கிறது. ஆஸ்வானுக்குத் தெற்கே சூடானிலுள்ள வாடி ஹால்ஃபா (Wadi Halfa) வரையில் ரெயில் பாதைகள் இல்லை. எகிப்து நாட்டின் ரெயில் பாதைகளுக்கும், அண்டை நாடுகளாகிய இஸ்ரேல், அரேபியா முதலிய நாடுகளின் ரெயில் பாதைகளுக்கும் தொடர்பு உண்டு.

சூயஸ் கால்வாய்

லெஸ்ஸெப்ஸ் (Lesseps) என்ற ஒரு ஃபிரெஞ்சு நிபுணரால் அமைக்கப்பட்ட இக் கால்வாய் 1869ஆம் வருடம் திறக்கப் பட்டது. இந்தக் கால்வாய் வெட்டப்படுமுன் ஆசியாவிலிருந்து ஐரோப்பாவிற்குச் செல்லும் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிப் போகவேண்டியிருந்தது. இந்தக் கால்வாய் ஏற்பட்டபின் அவை செல்லவேண்டிய தூரத்தில் 4,000 மைல் குறைந்தது. இந்தக் கால்வாய் மெடிட்டரேனியன் கடலையும் சூயஸ் வளைகுடாவையும் இணைக்கிறது. இதன் நீளம் 88 மைல். குறுகிய கால்வாய் ஆனபடியால், கப்பல்கள் இதில் மெதுவாகவே, 10 மைலுக்கும் குறைவான வேகத்தில் செல்லவேண்டியிருக்கிறது. ஆக, கால்வாயைக் கடக்கச் சுமார் பத்து மணி நேரம் பிடிக்கும். 1956ஆம் வருடம் எகிப்து அரசாங்கம் இக் கால்வாயைத் தன் தேச உடைமையாக்கிக்கொண்டது. இக் கால்வாயில் செல்லும் கப்பல்களில் அதிகம் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்தவை. ஆனாலும், நார்வே, ஃபிரான்ஸ், இத்தாலி, ஹாலந்து, அமெரிக்கா முதலிய நாட்டு வர்த்தகக் கப்பல்களும் இதைக் கடந்து செல்கின்றன.

போர்ட் ஸைத்

இது சூயஸ் கால்வாயின் வடபாகத்தில் அமைந்திருக்கிறது. இதன் ஜனத்தொகை 2½ இலட்சம். இங்குதான் கப்பல்கள்

தங்கி எண்ணெய், நிலக்கரி என்பவற்றைப் போட்டுக்கொள்கின்றன. இங்குக் கப்பல்கள் பழுதுபார்க்கவும் வசதியுண்டு.

சூயஸ்

இது கால்வாயின் தென் பாகத்தின் கோடியில் அமைந்துள்ளது. இதன் ஜனத்தொகை 2 இலட்சம். இங்கு எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைகளும் காணப்படுகின்றன. கப்பல்களுக்கு வேண்டிய எண்ணெய் இங்கு எடுக்கப்படுகிறது. இவ்விரு துறைமுகங்களும் எகிப்து நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன.

வியாபாரம்

பருத்தியும் அதைச் சார்ந்த பொருள்களும் இங்குள்ள முக்கிய ஏற்றுமதிப் பொருள்களாகும். அரிசி ஏற்றுமதியை இதற்கு அடுத்தபடியாகச் சொல்லலாம். இந் நாட்டில் இறக்குமதியாகும் பண்டங்கள் முக்கியமாக உணவுப் பொருள்கள்; அவை தேயிலை, கோதுமை, கோதுமை மாவு என்பன. சிறிதளவு இரஸாயன உரங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. அங்குப் பெரிய மரங்கள் இல்லாததால் மரத்தடிகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன. தொழிற்சாலைகட்கு வேண்டிய புகையிலையும் இறக்குமதி செய்யப்படுகின்றது. இயந்திரங்களும், இரும்பு, உருக்கு, மின்சாரப் பொருள்கள், மோட்டார் வாகனங்கள், பருத்தி, பட்டு ஆடைகள் என்பனவும் இறக்குமதியாகின்றன.

முற்காலத்தில் எகிப்து நாட்டின் வியாபாரம் பெரும்பாலும் இங்கிலாந்து நாட்டுடனேயே நடைபெற்றது. ஆனால், தற்காலத்தில் இராஜீய காரணங்களால் இது குறைந்துவிட்டது. தற்காலத்தில் கனடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலிருந்து கோதுமையும், பாகிஸ்தானிலிருந்து சணலும் இறக்குமதி செய்யப்படுகின்றன. அமெரிக்கா, ரஷியா முதலிய நாடுகளுடன் வர்த்தகம் பெருகிக்கொண்டிருக்கிறது.

எகிப்துக்குத் தெற்கேயுள்ள சூடான் பிரதேசத்துடன் சிறிய அளவில் வியாபாரம் நடைபெறுகிறது. முக்கியமாக ஆடு, கோழி என்பனவும், தினை, எண்ணெய் விதைகள், பேரீச்சம்பழம் என்பனவும் அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, அரிசி, எண்ணெய், சீனி, யந்திரங்கள், துணி வகைகள் முதலியன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

சூடான் பிரதேசம்

இங்கிலாந்து, எகிப்து இவ்விரு நாடுகளும் சேர்ந்து ஆட்சி செலுத்திவந்த இப் பிரதேசத்தில் 1951ஆம் வருடத்தில் எகிப்து

இங்கிலாந்தின் ஆட்சி உரிமையை எதிர்த்தது; அதன்பின் 1955-ல் அந் நாட்டுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. சூடான் பிரதேசம் வடக்கிலும், தெற்கிலும் அதிக வேறுபாடுகள் உடையது. கால நிலையிலும் தாவர வகையிலும், அங்கு வசிக்கும் ஜனங்களின் இனம், மதம், மொழி, தொழில் முதலியவற்றிலும் அதிக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. சூடான் பிரதேசத்தின் வடக்கில் வசிப்பவர்கள் பெரும்பாலும் அரேபிய இனத்தைச் சார்ந்தவர்கள்; இஸ்லாம் மதத்தவர்கள். ஜனத்தொகையில் பாதிக்குமேல் உள்ள அவர்களின் தொகை 50 இலட்சத்துக்கும் அதிகமாகும். அவர்களில் சிலர் கல்வி கற்று முன்னேற்றமடைந்தோர். தேசத்தின் தலைநகரான கார்ட்டூன் பட்டணம் வடக்குப் பாகத்தில்தான் இருக்கிறது.

வடக்கு அட்சாம்சம் 14°-க்கும் தெற்கேயுள்ள தென்சூடான் பிரதேசத்தில் வசிப்பவர்கள் நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர்கள். அவர்களில் பல வேறுபட்ட இனப்பிரிவுகளும், பலவிதமான கொச்சை மொழிகள் பேசுபவர்களும் உளர். நாகரிகத்தில் மிகவும் பிற்போக்கான நிலையில் அவர்கள் இருக்கின்றனர் ; கல்வியறிவு அற்றவர்கள் ; உலகமே தெரியாதவர்கள்; அப் பிரதேசம் அதிகச் சதுப்பு நிலமானதால் அதிக அபிவிருத்தி அடையவில்லை. தற்கால நாகரிகம் அங்குத் தயங்கியே சென்றுகொண்டிருக்கிறது.

இவ்வித இரு கூட்டத்தினரையும் ஒன்றுபடுத்தி ஓர் இராச்சியம் அமைப்பதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. 1956ஆம் வருடத்தில் நாடு குடியரசாக அறிவிக்கப்பட்டபோதிலும், சிறிது காலத்துக்குள்ளேயே சட்டசபைமூலம் நடந்த ஆட்சி தோல்வியுற்று இராணுவ ஆட்சி நிறுவப்பட்டது. தேசிய மொழி அரபி.

வெளித்தோற்றங்கள் எப்படி இருந்தாலும், பொதுவாகத் தெற்கிலுள்ள நீக்ரோ மக்களுக்கு வடக்கிலுள்ள முஸ்லிம் மக்களிடம் நம்பிக்கையில்லை. அரேபியர்கள்தாம் நமது முன்னோர்களைப் பிடித்து அயல்நாடுகளில் அடிமைகளாக விற்றனர் என்ற கோபம் உள்ளூர இருந்துவருகிறது. வடக்கிலுள்ளவர்கள் அரசாங்கத்தை நடத்துவதால் தெற்கிலுள்ளவர்கட்கு ஒரு துவேஷ மனப்பான்மை ஏற்படுகிறது. கூடியவரையில் தங்களுக்குத் தொல்லை தராமலிருந்தால் போதும் என நினைக்கிறார்கள். அவர்களது முக்கியச் செல்வம் மாட்டு மந்தைகள்தாம். மாட்டை அவர்கள் பாலுக்கோ இறைச்சிக்கோ வளர்ப்பதில்லை. ஆனால், அவற்றின்மேல் குழந்தைகளைவிட அதிக அன்பு செலுத்துகின்றனர். அவர்கள் வசிக்கும் ஸவானா பிரதேசத்தில் பெரும்பாலும் கோடை

யில்தான் மழை அதிகம் பெய்கிறது. மழை பெய்து ஆறுகள் நிரம்பி ஓடும்போது மீன் பிடித்தல் அவர்களுக்கு ஒரு முக்கியத் தொழிலாகும். மீனை உலரவைத்து, வருடம் முழுவதும் பயன் படுத்துகின்றனர். பெண்களே அதிகம் பயிர்த் தொழிலில் ஈடு பட்டுள்ளனர். அங்குள்ள முக்கிய விளைபொருள் தினை. சமீப காலத்தில் அவர்களை நாகரிகமடையச் செய்ய அரசாங்கம் சில இடங்களில் சாலைகளும், வீடுகளும், பள்ளிக்கூடங்களும், வைத்திய சாலைகளும் அமைத்துவருகின்றனர். பருத்தி, கரும்பு முதலிய பயிர்களைக் கிருஷி செய்யவும் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. அவர்களுக்குத் தேவையான ஆடைகள் நெய்ய ஓர் ஆலையும் அமைக்கப்பட்டுள்ளது.

சூடான் பிரதேசத்தின் தெற்கே நிமுலே (Nimule) (வடக்கு அட்சாம்சம் 4°) யிலிருந்து வடக்கே வாடி ஹல்பா (22° வடக்கு) வரையிலும் நைல் நதிப் பிரதேசம் அடங்கியுள்ளது. சூடான் பிரதேசத்தின் மொத்த விஸ்தீரணம் 10 இலட்சம் சதுரமைலுக்குச் சற்றே குறைவு. இதன் ஜனத்தொகை 125 இலட்சம்.

காலநிலை

வடக்கிலிருந்து தெற்குவரை 18° அட்சாம்சத்துக்கு வியாபித் திருக்கும் இந் நாட்டில், வடக்கிலும் தெற்கிலும் காலநிலையும் இயற்கைத் தாவரமும் மாறுபடுகின்றன. நாட்டின் தென் பாகத்தில் பூமத்தியரேகைப் பிரதேசக் காலநிலையே அநுபவப் படுகிறது. அங்கு ரப்பர் மரங்கள் காட்டு மரங்களாக வளருகின் றன. அதிலிருந்து யாரும் ரப்பர் எடுப்பதில்லை. வடக்கே போகுந்தோறும் மழை குறைவானதாலும், கோடைக்காலத்தில் மட்டும் பெய்வதாலும் வடபாகத்தில் புல் பிரதேசங்களே (ஸவானு) காணப்படுகின்றன. வெள்ளை நைல் பாயும் சதுப்புநிலப் பிரதேசம் இங்குதான் காணப்படுகிறது. இன்னும் வடக்கில் செல்லுந்தோறும் மழை அதிகம் குறைவானதால், அங்கு முட் செடிகளும் புதர்களுமே காணப்படுகின்றன. வடக்கு அட்சாம்சம் 15°-க்கு வடக்கே தாவரங்கள் வெகு குறைவு; அங்குப் பாலைவனப் பிரதேசமே காணப்படுகிறது.

விளைபொருள்கள்

இங்குள்ள விளைபொருள்களில் மிகவும் முக்கியமானது பருத்தி. இது அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டு, நாட்டின் செல்வ நிலையில் பாதிக்குமேல் இதனாலேயே முன்னேற்றமடை கிறது. கஸீரா (Gezira) சமவெளிப் பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதி அதிகம் கிடைப்பதால், அங்குதான் பருத்தி அதிகம் பயிர்

செய்யப்படுகிறது. கஸாலா, டோக்கார் (Kassala, Tokar) முதலிய இடங்களிலும் பருத்திக் கிருஷி நடைபெறுகிறது. இங்குப் பயிராகும் பருத்தி எகிப்து நாட்டு வகையைச் சார்ந்தது; மிகவும் நீளமானது; நூற்பு வேலைகட்கு மிகவும் மேன்மையானது. இங்கு விளையும் பருத்தியில் பெரும்பாகமும் இங்கிலாந்துக்கே ஏற்று மதியாகிறது. பருத்திக்கு அடுத்தபடியாக அதிகமாக உற்பத்தி யாவதும் ஏற்றுமதி செய்யப்படுவதும் கோந்து (Gum Arabic) ஆகும். முள் அடர்ந்த சில மரங்களைக் கீறிவிட்டு அதிலுண்டாகும் திரவம் உருகும்போது கோந்து ஆகிறது. எல் ஒபெயிட் (El Opeid) என்னும் பிரதேசத்தில் கோந்து உற் பத்தி அதிகம் நடைபெறுகிறது. கோந்து மருந்துகள் தயாரிக்கவும், மிட்டாய் வகைகள் தயாரிக்கவும், துணி ஆலைகளில் துணிகட்கு மெருகு கொடுக்கவும் பயன்படுத்தப்படுகிறது. சூடான் பிரதேசத்தில் கிடைக்கும் மற்றப் பொருள்கள் நிலக்கடலை, எள், அவரை வகைகள், மிளகு வற்றல், உப்பு, பேரீச்சம்பழம், யானைத் தந்தம், மாட்டுத் தோல் என்பன.

இங்கு ஆடுமாடுகள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றில் அதிகம் எகிப்துக்கு ஏற்றுமதியாகிறது. நாட்டின் வடக்குப் பாகத்தில் ஒட்டகங்கள் வளர்க்கப்படுகின்றன. அவை எகிப்துக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கைத்தொழில்

சூடானில் அதிக உலோகச் செல்வம் இல்லை. சில இடங்களில் சிறிதளவு தங்கம் வெட்டியெடுக்கப்படுகிறது. போர்ட் சூடானுக் கருகில் உப்பளங்கள் காணப்படுகின்றன. பருத்தி ஆலைகளும், எண்ணெய் ஆலைகளும், சோப்பு செய்வதும், மிட்டாய் வகைகள், சிகரெட் செய்வதும் அங்குள்ள முக்கியத் தொழில்கள்.

முக்கியப் பட்டணங்கள்

கார்ட்டூன் நாட்டின் தலைநகரம். இதன் ஜனத்தொகை 1¼ இலட்சம். நீல நைலும், வெள்ளை நைலும் சேருமிடத்திலுள்ள இப் பட்டணம், இந்த நாட்டின் முக்கியக் கல்விக் கேந்திரமாகும். செங்கடற்கரைப் பிரதேசத்திலுள்ள துறைமுகங்களுக்கு இங்கிருந்து ரெயில் பாதை செல்கிறது. கார்ட்டூன் பட்டணத் துக்கு எதிர்க் கரையிலுள்ள ஓம்டர்மான் (Omdurman) ஒரு பழங்காலப் பட்டணமாகும். அங்குக் குடிசைகளே அதிகம் காணப்படுகின்றன. அதன் ஜனத்தொகை 1¼ இலட்சம்.

எல் ஒபெயிட் பட்டணத்தின் ஜனத்தொகை 70,000. இங்கு கோந்து, ஆடுமாடுகள் வியாபாரம் மிகவும் முக்கியம். இங்கிருந்து போர்ட் சூடானுக்கு ரெயில் பாதை உண்டு.

போர்ட் சூடான், செங்கடற் கரையில் அமைந்துள்ளது. இது தேச முக்கியத்துவம் வாய்ந்தது. அங்கு முற்காலத்தில் அடிமை வியாபாரம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

வெள்ளை நைலின் சதுப்பு நிலங்களை அடுத்துள்ள மலாக்கல் (Malakal) என்னும் சிறிய பட்டணம் அதிக முக்கியத்துவம் அடைந்துவருகிறது. அங்கு ஒரு பெரிய வைத்தியசாலையும், அதன் மூலம் அங்குள்ள மாடுகளிலிருந்து அம்மை நோய் தடுப்பு மருந்துத் தயாரிப்பும் நடைபெறுகின்றன. தெற்கு சூடானில் இதுவே மிகப் பெரிய பட்டணம்.

வியாபாரம்

சூடான் பிரதேசத்தைச் செல்வம் கொழிக்கும் நாடென்று சொல்ல முடியாது. ஆனால், முன்னேற்றத்துக்கு வழி இருக்கிறது. கல்வி, நீர்ப்பாசனம், போக்குவரவு மார்க்கங்கள் இவற்றை அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரசாங்கம் முயற்சி செய்கிறது; அந் நாட்டின் முக்கிய ஏற்று மதிப் பொருள்கள் பருத்தி, பருத்தி விதை, கோந்து என்பன. ஏற்றுமதி முக்கியமாக இங்கிலாந்துடன் நடந்தாலும், இந்தியா, எகிப்து, ஜெர்மனி ஆகியவற்றுடனும் வியாபாரம் நடைபெறுகிறது. இங்கு இறக்குமதியாகும் முக்கியப் பொருள்கள் பருத்தி, பட்டுத் துணி வகைகள், உலோகங்கள், யந்திரங்கள், தேயிலை, சீனி என்பன.

8. வடமேற்கு ஆப்பிரிக்காவும் ஸஹாரா பாலையும்

சுமார் 30 இலட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள இப் பிரதேசம் செல்வ நிலையில் அதிக மேம்பாடு அடையவில்லை. அட்லாஸ் பிரதேசத்தில்மட்டும் பயிர்த் தொழிலும் ஜன வாசமும் காணப்படுகின்றனவேயன்றி, மற்ற இடங்களில் ஜன வாசம் அதிகம் இல்லை. இப் பகுதியின் கிழக்கில் எகிப்து, சூடான் இராச்சியங்களின் எல்லையும், தெற்கில் 15° வடக்கு அட்சாம்சமும், மேற்கிலும் வடக்கிலும் கடற் பிரதேசமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

பார்பரி இராச்சியங்கள்

மொராக்கோ, அல்ஜீரியா, டுனீஸியா இம் மூன்று இராச்சியங்களையும் பார்பரி இராச்சியங்கள் எனக் குறிப்பிடுவதுண்டு. ஏனெனில், பர்பர் ஜாதியார் அங்கு அதிகம் வசிக்கின்றனர். அவர்களைத் தவிர மற்றவர்கள் அரேபியர்கள். சிலர் பாலைவனத்தில் நாடோடிகளாக வாழும் டார்ட்ஜ் (Taurdg) இனத்தைச் சார்ந்தவர்கள். பர்பர்களும், டார்ட்ஜ்இனத்தவரும் ஹெமைட்ஸ் (Hemites)என்ற வெள்ளையர் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நல்ல உயரமும் சற்று வெளுப்பான நிறமும் உள்ளவர்கள். அரேபியர்கள் தோற்றத்தில் பர்பர்களைப்போல இருந்தாலும், ஸெமித்திக் (Semitic) இனத்தைச் சார்ந்தவர்கள். இம் மூவகை இனத்தவரும் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்கள். பர்பர்கள் —அரேபியர்கள் கலப்பினால் ஏற்பட்ட ஜாதியாரை மூர்கள் (Moors) எனக் கூறுவதுண்டு. இப் பிரதேசத்தில் மத்தியதரைக் கடலை அடுத்த கடற்கரைப் பகுதிகளில் ஐரோப்பியர் பலரும் குடியேறியுள்ளனர்; ஃபிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின், மால்டா ஆகிய நாடுகளிலிருந்து வந்தவர்கள். மொராக்கோ, டுனிஷ்யா

ஆகிய நாடுகள் சமீப காலம்வரை ஃபிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து தற்போது சுதந்திரமடைந்தவை. அல்ஜீரியா ஃபிரெஞ்சு தேசத்தின் நேரடி ஆட்சியிலிருந்தது; தற்சமயம் சுதந்திர நாடாகத் திகழ்கிறது. அங்குள்ள 1 கோடி மக்களில், 15 இலட்சம் பேர் ஐரோப்பியர்கள்.

இப் பிரதேசத்தில் மலேகள் கிழக்கு மேற்காக அமைந்திருக்கின்றன. இங்குள்ள அட்லஸ் மலேப்பிரதேசமும், அதோடு சேர்ந்த மலேப்பகுதியும் புவி உற்பத்தியின் 2ஆம், 3ஆம் யுகங்களில் (Late secondary or tertiary), ஆல்ப்ஸ் மலேகள் ஏற்பட்ட காலத்தில் உற்புத்தியானவை என்று கருதப்படுகிறது. அக் காலத்தில் அவை கிழக்கில் ஸிஸிலி மலேகளோடும், மேற்கில் ஜிப்ரால்டர் மலேகளோடும் தொடர்ச்சியாக இருந்திருக்கலாம். அல்ஜீரியாவிலும், டுனிஷியாவிலும் அப் பிரதேசம் ஒரு பீடபூமியாகவும், அதற்கு வடக்கிலும் தெற்கிலும் டெல் (Tell), அட்லாஸ் மலேயும் ஸஹாரான் அட்லஸ் மலேயும் அமைந்துள்ளன. டெல் அட்லாஸ் மலேப்பிரதேசம் படிப்படியாக மேலே செல்வதால், அதன் இடையில் உள்ள பள்ளத்தாக்குகளில் செழிப்பான கிருஷி நடைபெறுகிறது. டெல் அட்லஸுக்குத் தெற்கிலுள்ள பீடபூமிக்கு ஷார்ட்ஸ் பீடபூமி என்று பெயர். 'ஷார்ட்ஸ்' என்ற பதத்திற்கு அதிக ஆழமில்லாத உப்பு ஏரிகள் என்று பெயர். அத்தகைய ஏரிகள் அதிகமிருப்பதால் இதற்கு அப் பெயர் வந்தது.

பீடபூமியின் சராசரி உயரம் சுமார் 3,000'. அதன் தென் பாகத்திலுள்ள ஸஹாரான் அட்லஸ் அதற்குமேல் 500' உயரமிருக்கும். ஸஹாரான் அட்லஸ் மலேக்குத் தெற்கே பரந்த ஸஹாரா பாலேவனம் வியாபித்திருக்கிறது. ஸஹாரா பாலேயின் சராசரி உயரம் 1,500' என்று கணக்கிட்டாலும், அல்ஜீரியாவுக்கு வெகுதூரம் தென்கிழக்கில் பாலேவனத்தில் காணப்படும் அஹாக்கா மலேகள் 9,000'-க்குமேல் உயரமானவை.

மொராக்கோ பிரதேசத்தில் மலேகள் அதிக உயரமானவை. அவற்றில் நான்கு மலேத்தொடர்களேக் காணலாம். அவற்றுக்கு இடையே உள்ள சமநிலப் பிரதேசம் வெகு செழிப்பானவை. வடக்கிலிருந்து தெற்கே அம் மலேத்தொடர்களாவன ரிஃப் (Riff), அட்லஸ், மத்திய அட்லஸ், ஹை அட்லஸ், ஆன்டீ அட்லஸ் என்பவை ஆகும். இவற்றில் ரிஃப் அட்லஸ்மட்டும்தான் கடற்கரையை அடுத்துள்ளது; மற்றவை உள்நாட்டில் அமைந்துள்ளன. இப் பிரதேசத்திலேயே மிகவும் உயரமான மலே ஹை அட்லஸ் மலேகளாகும். அவை 14,000' -க்கும்மேல் உயரமானவை. ரிஃப் அட்லஸ் கடற்கரையை அடுத்துச் சென்று வடக்கில் ஜிப்ரால்டர் ஜலசந்தி

வரையில் செல்கிறது. ஆனால், அப் பிரதேசம் செழிப்பற்றதும் செங்குத்தான பாறைகளால் நிறைந்ததுமாகும்.

பார்பரி இராச்சியப் பகுதியில் பெரிய நதிகள் ஒன்றும் இல்லை. ஆங்காங்கே சிறு நதிகள் வடக்கே மத்தியதரைக் கடலையும், மேற்கே அட்லான்டிக் சமுத்திரத்தையும் சென்று சேருகின்றன. அவற்றில் மழை பெய்யும்போது நீர் காணப்படும்; மற்றக் காலங்களில் வறண்டிருக்கும். அவற்றை நதி என்பதைவிட வதி (Wati) என்று குறிப்பிடலாம்.

காலநிலை

வடமேற்கு ஆப்பிரிக்காவில், மொராக்கோ பிரதேசத்தில், அட்லான்டிக் சமுத்திரத்திலிருந்து வீசும் காற்றுகளால் இங்குள்ள காலநிலை அல்ஜீரியா, டுனீஸியாவைவிட மாறுபட்டதாகிறது. மொராக்கோவில் உயரமான மலைகள் இருப்பதால், ஈரப்பசையுள்ள காற்றுகளைத் தடுத்து நிறுத்தி மழை பெய்விக்க உதவுகிறது. அட்லான்டிக் சமுத்திரத்தில் பாயும் குளிர்ந்த கானரீஸ் நீரோட்டம் அப் பகுதியின் வெப்பத்தை சமன் செய்கிறது. அல்ஜீரியாவிலும், டுனீஸியாவிலும், டெல் அட்லஸ் மலைப் பிரதேசத்திலும், கடற்கரைப் பிரதேசத்திலும் மத்திய தரைக் கடற்கரைக் காலநிலை ஏற்படுகிறது. அப் பிரதேசத்தில் மண்வளம் செழிப்பானதால், பயிர்த் தொழில் மிகச் செழிப்பாக நடைபெறுகிறது. அங்கு ஆலிவ் மரங்களும், முந்திரிச் செடிகளும், புகையிலை, காய்கறி என்பவையும் ஏராளமாகப் பயிர் செய்யப்படுகின்றன. ஹை அட்லஸ் மலைகளில் இவ்வித சீதோஷ்ண நிலை இருப்பினும், வடக்கு நோக்கிய சரிவுகளில் தினம் மழை பெய்வதால் அங்கு அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. அங்கு முக்கியமாகக் கார்க், ஒக் முதலிய மரங்கள் அதிகமாக வளருகின்றன. ஷார்ட்ஸ் பீடபூமியில் வருட மழை 15″-க்கும் குறைவு. பகல் வெப்பத்துக்கும் இரவு வெப்பத்துக்கும் வித்தியாசம் அதிகம். இரவில் உறைபனிகூட (frost) ஏற்படுவதுண்டு. இப் பிரதேசம் பெரும்பாலும் புல் பிரதேசமாகும். ஆடு வளர்த்தல் இங்கு முக்கியத் தொழில். ஸஹாரான் அட்லஸ் மலைப் பிரதேசத்தில் மழை வெகு குறைவு; தாவரங்களும் அதிகமில்லை. ஸஹாரா பிரதேசத்தில் மழையே பெய்வதில்லை. ஆங்காங்குக் காணப்படும் ஒயஸிஸ்களில் மாத்திரம் பேரிச்சை மரங்கள் வளருகின்றன.

இப் பிரதேசத்தில் பொதுவாக வெப்பநிலை, கடற்கரையிலிருந்து உள்நாட்டிற்குப் போகுந்தோறும், நிலப்பரப்பின் உயரத்

துக்கேற்ப வித்தியாசப்படுகிறது. மத்தியதரைக் கடலை அடுத்த பிரதேசங்களில் கோடைக்காலத்தில் மிகவும் உஷ்ணமான மாதத்தில் சராசரி 80°F வெப்பம் அநுபவிக்கப்படுகிறது. மொராக்கோ பிரதேசத்தில் கடற்கரையை அடுத்துக் குளிர்ந்த நீரோட்டம் காணப்படுவதால், கோடைக்காலத்தில் வெப்பம் குறைவு; சில சமயங்களில் மூடுபனியும் ஏற்படுவதுண்டு. இப் பிரதேசத்திலேயே மிகவும் அதிக வெப்பம் ஸஹாரா பாலேவனத்தில் ஏற்படுவது. மிகவும் உஷ்ணமான மாதத்தில் சராசரி வெப்பம் 100°F. சில வருடங்களில் 136°F வெப்பங்கூட ஏற்பட்டதாகத் தெரிகிறது.

குளிர்காலத்தில், மிகவும் குளிரான மாதத்தில் (ஜனவரி), சமதளப் பிரதேசங்களில் வெப்பநிலை சுமார் 50°F ஆக இருக்கும். ஆனால், மலைகளிலும் பீடபூமிகளிலும் வெப்பம் இதைவிடக் குறைவாயிருக்கும். 3,000′ உயரத்துக்குமேல் உள்ள பாகங்களில் தரையில் பனி உறைந்துபோவதுண்டு. ஹை அட்லஸ் மலையின் உன்னத சிகரங்களில் வருடம் முழுவதும் பனிக்கட்டி உறைந்து காணப்படும். மத்தியதரைக் கடற்கரையை அடுத்த பிரதேசங்களில் குளிர்காலத்தில் மழை பெய்வதுண்டு. ஆனால், மேற்கில் மழைஅதிகம்; கிழக்கே போகுந்தோறும் குறைவதுண்டு. டான்சியர் பட்டணத்தில் வருட மழை 33″. ஆனால், டுனிஸ் பட்டணத்தில் 18″தான். மொராக்கோ பிரதேசத்தில் மலைகளின் வட சரிவுகளில் மழை அதிகம்; ஆனால், தென் சரிவுகளில் மழை குறைவு. மொராக்கோவில் கடற்கரைப் பிரதேசத்தில் குளிர்ந்த நீரோட்டம் ஓடுவதால், இங்கு மழை குறைவு; வருட மழை 10″-க்கும் குறைவு.

இயற்கைத் தாவரங்கள்

உன்னதப் பிரதேசங்களைத் தவிர மற்றப் பாகங்களில் வருடம் முழுவதும் வெப்பமாக இருப்பதால், இங்குள்ள இயற்கைத் தாவரங்களின் தன்மை, மழை அளவைப் பொறுத்தே இருக்கிறது. அட்லஸ் பிரதேசத்தின் இயற்கைத் தாவரம் வெகு சமீபத்திலுள்ள தென் ஐரோப்பியப் பிரதேசங்களின் தாவரத்தை மிகவும் ஒத்திருக்கிறது. இப் பிரதேசம் ஆதியில் வனமடர்ந்த பிரதேசமாக இருந்திருக்கலாம். ஆனால், தற்காலத்தில் வனங்கள் பெரும்பாலும் அழிக்கப்பட்டுவிட்டன. சில இடங்களில் ஆங்காங்கே கார்க் ஓக், ஓக், மிகவும் உயர்ந்த பாகங்களில் ஸிடார் முதலிய மரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. காடுகளை அல்லது வனங்களை மறுபடியும் சீரமைக்க முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன, மொராக்கோ பகுதியின் வடக்கு

நோக்கிய மலைச்சரிவுகளில் 30"-க்கும்மேல் மழை பெய்வதால், அங்குக் காடுகள் காணப்படுகின்றன. ஆனால், மலையின் தென் சரிவுகளில் மழை குறைவானதால், குற்றுச் செடிகள் காணப்படு கின்றன. உயர்ந்த பெரிய மரங்கள் வளரப் போதுமான மழையில்லாத இடங்களில், வெப்பத்தைத் தாங்கி எதிர்த்து நிற்கக்கூடிய சிலவகை மரங்கள் காணப்படுகின்றன. இவற்றில் முக்கியமானது ஆலிவ் மரம். ஆலிவ் மரம் பல இடங்களிலும் கிருஷி செய்யப்பட்டுவருகிறது.

ஷார்ட்ஸ் பீடபூமியில் மழை குறைவானதால், அங்குப் புல் தரைகளே காணப்படுகின்றன. ஆடு வளர்த்தலுக்கு இது மிகவும் பயன்படுகிறது. காகிதம் செய்வதற்கு மிகவும் பயன்படும் ஸெபார்டோ புல் இங்கு அதிகம் வளருகிறது. ஸஹாரான் அட்லஸுக்குத் தென்பாகத்தில் சற்றுக் குற்றுச் செடிகளும் முட் செடிகளும் காணப்படுகின்றன. அதற்குத் தெற்கில் வெகு விசாலமான கல்லும் மணலும் கொண்ட ஸஹாரா பாலையே காணப்படுகிறது. சிறிதளவு நீர் கிடைக்குமிடங்களில் ஓயஸிஸ் களும், அதைச் சுற்றிப் பேரீச்ச மரங்களும் காணப்படுகின்றன. அல்ஜீரியாவின் தென்பாகத்திலுள்ள அஹாகன் மலைகளில் சிறி தளவு மழை பெய்வதால், அங்கு புல்தரைகள் காணப்படு கின்றன.

மிருகங்கள்

சீதோஷ்ணம், தாவர வர்க்கம் முதலிய பல வகையிலும் இது ஆப்பிரிக்காவின் மற்றப் பாகங்களிலிருந்து வித்தியாசப்பட்ட பிரதேசம். இதன் தன்மை பெரும்பாலும் தென் ஐரோப்பியப் பிரதேசத்தையே ஒத்தது. இங்குள்ள மிருகங்களைப் பொறுத்த வரையில் இதுவும் உண்மையாகும். சிங்கமும், புலியும், சிறுத் தையும், குரங்குகளும் அட்லஸ் பிரதேசத்தின் வெகு ஒதுக்க மான இடங்களில் காணப்பட்டாலும், ஆப்பிரிக்கப் புல் பிரதேசங் களில் முக்கியமான மிருகங்களான மான்வகைகளோ, ஒட்டைச் சிவிங்கியோ இங்கில்லை. ஐரோப்பாவில் காணப்படுவதுபோலக் கரடியும், நரியும், ஓநாயும் இங்குக் காணப்படுகின்றன. பறவை களில் நாரை, கொக்கு முதலியன அதிகமாகக் காணப்படு கின்றன. இங்குள்ள நதிகளில் காணப்படும் மீன்வகைகள்கூட ஐரோப்பாவில் உள்ளவைபோலக் காணப்படும்.

உலோகப் பொருள்கள்

பார்பரி இராச்சியங்களிலிருந்து ஏற்றுமதியாகும் இரண்டு முக்கிய உலோகப் பொருள்கள் பாஸ்பேட்டும் இரும்புக் கனியப்

பொருள்களுமாகும். பாஸ்ஃபேட் ஒரு முக்கியமான உரமாகும். அல்ஜீரியாவிலிருந்து துத்தநாகமும் வெட்டியெடுத்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. மொராக்காவின் வடபாகத்திலிருந்து ஈயம் வெட்டியெடுக்கப்படுகிறது. டுனீஸியாவில் சிறிது நிலக்கரி காணப்பட்டாலும், ஆலைத்தொழிலுக்கு வேண்டிய எண்ணெய் (பெட்ரோல்) அங்குக் கிடைப்பதில்லை. அதனால் அங்குக் கிடைக்கும் மூலப்பொருள்களைச் சற்றே அபிவிருத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றனர். உதாரணமாக, திராட்சைப் பழ ரஸம் செய்தல், ஆலிவ் எண்ணெய் எடுத்தல், ஸிகரெட் செய்தல் முதலிய தொழில்கள் அங்கு நடைபெறுகின்றன. அங்குள்ள மற்றத் தொழில்கள் மட்பாண்டங்கள் செய்தல், கம்பளங்கள் நெய்தல், தோல் சாமான்கள் செய்தல் என்பனவாகும். பாஸ்ஃபேட்டிலிருந்து மிகவும் சக்தியான சூப்பர் பாஸ்ஃபேட் என்னும் உரவகை தயாரிப்பது காஸா பிளாங்கா பட்டணத்தில் நடைபெறுகிறது. அல்ஜீரியாவின் ஸஹாரா பாலைவனப் பிரதேசத்தில் பூமிக்கடியில் எண்ணெய் வளம் அதிகமிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தற்சமயத்தில் ஹஸ்ஸி மஸ்ஸீட்டு, டெஜலே இவ்விடங்களில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டு வேலை நடைபெற்றுவருகிறது.

செல்வநிலை

பார்பரி இராச்சியங்களில் ஆதிகாலம்முதலே கோதுமை வகைகளும் பழவகைகளும் கிருஷி செய்யப்பட்டுவருகின்றன. ஆடு வளர்த்தலும் முக்கியத் தொழிலாக இருந்தது. கடந்த நூற்றாண்டில் இங்கு ஃபிரெஞ்சு ஆதிக்கம் வளர்ந்துவந்தபோது தானிய வகைகள் பயிரிடுவதில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. டெல் அட்லஸ் பிரதேசத்திலும், டுனீஸியா, மொராக்கோவில் கடற்கரையை அடுத்த சமநிலங்களிலும் பள்ளத்தாக்குகளிலும் பழவகைகளும், தானியங்களும் ஏராளமாகப் பயிர் செய்யப்பட்டன. காலநிலை அநுகூலமாயிருப்பதால், கோதுமையும், பார்லியும், ஆலிவ் கொட்டைகளும், அத்தி, ஆரஞ்சு, மாதுளை, பிளம் முதலிய பழவர்க்கங்களும், பாதாம் பருப்பு வகைகளும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படும். குளிர் காலத்தில் காய்கறிகளும், கீரைவகைகளும் வெகுவாகப் பயிர் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும். ஏற்றுமதிகள் யாவும் பெரும்பாலும் ஃபிரான்ஸ் தேசத்துக்கே அனுப்பப்படும். இவை தவிரப் பருத்தியும் புகையிலையும் பயிர்செய்யப்படுகின்றன.

டுனீஸியாவில், பல இடங்களில் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுப் பயிர்த் தொழிலிலும் முன்னேற்றமான மார்க்

கங்கள் கையாளப்பட்டுவருகின்றன. மழை குறைவான பீட பூமிப் பிரதேசங்களில் ஆடு வளர்த்தல் மிகவும் முக்கியமான தொழில். இத் தொழிலை பர்பர்களும் அரேபியர்களும் நடத்துகிறார்கள். ஆடுகளை ஏற்றுமதி செய்வதோடு, கம்பளியும் தோலும் ஏற்றுமதியாகின்றன. பீடபூமிகளிலுள்ள கார்க் ஓக் மரங்களிலிருந்து அம் மரத்தின் பட்டையும், அங்கு அதிகமாக விளையும் எஸ்பார்ட்டோ புல்லும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பாலைகளில் உற்பத்தியாகும் பேரீச்சம் பழங்கூட ஏற்றுமதிப் பொருளாகிறது.

அட்லஸ் பிரதேசத்திலும் ஓயஸிஸ்களிலுமுள்ள ஜனங்கள் நிலையாக ஓரிடத்தில் வாசம் செய்வதில்லை. ஆனால், பாலைவனத்தின் ஓரங்களில் வசிப்பவர்கள் நாடோடிகளாகத் திரிகிறார்கள். இப் பிரதேசங்களில் மோட்டார் போக்குவரவும் விமானப் போக்குவரவும் அபிவிருத்தி அடைந்துவருகிறது. பிரயாணிகளின் வசதிகளுக்காகப் பல பகுதிகளிலும் நல்ல ரோடுகள் போடப்பட்டுவருகின்றன.

பொதுவாகப் பயிர்த் தொழில் செய்வோரின் வருமானம் ஒவ்வொரு வருடமும் பெய்யும் மழை அளவைப் பொறுத்திருக்கிறது. நல்ல மழை பெய்யும் வருடங்களில் அல்ஜீரியாவில் 9 இலட்சம் டன் கோதுமை விளைந்ததாகச் சொல்லப்படுகிறது. மழை அதிகமில்லாத வருடங்களில் கோதுமை விளைச்சல் 2 இலட்சம் டன்னுக்கும் குறைந்துபோகுமாம். ஆனால், கோதுமை அதிகம் விளையாத வருடங்களில் திராட்சைப் பழம் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுத் திராட்சை ரஸம் ஏற்றுமதி செய்யப்படும். கோதுமை அதிகமான வருடங்களில் திராட்சைக் கிருஷி குறைந்துபோகும்.

மொராக்கோ

இந்த இராச்சியத்தின் விஸ்தீரணம் 1¾ இலட்சம் சதுரமைல். ஜனத்தொகை 120 இலட்சம். ஜனங்கள் பெரும்பாலும் அரேபியர்களும் பர்பர்களுமாவர். ஐரோப்பிய இனத்தைச் சார்ந்தவர் பெரும்பாலோர், ஃபிரெஞ்சு தேசத்தவர் நகரங்களிலேயே வசிக்கின்றனர். இவர்களின் ஜனத்தொகை 5 இலட்சமாகும். சமீப காலம்வரை மொராக்கோ ஃபிரெஞ்சுக்காரரின் ஆதிக்கத்திலிருந்துவருகிறது. தற்சமயம் இந்த இராச்சியம் ஒரு சுல்தானது ஆட்சியின்கீழ் சுதந்திரமாக விளங்குகிறது. (மொராக்கோ என்ற பதத்திற்கு 'மேற்குக் கடைசி' என்று அர்த்தம்.) அங்கு அரசாங்க மொழி அரபி. ஆனால், ஃபிரெஞ்சு மொழியும் இணைப்பு மொழியாக இருந்துவருகிறது.

மொராக்கோ இராச்சியத்தில் 35 இலட்சம் ஏக்கர் வனப் பிரதேசம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இக் காடுகளில் முக்கிய மரங்கள் கார்க், ஸிடார் மரங்களாகும். இக் காடுகள் இப்போது பாதுகாக்கப்பட்டுவருகின்றன. ஆடுமாடுகள் வளர்த்தல் இப் பிரதேசத்தின் முக்கியத் தொழிலாகும். வெள்ளாடு, செம்மறியாடு என்பவை இரண்டு கோடியும், மாடுகள் இரண்டு இலட்சமும் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கழுதைகளும் கோவேறு கழுதைகளும் சாமான்கள் சுமந்துசெல்லப் பயன்படுகின்றன. இவை தவிர குதிரைகளும் ஒட்டகங்களும் அதிக அளவில் காணப்படுகின்றன.

உலோகப் பொருள்கள்

இரும்பு, ஈயம், துத்தநாகம், மாங்கனீஸ், கோபால்ட் முதலிய உலோகங்கள் இங்கு வெட்டியெடுக்கப்படுகின்றன. சிறிதளவு நிலக்கரியும் எண்ணெயும் காணப்படுகின்றன. ஆனால், இங்குக் கிடைக்கும் முக்கிய உலோகப் பொருள் பாஸ்பேட். காஸா பிளாங்கா துறைமுகம் மூலமாக வருடத்தில் 60 இலட்சம் டன் பாஸ்பேட் ஏற்றுமதியாகிறது.

ஆங்காங்கே நெய்தலும் தோல் பதனிடுதலும் நடைபெற்றாலும், இங்கு முக்கியத் தொழில் திராட்சை ரஸம் தயாரித்தலாகும்.

ஃபிரெஞ்சு தேசத்தவர் காஸா பிளாங்கா பட்டணத்திலிருந்தே இப் பகுதியை அபிவிருத்தி செய்தனர். இங்கு ஜனத்தொகை 10 இலட்சம். ஜனங்களில் 1/3 பாகம் ஐரோப்பியர். காஸா பிளாங்காவிலிருந்து பல திசையிலும் ரெயில் பாதைகள் செல்கின்றன. இதுதான் மொராக்கோவின் முக்கிய வியாபார ஸ்தலம். இப் பட்டணத்தில் காப்பர் பாஸ்பேட் உரம் தயாரித்தல் ஆலைத்தொழிலாக நடைபெறுகிறது. இத் துறைமுகம் வழியாக ஆலைப்பொருள்கள், பழவகைகள், தோல், கம்பளி, முட்டை என்பன ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தேசத்தின் தலைநகரம் ரபார்ட். இதன் ஜனத்தொகை 2 இலட்சம். இங்குதான் தேசத்தின் சுல்தான் வசிக்கிறார். இதர முக்கியப் பட்டணங்கள் ஃபெஸ் (Fez) (2 இலட்சம் ஜனத்தொகை), மர்கேஷ் (Marrkesh) (ஜனத்தொகை $2\frac{1}{2}$ இலட்சம்). இவை மொராக்கோ நாட்டின் பழங்காலத் தலைநகரங்கள். ஃபெஸ் பட்டணம் இஸ்லாம் மதத்தவருக்கு ஒரு முக்கியப் பட்டணம். டஞ்ஜீர் பட்டணத்தில் ஜனத்தொகை 2 இலட்சம். இப் பட்டணம் ஒருகாலத்தில் இப் பிரதேசத்துக்கே முக்கியத்

துறைமுகமாக இருந்தது. ஆனால், நாளடைவில் இதன் முக்கியத்துவம் குன்றிவிட்டது. தற்சமயத்தில் மெடிட்டரேனியன் கடலுக்குக் காவலாயிருக்கும் ஒரே முக்கியத்துவம்தான் மிஞ்சியுள்ளது.

இந்த இராச்சியத்தின் வியாபாரம் பெரும்பாலும் ஃபிரான்ஸ் தேசத்துடன் நடைபெறுகிறது. இங்கு இறக்குமதியாகும் பொருள்கள் பெட்ரோல் எண்ணெய், மோட்டார், அதன் பொருள்கள், இயந்திரங்கள், பருத்தித் துணிவகைகள் என்பன. உணவுப் பொருள்களில் முக்கியமாகக் காப்பியும், சீனியும் உற்பத்தியாகின்றன. இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் கோதுமை, பார்லி, ஆலிவ் எண்ணெய், காய்கறி, பழவகைகள், பாதாம் பருப்பு, முட்டை, கம்பளி, தோல் வகைகள், எஸ்பார்ட்டோ புல் முதலியன. எல்லாவற்றுக்கும் மேலான முக்கியமான ஏற்றுமதிப் பொருள் பாஸ்பேட். ஏற்றுமதிகள் பெரும்பாலும் ஃபிரான்ஸ், ஸ்பெயின் தேசத்துக்கும், சிறிதளவு இங்கிலாந்துக்கும் செல்கின்றன.

அல்ஜீரியா

இந்த இராச்சியத்தை வடபாகம் என்றும், தென்பாகம் என்றும் பிரிக்கலாம். வடபாகத்தில் கடற்கரைச் சமநிலப் பிரதேசமும், மலைகளும், பீடபூமிகளும் அமைந்துள்ளன. தென் பாகம் ஸஹாரா பாலையைச் சார்ந்தது. அல்ஜீரியாவின் வடபாகத்தை 80 ஆயிரம் சதுரமைல் எனலாம். இங்கு ஜனத்தொகை 120 இலட்சம் பேர். இதில் 10 இலட்சம் பேர் ஐரோப்பியர் ; முக்கியமாக ஃபிரெஞ்சு நாட்டைச் சார்ந்தவர். அல்ஜீரிய நாட்டு மக்கள் 7 வருடமாக ஃபிரான்ஸ் தேசத்தோடு சுதந்திரப் போர் நடத்தி 1962-ல் சுயராஜ்யம் அடைந்தனர். அதன்பின் அங்கிருந்த ஐரோப்பியர்களில் பெரும்பாலோர் நாட்டைவிட்டுத் தமது தேசத்திற்குச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. தென் அல்ஜீரியாவின் விஸ்தீரணம் 7¾ இலட்சம் சதுரமைல். அங்கு 6 இலட்சம் பேர் உளர். பெரும்பாலோர் பர்பர் இனத்தைச் சார்ந்தவர்.

அல்ஜீரியாவில் உள்ள ஐரோப்பியர்கள் பட்டணங்களில் வசித்தாலும், அவர்களில் அநேகர் அந் நாட்டின் கிருஷி நிலத்தில் 1/3 பாகத்தில் பயிர்த் தொழில் நடத்திவந்தார்கள். டெல் மலைப் பிரதேசத்திலும், முக்கியப் பள்ளத்தாக்குகளிலும் அவர்கள் கிருஷி மிகவும் அபிவிருத்தி அடைந்திருந்தது. தற்காலத்தில் அவர்களில் பெரும்பாலோர் நாட்டைவிட்டுப்

போய்விட்டபடியால், சர்க்காரே அந் நிலங்களை எடுத்துக் கூட்டுப் பண்ணைமுறையில் அவற்றை கிருஷி செய்து வருகின்றனர். அல்ஜீரியாவிலுள்ள பர்பர் இனத்தவரில் கபைல்ஸ் (Kabyles) எனற இனத்தவர் இங்கு அதிகம் வசிக்கின்றனர். அவர்கள் பயிர்த் தொழிலில் மிகவும் முன்னேற்றமடைந்தவர்கள்.

அல்ஜீரியாவில் காடுகள் 60 இலட்சம் ஏக்கர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் கார்க், ஓக் மரங்களும், சிறிதளவு ஸிடார் மரங்களும் அங்குக் காணப்படுகின்றன. மர வேலைக்கு வேண்டிய சாமான்களும், ரெயில்வே பாறைகட்கு வேண்டிய கட்டைகள், விறகு என்பன அங்கிருந்து கிடைக்கின்றன. அல்ஜீரியாவின் பெரும்பாகமும் ஆடுமாடு வளர்த்தலுக்கு ஏற்றவையாக இருக்கிறது. ஒரு கோடி வெள்ளாடு, செம்மறி யாடுகளும், 8 இலட்சம் மாடுகளும் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

கோதுமையும் பார்லியும் ஏராளமாகப் பயிரிடப்படுகிறது. ஓட்ஸ், மக்காச்சோளம் தானியமும் சிறிதளவு விளைகிறது. அல் ஜியர்ஸ், ஓராஸ் முதலிய பட்டணங்களுக்சருகில் காய்கறி வகைகள், உருளைக்கிழங்கு, டெமாட்டோ, பீன்ஸ் என்பன ஏராள மாகப் பயிர்செய்யப்பட்டு ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. 10 இலட்சம் ஏக்கரில் திராட்சை பயிரிடப்பட்டு ஒவ்வொரு வருடமும் 30, 40 கோடி காலன் திராட்சை ரஸம் ஏற்றுமதியாகிறது. சமீப காலத்தில் புகையிலையும் அதிகமாகப் பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்த நாட்டில் சுமார் 2 கோடி ஆலிவ் மரங்களிருப்பதாகவும், ஆலிவ் எண்ணெய் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அறிகிறோம். பழவகைகள், அத்தி, பிளம், மாதுளை, வாழை, வாதாம் முதலியன ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

அல்ஜீரியாவில் இரும்புக் கனியப் பொருள் அதிக அளவில் இருப்பதாகத் தெரிகிறது. இப்போது வருடத்தில் 20 இலட்சம் டன் இரும்பு வெட்டியெடுக்கப்படுகிறது. மேலும், 6 இலட்சம் டன் பாஸ்பேட்டும், அதிக அளவில் துத்தநாகமும் வெட்டி யெடுக்கப்படுகின்றன. தெற்கிலுள்ள ஸஹாரா பாலையில் கிடைக்கும் பெட்ரோல் எண்ணெய், இயற்கை நில வாயு என்பன ஃபிரான்ஸ் தேசத்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பிலிப்வில், போன் முதலிய பட்டணங்களில் சூப்பர் பாஸ் பேட் உற்பத்தி ஆலைத்தொழிலாக நடைபெறுகிறது. முக்கியமாகக் கடற்கரையை அடுத்த பட்டணங்களில் சோப்பு, சிகரெட் என்பன செய்யும் தொழிற்சாலைகளும், மாவு மில்களும், ஆலிவ்

எண்ணெய் மில்களும் காணப்படுகின்றன. சிறிய கைத்தொழில்களில் கம்பளம் நெய்வது, மட்பாண்டங்கள் செய்வது, தோல் பதனிடுவது முதலியவற்றைக் கூறலாம்.

தலைநகரமான அல்ஜியர்ஸ் பட்டணம் 8 இலட்சம் ஜனத்தொகையுள்ளது. பார்பரிப் பிரதேசத்திலேயே இது மிகப் பெரிய பட்டணம். இது இப் பிரதேசத்தின் முக்கிய வியாபார ஸ்தலமாகும். இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் முக்கியமாக ஃபிரான்ஸ் தேசத்துக்கே அனுப்பப்படுகின்றன. இப் பட்டணத்தின் ஒரு பாகத்தில் மிகக் குறுகலான தெருக்களும் கடைவீதிகளும் காணப்பட்டாலும், நாகரீகமான மற்ஞெரு பாகத்தில் மிகப் பெரிய கட்டடங்களும், வியாபார ஸ்தலங்களும், பெரிய ஓட்டல்களும், வீதிகளும் அமைந்துள்ளன. இதர பட்டணங்களில் ஓரானில் (Oran) 4 இலட்சம் ஜனத்தொகை. இது அல்ஜியர்ஸுக்கு வியாபாரத்தில் போட்டியாக அமைந்துள்ள ஒரு பட்டணம். இது ஒரு நல்ல துறைமுகமாகும். உள்நாட்டில் பல பாகங்களுக்கும் ரெயில் பாதைகள் செல்கின்றன. துறைமுகம் வழியாக தானியங்களும், பழவகைகளும், எஸ்பார்ட்டோ புல்லும் ஏற்றுமதியாகின்றன. பிலிப்வில் 70 ஆயிரம் ஜனத்தொகை; போனில் 1½ இலட்சம். இத் துறைமுகங்கள் வழியாக பாஸ்பேட் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உள்நாட்டுப் பட்டணங்களில் மிகவும் முக்கியமானது கான்ஸ்டன்டைன். இதன் ஜனத்தொகை 2½ இலட்சம். பிலிப்வில் துறைமுகத்திலிருந்து இது 50 மைல் தூரத்திலுள்ளது. இந் நகருக்கு ஒரு ரயில் பாதை உண்டு. இந் நகரைச் சுற்றியுள்ள இடங்களில் கோதுமையும் பார்லியும் ஏராளமாகப் பயிர் செய்யப்படுகின்றன.

அல்ஜீரிய நாட்டின் வியாபாரத்தில் ¾ பாகம் ஃபிரான்ஸ் தேசத்தோடுதான் நடைபெறுகிறது. இங்கு இறக்குமதியாகும் பொருள்களில் முக்கியமானவை துணிவகைகள், இயந்திரங்கள், காப்பி, சீனி, தோல், ரப்பர் சாமான்கள்; ஏற்றுமதி செய்யும் பொருள்களில் இரும்புக் கனியப் பொருள்கள், பாஸ்பேட், ஆலிவ் எண்ணெய் முதலியன உண்டு.

டுனீஷியா

இந்த இராச்சியத்தின் விஸ்திரணம் 53 ஆயிரம் சதுரமைல். ஜனத்தொகை 45 இலட்சம். ஜனங்களில் பெரும்பாலோர் பர்பர்கள். இந்த இராச்சியம் 1956-ல் சுதந்திரம் பெற்று 1957-ல் குடியரசு நாடாயிற்று. அதன்பின் இங்கிருந்த சுமார் 2½ இலட்சம் ஐரோப்பியர்களில் பெரும்பாலோர் நாட்டைவிட்டுச் சென்

றனர். இந்த நாட்டின் இராச்சிய மொழி அரபி. ஆனால், ஃபிரெஞ்சு மொழி துணைமொழியாக இருந்துவருகின்றது.

அட்லஸ் பீடபூமியின் ஒரு கோடியில் இந் நாடு அமைந்திருப்பதால், இதன் வடக்கிலும் கிழக்கிலும் கடற்கரைப் பிரதேசம் காணப்படுகிறது. இந் நாட்டில் சமீப காலத்தில் ஆடுமாடு வளர்த்தலில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு, இங்கு 60 இலட்சம் ஆடுகளிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒட்டகங்கள் சுமார் 2½ இலட்சம் இங்குக் காணப்படுகின்றன. அவை பயிர்த் தொழிலில் பயன்படுத்தப்படுகின்றன.

பாஸ்பேட் இங்கு அதிகம் வெட்டியெடுக்கப்படுகிறது. ஆனால், இரும்புக் கனி அதிகமில்லை. துத்தநாகமும் ஈயமும் டுனிஸ் பிரதேசத்தில் வெட்டி யெடுக்கப்படுகின்றன. ஆலைத் தொழில்கள் அதிகம் இல்லாவிட்டாலும், ஆங்காங்கே மாவு மில்களும், ஆலிவ் எண்ணெய் மில்களும், சோப்புத் தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன.

டுனிஸ் பட்டணத்தில் 7 இலட்சம் ஜனத்தொகையுள்ளது. இது இந் நாட்டின் தலைநகரமும் முக்கியப் பட்டணமுமாகும். சரித்திரப் பிரசித்திபெற்ற கார்த்தேஜ் இராச்சியமும் அதன் சின்னங்களும் டுனிஸ் பட்டணத்துக்கு அருகே காணப்படுகின்றன. அதனால் டுனிஸ் அதிக யாத்திரிகர்கள் வரும் தலமாக அமைந்துள்ளது. இப் பகுதியில் டுனிஸ் ஒரு முக்கியத் துறைமுகமாக மட்டுமல்லாமல், மெடிட்டரேனியன் கடலில் கிழக்குப் பாகத்துக்கும் மேற்குப் பாகத்துக்குமிடையில் ஒரு முக்கிய ஸ்தலமாகவும் அமைந்துள்ளது.

டுனீஸியா இராச்சியத்தின் வியாபாரம் அல்ஜீரியாவைப் போல் ½ பாகம் என்று சொல்லலாம். இங்கு இறக்குமதியாகும் பொருள்களில் ¾ பாகமும் ஃபிரான்ஸிலிருந்தாகும். ஏற்றுமதியாவதில் பாதி ஃபிரான்ஸுக்காகும். இறக்குமதிப் பொருள்களில் முக்கியமானவை துணி வகைகள், இயந்திரங்கள், காப்பி, சீனி என்பன. ஏற்றுமதியாவன தானிய வகைகள், ஆலிவ் எண்ணெய், திராட்சை ரஸம், எஸ்பார்ட்டோ புல், பழவகைகள், கார்க், ஸ்பாஞ்சு முதலியன. பாஸ்பேட்டும் இரும்பு, ஈய உலோகங்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

லிபியா

இந் நாட்டின் விஸ்தீரணம் சுமார் 7 இலட்சம் சதுரமைல், ஜனத்தொகை 12 இலட்சம். இதில் ஐரோப்பியர் பெரும்பாலோர்.

இத்தாலியர்கள் 30 ஆயிரம் பேர் டிர்ப்போலி பட்டணத்திலும் அதைச் சுற்றிலும் வாழ்கின்றனர். இங்குள்ள ஜனங்கள் பெரும்பாலும் பர்பர் இனத்தைச் சார்ந்தவரும் நீக்ரோக்களுமாவர்.

டுனிஸியாவுக்கும் எகிப்துக்கும் இடையிலுள்ள இந்த இராச்சியத்தில் மூன்று மாகாணங்கள் உள்ளன. ட்ரிப்போரிட்டானியா, ஸிரனேய்க்கா (Cyrenaica), ஃபெஸ்ஸான் (Fezzan). அவற்றில் ட்ரிப்போரிட்டானியாவில் மொத்தத்தில் ஆறில் ஒரு பங்கு உள்ள விஸ்தீர்ணத்தில் ஜனத்தொகையில் முக்கால் பாகம் பேர் வசிக்கின்றனர். மொத்தத்தில் ½ பாகம் விஸ்தீர்ணமுள்ள ஃபெஸ்ஸான் மாகாணத்தில் இலட்சம்பேரே காணப்படுகின்றனர். அவர்களும் பெரும்பாலும் நாடோடிகளாய்த் திரிபவர்கள். இந்த நாட்டில் ஜனவாசம் மெடிட்டரேனியன் கடற்கரைப் பிரதேசத்திலேயே நெருக்கமாய்க் காணப்படுகிறது. முற்காலத்தில் இப்பிரதேசம் ரோம் சாம்ராச்சியத்தின் ஆதிக்கத்திலிருந்தபோது மிகச் செழிப்பாக இருந்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் அரேபியர்களும் துருக்கியர்களும் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் இந்த இராச்சியத்தின் முன்னேற்றம் தடைப்பட்டது. 1911ஆம் வருஷத்தில் இப் பிரதேசம் இத்தாலியர் ஆட்சிக்கு உட்பட்டு, வெகுவாகச் சீர்திருத்தமடைந்தது. 1961-ல் நாடு சுதந்திரமடைந்தது. தற்சமயத்தில் பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் அதிகப் பண உதவி அளித்து தேசத்தை முன்னேற்றமடையச் செய்தனர். இந்நாட்டில் பெங்காஸி (Benghazi) கோடைகாலத் தலைநகராகவும், டிர்ப்போலி குளிர்காலத் தலைநகராகவும் விளங்குகின்றன.

இப் பிரதேசம் பெரும்பாலும் சமநிலமாக உள்ளது. பல இடங்களிலும் மணற்குன்றுகள் காணப்படுகின்றன. ட்ரிப்போரிட்டானியா கடற்கரைக்குத் தெற்கே பாறைகளாலான பீடபூமியும், பெங்காஸிக்கு மேற்கே பர்க்கா (Barka) பீடபூமியும் காணப்படுகின்றன. குறிப்பிடத்தக்க நதிகள் இங்கில்லை. இப்பிரதேசம் பார்பரி இராச்சியங்களைவிட இன்னும் தெற்கிலிருப்பதால் இங்கு வெப்பம் அதிகம். மழையும் குறைவு. மேற்கிலிருந்து, கிழக்கே போகுந்தோறும் மழை குறைவாகப் பெய்கிறது. டிரிப்போலிப் பட்டணத்தில் மழை வருடத்தில் 16″. ஆனால், பெங்காசிக்குக் கிழக்கே வருட மழை 10″-க்கும் குறைவு. பர்க்கா பீடபூமியில் வருடத்தில் 18″ மழை பெய்கிறது. தெற்கே போகுந்தோறும் லிபியன் பாலைவனத்தில் மழை மிகக் குறைவு.

ரோம் சாம்ராச்சியம் இங்கு ஆதிக்கம் செலுத்திய காலத்தில் லிபியா, டுனிஸ் பிரதேசங்கள் சாம்ராச்சியத்தின் தானியக் களஞ்

சியமாக விளங்கினவாம். அக்காலத்தில் சீதோஷ்ணநிலே வேறுபட்டிருந்திருக்கலாம். மழை அதிகம் பெய்திருக்கலாம். ஆனல், தற்காலத்தில் மழை குறைவானதாலும், பாலேவனத்தின் மணல் இப் பிரதேசத்தை வெகுவாக மூடிவிட்டபடியாலும், இப் பிரதேசம் அப் பெருமையை இழந்துவிட்டது. பீடபூமிப் பிரதேசங்களில் பெய்யும் குறைந்த மழையால் ஆங்காங்குக் காணப்படும் குற்றுச்செடிகளில் பர்பர் இனத்தவர் ஆடு, ஒட்டகம் என்பனவற்றை மேய்த்து ஜீவனம் நடத்துகின்றனர். கடற்கரையடுத்த பிரதேசங்களிலும், சில பள்ளத்தாக்குப் பிரதேசங்களிலும் பயிர்த் தொழில் செய்ய வசதியுண்டு. இத்தாலியர் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தியதோடு பயிர்த் தொழிலிலும் நவீன முறைகளேக் கையாண்டனர்; அநேக சாலே மார்க்கங்கள் ஏற்படுத்தியும், மணல் பிரதேசம் பரவுவதைத் தடுக்க ஆயிரக்கணக்கில் மரங்களே நட்டும் வளர்த்தனர்.

கடற்கரையடுத்த பிரதேசத்தில் பார்லி பயிர் செய்யப் படுகிறது. ஆலிவ் மரங்களும், பாதாம் மரங்களும், அத்தி, மாதுளே, ஆரஞ்சு, பேரீச்சை மரங்களும் ஏராளமாகக் காணப் படுகின்றன. மற்றப் பிரதேசங்களிலும், பாலேயின் ஓரங்களிலும், ஓயஸிஸ்களிலும், அரேபியர்களும் பர்பர்களும் ஆடு வளர்த்தலும் பயிர்த் தொழிலும் செய்கின்றனர். சமீப காலத்தில் ஸெல்டன் (Zelten), டாரா (Dihra) முதலிய இடங்களில் எண்ணெய்க் கிணறுகள் வெட்டப்பட்டு அவை குழாய் மூலமாக மெடிட்டரேனியன் கடற்கரையிலுள்ள மெர்ஸா பெர்கா (Mersa Berga) துறைமுகத்துக்கு அனுப்பப்படுகின்றன. லிபியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் நிலக்கடலே, ஆலிவ் எண்ணெய், ஒட்டகங்கள், எஸ்பார்ட்டோ புல், தோல்வகைகள், ஸ்பாஞ்ச் என்பன. இறக்குமதியாகும் பொருள்களில் முக்கியமானவை நிலக்கரி, துணி வகைகள், இயந்திரங்கள் என்பன.

டிரிப்போலி ஜனத்தொகை இரண்டு இலட்சம். இது ட்ரிப்போ ரிட்டானியா மாகாணத்தின் தலேநகரம். இதை இத்தாலியர்கள் வெகுவாக சீர்திருத்தினர். இங்கிருந்து, கடற்கரை ஓரமாக ரெயில்பாதை செல்கிறது. இதர பட்டணங்களில் பெங்காஸி ஜனத்தொகை சுமார் ஓர் இலட்சம். இது சிரனேய்கா மாகாணத்தின் தலேநகரம். இங்கு மீன்பிடித்தல் ஒரு முக்கியத் தொழில். ஸ்பாஞ்சும், , டன்னி என்ற ஒருவகை மீனும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. டர்ளு (Derna) பட்டணம் பழத்தோட்டங்களுக்கு மிகவும் முக்கியமானது.

ஸஹாரா பாலேவனம்

ஸஹாரா பாலேவனம் ஆப்பிரிக்காவின் குறுக்கே அட்லான் டிக் சமுத்திரத்திலிருந்து செங்கடல்வரை வியாபித்திருக்கிறது. அதன் இயற்கையமைப்பு எல்லா இடத்தும் ஒரே மாதிரியாக இருக்கவில்லே. அதில் எத்தனையோ பீடபூமிகளும் காணப்படு கின்றன. அப் பீடபூமிகள் சில இடங்களில் 10,000-க்கு மேல் உயரமுள்ளவையாக இருப்பதால் அவற்றின் சிகரங்களில் பனி உறைந்து போவதுண்டு. மற்ற இடங்களில் எத்தனையோ சம நிலங்களும், உட்குழிந்த பாகங்களும் காணப்படுகின்றன. அவற்றில் சில கடல்மட்டத்துக்குத் தாழ்வான உயரமுடையவை. பீடபூமி பாகங்களைத் தவிர மற்ற இடங்களில் மழை அபூர்வ மாகத்தான் பெய்கிறது. பல வருடங்களாக மழையே பெய்யாம லிருப்பதுமுண்டு. பூமியின் சரித்திரத்தில் எத்தனையோ பனிக் கட்டியுகங்கள் (Ice age) ஏற்பட்டன என்று சொல்லப்படுகிறது. அவ்விதம் பனிக்கட்டியுகம் ஏற்படும்போது வட துருவப் பிரதேசத்தி லிருந்து பனிக்கட்டி நிரம்பி வழிந்து தென் ஐரோப்பாவரை வந்து நிலங்களையெல்லாம் மூடிவிடுமாம். அவ்விதம் ஏற்பட்ட காலங் களில் ஸஹாரா பாலேயில் நல்ல மழை பெய்தும், பல நதிகள் ஓடியும், நிலம் வெகு செழிப்பாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. இக் காலத்தில் அந் நதிகள் ஓடிய வறண்ட பள்ளத்தாக்குகளையே அங்குக் காண்கிறோம். இக் காலத்திலும் அந் நதிகளில் சிறிது தோண்டினால் தண்ணீர் கிடைக்கும். தண்ணீர் கிடைக்கு மிடங்களில் ஒயஸிஸ்கள் ஏற்படுகின்றன.

ஸஹாரா பாலேயில் காற்று மிகவும் வெப்பமானதாகவும், வறட்சியாகவுமிருப்பதால் மேகங்களே ஏற்படுவதில்லே. சூரியக் கிரணங்கள் முழுவதும் இங்குப் பாய்வதால் அங்கு மத்தியான வெப்பநிலே 130°F-க்கும் மேலாகிவிடுமாம். தரை அதைவிட உஷ்ணமாயிருக்குமாம். இரவு நேரங்களில் நிலத்தின் சூடு வேகமாய்க் குறைந்துவிடுவதால் குளிர் நடுக்கும். இவ்விதம் பகல் வெப்பத்துக்கும், இரவு குளிருக்குமுள்ள அதிக வேறுபாடு பொதுவாக எல்லா உஷ்ணமண்டலப் பாலேகளிலும் ஏற்படுவ துண்டு. பகல் இரவு நேர வெப்பத்தின் வேறுபாடு 50°F வரை ஏற்படுவது வெகு சாதாரணம்.

உஷ்ணம் அதிகமாக இருக்கும்போது பாறைகள் விரி வடைந்து, குளிர் அதிகமாகும்போது சுருங்குவதால் நாளடைவில் அவற்றில் பிளவுகள் ஏற்பட்டுச் சில பாறைகளின் மேற்பாகங்கள் நொறுங்கித் தகடு தகடாகப் பிரிந்து, கூர்மையான கற்குவியல்க ளாக மாறிவிடுகின்றன. இவ்விதம் ஏற்படும் கல் ஆரண்யப்

பாலைவனங்கள்; மனிதனோ, மிருகமோ நடமாடுவதற்கு ஏற்றவையல்ல.

பாலைகளில் பலத்த காற்றும் வீசுவதுண்டு. அவை சிறிய கல் துண்டுகளை ஒன்றோடொன்று அடித்துப் பாறைகளின்மேல் மோதி சில கற்பாறைகளை வழவழப்பாக்குவதும் சில இடங்களில் ஏற்படு கிறது. மணற் காற்று பலமாய் வீசிக்கொண்டிருக்கும்போது, அதன் மார்க்கத்தில் ஏதேனும் ஒரு குற்றுச் செடியோ, கற்பாறையோ கிடந்தால் அவற்றைச் சுற்றி மணல் குவிந்து பிறை வடிவமாகக் காணப்படும். காற்று வீசும் வேகத்தைப் பொறுத்து இம் மணற்குன்றுகள் இடம் விட்டு இடம் நகர்ந்து கொண்டேயிருக்கும். இவற்றைத் தடுத்து நிறுத்தாவிடில் அவை செழிப்பான பகுதிகளையும் சென்று மூடிவிடும்.

பாலையிலுள்ள உயரமான பீடபூமிப் பிரதேசங்களில் வெறும் பாறைகளும் கற்களும் மாத்திரம் காணப்படும் இடங்களு முண்டு. ஆகவே, பாலைவனத்தின் மேற்பரப்பு எல்லாவிடத்திலும் ஒரே மாதிரி இல்லை என்பது தெளிவாகிறது. பாலைவனத்தில் அங்குமிங்கும் ஒட்டகத்தில் செல்லும் பிரயாணிகள் பகலிலுள்ள அதிக வெப்பத்தையும், இரவில் நேரும் அதிகக் குளிரையும், வெகு தூரத்துக்கு நீர் அகப்படாத நிலைமையையும் சமாளிக்க வேண்டிவரும். சில சமயங்களில் ஸிமூன் (Simoon) என்ற பலத்த காற்று மணலை அள்ளி வீசி சூறுவளிபோல அடிக்கும். அது நேரும்போது மனிதனும் மிருகமும் நின்ற இடத்திலேயே மூடிப் படுத்துக்கொள்வது தவிர வேறு ஏதும் செய்ய இயலாது.

ஸஹாரா பாலையின் உலோகச் செல்வம்

சமீப காலத்தில் உலோகப் பொருள்கள் பாலைவனத்தில் அதிக மாகக் கிடைக்கும் என அறியப்படுகிறது. சில இடங்களில் அவை வெட்டியெடுக்கப்பட்டும் வருகின்றன. கொலம்ப் பெச்சார் (Colomb Bechar) என்னுமிடத்தில் நிலக்கரி வெட்டியெடுக்கப் படுகிறது. அதற்குத் தென்மேற்கே இரும்பு கிடைக்கிறது. லிபியா எல்லையில் ஹாஸ்ஸி மஜ்ஜீத், டெஜலே என்னுமிடங்களில் எண்ணெய்க் கிணறுகள் செயற்படுகின்றன. வருடத்தில் 2½ கோடி டன் பெட்ரோல் எண்ணெய் கிடைப்பதாகக் கணக் கிடப்பட்டிருக்கிறது. நிலவாயு சில இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டு ஒராஸ் பட்டணத்தை அடுத்துள்ள ஆர்ஸியூ துறை முகத்துக் (Arzuw) கனுப்பப்படுகிறது. அங்கிருந்து ஃபிரான்ஸுக்கு ஏற்றுமதியாகிறது. பாலைவனத்தில் கிடைக்கும் இதர உலோ கங்கள் யூரேனியம், செம்பு, மாங்கனீஸ், தகரம் என்பன.

ஜனவாசம்

மனித வாழ்க்கைக்குத் தண்ணீர் மிகவும் அவசியமாகையால் பாலைவனத்தில் மக்கள் பொதுவாக ஓயஸிஸ்களிலும், பாலையின் ஓரப் பிரதேசங்களிலும் வசிக்கிறார்கள். பாலையில் வசிப்பவர்கள் பெரும்பாலும் அரேபியர், பர்பர், டாரட் இனத்தைச் சேர்ந்தவர்கள். தென்பாகத்தில் சில நீக்ரோக்களும் காணப்படுகின்றனர். பெரிய ஓயஸிஸ்களில் அரேபியர் உயரமான வீடுகளை நெருக்கமாகக் கட்டி வசிக்கின்றனர். ஓயஸிஸ்களில் தானியங்களும் பேரிச்சையும் பயிர்செய்யப்படுகின்றன. ஆனால், அதிகம் பேர் தங்கள் ஆட்டு மந்தை, ஒட்டகங்களுடன் நாடோடிகளாக வாழ்கின்றனர். அவர்கள் நிலையாக ஓரிடத்தில் வசிப்பதில்லை. தங்கள் ஆடுகட்குப் புல் தரிசுகள் தேடி அலைபவராதலால் கூடாரங்கள் அமைத்தே வசிக்கின்றனர். ஆண்கள் மந்தைகளைக் கவனிக்கவும், பெண்கள் ஆட்டிலும், ஒட்டகத்திலும் பால் கறந்து வெண்ணெய் எடுத்து, சமையலையும் கவனிப்பதோடு, கம்பளங்கள் பின்னுதலையும், ஆடைகள் நெய்தலையும் செய்கின்றனர்.

பாலைவன வாசிகளில் சிலர் ஒட்டகங்களை ஓட்டிச் செல்வதில் நிபுணர்கள். ஒட்டகங்களின்மேல் கனமான சாமான்களைச் சுமந்து பாலைவனங்களைக் கடந்து வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். பீடபூமியில் வசிக்கும் சில டாரட் இனத்தவர் இத் தொழிலில் சிறந்தவர். பாலைவன வாழ்க்கைக்கு ஒட்டகம் ஒரு இன்றியமையாத சாதனம். ஒரு வாரம் வரை நீர் குடிக்காமல் எந்த வெயிலிலும் பாலைவனத்தைக் கடக்கும் சக்தியுள்ளது. 1,000 பவுண்டு எடையுள்ள சாமான்களை ஒரு நாள் முழுவதும் தன் முதுகில் ஏற்றிச் செல்லும் சக்தியுள்ளது. மணல் காற்று பலமாய் வீசும் போது அது தன் மூக்கையும், கண்ணையும் இறுக மூடிக்கொள்ளும். அதன் கால் குளம்புகள் பாலைவன மண்ணில் ஆழப் பதியாமல் செல்லும் வகையில் அமைந்துள்ளது.

சமீபகாலம் வரையில் ஒட்டகங்கள் மூலமாகத்தான் பாலைகளைக் கடக்கவேண்டிய நிலை இருந்தது. ஆனால், தற்காலத்தில் மோட்டார் பஸ்கள் பாலைவனத்தைக் கடந்து செல்கின்றன. அல்ஜீரியாவுக்கும், நைஜர், சாட்டுப்பிரதேசங்களுக்கும் இப்போது மோட்டார் லாரிகள் செல்கின்றன. ஒரு ரெயில் பாதை அமைத்தலும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது. பார்பரி இராச்சியங்களுக்கும், மேற்கு ஆப்பிரிக்காவுக்கு மிடையில் தற்காலத்தில் விமானங்கள் தினமும் சென்று வருகின்றன.

9. மேற்கு ஆப்பிரிக்கா

இந்தப் பொருளாதரப் பிரதேசத்துக்கு சுமார் 15° வடக்கு அட்சாம்சத்தை வடக்கு எல்லையாகக் கூறலாம். உத்தேசமாக ஸெனிகல் நதியின் முகத்துவாரத்திலிருந்து சார்ட் தடாகம் வரையில் இதன் வடக்கு எல்லை எனக் கூறலாம். வருட மழை அளவையும், ஜன நெருக்கத்தையும் உத்தேசித்தே இந்த எல்லை வரையப்பட்டுள்ளது. நைஜீரியா நாட்டின் எல்லையைக் கிழக்கு எல்லையாகக் கூறலாம். நைஜீரியா நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும், அதற்குக் கிழக்கிலுள்ள நாடுகளின் முன்னேற்றக் குறைவையும் கவனித்தே இந்த எல்லை கூறப்படுகிறது. மேற்கிலும் தெற்கிலும் அட்லான்டிக் சமுத்திரமே எல்லை.

14ஆம் நூற்றாண்டிலேயே ஃபிரெஞ்சு மாலுமிகள் இப் பிரதேசத்தில் வந்து சேர்ந்ததாகக் கூறப்பட்டாலும், 15ஆம் நூற்றாண்டில் போர்த்துகீஸிய மாலுமிகள் இந்தியாவுக்குச் செல்லும் வழியில் இப் பிரதேசத்தின் கடற்கரையில் சிறிது தங்கி உள்நாட்டிலும் சிறிது சென்றனர். அதன் பின்னர் பிரிட்டிஷாரும் டச்சுக்காரரும் இங்கு வந்தனர். கடந்த நூற்றாண்டுவரையில் வெள்ளையர்கள் இங்கிருந்த நீக்ரோ மக்கள் பலரைப் பிடித்து அமெரிக்காவில் அடிமைகளாக விற்றனர். கடந்த நூறு வருடங்களாகத்தான் ஐரோப்பியருக்கு இப் பிரதேசத்தைத் தெரியுமானதால் இங்குள்ள விசாலமான புல் பிரதேசம் வழியாக சூடான், எகிப்து முதலிய நாடுகளோடு தொடர்பு இருந்து வந்தது. எகிப்தியர்களும் அரேபியர்களும்தான் இங்கு ஆடுமாடுகளையும், பயிர்த்தொழிலுக்குத் தேவையான பொருள்களையும் கொண்டு சேர்த்தனர்.

இயற்கை அமைப்பு

மேற்கு ஆப்பிரிக்காவின் பெரும் பாகம் நைஜர் நதியும், அதன் கிளை நதிகளும் பாயும் பிரதேசமாகும். நைஜர் நதி ஃபூட்டா ஜலோன் (Futa Jallon) பீடபூமியில் உற்பத்தியாகி உள் நாட்டை நோக்கிப் பாய்கிறது. அது பாயும் பிரதேசம் ஒரு உட்குழிந்த பிரதேசம் (basin) போல் காணப்படுகிறது. நைஜர், ஸெனிகல், காம்பியா, வால்ட்டர் இந் நதிகள் எல்லாம் இந்த உட்குழிந்த பிரதேசத்தின் ஓரத்தில் உற்பத்தியாகிப் பின்னர் வெகுதூரம் சென்று கடலில் சேருகின்றன. நைஜர் நதி இந்த உட்குழிந்த பிரதேசத்தைக் கடந்து செல்லும் பாகத்தில் மிகவும் குறுகலாகவே காணப்படுகிறது. அவ்விடத்தில் சிறிய படகுகள் மாத்திரமே செல்ல முடியும். படகுகள் செல்லும் விஷயத்தில் இந் நதியை இரண்டு பாகமாகப் பிரிக்கலாம். ஆரம்ப இடத்திலிருந்து நியாமே (Niamey) வரையில் ஒரு பாகம்; ஜெப்பா (Jeppa) முதல் நதி முகத்துவாரம்வரையில் இரண்டாவது பாகம். நைஜர் நதியின் மிகப் பெரிய உபநதி பென்யூ (Benue). இதிலும் மழைக் காலத்தில் படகுகள் செல்வதுண்டு. இப் பிரதேசத்திலுள்ள பீடபூமியிலிருந்து சிறிய நதிகள் கடற்கரைப் பிரதேசத்தில் செல்கின்றன. ஆனால், அவை கடலில் சென்று சேருமுன் அங்குள்ள அநேக காயல்களில் கலக்கின்றன. கினி (Guinea) கடற்கரையில் வேலியேற்றத்தின் காரணமாக மணல் திட்டுகள் அதிகம் ஏற்படுவதால் சில நதி முகத்துவாரங்களை இந்த மணல் திட்டுகள் அடைத்துவிடுகின்றன. அதனால்தான் கடற்கரையில் அதிகக் காயல்கள் காணப்படுகின்றன. நைஜர் நதி முகத்துவாரமும் அதுபோலவே ஒரு பெரிய சதுப்பு நிலமாகக் காட்சியளிக்கிறது. அந்தச் சதுப்பு நிலத்தின் ஊடே நதி பல பிரிவுகளாகப் பிரிந்து கடலில் சேருகிறது.

காலநிலை

இப் பிரதேசத்தில் வருடம் முழுவதும் உஷ்ணம் அதிகம். உஷ்ணம் எப்போதும் சராசரி 9° பாரன்ஹிட் அளவுக்கு இருக்கும். கினி கடற்கரைப் பிரதேசத்தில் கனரி குளிர்கடல் நீரோட்டம் பாய்வதால் அங்கு வெப்பம் சற்றே குறைவு. இப் பிரதேசம் முழுவதும் உஷ்ண மண்டலத்திலிருப்பதால், சூரியன் நேர் உச்சியில் பிரகாசிக்கும்போதெல்லாம் இங்கு வெப்பம் அதிக மாகிறது.

இப் பிரதேசத்தில் கோடைகாலத்தில் தென்மேற்குப் பருவக்காற்றுமூலமாக மழை அதிகம் பெய்கிறது. குளிர்

காலத்திலும் இப் பருவக்காற்று வீசியபோதிலும் அது பலவீனமாகவும், பயனற்றதாகவும் போகிறது. கடற்கரை அடுத்துள்ள பீடபூமிப் பிரதேசங்களிலேயே மழை அதிகமாகப் பெய்கிறது. கினியா கடற்கரையில் வருட மழை 200''. நைஜர் டெல்டாப் பிரதேசத்தில் வருட மழை 170'' க்கும் மேலாகிறது. கானு (Ghana) கடற்கரைப் பிரதேசத்தில் தக்கோராடிக்கும் (Tukoradi) நைஜீரியாவின் எல்லைக்கு மிடையில் மழை மிகக் குறைவு. அங்கு வருட மழை 30''க்கும் குறைவு. ஆனுல், 50 மைல் தொலைவிலுள்ள உள்நாட்டில் வருட மழை 50'' கிடைக்கிறது. இதற்குக் காரணம் கடற்கரை அடுத்துள்ள குளிர்ந்த நீரோட்டத்தாலேயே மழை குறைகிறது. அதோடு தென்மேற்குப் பருவக் காற்றுகள் அந்த இடத்தில் கடற்கரையை எதிர்நோக்கி வீசாததும் ஒரு காரணமாகும்.

இப் பிரதேசத்தில் குளிர்காலத்தில் ஸஹாரா பாலையிலிருந்து ஒரு வறட்சியான காற்று வீசுகிறது. ஹார்மற்ருன் (Harmattan) எனக் கூறப்படும் இந்த வறட்சியான காற்று இப் பிரதேசத்தின் வடபாகத்தில் அதிகம் அனுபவிக்கப்படுகிறது. சில சமயங்களில் கினி கடற்கரைவரையில் இது அனுபவிக்கப்படுகிறது. இந்த வறட்சியான காற்று வீசுவதன்மூலம் அப் பிரதேசத்தின் ஈரத் தன்மை குறைந்து மக்களுக்கு ஆரோக்கியம் ஏற்படுவதாகக் கூறப்படுவதுண்டு. ஆரோக்கியத்துக்குக் காரணமாயிருப்பதால் இக் காற்றை டாக்டர் என்றும் குறிப்பிடுவதுண்டு.

இப் பாகத்தின் கடற்கரைப் பிரதேசங்கள் நல்ல உஷ்ணமும் ஈரப்பசையும் கூடியவையாக இருக்கின்றன. இங்குள்ள இயற்கைத் தாவரம் அடர்ந்த காடுகளில் மஹாகனி முதலிய விலை உயர்ந்த மரங்கள் வளருகின்றன. நைஜீரியா, கானு, ஸிராலியோன் (Sierra-leone) முதலிய இடங்களிலிருந்து மரத் தடிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ரப்பர் மரம் காட்டு மரமாக இங்கு வளருகின்றது. வனங்களிலிருந்து கிடைக்கும் மற்ற முக்கியமான பொருள்கள் பனைஎண்ணெய், கோலாக் கொட்டைகள், கொக்கோ என்பன. கொக்கோ மரம் போர்த்துகீஸியரால் தென்அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டு இங்கு வளர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. நிலக்கடலை, மக்காச் சோளம், மரவள்ளி, புகையிலை இவற்றை அவர்கள் கொண்டு வந்தனர் எனக் கூறுகின்றனர். பனை எண்ணெயும் கொட்டையும் நைஜீரியா, ஸிராலியோன் முதலிய இடங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கானுவிலிருந்து முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படுவது கொக்கோ. நைஜீரியாவிலும் கொக்கோ அதிகம் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதியாகிறது. உணவுப் பொருள்

களில் நெல், கோதுமை, தேங்காய், மரவள்ளி என்பன கடற்கரைப் பிரதேசத்தில் அதிகமாகப் பயிர் செய்யப்படுகின்றன. இப் பிரதேசத்தின் வட பாகத்தில் மழை குறைவானதாலும், கோடைகாலத்தில்மட்டும் மழை பெய்கிறது. அங்கு வனங்கள் அதிகம் இல்லை. புல் தரைகள் அதிகம் காணப்படுகின்றன. மாடுகள் அதிகம் வளர்க்கப்படுகின்றன. உணவுப் பயிர்களில் தினை, மக்காச் சோளம், நிலக்கடலை என்பன பயிராகின்றன. பருத்தி சிறிதளவு நீக்ரோக்களால் பயிர் செய்யப்பட்டு நெசவு வேலையும் நடைபெறுகிறது.

புல்தரைப் பிரதேசத்தில் மிகவும் முக்கியமாகப் பயிர் செய்யப்படுவது நிலக்கடலை. ஸெனிகல் நாட்டில் இது ஏராளமாகப் பயிர் செய்யப்படுகிறது. நைஜீரியாவிலும் காம்பியாவிலும் இது அதிகம் பயிர்செய்யப்பட்டு ஏற்றுமதியாகிறது. ஷியால் எண்ணெய் மரம் இப் பிரதேசத்தில் காட்டு மரமாக வளருகிறது. அதன் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுத்து அங்குள்ள மக்கள் பயன்படுத்துகின்றனர். புல்பிரதேசத்துக்கும் வடக்கில் மழை மிகக் குறைவாகையால் அங்குச் சிறு குற்றுச் செடிகளே காணப்படுகின்றன. அங்கு அதிக ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. நைஜர் நதியின் அருகிலுள்ள மாலிப் பிரதேசத்தில் நீர்ப்பாசனம் அதிகம் உள்ளதால் அங்கு கிருஷி நடைபெறுகிறது. சில இடங்களில் காட்டு வேல மரங்களிலிருந்து கோந்து சேகரிக்கப்படுகிறது. திம்புக்துவுக்கு (Timbukthu) வடக்கில் இக் குற்றுச்செடிப் பிரதேசம் பாலைவனமாக மாறுகிறது.

திம்புக்துவுக்கு அருகிலுள்ள பாலைப் பிரதேசம் வெட்டுக்கிளியின் (locust) உற்பத்தித்தானம் என்று கூறப்படுகிறது. ஆப்பிரிக்காவில் ஸஹாரா பாலையிலும், செங்கடலின் கடற்கரைப் பிரதேசத்திலும் இவை அதிகம் உற்பத்தி ஆவதாகக் கூறப்படுகிறது. இவை கூட்டங் கூட்டமாகப் பறந்து சென்று ஆப்பிரிக்காவின் பல பாகங்களிலும், சில சமயங்களில் ஆசியாவிலும் புல், பயிர் பச்சைகளை வெட்டி நாசம் செய்துவிடுவதுண்டு. இவற்றின் அட்டூழியத்தை நிறுத்த நிபுணர்கள் அவற்றின் உற்பத்தித் தானம் முதலியவற்றை ஆராய்ந்து அவற்றை அழிக்க முயற்சி செய்துவருகின்றனர்.

மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஜனங்கள் பெரும்பாலும் நீக்ரோ இனத்தைச் சார்ந்தவர். அவர்களில் கடற்கரைப் பிரதேசத்தைச் சார்ந்த மிகவும் பின்தங்கிய வகுப்பாரும் உண்டு. அதே சமயத்தில் சர்வகலாசாலைகளில் உயர் கல்வி கற்று, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தேர்ச்சி பெற்றவர்களும் உண்டு.

ஐரோப்பியர்கள் அங்குச் செல்வதற்கு முன்பே அங்குள்ள ஜனங்கள் நெசவுத் தொழில், மண்பாண்டத் தொழில், உலோகத் தொழில், மரவேலை என்பவற்றில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், சில்லறை வியாபாரிகளாகவுமிருந்தனர். அக்காலத்திலேயே சூடான் பிரதேசத்தைச் சார்ந்த அரேபியர்களோடு அவர்கட்கு வியாபாரத் தொடர்பு இருந்தது. மேற்கு ஆப்பிரிக்காவின் வட பாகத்தில் இத் தொடர்பின் சின்னங்களைக் காணலாம். 'அங்கு அநேக நீக்ரோ இனத்தவர் முகம்மதிய இனத்தைத் தழுவினவராகவும், நடையுடை பாவனையில் அரேபியர்களைப்போலக் காணப்படுகின்றனர். 15ஆம் நூற்றுண்டிலேயே போர்த்துகீஸியர் இங்கு வந்து சேர்ந்தாலும், அவர்கள் உள் நாட்டில் அதிகம் செல்லவில்லை. கடந்த நூற்றுண்டில் மங்கோபார்க் என்பவர் நைஜர் நதிப் பிரதேசத்தைக் கண்டுபிடிக்குமுன் அப் பிரதேசத்தைப்பற்றி வெளி உலகுக்கு அதிகம் தெரியாமலிருந்தது.

இப் பிரதேசம் அபிவிருத்தி அடைந்தது இந்த நூற்றுண்டில் தான். இங்குள்ள காலநிலை வெள்ளையர் நிலையாகக் குடியேறுவதற்கு ஏற்றதல்ல என்பதனுல், இங்கு வெள்ளையர், கறுப்பர் என்ற பிரச்சினைகளில்லை. அங்குள்ள ஜனங்களில் படித்துப் பட்டம் பெற்று நகரங்களில் உத்தியோகம் செய்வோர், கிராமங்களில் வசிக்கும் பாமர ஜனங்களை இகழ்ச்சியோடு நோக்குகின்றனர். சமீப காலத்தில் இப் பிரதேசத்தின் ஆட்சி முறையில் அநேக மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. கானு, நைஜீரியா முதலிய நாடுகள் பிரிட்டிஷ் காமன்வெல்த் தொடர்போடு சுதந்திர நாடுகளாகிவிட்டன. ஃபிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த மற்ற நாடுகளும் சுதந்திரமாகிவிட்டன. இந் நாடுகளில் மிக முன்னேற்றமடைந்தவை நைஜீரியா, கானு, ஸெனிகல் என்பன.

கினி

1958ஆம் வருடம் வரையில் ஃபிரெஞ்சு ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த கினி நாடு அவ் வருடம் சுதந்திர நாடாயிற்று. பின்னர் அது கானு நாட்டுடன் சேர்ந்து, அதன்மூலம் 'ஓர் ஆப்பிரிக்க ஐக்கிய நாடுகள்' ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. 30 இலட்சம் ஜனத்தொகையுள்ள இந நாட்டில் வனங்களில் மஹாகனி போன்ற நல்ல வகை மரங்கள் காணப்படுகின்றன. உயர் நிலங்களில் காப்பி அதிகம் பயிர் செய்யப்படுகின்றது. சமநிலங்களில் நெல்லும், வாழையும், பனையும் பயிர் செய்யப்படுகின்றன.

கடற்கரைப் பிரதேசத்தில் இரும்பு அதிகம் வெட்டியெடுக்கப்பட்டு, இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வேறு சில இடங்களில் பாக்சைட் (Bauxite) வெட்டி எடுக்கப்பட்டு அலுமினியம் தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன. வைரமும் சில இடங்களில் வெட்டியெடுக்கப்படுகிறது.

ஓர் இலட்சம் சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள இந் நாட்டின் ஜனத்தொகை 27 இலட்சம். இதன் தலைநகரான கோனுர்க்கி (Conakry) ஒரு முக்கியத் துறைமுகமுமாகும். இங்கிருந்து உள்நாட்டுக்குச் சாலைகளும் ரெயில்பாதைகளும் செல்கின்றன.

போர்த்துகீஸ் கினி

மேற்கு ஆப்பிரிக்காவில் இன்னும் சுதந்திரமடையாமல் போர்த்துகீஸியரின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் பிரதேசம் இது ஒன்றுதான். இதன் விஸ்தீரணம் 140,000 சதுரமைல். ஜனத்தொகை 560,000 பேர். இதில் போர்த்துகீஸியர் 2,000 பேர். இதன் தலைநகரம் பிசாவ். இங்கிருந்து நிலக்கடலையும், பனை எண்ணெயும், சிறிது தேங்காயும் ஏற்றுமதி ஆகின்றன. ஏற்றுமதி முழுவதும் போர்ச்சுகலுக்கே செல்கிறது. இங்கு நதியே முக்கியப் போக்குவரவு மார்க்கம்.

கேப் வெர்ட் தீவுகள் (Cape Verde Islands)

இதுவும் போர்த்துகீஸியர் கைவசமே உள்ளது. விஸ்தீரணம் 1,600 சதுரமைல். ஜனத்தொகை 2 இலட்சம். அதில் போர்த்துகீஸியர் 3,000 பேர். இங்குக் காப்பி முக்கியமாகப் பயிர் செய்யப்படுகிறது.

ஸிராலியோன்

1961ஆம் வருடம் சுதந்திரமடைந்த இந் நாடு 28,000 சதுரமைல் விஸ்தீரணமுடையது. இதன் ஜனத்தொகை 25 இலட்சம். சுமார் 1,500 ஐரோப்பியரும், 3,000 ஆசிய மக்களும் இங்கு வசிக்கின்றனர். காயல்கள் அதிகமுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் நிலம் படிப்படியாக உயர்ந்து உள்நாட்டில் பூட்டா ஜலோன் பீடபூமி வரையில் செல்கிறது. அங்குப் பாயும் நதிகளில் முக்கியமானது ரோக்கல். அதன் முகத்துவாரத்தில்தான் இந் நாட்டின் தலைநகரமும், முக்கியத் துறைமுகமுமான பிரீடவுன் இருக்கிறது. 200 வருடங்களுக்குமுன் சுமார் நானூறு விடுவிக்கப்பட்ட அடிமைகள் குடியேறிய நிலம் ஆனதால், அந்த இடத்துக்கு பிரீடவுன் என்ற பெயர் வந்தது.

ஸிராலியோன் நாட்டின் கடற்கரைப் பிரதேசத்தில் தென் மேற்குப் பருவக் காற்றுமூலம் நல்ல மழை பெய்வதுண்டு, கடற்கரையை அடுத்துள்ள பிரதேசம் சதுப்பு நிலம் ஆனாலும், அதன் பின்வரிசையில் அடர்ந்த நிலங்கள் காணப்படுகின்றன. இங்கு மரம் அறுப்பது ஒரு முக்கியத் தொழில். கனெமா (Kenema) பட்டணத்தில் ஒரு மரம் அறுக்கும் தொழிற்சாலையும், மரச் சாமான்கள் செய்யும் ஆலையும் உண்டு. இங்கிருந்து முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படுவது பனை எண்ணெயும், எண்ணெய்ப் பனை விதைகளுமாகும். எண்ணெய்ப்பனை இங்குக் காட்டு மரமாக வளர்ந்தாலும், இப்போது அவை பயிரிடப்பட்டு, எண்ணெய் எடுப்பது நவீன முறையில் நடைபெறுகிறது. கோலாக் கோட்டையிலிருந்தும் எண்ணெய் எடுக்கப்பட்டு உள்நாட்டில் பயன்படுத்தப்படுகிறது; சிறிதளவு காம்பியாவுக்கும் ஏற்றுமதி ஆகிறது. சமநிலங்களில் நெல் அதிகம் பயிர் செய்யப்பட்டு முக்கிய உணவுப் பொருளாகப் பயன்படுகிறது. சமநிலங்களில் மழை அதிகம் பெய்கிறது. ஆரஞ்சு, மரவள்ளி, சர்க்கரைவள்ளி என்பன அதிகம் பயிராகின்றன. கடற்கரையில் தென்னை அதிகம் பயிராகிறது. ஸெட்ஸ் ஈயின் உபத்திரவத்தால் மாடு வளர்த்தல் குறைவானாலும், ஆடுகள் அதிகம் காணப்படுகின்றன. தினை, சோளம், நிலக்கடலை என்பன சற்று வறட்சியான பாகங்களில் பயிராகின்றன. இஞ்சியும் பயிர் செய்யப்பட்டு ஏற்றுமதி ஆகிறது.

இந் நாட்டின் கிழக்குப் பாகத்தில் கோனோ (Kono) என்னுமிடத்தைச் சுற்றிலும் வைரங்கள் அதிகமாக வெட்டியெடுக்கப்பட்டு, அதிக அளவு வைரம் அடுத்துள்ள லைபீரியா நாட்டுக்குக் கள்ளக் கடத்தலாகச் செல்கிறது. இதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வேறு சில இடங்களில் இரும்பு, குரோம், பிளாட்டினம், தங்கம் என்பன வெட்டி எடுக்கப்படுகின்றன.

பட்டணங்கள்

இந் நாட்டின் தலைநகரமும் முக்கியத் துறைமுகமும் ஃபிரீடவுன். இதன் ஜனத்தொகை $1\frac{1}{4}$ இலட்சம். மேற்கு ஆப்பிரிக்காவிலேயே மிகவும் நல்ல முறையில் இயற்கையிலேயே அமைந்த துறைமுகமாக இருப்பதால், பிரிட்டிஷ் கப்பற்படை சில சமயம் இங்கு வந்து போவதுண்டு. ஃபிரீடவுன் பட்டணம் முதல் லைபீரியன் எல்லைவரையில் ஒரு ரெயில் பாதை உண்டு.

ஸிராலியோன் நாட்டிலிருந்து முக்கியமாக ஏற்றுமதியாவன வைரங்கள், இரும்பு, எண்ணெய்ப் பனைப் பொருள்கள், காப்பி,

முதலியன கோக்கோ, கோலாக்கொட்டை என்பன சிறிதளவில் மதியாகின்றன. இங்கு இறக்குமதியாகும் பொருள்கள் துணி வகைகள், பெட்ரோல், யந்திரங்கள் என்பன.

லைபீரியா

1847ஆம் வருடம் முதலே லைபீரியா ஒரு சுதந்திர நீக்ரோ குடியரசு நாடாக விளங்குகிறது. 43,000 சதுர மைல் விஸ்தீரண முள்ள இந் நாட்டில் ஜனத்தொகை 13 இலட்சம். 1822ஆம் வருடம் அமெரிக்காவிலிருந்து விடுதலையான அடிமைகளை இங்குக் குடியமர்த்தி ஆரம்பித்த இந் நாடு முதலில் அமெரிக்கர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஆனால், 1847ஆம் வருடம் சுதந்திரமடைந் தது. தேசத்தில் பெரும் பாகமும் வனப்பிரதேசமாகவே இருக் கிறது. எண்ணெய்ப் பனை மரங்களும் ரப்பர் மரங்களும் காட்டு மரங்களாகவே வளருகின்றன. ஆனால், தற்காலத்தில் ரப்பர் மரங் களைத் தோட்டக் கிருஷியாகப் பயிர் செய்கின்றனர். வாழையும் பயிர் செய்யப்படுகிறது. நெல்லும், தினையும், மரவள்ளிக் கிழங் கும் சிறிதளவு பயிர் செய்யப்படுகின்றன. ஆனாலும், அதிக அளவில் உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதிப் பொருள்களில் முக்கியமானது ரப்பர். சிறிதளவு இரும்பும் வைரமும் ஏற்றுமதி ஆகின்றன. வைரம் பெரும்பாலும் ஸிராலியோன் நாட்டிலிருந்து கள்ளத்தனமாகக் கடத்தப் படுகிறது.

மண்ட்ரோவியா இதன் தலைநகரமும், ஒரே துறைமுக மும் ஆகும். கடலில் செல்லும் கப்பல்கள் அங்குக் கரையில் வரு வதில்லை. வெகு தொலைவில் நிறுத்திப் பிரயாணிகளையும் பொருள்களையும் சிறு படகுகள்மூலம் கரை சேர்ப்பதுண்டு. அந் நாட்டில் சாலைகள் அதிகமில்லை. தலைநகரிலிருந்து ஒரு ரெயில் பாதை வடக்கே 50 மைல் தூரத்திலுள்ள இரும்புச் சுரங்கங் களுக்குச் செல்கிறது. ஜனத்தொகை 60,000.

கானா (Ghana)

கானா நாடு பெரும்பாகமும் வால்ட்டா நதி பாயும் பிர தேசமே. தென்மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில்மட்டும் வனங் கள் காணப்படுகின்றன. மற்ற சமநிலப் பிரதேசங்கள் எல்லாம் புல் தரைகளாக இருக்கின்றன. உள்நாட்டில் நிலம் உயருந் தோறும் மழை அதிகம் பெய்கிறது. அங்குள்ள மலைச்சரிவு களிலெல்லாம் வனங்கள் காணப்படுகின்றன. பீடபூமிக்கு வடக்கில் புல் தரைகளே அதிகம். முன்னர் 'கோல்ட் கோஸ்ட்'

என்ற பெயருடன் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந் நாடு, 'கானு' என்ற பெயருடன் 1957-ல் சுதந்திரமடைந்தது. ஆப்பிரிக்க நாடுகள் எல்லாவற்றிலும் இதுவே சுதந்திரமடைந்து, பிரிட்டிஷ் காமன்வெல்த்திலும் அங்கம் வகிக்கும் முதல் நாடு. 1960-ல் குடியரசு நாடாயிற்று. சுமார் 92,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள இந்த நாட்டின் ஜனத்தொகை 70 இலட்சத்துக்கும் அதிகம். இந் நாட்டை ஐந்து பிரிவாகப் பிரிக்கலாம். கிழக்குப் பிரதேசம், மேற்குப் பிரதேசம், அஷான்றி (Ashanti), வடக்குப் பிரதேசம், டோகோலாந்து என்பன.

இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் மிகவும் முக்கியமானது கொக்கோ. இம் மரம் 1879-ல் அருகிலுள்ள ஒரு தீவிலிருந்து கொண்டுவரப்பட்டுப் பயிர் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக் கிருஷி பெரும்பாலும் இரண்டுமுதல் ஆறு ஏக்கர் விஸ்தீரணமுள்ள சிறிய தோட்டங்களிலேயே செய்யப்படுகிறது. 1891ஆம் வருடம் முதன்முதலாக 40 கிலோ எடையுள்ள கொக்கோ ஏற்றுமதியாயிற்று. 1958-ல் ஏற்றுமதியான கொக்கோவின் மதிப்பு சுமார் 80 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. உலகத்தில் உற்பத்தியாகும் கொக்கோவில் $\frac{1}{8}$ பாகத்துக்குமேல் அந் நாட்டில் உற்பத்தியாகிறது.

கொக்கோ பயிரிடுவதற்கு வருடம் முழுவதும் நல்ல உஷ்ணமும் மழையும் அவசியம். கடல் மட்டத்துக்கு மேல் 600' உயரத்தில் இப் பயிர் செழிப்பாக வளருகிறது. முதலில் கொக்கோ விதை பயிரிடும்போது சிறு செடிகளுக்கு அருகிலுள்ள பெரிய மரங்களின் நிழல் கிடைக்கும்படி செய்வது நல்லது. மரம் காய்க்கத் தொடங்கிவிட்டால், காய்கள் 8" முதல் 12" வரை நீளமுள்ளவைகளாக (உருவத்தில் பப்பாளிக் காய்போல) மரத்தின் பல பாகங்களிலும் காய்க்கின்றன. ஒவ்வொரு காயிலும் முப்பது நாற்பது விதைகள், சீதாப்பழத்துக்குள்ளிருப்பதுபோல் இருக்கும். வருடத்தில் இரண்டு தடவை காய்களைச் சேகரிக்கலாம். விதைகளைச் சேகரித்துக் குவித்து வைப்பது வழக்கம். ஒரு வாரம் அவ்விதம் வைத்திருந்தால் அவை காய்ந்து தவிட்டு நிறமாகின்றது. பின்னர் வியாபாரிகள் அவற்றைச் சேகரித்து வெளி நாடுகளுக்கு அனுப்புகின்றனர். விவசாயிகட்கு நல்ல விலை கிடைப்பதற்காக அதைக் கூட்டுறவு சங்கங்கள்மூலம் விற்பனை செய்கின்றனர்.

கானு நாட்டின் செல்வம் முழுவதும் கொக்கோ உற்பத்தியையும் ஏற்றுமதியையும் பொறுத்திருப்பதால், அதை மிகக் கவனமாகச் செய்ய வேண்டும். சில வருடங்களில் பூச்சிகளின்

பாதிப்பால் அவை நாசமடைவதுண்டு. இந் நோய் 1960ஆம் வருடத்தில் முதலில் ஏற்பட்டது. அதனுல் இதை அகற்ற ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்தியுள்ளனர்.

பெரும்பாலும் பீடபூமிக்குத் தெற்கிலேயே, முக்கியமாகக் குமாஸி (Kumasi) பட்டணத்தைச் சுற்றிக் கொக்கோ அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது. முன்னர்ப் பயிர் செய்யப்பட்ட எண்ணெய்ப் பனை முதலியவற்றைக் கொக்கோப் பயிர் வெகுவாகக் குறைத்துவிட்டது. கடற்கரைப் பிரதேசத்தில் தென்னை பயிர் செய்யப்படுகிறது. உணவுக்கு மட்டுமல்லாமல் தேங்காய் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. கடற்கரையில் பழவகைகள் பயிர் செய்யப்படுகின்றன. வாழை, ஆரஞ்சு என்பன பயிர் செய்யப்பட்டு உள்நாட்டில் பயன்படுத்தப்படுகின்றன. எலுமிச்சம்பழமும் அதிக அளவில் உற்பத்தி ஆகிறது. கோலாக் கொட்டைகள் (Kola-Nuts) அதிக உற்பத்தியாகின்றன. ஆனுல், அவை உள்நாட்டிலேயே வியாபாரம் ஆகிறது. இது அதிக சக்தி அளிக்கும் என்று கூறப்படுகிறது. நாட்டின் பல பாகங்களிலும் நெல்லும், வாழையும், மரவள்ளியும் பயிர் செய்யப்படுகின்றன. தற்காலத்தில் இது மிக முன்னேற்றமடைந்துள்ளது. காடுகளிலுள்ள மரங்களை வெட்டி, மரத்தடிகளை தக்கோராடி துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்கிறுர்கள்.

இவ்விதப் பயிர்களெல்லாம் பீடபூமிக்குத் தெற்கில்தான் நடைபெறுகின்றன. பீடபூமிக்கு வடக்கில் சோளம், தினை, நிலக்கடலை, மரவள்ளிக் கிழங்கு என்பன பயிராகின்றன. சிறிது பருத்தியும் பயிர் செய்யப்படுகிறது. ஆனுல், அங்கு முக்கியத் தொழில் ஆடுமாடு வளர்த்தலே. இப் பகுதியில் ஸெட்ஸ் ஈயின் தொல்லை இல்லாததால் அங்கு அதிகம் ஆடுமாடுகள் மந்தைகளாக வளர்க்கப்பட்டு, அங்கிருந்து தோல் ஏற்றுமதியும் அதிக அளவில் நடைபெறுகிறது.

உலோகச் செல்வம்

இந் நாட்டில் உலோகச் செல்வம் அதிகம் என்றே சொல்ல வேண்டும். இங்கிருந்து ஏற்றுமதியாகும் உலோகப் பொருள்கள் தங்கம், மாங்கனீஸ், வைரம், பாக்சைட் (Bauxite) என்பன. கொக்கோவுக்கு அடுத்தபடியாக விலை உயர்ந்த ஏற்றுமதிப் பொருள் தங்கம். இங்குள்ள தங்கச் சுரங்கங்கள் 4000′ ஆழத்தில் இருக்கின்றன. அதில் நவீன முறைகளைக் கையாண்டுவருகிறுர்கள். மாங்கனீஸ் இங்கு வருடந்தோறும் 5 இலட்சம் டன் அளவுக்கு வெட்டியெடுக்கப்படுகிறது. ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் அடுத்தபடியாக உலகிலேயே நல்ல

தரமான மாங்கனீஸ் இங்குதான் கிடைக்கிறது. வைரங்கள் சில நதியோரப் பிரதேசங்களில் எடுக்கப்பட்டு, சமீபகாலத்தில் 10 கோடி ரூபாய் மதிப்புக்கு வைரங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்குக் கிடைக்கும் பாக்ஸைட் அலுமினியத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஆலைத் தொழில்கள்

இந்நாட்டில் கல்வி, சுகாதாரத் துறைகள் அதிகம் முன்னேறி வருவதுபோல ஆலைத் தொழிலும் மேம்பாடடைந்துள்ளது. மரத்தடிகளை அறுக்கும் ஆலைகளும் பிளைவுட் செய்யும் ஆலைகளும் அங்கு அதிகம் காணப்படுகின்றன. மரச் சாமான்கள் செய்வதும், பிளாஸ்டிக் பொருள்கள் செய்வதும், சிகரெட், தீப் பெட்டி செய்வதும் ஆலைகள் மூலம் நடைபெறுகின்றன. டேமா (Tema) பட்டணத்தில் சோப்புத் தொழிற்சாலைகளும், பெயின்ட் தொழிற்சாலைகளும், பருத்தி ஆலைகளும், ரேடியோ என்பன அமைக்கும் ஆலைகளும், எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைகளும், மீனைப் பக்குவம் செய்யும் ஆலைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

முக்கியப் பட்டணங்கள்

நாட்டின் தலைநகரம் ஆக்ரா (Accra) பட்டணம். இதன் ஜனத்தொகை 3½ இலட்சம். இது நாட்டிலேயே மிகப் பெரிய பட்டணமும், கொக்கோ ஏற்றுமதியில் மிக முக்கியம் வாய்ந்த துறைமுகமுமாதும். இக் கடற்கரையில் அலைகள் மிக உயரத்தில் எழும்புவதால், பெரிய கப்பல்கள் கரைக்கு வெகு தூரத்திலேயே நிற்கின்றன. பிரயாணிகளும் பொருள்களும் சிறு படகுகள் மூலமே கரைக்கு வருகின்றனர். பெரிய கப்பல்கள் வந்து தங்குவதற்கு ஏற்ற துறை தக்கோராடி. இங்கிருந்து உலோகப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உள்நாட்டுப் பட்டணங்களில் மிக முக்கியமானது குமாசி. அதன் ஜனத் தொகை சுமார் 2 இலட்சம். இது கொக்கோ பயிர் செய்யும் பகுதிக்கு மத்தியில் அமைந்திருக்கிறது. அசாந்தி (Ashanti) மாகாணத்தின் தலைநகரமும், ஒரு முக்கியமான ரெயில்வே கேந்திரமும் ஆகும். இந் நாட்டின் வடக்கிலுள்ள ஒரே முக்கியப் பட்டணம் தமலே. இதன் ஜனத்தொகை 40 ஆயிரம்.

ஆக்ரா பட்டணத்துக்கு 20 மைல் கிழக்கேயுள்ள தேமா பட்டணம் ஆலைத் தொழிலுக்கு முக்கியத்துவம் அடைந்துவருகிறது. அங்கிருந்து கொக்கோவும் பாக்ஸைட்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

உலகமெங்கும் சஞ்சரிக்கும் பெரிய விமானங்கள் வந்து செல்லும் விமானத் தாவளம் ஆக்ராவில் உண்டு. தக்கோராடி, குமாஸி, தாமலே முதலிய இடங்களிலும் விமானத் தாவளங்கள் உண்டு.

வியாபாரம்

கானுவிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானவை தங்கம், மாங்கனீஸ், வைரங்கள், பாக்சைட், மரத்தடி, பனை எண்ணெய் என்பன. வியாபாரம் பெரும்பாலும் இங்கிலாந்து நாட்டுடனேயே நடைபெறுகிறது. அமெரிக்காவும் மேற்கு ஜெர்மனியும் இங்கிருந்து அதிக அளவில் கொக்கோ வாங்கிக்கொள்கின்றன. இங்கு இறக்குமதியாகும் பொருள்கள், துணி, யந்திரங்கள் என்பன. இறக்குமதியில் பெரும்பாகமும் இங்கிலாந்திலிருந்தே வருகின்றன.

நைஜீரியா

மேற்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளில் இதுவே மிகப் பெரிய நாடு. 1960ஆம் வருடத்தில் இந் நாடு சுதந்திரமடைந்து, குடியரசு நாடாகவும் ஆயிற்று. இந் நாட்டின் தென்பாகத்தில் உஷ்ண மண்டல வனங்கள் காணப்படுகின்றன. வடக்கே செல்லுந்தோறும் மழை குறைவாகையால் புல் பிரதேசங்களே காணப்படுகின்றன. இந் நாட்டின் வடகிழக்கில் பௌச்சி (Bouchi) பீடபூமி அமைந்திருக்கிறது. நான்கு கோடி ஜனத்தொகையுள்ள இந் நாடு ஆப்பிரிக்காவிலேயே அதிக ஜன நெருக்கமுள்ள பிரதேசங்களில் ஒன்றாகும். இந் நாட்டை மூன்று பிரதேசங்களாகப் பிரிக்கலாம்.

1. மேற்குப் பிரதேசம்

இதன் தலைநகரம் இபடான் (Ibadan). இங்குள்ள ஜனங்களில் பெரும்பாலோரும் டொருபா (Toruba) இனத்தைச் சார்ந்தவர்.

2. கிழக்கு மாகாணம்

இதன் தலைநகரம் இனுகு (Enugu) பட்டணம். இங்குள்ள ஜனங்களில் பெரும்பாலோரும் இபோ (Ibo) இனத்தைச் சார்ந்தவர்.

3. வடக்குப் பிரதேசம்

இதன் தலைநகரம் கடுனு (Kaduna) பட்டணம். இதுதான் இங்குள்ள மிகப் பெரிய பிரதேசம். இங்குதான் நைஜீரியா

வின் ஜனங்களில் பாதிப்பேர் வசிக்கின்றனர். இதில் பாதிப்பேர் முகம்மதிய இனத்தைச் சார்ந்தவர்கள்.

இப் பிரதேசங்கள் எல்லாவற்றையும் இணைத்துள்ள தலை நகரம் லாகோஸ். இது மேற்கு மாகாணத்தில் கடற்கரையில் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு மாகாணமும் தனித்தனியே ஆட்சி நடத்தினாலும், லாகோஸ் பட்டணத்திலுள்ள தலைமை ஆட்சிக்கு உட்பட்டே இருக்கின்றது.

கடற்கரையிலிருந்து 150 மைலுக்கு உட்பட்ட பிரதேசத்தில் வருட மழை 60''-க்கும் அதிகமானதால, அங்கு எண்ணெய்ப் பனை காட்டு மரமாக வளர்க்கப்பட்டுவருகிறது. பனை எண்ணெயும், எண்ணெய்ப் பனை விதைகளும் இங்கு முக்கியமான வியாபாரப் பொருள்கள். பனை எண்ணெய் ஆப்பிரிக்க மக்களின் உணவுப் பொருளாக உபயோகப்பட்டாலும், அதில் அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. முற்காலத்தில் நைஜீரியாவில் மட்டுமே பனை எண்ணெய் அதிகம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஆனால், தற்காலத்தில் மலேயா, இந்தோனேசியா, காங்கோ முதலிய பிரதேசங்களில் அது உற்பத்தி செய்யப்பட்டு, நைஜீரியாவைவிட நான்கு மடங்கு அதிகம் அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. பனை எண்ணெயை உபயோகித்து, சோப்பும் மெழுகுவத்தியும் செய்யப்படுகின்றன. சில ஆலைத் தொழில் களுக்கும், அதாவது, தகரத் தகடு (tin plate) செய்யும் தொழில் களுக்கும் இவ்வெண்ணெய் பயன்படுகிறது.

இபடான் பட்டணத்தைச் சுற்றியுள்ள பாகங்களில் கொக்கோ பயிர் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வனங்களில் மரங்களை வெட்டி மரத்தடிகள் ஏற்றுமதி செய்வ தோடு பிளைவுட், மரச்சாமான்கள் என்பன செய்வதற்கும் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளன. சிறிதளவு ரப்பர் பயிர் செய் யப்பட்டாலும் அது அதிகம் ஏற்றுமதி ஆவதில்லை.

நாட்டின் வடபாகத்திலுள்ள புல்தரைப் பிரதேசத்தில் நிலக்கடலையும் பருத்தியும் அதிகம் பயிர் செய்யப்படுகின்றன. பௌச்சி பீடபூமியிலும், நைஜர், பென்யூ நதிகள் பாயும் பிர தேசங்களிலும் நிலக்கடலை பயிராகிறது. இபடான் பட்ட ணத்தை அடுத்துள்ள பகுதியிலும், பௌச்சி பீடபூமியிலும் ஆப்பிரிக்க மக்கள் பருத்திப் பயிர் செய்துவந்திருக்கின்றனர். வடக்கு நைஜீரியாவிலுள்ள பருத்தி ஆலைகளில் துணி வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

நாட்டின் வடபாகத்தில் மாடு வளர்த்தல் ஒரு முக்கியத் தொழிலாகும். இங்கு ஸெட்ஸ் ஈயின் தொல்லை இருப்பதால்,

அதை அழிக்க முயற்சி செய்யப்பட்டுவருகின்றது. இங்குள்ளோர்கள் தம் செல்வத்தைத் தமக்குள்ள மாடுகளின் எண்ணிக்கைமூலமே கணக்கிடுவதால், அவர்கள் அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்குவதிலேயே கவனம் செலுத்துகிறார்களே தவிர அவற்றின் தரத்தை உயர்த்த முயற்சி செய்வதில்லை. சிறிதளவு பாலும் வெண்ணெயும் உற்பத்தி செய்யப்பட்டாலும், மாடுகளைப் பெரும்பாலும் வண்டி இழுப்பதற்கே பயன்படுத்துகிறார்கள். இங்கிருந்து தோல் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

உலோகச் செல்வம்

இந் நாட்டில் கிடைக்கும் முக்கிய உலோகப் பொருள்கள் நிலக்கரி, பெட்ரோல், தகரம் என்பன. இனுகு பட்டணத்துக்கு அருகில் நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டு, ரெயில் இஞ்சின்களில் பயன்படுத்தப்படுகிறது. இங்குள்ள துறைமுகங்களில் வந்து சேரும் கப்பல்களுக்கும் இந் நிலக்கரி பயன்படுகிறது. பௌச்சி பீடபூமியில் தகரம் வெட்டி எடுக்கப்பட்டு இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தகரம் வெட்டி எடுக்கும் இடங்களில் கொலம்பைன் (Columbine) என்னும் ஒரு முக்கிய உலோகமும் கிடைக்கிறது. இந்த உலோகப் பொருள் ஆகாயவிமானங்களின் இயந்திரங்கள் செய்யவேண்டிய எஃகு செய்ய மிகவும் பயன்படுகிறது. கொலம்பைன் உலோகம் உலகிலேயே நைஜீரியாவில்மட்டும்தான் அதிக அளவில் கிடைப்பதாகக் கூறப்படுகிறது.

இந் நாட்டில் கிடைக்கும் பெட்ரோல் கிழக்குப் பிரதேசத்திலுள்ள நைஜர் டெல்டாவுக்கு சமீபத்தில் அதிகம் கிடைக்கிறது. இது ஹார்ட் கோர்ட் துறைமுகத்துக்குக் (Port Hort Court) குழாய்கள்மூலம் அனுப்பப்பட்டு, அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது; மேற்கு மாகாணத்திலும் சிறிதளவு வெட்டி எடுக்கப்படுகிறது.

பட்டணங்கள்

இந் நாட்டின் தலைமை ஆட்சி நகரமும் (Federal Capital) முக்கியத் துறைமுகமுமான லாகோஸ் பட்டணத்தின் ஜனத்தொகை சுமார் 4 இலட்சம். மிகப் பெரிய கப்பல்கள் வந்து தங்குவதற்கு இத் துறைமுகத்தில் வசதியுண்டு. இங்கிருந்து பௌசசி பீடபூமிவரை ரெயில் பாதைகள் செல்கின்றன. இங்கு ஒரு விமானத் தாவளம் உண்டு.

ஹார்ட் கோர்ட் துறைமுகம்

இதன் ஜனத்தொகை ஓர் இலட்சம். இது கிழக்கு மாகாணத்தின் முக்கியத் துறைமுகம். இங்கிருந்து நிலக்கரியும் பெட்ரோல் எண்ணெயும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மேற்கு மாகாணத்தின் தலைநகரான இபடான் பட்டணம், உள்நாட்டுப் பட்டணங்களிலேயே மிகவும் முக்கியமானது. இதன் ஜனத்தொகை 6 இலட்சம். சில வருடங்களுக்குமுன் ஒரு சிறு கிராமமாக இருந்த இப் பட்டணத்தில் இப்போது ஒரு பெரிய சர்வகலாசாலையே அமைந்திருக்கிறது. அங்கு எத்தனையோ ஆயிரம் ஆப்பிரிக்க மாணவர்கள் கலையும், விஞ்ஞானமும், பொறியியலும், மருத்துவமும் பயின்றுவருகின்றனர்.

வடக்கு மாகாணத்தின் பௌச்சி பீடபூமியில் உள்ள கானோ (Kano) பட்டணம் சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் ஜனத்தொகையுள்ளது. இது ஒரு பழங்காலப் பட்டணம். இங்குள்ளோர்கள் ஸஹாரா, சூடான் பிரதேசத்துடன் வியாபாரம் செய்கின்றனர். லாகோஸ், ஹார்ட்கோர்ட் துறைமுகங்களுக்கு இங்கிருந்து ரெயில் பாதைகள் செல்கின்றன. இங்கு ஓர் ஆகாய விமானத் தளம் இருப்பதால் இதன் முக்கியத்துவம் அதிகரித்துவருகிறது. இதன் தலைநகரம் கடுனு பட்டணம். கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் இனுகு பட்டணம்.

நைஜீரியா நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானவை பனையெண்ணெய், எண்ணெய்ப் பனை விதைகள், கொக்கோ, தகரம், தோல் என்பன. இறக்குமதிப் பொருள்களில் முக்கியமானவை இயந்திரங்கள், துணி வகைகள், மோட்டார் கார் என்பன. இங்குள்ள வியாபாரம் பெரும்பாகமும் இங்கிலாந்து நாட்டுடனேயே நடைபெறுகிறது.

காம்பியா

சுமார் 4,000 சதுரமைலுள்ள இந்நாட்டின் ஜனத்தொகை மூன்று இலட்சம். இது தற்சமயம் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்தாலும், சீக்கிரமே சுதந்திரமடையும் என்று தெரிகிறது. காம்பியா நதியின் முகத்துவாரத்தில் அமைந்துள்ள தீவுகளில் 17ஆம் நூற்றுண்டிலேயே பிரிட்டிஷ் வியாபாரத் தலங்கள் ஏற்பட்டிருந்தன. அத் தீவுகளில் ஒன்றில்தான் பாத்தஸ்ட் பட்டணம் இருக்கிறது.

காம்பியா பல சிறிய பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றும் அங்குள்ள சுதேசத் தலைவனது ஆட்சியில் இருக்கிறது. பிரிட்டிஷ் அதிகாரிகளும் இந்தத் தலைவர்களுடனேயே கலந்து ஆலோசித்து ஆட்சி நடத்துகின்றனர்.

மழைக் காலத்தில், அதாவது, ஜூன்முதல் அக்டோபர்வரையில் மிக உஷ்ணமாய் இருப்பதால், அது ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிக்கும் காலமாகும். காம்பியா நதியை அடுத்துள்ள பகுதிகளில் வனங்களும் சதுப்பு நிலங்களும் காணப்படுகின்றன. மற்றப் பாகங்கள் புல் தரையாக இருக்கின்றன. அங்குள்ள முக்கிய விளைபொருள் நிலக்கடலை. இங்கிருந்து பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படுவது நிலக்கடலைதான். நிலக்கடலை பயிர் செய்வது அதிக இலாபகரமாக இருப்பதால், அங்குள்ள மக்கள் உணவுப் பொருள்களுக்குப் பதிலாக நிலக்கடலையையே அதிகம் பயிர் செய்கிறார்கள். இங்குப் பயிர் செய்யப்படும் உணவுப் பயிர்களில் முக்கியமானது நெல், தினை, சோளம். புல்தரைப் பிரதேசங்களில் மாடுகள் வளர்க்கப்படுகின்றன.

காம்பியா நாட்டில் உலோகப் பொருள்களோ, ஆலைத் தொழில்களோ அதிகமில்லை. சிறிதளவு இரும்பும் டைட்டானியமும் (Titanium) வெட்டி எடுக்கப்பட்டு இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வியாபாரம்

இப் பிரதேசத்தின் தலைநகரமும் முக்கியப் பட்டணமும் பாத்தஸ்ட் பட்டணம். இதன் ஜனத்தொகை சுமார் 30 ஆயிரம். இத் துறைமுகத்தில் பெரிய கப்பல்கள் வந்து தங்க வசதியுண்டு. சிறு கப்பல்களும் காம்பியா நதி முகத்துவாரத்திலிருந்து உள் நாட்டில் 30 மைல்வரை செல்கின்றன. அதற்குமேல் சிறு படகுகளே செல்ல முடியும். இந் நாட்டில் ரெயில் பாதைகள் இல்லை. நதிகளின்மூலமே செல்ல முடியும்.

இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள் நிலக்கடலை. இறக்குமதியாகும் பொருள்கள் துணி வகைகள், இயந்திரங்கள், அரிசி, சீனி என்பன.

ஸெனிகல்

சுமார் 81,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள இந் நாட்டின் ஜனத்தொகை 30 இலட்சம். ஜனங்கள் பெரும்பாலும் முகம்மதிய இனத்தைச் சார்ந்தவர்கள். ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் காம்பியா நாட்டின் இரு பக்கத்திலும் இது வியாபித்திருக்கிறது. இலேசான மணற்பாங்கான பிரதேசமானபடியால், இங்குப் புல் பிரதேசமே காணப்படுகிறது. இங்குள்ள ஜனங்களில் சுமார் ஓர் இலட்சம் பேர் பிரெஞ்சு நாட்டைச் சார்ந்தவர்; தலைநகரமான டாக்கர் பட்டணத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அவர்கள் வசிக்கின்றனர்.

இங்கு மிக அதிக அளவில் பயிர் செய்யப்படுவது நிலக்கடலை. இது அதிக அளவில் ஏற்றுமதியும் செய்யப்படுகிறது. டாக்கர் பட்டினத்தில் நிலக்கடலை எண்ணெய் ஆலைகள் உள்ளன. இத் துறைமுகம் வழியாக நிலக்கடலையும் எண்ணெயும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்குள்ள புல் பிரதேசத்தில் தினையும் சோளமும் பயிர் செய்யப்படுவதோடு, மாடுகளும் வளர்க்கப் படுகின்றன. இதன் தலைநகரமும் துறைமுகமுமான டாக்கர் பட்டினத்தில் $2\frac{1}{2}$ இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். இப் பட்டினத்தில் எண்ணெய்த் தொழிற்சாலைகளும், சோப்பு, சிகரெட் என்பன செய்யும் ஆலைகளும் உண்டு.

இங்குத் துறைமுகம் அதிக வசதியுள்ளதால், பிரான்ஸ் நாட்டிலிருந்து தென் அமெரிக்காவுக்குச் செல்லும் கப்பல்களும், ஃபிரெஞ்சுப் போர்க்கப்பல்களும் இங்கு வந்துபோவதுண்டு. இங்கிருந்து ஏற்றுமதியாகும் முக்கியப் பொருள் நிலக்கடலை. இந் நாட்டின் வியாபாரத்தில் பெரும்பாகமும் ஃபிரான்சுடனேயே நடைபெறுகிறது. இங்கு இறக்குமதியாகும் பொருள்கள் கோதுமை, சீனி, இயந்திரங்கள், துணி என்பன. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் நிலக்கடலை, நிலக்கடலை எண்ணெய், பிண்ணாக்கு, சிமின்டு என்பன.

மாலி

முன்னர் ஃபிரெஞ்சு சூடான் என்று அழைக்கப்பட்டுவந்த இந் நாடு, நைஜர் நதி பாயும் மத்திய பாகத்தில் இருக்கிறது. வடக்கில் இப் பிரதேசம் ஸஹாரா பாலைவனத்தோடு சேருகிறது. இங்குள்ள ஜனத்தொகை 45 இலட்சம். செனிகல் நாட்டைப் போலவே இங்கும் நிலக்கடலையே அதிகம் பயிர் செய்யப்படுகிறது. நைஜர் நதிக்கரையிலுள்ள பமாக்கோ (Bamako) என்னுமிடத்தில் இவை சேகரிக்கப்பட்டு, டாக்கர் துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. பமாக்கோ பட்டணத்துக்குக் கிழக்கே நைஜர் நதி பல சிறிய பாகங்களாகப் பிரிவதால், கோடையில் மழை பெய்யும்போது அப் பிரதேசம் முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கவும், நதி நீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்தவும் ஸன்ஸாண்டிங் (Sansanding) என்னுமிடத்தில் ஓர் அணை கட்டியுள்ளனர். இதிலிருந்து மின்சக்தியும் எடுக்கப்படுகிறது. இப் பிரதேசத்தில் நெல்லும் பருத்தியும் பயிர் செய்யப்படுகின்றன.

இந் நாட்டின் தலைநகரம் பமாக்கோ. ஜனத்தொகை 70 ஆயிரம். இப் பிரதேசத்திலுள்ள பழங்காலப் பட்டணம் திம்புக்து (Timbuktu). வடக்கிலுள்ள ஸஹாரா பாலை மக்களோடு இவர்கள்

வியாபாரம் செய்கின்றனர். ஆனால், ஒட்டகப் போக்குவரவு குறைந்துவரும் இந் நாளில் இப் பட்டணத்தின் முக்கியத்துவமும் குறைந்துவருகிறது.

வால்ட்டா குடியரசு, ஐவரி கோஸ்ட், டகோமா, டோகோ முதலியன

இந் நாடுகள் ஸெனிகல், மாலி முதலியவற்றைவிடப் பின்னேற்றமடைந்தவை. வால்ட்டா குடியரசின் ஜனத்தொகை 40 இலட்சம். அங்குப் பெரும் பாகமும் புல்தரைப் பிரதேசமானதால், மாடு வளர்த்தலே அங்குள்ளவரின் தொழில். இதன் தலைநகரம் ஊகாதே (Ouagadougou) இங்கிருந்து ஐவரி கோஸ்ட்டிலுள்ள அபிஜான் துறைமுகத்துக்கு ஒரு ரெயில் பாதை செல்கிறது. இதன் ஜனத்தொகை 2 இலட்சம். இந் நாடுகளில் மிகப் பெரிய பட்டணம் இதுவே.

ஐவரி கோஸ்ட், டகோமே, டோகோ இவற்றின் இயற்கைத் தாவரம் வனங்கள். ஐவரி கோஸ்ட்டில் காப்பியும் கொக்கோவும் பயிராகின்றன. டகோமேயில் எண்ணெய்ப் பனைகள் அதிகம்.

நைஜர்

நைஜர் குடியரசு நாடு பெரும்பாகமும் பாலைவனமே. பல இடங்களிலும் இது 3,000 அடி உயரமிருக்கிறது. இந் நாட்டின் தென்பாகத்தில் சற்றே புல்தரைகள் காணப்படுவதால், அங்குத் தினையும் நிலக்கடலையும் பயிர் செய்யப்படுகின்றன. மாடுகளும் வளர்க்கப்படுகின்றன. தலை நகரம் நியாமே. இங்கு ஒரு ஆகாயவிமானத் தளம் உண்டு.

கினி வளைகுடாத் தீவுகள்

கினி வளைகுடாவில் காணப்படும் சில தீவுகள் எரிமலைகளாக உற்பவித்திருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இங்குள்ள தீவுகளில் ஃபெர்னன்டோபோ (Fernando-Po) ஸ்பெயின் தேசத்தவர் ஆதிக்கத்திலுள்ளது. அது அதிகம் அபிவிருத்தி அடையவில்லை. சிறிதளவு ரப்பர், கொக்கோ என்பன அங்கியிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஸாவோ - தோமே (Sao-Thome) என்னும் தீவு போர்த்துகீஸியர் கைவசமிருக்கிறது. இங்குதான் ஆப்பிரிக்காவில் முதன்முதலில் கொக்கோ பயிரிடப்பட்டது. இத் தீவில் கொக்கோ, காப்பி, எண்ணெய்ப் பனை முதலியன பயிர் செய்யப்படுகின்றன.

10. மத்திய ஆப்பிரிக்கா

இந்தப் பிரதேசம் வடக்கில் 20° அட்சாம்சம்முதல் தெற்கே 17° அட்சாம்சம்வரை வியாபித்திருக்கிறது. இதன் மேற்கில் நைஜீரியப் பிரதேசமும் அட்லான்டிக் சமுத்திரமும் எல்லையா கின்றன. கிழக்கே சூடான் பிரதேசமும் கிழக்கு ஆப்பிரிக் காவின் ஏரிப் பகுதியும் இதன் எல்லையாகும். இவ் விசாலமான பிரதேசத்தில் இயற்கை அமைப்பும் காலநிலையும் பல இடங் களிலும் மாறுபட்டிருக்கின்றன. இப்பிரதேசம் பலவிதங்களிலும் மேற்கு ஆப்பிரிக்காவை ஒத்திருந்தாலும், இங்கு அதிக முன் னேற்றம் ஏற்படவில்லை. இப் பகுதியின் ஜனவாசம் குறைவா யிருப்பதே இதற்குக் காரணமாகும். காங்கோ நதி பாயும் சம நிலமே இங்குள்ள முக்கியப் பாகம். காங்கோ நதி தவிர சார்ட் ஏரிப் பிரதேசமும் சாம்பஸி நதிப் பிரதேசத்தின் முதல் பாகமும் இதில் சேர்ந்துள்ளன.

இப் பிரதேசத்தை வடக்கே, பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு உட் பட்ட குடியரசு நாடுகள் என்றும், தெற்கே காங்கோக் குடியரசுப் பிரதேசம் என்றும், அதற்கும் தெற்கே போர்ச்சுகீஸியரைச் சேர்ந்த அங்கோலா பிரதேசம் என்றும் மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

பிரெஞ்சு ஆதிக்கத்துக்குட்பட்ட மத்திய ஆப்பிரிக்கக் குடியரசுப் பிரதேசம்

தெற்கே 5° தென் அட்சரேகையிலிருந்து வடக்கே 20° அட்ச ரேகை வரை தெற்கு வடக்காக 2,000 மைலுக்கும் அதிகம் விஸ் தீரணத்தில் வியாபித்திருக்கிறது. 1839ஆம் வருடம் பிரெஞ்சுக் காரர் ஆதியில் இங்கு வந்து லிபர்வில் (Liberville) பட்டணத்தைத் தாபித்தனர். நாளடைவில் உள்நாட்டில் பிரவேசித்து, 1919ஆம் வருடத்தில் அவர்களது ஆதிக்கம் வடக்கில் சார்ட் ஏரிவரையிலும், டிபஸ்டி மலைகள் வரையிலும் பரவிற்று. 1918ஆம் வருடம் யுத்த

முடிவில் ஜெர்மன் ஆதிக்கத்திலிருந்த காம்ரூன் பகுதியும் அவர்களுடைய பாதுகாப்பின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

1958ஆம் வருடம் ஃபிரெஞ்சுக்காரர் தங்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பிரதேசங்களுக்குப் பூரண சுதந்திரமோ அல்லது தம் ஆட்சிக்கு உட்பட்ட சுதந்திரமோ வழங்க முன்வந்தபோது, இந்தப் பிரதேசத்திலுள்ள நாலு நாடுகள் ஃபிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ்ச் சுதந்திரம் பெறச் சம்மதித்தன. அவையாவன: மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு, காங்கோ, காபோன் (Gabon), சார்ட் முதலியன. இப் பிரதேசம் முழுவதிலும் ஜனவாசம் குறைவு. இங்கு 50 இலட்சம் ஆப்பிரிக்கர்களும், சில ஆயிரம் ஐரோப்பியர்களும் வசிக்கின்றனர். காமரூன் பிரதேசம் 1960-ல் சுதந்திரக் குடியரசாக மாறிற்று. அதன் ஜனத்தொகை 30 இலட்சம். 1961-ல் அதற்குமுன் பிரிட்டிஷ் பாதுகாப்பிலிருந்த தென்காமரூன் பிரதேசமும் அதோடு சேர்ந்தது.

ஃபிரெஞ்சு ஆதிக்கத்துக்குட்பட்ட மத்திய ஆப்பிரிக்கக் குடியரசுப் பிரதேசத்தை மூன்று இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்: காபோன், காமரூன், காங்கோ பிரதேசங்கள் சேர்ந்த வெப்பமும் மழையும் அதிகமுள்ள சமநிலப் பிரதேசம். இங்கு அடர்ந்த வனங்கள் காணப்படுகின்றன. கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலங்களும் மணல் திட்டுகளும் அதிகம். தெற்கில் காங்கோ வடிகால் பிரதேசத்துக்கும், வடக்கில் சாட் வடிகால் பிரதேசத்துக்கும் மத்தியிலுள்ளது உன்னதப் பிரதேசம். இங்குக் கோடைகாலத்தில் மழை பெய்கிறது. இயற்கைத் தாவரம் புல்வெளியாகக் காணப்படுகிறது.

சாட் உள்நாட்டு வடிகால் பிரதேசம்

இங்கு மழை குறைவு. இயற்கைத் தாவரம் முட்செடிகளாகவே காணப்படுகின்றன. வடக்கேபோகுந்தோறும் இவ்விடம் பாலைவனப் பிரதேசமாகிறது.

இப் பிரதேசத்தின் இயற்கை வளங்கள் இன்னும் அபிவிருத்தி அடையவில்லை. வனப்பிரதேசங்களில் முக்கியமாக மரத்தடிகளும், பனை எண்ணெயும், தேங்காய், ரப்பர் என்பனவும் கிடைக்கின்றன. காடுகளில் இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களைத் தவிர மரங்களை நட்டு வளர்த்து அவை இன்னும் பயன்படுத்தப்படவில்லை. இங்குள்ள வனப்பிரதேசங்களில் காமரூன் பிரதேசம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அங்கு எண்ணெய்ப் பனை மரங்களும், கொக்கோ, வாழை என்பனவும் தோட்டங்களில் பயிரிடப்படுகின்றன. கடற்கரையிலிருந்து உள்நாட்டில் செல்லச் சாலை

மார்க்கங்கள் உள்ளன. இதன் தலைநகரான யாண்டே (Yannde) பட்டணத்திலிருந்து டுவாலா (Douala) துறைமுகத்துக்கு ஒரு ரெயில் பாதையும் செல்கிறது.

இப் பிரதேசத்திலிருந்து மரத்தடிகள் சிறிதளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வனப்பிரதேசங்களைவிட ஸவானா பிர தேசத்தில் ஜனங்கள் அதிகம் வசிக்கின்றனர். பெரும்பாலோர் ஆப்பிரிக்கர். ஐரோப்பியரும் சிலர் அங்கு வசிக்கின்றனர். இங்கு விளையும் முக்கியப் பொருள்கள் சோளம், தினை, நிலக் கடலை. இவை பெரும்பாலும் உணவுப் பொருள்களாகப் பயன்படு கின்றன. மாடு வளர்த்தலும் இங்கு நடைபெறுகிறது. பருத்தி விவசாயம் இங்கு ஒரு முக்கியத் தொழில். இப் பிரதேசத்தில் நல்ல சாலை மார்க்கங்கள் இல்லாமையால், அதன் பொருளாதார நிலை முன்னேற்றமடையவில்லை.

சாட் பிரதேசத்தில் உள்ள புல்தரை, முட்செடி கலந்த பிரதேசத்தில் ஆடுமாடுகள், கழுதை, ஒட்டகம், தீக்கோழி என்பன வளர்க்கப்படுகின்றன. ஆனாலும், இப் பிரதேசம் கடற் கரையிலிருந்து வெகு தூரத்திலிருப்பதாலும், நல்ல சாலைகள் இல்லாமையாலும், ஆடுமாடு வளர்த்தல் அதிகம் அபிவிருத்தி அடையவில்லை. இப் பிரதேசத்தில் செம்பு, துத்தநாகம், ஈயம், மாங்கனீஸ், வைரம், தங்கம் முதலிய உலோகங்களிருப்பதாகக் கருதப்பட்டாலும், அவை இன்னும் அதிகம் வெட்டியெடுக்கப் படவில்லை.

மத்திய ஆப்பிரிக்காவில் ஃபிரெஞ்சு ஆதிக்கத்திலுள்ள குடி யரசுகளில் காபோன் குடியரசுத் தலைநகரமும், துறைமுகப் பட்டினமும் ஆகும்.

காங்கோக் குடியரசின் தலைநகரம் பாயின்ட் மூவார் (Pointe Moire). இதன் ஜனத்தொகை 60 ஆயிரம். இது ஒரு முக்கியத் துறைமுகம். இப் பட்டணத்திலிருந்து பிரேஸவில் பட்டணத்துக்கு ரெயில் பாதை உண்டு. பிரேஸவில் பட்டணத்தின் ஜனத்தொகை ஓர் இலட்சம். காமரூன் பிரதேசத்தில் முக்கியத் துறைமுகம் டுலாலா. ஜனத்தொகை 120 ஆயிரம். இங்கு அநேக பெரிய பட்டணங்கள் சமீப காலத் தில் அமைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள விமானத் தாவளத்தில் ஐரோப்பாவிலிருந்து கேப் டவுன் செல்லும் விமானங்கள் தங்கிப் போவதுண்டு. இதன் தலைநகரம் யாண்டே. சாட் குடியரசின் தலைநகரம் ஃபோர்ட் லாமி (Fort Lamy). இதன் ஜனத்தொகை ½ இலட்சம். இங்குள்ள விமானத் தாவளத்தில் அல்ஜியர்ஸிலிருந்து மேற்கு ஆப்பிரிக்கா போகும் விமானங்கள் தங்கிச் செல்கின்றன.

வியாபாரம்

பூமத்திய ரேகையை அடுத்த இப் பிரதேசங்கள் அதிக விஸ்திரணமுள்ளவையாக இருந்தாலும், அவை இன்னும் அதிக முன்னேற்றமடையவில்லை. இங்கு இறக்குமதியாகும் பொருள்கள் பருத்தித் துணிவகைகள், இயந்திரங்கள், இரும்புச் சாமான்கள், பெட்ரோல், சிறிதளவு எண்ணெய், திராட்சை ரஸம், சர்க்கரை என்பன. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானவை சாட், மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு இவற்றிலிருந்து பருத்தியும், ரைபோன் குடியரசிலிருந்து மரத்தடிகளும், சிறிதளவு காப்பி, கொக்கோ, தங்கம், வைரம், பெட்ரோல், பனை எண்ணெய் என்பனவும் ஏற்றுமதியாகின்றன. ஏற்றுமதிப் பொருள்களில் 80%-மும், இறக்குமதிப் பொருள்களில் 65%-மும் ஃபிரான்ஸ் தேசத்தோடேயே நடைபெறுகின்றன.

காங்கோலியக் குடியரசு

மத்திய ஆப்பிரிக்காவில் ஃபிரெஞ்சு ஆதிக்கத்துக்கு உட்பட்ட காங்கோக் குடியரசிலிருந்து இது வேறுபட்டது என்பதைக் கூற இதைக் காங்கோலியக் குடியரசு என்று சொல்கிறோம். இது பூமத்திய ரேகைக்கு இருபுறத்திலும் வியாபித்திருக்கிறது. இதன் விஸ்திரணம் 9 இலட்சம் சதுர மைல். இதன் ஜனத்தொகை 132 இலட்சம். இதில் ஏறக்குறைய ஓர் இலட்சம் பேர் பெல்ஜிய நாட்டைச் சார்ந்தவர். ஆப்பிரிக்கர்கள்—அநேக மாறுபட்ட கலாசார நிலையிலுள்ள பல இனத்தவர் இங்குக் காணப்படுகின்றனர். அவர்களில் மிகவும் பிற்போக்கான பிக்மி இனத்தவர்ஸ்டான்லிவில் பட்டணத்துக்கு வடகிழக்கிலுள்ள வனங்களில் வேட்டையாடிக் கிடைத்ததைத் தின்று வாழ்கின்றனர். அவர்களுக்கு நிலையான குடிசைகள்கூட இல்லை. நல்ல தேகக்கட்டு உடையவர்களானாலும், அவர்களின் சராசரி உயரம் 4′-க்கும் குறைவாகவேயுள்ளது. இவர்களைத் தவிர மற்ற ஆப்பிரிக்க இனத்தவர் காங்கோ நதிப் பிரதேசத்தில் பயிர்த் தொழிலிலோ, தோட்ட வேலையிலோ, சுரங்கத் தொழிலிலோ ஈடுபட்டிருக்கின்றனர். பல இனத்தவர் வாழ்வதால் பல மொழிகளும் பேசப்பட்டுவருகின்றன.

கடந்த சுமார் 50 வருடங்களாக காங்கோ பிரதேசத்தில் பெல்ஜிய நாட்டு ஐரோப்பியர் ஆதிக்கம் செலுத்திவந்தனர். பள்ளிக்கூடங்களும் வைத்தியசாலைகளும் அமைக்கப்பட்டன. ஆனால், ஆப்பிரிக்க மக்கள் அரசியலில் பங்குபெற அநுமதிக்கப்படவில்லை. 1945-ல் முடிந்த உலக மகாயுத்தத்துக்குப்பின் எல்லா நாடுகளிலும் ஐரோப்பிய ஆதிக்கத்துக்கு எதிராக எழுந்த குமுறல்

களின் பலனாக காங்கோவிலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதனால், 1960ஆம் வருடத்தில் காங்கோ சுதந்திரம் பெற்றுக் குடியரசா யிற்று. ஆப்பிரிக்கத் தலைவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட பூசல் களின் காரணமாக சுதந்திரம் பெற்றபின் அங்குக் குழப்பங்கள் ஏற்பட்டன. ஆனால், நாளடைவில் அமைதி ஏற்பட்டது.

காங்கோ குடியரசை 6 மாகாணங்களாகப் பிரித்துள்ளனர். அவை: லியோபோல்டுவில், இக்கியோட்டர், கிழக்கு மாகாணம், கிவூ, கடாங்கா, காஸாய். ஐரோப்பியர்களில் கால்பகுதியினர் கடாங்கா மாகாணத்தில் வசிக்கின்றனர். அங்கு சுரங்கத் தொழில் முக்கியம்.

இயற்கை அமைப்பு : காங்கோ நதியும் அதன் உபநதிகளும்

பாயும் பிரதேசமே காங்கோலீஸ் குடியரசுப் பிரதேசம். மத்தியில் தாழ்ந்த நிலமாகவும், ஓரங்களில் உயரமான நிலப் பரப்புமுள்ள இப் பிரதேசத்தில் காங்கோ நதி கடலில் சேருமிடத் தில் மட்டும் பிளவு ஏற்பட்டிருக்கிறது. இப் பிரதேசத்தின் கிழக்குப் பாகம் பிளவுப் பீடபூமியை அடுத்து இருப்பதால், அங்கு மிகவும் உயரமான மலை ரூவன் ஸோரி (Ruwen Zori) அமைந் துள்ளது. இதன் உயரம் 17ஆயிரம் அடி. பூமத்திய ரேகையை அடுத் துள்ள இம் மலைச்சரிவுகளில் பனிக்கட்டி உறைந்து காணப்படுவ துண்டு. காங்கோ நதி உற்பத்தியாகும் பிரதேசத்தில் நல்ல மழை பெய்வதால், காங்கோ நதியில் எப்போதும் தண்ணீர் காணப்படும். காங்கோ நதியின் அநேக உபநதிகளில் வலப் பக்கத்தில் வந்து சேரும் உபாங்கி உபநதியும், இடப்பக்கத்தில் வந்து சேரும் காஸாய் உபநதியும் மிக முக்கியமானவை.

காங்கோ நதிகளிலும், அவற்றின் உபநதிகளிலும் எத்தனையோ 1,000 மைல்களுக்குப் படகு செலுத்த வசதி உண்டு. ஆனால், நதிப்போக்கில் சில இடங்களில் நீர்வீழ்ச்சியும் துரிதப் போக்கும் ஏற்படுவதால், படகுப் போக்குவரத்துக்குச் சில சமயங்களில் தடை ஏற்படுகிறது. அமேஸான் நதிபோல இந் நதியில் கடலி லிருந்து படகுகள் உள்நாட்டிற்குச் செல்ல வசதியில்லை. அமேஸான் நதியில் அதன் முகத்துவாரத்திலிருந்து 1,000 மைல் வரை உள்நாட்டில் கடலில் போகும் கப்பல்கள் செல்ல வசதி யுண்டு. ஆனால், காங்கோ நதியில் அதன் முகத்துவாரத்திலிருந்து சிறிது தூரம் உள்நாட்டில் செல்வதற்குள் ஒரு பெரிய நீர்வீழ்ச்சி கப்பல் போக்குவரத்தைத் தடைசெய்கிறது. இந் நீர்வீழ்ச்சி, துறை முகமான மட்டாடி பட்டணத்துக்கும் துறைமுகமான லியோ போல்டுவில்லுக்குமிடையில் அமைந்துள்ளது. இந்த தூரத்தை

ரயில்மூலம் கடக்கிறார்கள். இதன் பெயர் லிவிங்ஸ்டன் நீர் வீழ்ச்சி. இதன் உயரம் 800′. ஆனால், லியோபோல்டுவில் பட்டணத்துக்கு மேலே 1,068 மைல் தூரத்துக்கு ஸ்டான்லி வில் பட்டணம் வரையில் இந் நதியில் கப்பல் போக்குவரவு நடைபெறுகிறது. இவ்விரு பட்டணங்களுக்குமிடையில் தினமும் கப்பல்கள் செல்கின்றன. நதியின் போக்குக்கு எதிர்த்திசை யிலுள்ள பயணம் பதினொரு நாள் ஆகிறது. இந்தப் பாகத் தில் காங்கோ நதி சில இடங்களில் 10 மைலுக்கும்மேல் இருக்கிறது. அதன் தோற்றம் பல தீவுகள் கொண்ட ஒரு பெரிய தடாகத்தைப் போலிருக்கிறது. ஸ்டான்லிவில் பட்டணத் துக்கு மேலே சிறு தூரங்களுக்குத்தான் படகுகள் செல்ல முடியும். ஏனெனில், அங்குத் துரிதப் போக்குகள் அதிகம். எங்கு நீர்விழ்ச்சியோ, துரிதப் போக்கோ ஏற்படுகிறதோ, அதன் அருகில் ரயில் பாதை அமைத்துக் கடக்கிறார்கள்.

காலநிலையும் இயற்கைத் தாவரங்களும்

காங்கோலியக் குடியரசுப் பிரதேசம், பூமத்தியரேகைக்கு இரு புறமும் அமைந்திருப்பதால், சீதோஷ்ண நிலையும் இயற்கைத் தாவரமும் பூமத்திய ரேகைக்கு வடக்கில் எவ்விதம் இருக் கிறதோ, அவ்விதமே தெற்கிலுமுள்ளது. பொதுவாக இப் பகுதியை இரண்டு முக்கியப் பாகமாகப் பிரிக்கலாம்: (1) நாட்டின் மத்தியிலுள்ள உட்குழிந்த சமதளப் பிரதேசம். (2) அதைச் சுற்றி யுள்ள பீடபூமிப் பிரதேசம். தாழ்ந்த சமவெளிப் பகுதியில் வருடம் முழுவதும் நல்ல வெப்பமும் மழையும் அனுபவிக்கப் படுகின்றன. சமநிலப் பகுதியில் வருட மழை சராசரி 60″-க்கும் மேல் • பெய்கிறது. இங்குள்ள இயற்கைத் தாவரம் வெகு அடர்ந்த வனப்பிரதேசமாகும். வனப்பகுதியை இன்னும் முழு அளவில் பயன்படுத்தவில்லை. பலவித பயனுள்ள மரங்கள் அங்குக் காணப்பட்டாலும், அவற்றைச் சிறிதளவே வெட்டி ஏற்றுமதி செய்கின்றனர். நாட்டின் வடபாகத்தில்மட்டும் போமா துறை முகத்துக்குப் போக்குவரவு வசதியிருப்பதால், அங்குமட்டும் இத் தொழில் நடைபெறுகிறது. மரக்கட்டைகள் பெரும்பாலும் உள் நாட்டிலேயே பயன்படுத்தப்பட்டாலும், சில வகை மரத்தடிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்தத் தாழ்ந்த சமநிலத்தைச் சுற்றியுள்ள பீடபூமியில் கோடையில் நல்ல மழை பெய்கிறது. பூமத்திய ரேகையைவிட்டு அகன்றுபோகுந்தோறும் மழை குறைவு. இங்கு கடாங்கா மாகாணத்தில் பீடபூமி 5,000-க்குமேல் உயரமிருப்பதால், அங்கு ஐரோப்பியர் அதிகம் குடியேறியிருக்கின்றனர். நாட்டின் கிழக்குப்

பாகத்திலுள்ள பீடபூமியிலும் ஐரோப்பியர் வசிக்கின்றனர். பீடபூமியில் 6,000′ உயரம்வரை புல்தரைகளே காணப்படுகின்றன. அந்த உயரத்துக்குமேல் அடர்ந்த வனங்களும் மூங்கிற் குதிர்களும் காணப்படுகின்றன.

காங்கோலியக் குடியரசில் பலவிதமான உலோகப் பொருள்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. அவை எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானது செம்பு. உலகத்திலேயே அதிக அளவில் செம்பு வெட்டியெடுக்கப்படுவது இங்குதான் என்று கூறப்படுகிறது. இங்கிருந்து அதிக அளவில் ஏற்றுமதியாவது அந்த உலோகம்தான். அது தவிரப் பெருமளவில் வைரமும், கோபால்ட் என்ற உலோகப் பொருளும் வெட்டியெடுக்கப்படுகின்றன. மற்ற எல்லாவற்றையும்விட உலோகப் பொருள்களின் மிகுதியால்தான் இந்தத் தேசம் அபிவிருத்தியடைந்தது. உலோகப் பொருள்களின் விலையுயர்ந்த தன்மைமட்டுமல்லாமல், அவற்றை ஏற்றுமதி செய்வதற்குத் தொழிற்சாலைகளும் சாலைகளும் அமைக்கப்பட்டு நாடு அபிவிருத்தியடைந்தது. தொழிலாளர்கட்கு உணவுப் பொருள்களின் அவசியத்துக்காகப் பயிர்த் தொழிலை மேம்படுத்தியதோடு, சுரங்கத் தொழில் அதிபர்கள், தொழிலாளர்களின் குடும்ப நலனுக்காக வைத்தியசாலைகளும் பள்ளிக்கூடங்களும் அமைத்தனர். இப் பிரதேசத்தின் முக்கியச் சுரங்கத் தொழில் கேந்திரம், கடாங்கா மாகாணத்திலுள்ள எலிஸபெத்வில் பட்டணத்துக்கு அருகில் உள்ளது. இப் பட்டணத்தின் ஜனத்தொகை 1½ இலட்சம். இச் சுரங்கத் தொழில் பிரதேசம் வட ரொடீஷியாவின் எல்லைக்கு சமீபத்திலிருக்கிறது. துறைமுகப் பட்டணங்கட்கு வெகு தூரத்திலமைந்திருப்பதுதான் இதன் குறை. இதன் சமீபத்தில் கிடைக்கும் நிலக்கரி நல்ல தரமற்றதாயிருப்பதால், இத் தொழிலுக்கு வேண்டிய நிலக்கரி யாவும் தென்ரொடீஷியாவிலும் தென் ஆப்பிரிக்காவிலுமிருந்து ரெயில்மூலம் கொண்டு வரவேண்டியுள்ளது. இப் பகுதியின் அருகிலுள்ள நீர்வீழ்ச்சிகளிலிருந்து மின்சாரம் எடுக்கப்பட்டு, எலிஸபெத்வில் நகருக்கு 200 மைல் கிழக்கிலுள்ள மின்சக்தி நிலையங்களிலிருந்து, அப் பட்டணத்துக்கும் சுரங்கத் தொழிலுக்கும் வேண்டிய மின்சக்தி கொண்டுவரப்படுகிறது.

கடாங்கா பிரதேசத்தின் சுரங்கத் தொழில் முழுவதும் பெல்ஜியம் நாட்டவரின் ஆதிக்கத்திலிருக்கிறது. ஆப்பிரிக்கர்கள் அதில் தொழில் செய்கின்றனர். அந்தப் பிரதேசத்தில் ஆப்பிரிக்க ஜனங்கள் அதிகமில்லாதபடியால், சுரங்கத் தொழிலுக்கு வேண்டிய கூலியாட்கள் வேறு பிரதேசங்களிலிருந்தும்

கொண்டுவரப்படுகின்றனர். இங்கிருந்து ஏற்றுமதியாகும் செம்பு தேசத்தின் மொத்த ஏற்றுமதியில் ¼ பாகமாகும். இந்த உலோகத்தைச் சுரங்கங்களுக்கு அருகிலும், எலிஸபெத்வில், ஜாடட்வில் பட்டணங்களிலும் சுத்தப்படுத்தி ஏற்றுமதி செய்கிருர்கள். இங்குக் கிடைக்கும் உலோகம் அதிக அளவில் சுத்தமாகவே கிடைக்கிறது.

செம்பு கிடைக்கும் சுரங்கங்களிலேயே கோபால்ட் என்னும் உலோகமும் அதிக அளவில் கிடைக்கிறது. ரேடியம், யுரேனியம் முதலிய உலோகங்களும் கடாங்கா மாகாணத்தில் அதிக அளவில் கிடைக்கின்றன. இங்கு மாங்கனீஸ், துத்தநாகம், இரும்பு, வெள்ளி, தகரம், பிளாட்டினம், பிஸ்மத், டங்ஸ்டன் முதலிய உலோகங்களும் வெட்டியெடுக்கப்படுகின்றன. தகரம் வேறு பல மாகாணங்களிலும் வெட்டியெடுக்கப்படுகிறது. காஸாய் நதிப் பகுதியிலும், அதன் உபநதிகளின் வடிகால் பிரதேசங்களிலும் வைரம் கண்டெடுக்கப்படுகிறது. தேசத்தின் வடமேற்கிலும் வைரம் கிடைக்கிறது. இங்குக் கிடைக்கும் வைரம் தென்னுப்பிரிக்காவில் கிடைப்பதைவிட 4 பங்கு அதிகமாகும். அவை பெரும்பாலும் அமெரிக்காவுக்கே ஏற்றுமதியாகின்றன. தேசத்தின் கிழக்கில் வண்டல் பிரதேசங்களில் தங்கமும் கிடைக்கிறது. முக்கியமாக ஆல்பர்ட் தடாகத்துக்கு மேற்கில் இந்த உலோகம் அதிக அளவில் கிடைக்கிறது.

இங்குக் கிடைக்கும் உலோகப் பொருள்கள், பெரும்பாகமும் வெளிநாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகிறது. இப் பிரதேசம் துறைமுகங்களிலிருந்து வெகு தூரத்திலிருப்பது ஒரு பெருங் குறை. கடாங்கா பிரதேசத்திலிருந்து உலோகங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. காங்கோவிலுள்ள வட்டாடி துறைமுகம்வழியாகவும், போர்ச்சுகீஸிய அங்கோலாவிலுள்ள லாபீட்டோ துறைமுகம்மூலமாகவும், மொஸாம்பிக்கிலுள்ள பெய்ரா (Beira) துறைமுகம்மூலமாகவும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சிறிதளவு தாங்கனிகாவிலுள்ள டார் எஸ் ஸலாம் (Dar Es Salaam) துறைமுகம்வழியாகவும் ஏற்றுமதியாகிறது.

விவசாயப் பொருள்கள்

காங்கோலியக் குடியரசிலிருந்து ஏற்றுமதியாகும் விவசாயப் பொருள்களில் முக்கியமானவை பனை எண்ணெயும், எண்ணெய்ப் பனைக் கொட்டையுமாகும் (kernel). இந்தத் தொழிலை ஐரோப்பியரே நடத்திவருகின்றனர். இதில் மிகவும் முக்கியப் பங்கு பிரிட்டிஷ் கம்பெனிக்காரராகிய லீவர் பிரதர்ஸ் கையிலிருக்கிறது.

பனை எண்ணெயை சோப்பு செய்ய மூலப்பொருளாக அவர்கள் ஏற்றுமதி செய்கின்றனர். பெருமளவு பனை எண்ணெய் உள் நாட்டிலேயே செலவாகிறது. புல்தரைப் பிரதேசங் களில் கொக்கோ அதிகமாகப் பயிராகிறது. இதைப் பெரும்பாகமும் வடக்கு எல்லைப் பிரதேசத்திலும் காஸாய் மாகா ணத்திலும் ஆப்பிரிக்கர்களே செய்கிறார்கள். பருத்தியும் அதிக அளவில் பயிரிடப்பட்டு ஏற்றுமதியாகிறது. காப்பிச் செடி ஐரோப்பியர் மேற்பார்வையில் தோட்டங்களிலும், வேறு பல இடங்களிலும் ஆப்பிரிக்காவில் பயிரிடப்படுகிறது. கிழக்குப் பகுதியிலுள்ள பீடபூமிப் பகுதியில் இது அதிகம் உற்பத்தியா கிறது. பெரும்பாகமும் உள்நாட்டில் செலவானாலும் சிறிதளவு ஏற்றுமதியாகிறது. சமீப காலத்தில்தான் ரப்பர் மரங்கள் அதிக அளவில் நட்டு வளர்க்கப்படுகின்றன. தற்சமயம் இந்தத் தோட்டத் தொழில் அபிவிருத்தி அடைந்துவருகிறது. நாட்டின் மேற்குப் பகுதியில் கரும்பு அதிகமாகப் பயிரிடப்பட்டு, லியோ போல்டுவில் பட்டணத்தில் ஒரு சர்க்கரைத் தொழிற்சாலையும் செயற்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் சீனி, நாட்டின் அவ சியத்துக்கே செலவாகிறது. கொய்னா மரங்கள் கிழக்குப் பீட பூமியில் பல இடங்களிலும் நட்டு வளர்க்கப்பட்டுக் கொய்னா உற்பத்தியும் அதிகரித்துவருகிறது. பீடபூமியிலும் கடாங்கா மாகாணத்திலும் சிறிதளவு புகையிலை, தோட்டங்களில் பயிரிடப் பட்டு உள்நாட்டிலேயே செலவாகிறது.

தானியங்களில் சோளம் ஒன்றுதான் காங்கோலியக் குடியரசு நாட்டில் அதிக அளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்படு கிறது. புல்தரைப் பிரதேசங்களில் இந்தப் பயிர்த் தொழில் அதிக இடங்களில் பரவிவருவதோடு, இந்தத் தானியமே அங்குள்ள மக்களின் உணவுப் பொருளாகப் பயன்படுகிறது. அவர்களது மற்ற உணவுப் பொருள்கள் மரவள்ளிக் கிழங்கு, வாழை என்பன.

கிவூ பீடபூமியில் ஐரோப்பியர்கள் தோட்டங்களில் தேயிலை பயிரிடுகிறார்கள். சதுப்பு நிலங்களில் காணும் சில தாவரங்களின் கோந்து (கோபால்—copal) சேகரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப் படுவதோடு லியோபோல்டுவில் பட்டணத்தில் வார்னிஷ், பெயின்ட் முதலியன செய்யும் ஆலைத் தொழில்களிலும் பயன் படுத்தப்படுகிறது.

மாடுகள் புல்தரைப் பிரதேசங்களில் பல இடங்களிலும் வளர்க்கப்படுகின்றன. ஆனால், அடிக்கடி ஏற்படும் மாட்டு வியாதி களினால் சில வருடங்களில் பெருஞ் சேதம் ஏற்படுவதுண்டு. இவ்வித வியாதிகளைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

ஆலைத் தொழில்கள்

கடாங்கா சுரங்கத் தொழிற் பகுதியில் ஆலைத் தொழில் மிகவும் அபிவிருத்தி அடைந்துள்ளது. மின்சக்தி நிலையங்களைத் தவிர, சிமென்டு, செங்கல் தொழிற்சாலைகளும், சோப்பு, ரஸாயனப் பொருள் தொழிற்சாலைகளும் அங்கு அநேகம் காணப்படுகின்றன. லியோபோல்டுவில், ஆல்பர்ட்வில் பட்டணங்களில் பருத்தி மில்கள் நடைபெறுகின்றன. சிகரெட் தொழிற்சாலைகளும், தோல் பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. மரமறுக்கும் தொழிற்சாலைகளும், அரிசி மில்களும், எண்ணெய் ஆலைகளும் பல இடங்களிலும் காணப்படுகின்றன. வட்டாடி துறைமுகத்துக்கு 60 மைலுக்கு மேலே இங்கா (Inga) நீர்விழ்ச்சியிலிருந்து மின்சாரம் எடுத்து, அருகில் கிடைக்கும் உலோகப் பொருள்களைப் பயன்படுத்தி, அங்கு ஓர் அலுமினியத் தொழிற்சாலை ஆரம்பிக்க முயற்சி செய்யப்படுகிறது.

பட்டணங்கள்.

காங்கோலியக் குடியரசின் தலைநகரம் லியோபோல்டுவில். ஜனத்தொகை 3 இலட்சம். அங்கு ஒரு விமானத் தளம் உண்டு. அநேக ஆலைகளில் துணிவகைகள், தோல் காலணி முதலியவற்றை உற்பத்தி செய்கின்றனர். கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் ஸ்டான்லிவில். ஈக்வேட்டர் மாகாணத்தின் தலைநகரம் கோகில்ஹாட்வில் (Coquilhatville). கிவூ மாகாணத்தின் தலைநகரம் புக்காவூ (Bukavu). காங்கோ நதியின் முகத்துவாரத்தி லுள்ள வட்டாடி துறைமுகம், கடலில் செல்லும் பெரிய கப்பல்கள் வந்து தங்குவதற்கு ஏற்றபடி அமைக்கப்பட்டிருக்கிறது.

வியாபாரம்

இங்குச் சுரங்கத் தொழில் முக்கியமானபடியால், இயந்திரங்களும், மோட்டார் சாமான்களும், பெட்ரோல், சைக்கிள் என்பனவும் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. முக்கியமாக, கடாங்கா சுரங்கத் தொழில் பிரதேசத்தின் அவசியத்துக்காக நிலக்கரி ரொடீஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. துணிவகைகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஏற்றுமதிப் பொருள்களின் விலை மதிப்பில் 1/3 பாகம் செம்பு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஏற்றுமதி செய்யப்படும் இதர உலோகங்கள் தங்கம், வைரம், தகரம், யூரேனியம் என்பன. உலோகப் பொருள்களில் பெரும்பாகமும் பெல்ஜியம் நாட்டுக்கே அனுப்பப்படுகிறது. பருத்தியும், பனை எண்ணெயும், காப்பிக் கொட்

டையும், பெல்ஜியத்துக்கே பெரும்பாலும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மரத்தடிகள், கோபால்ட், எண்ணெய்ப் பனைக் கொட்டைகள், ரப்பர், கொக்கோ, அங்கு விளையும் ஒருவகைச் சணல், எண்ணெய் விதைகள், பிண்ணாக்கு, சிறிதளவு சோளம் என்பனவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதில் பாதிக்குமேல் பெல்ஜியத்துக்கே அனுப்பப்படுகின்றன. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் பாதிக்குமேல் வட்டாடி துறைமுகம் வழியாகச் செல்கிறது. செம்பும், இதர உலோகங்களும் லோபீட்டா துறைமுகம் வழியாக ஏற்றுமதி ஆகின்றன.

அங்கோலா

போர்ச்சுகீஸியரின் மேற்கு ஆப்பிரிக்கா என்று குறிப்பிடப்படும் அங்கோலா, போர்ச்சுகீஸியரின் காலனிகளில் மிகப் பெரியது; இது போர்ச்சுகல் நாட்டைவிட 14 மடங்கு பெரியது. இதன் விஸ்தீரணம் 5 இலட்சம் சதுரமைல். இதன் ஜனத்தொகை சுமார் 50 இலட்சம் பேர். அவர்களில் 2 இலட்சம் பேர் போர்த்துகீஸியர். 1575ஆம் வருடத்தில் முதன்முதலாக போர்ச்சுகீஸியர் இங்கு வந்ததாகக் கூறப்படுகிறது. ஆப்பிரிக்க மக்கள் நாட்டின் பல பாகங்களில் வீறுகொண்டெழுந்து சுதந்திரம் கோரும் இந் நாளில், இப் பிரதேசத்தில் ஆப்பிரிக்கர் மிகவும் கொடுமையாக அடக்கியாளப்பட்டுவருகின்றனர்.

அங்கோலாவின் பெரும்பாகமும் சராசரி 3,000′ உயரமான ஒரு பீடபூமிப் பிரதேசமாகும். இப் பீடபூமியின் மிக உயரமான பாகம் பிஹே (Bihe′) பீடபூமி. இது 5,000′-க்குமேல் உயரமானது. இதன் இரு புறங்களிலும் காங்கோ நதியின் வடிகால் பிரதேசமும், சாம்பஸி நதியின் வடிகால் பிரதேசமும் காணப்படுகின்றன. கடற்கரை ஓரத்தில் மட்டுமே சற்றுத் தாழ்ந்த பிரதேசங்கள் காணப்படுகின்றன. இப் பிரதேசத்தின் கடற்கரையை அடுத்து பெங்குவிலா என்ற குளிர் நீரோட்டம் வடக்கு நோக்கிப் பாய்வதால், இவ்விடத்தில் வெப்பம் குறைவாக இருக்கிறது. கடற்கரைப் பிரதேசத்தில் மழை குறைவானதால் அங்குச் சிறு குற்றுச் செடிகளே காணப்படுகின்றன. அந் நாட்டில் அங்கு மிங்கும் பாயும் சில நதிகளின் பள்ளத்தாக்கில் அதிக மழையும், முக்கியமாக வடபாகத்தில் வனங்களும் காணப்படுகின்றன. பீடபூமிப் பகுதியில் வருட மழை 40″ முதல் 50″ வரை பெய்கிறது. கோடைக் காலத்தில் பெய்யும் மழையாகையால், விளைவுக்கு மிகவும் பயன்படுகிறது. இங்குள்ள இயற்கைத் தாவரத்தைப் பொதுவாகப் புல்தரைப் பிரதேசம் எனலாம்.

போர்ச்சுகீஸியர் இங்கு வந்து சேர்ந்த நாள்முதல் மூன்று நூற்றுண்டுகளாக, இங்குள்ள நீக்ரோ இனத்தவரைப் பிடித்துச் சென்று, பிரேஸில், அமெரிக்கா முதலிய நாடுகளில் அடிமைகளாக விற்றனர். அடிமை வியாபாரம் நிறுத்தப்பட்டபின்தான் அவர்கள் அங்கு நிலையாகக் குடியேறித் தோட்டத் தொழில் செய்வதில் ஈடுபட்டனர். இங்கு விளையும் பொருள்களில் மிக முக்கியமானது காப்பி. அது முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. காப்பிப் பயிர் பெரும்பாலும் ஐரோப்பியர்களாலேயே தோட்டத் தொழிலாக நடத்தப்படுகிறது. கடற்கரைப் பிரதேசத்தை அடுத்துள்ள மலைச்சரிவுகளில் பயிரிடப்படும் இந்தக் காப்பி அம்போன் (Amboin) துறைமுகம் வழியாக ஏற்றுமதியாகிறது. சோளம் முக்கியமாக ஆப்பிரிக்கர்களால் பயிர் செய்யப்பட்டு அதிலும் பெரும்பாகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. எண்ணெய்ப் பனைக் கொட்டைகளும், பனை எண்ணெயும் அதிக அளவில் உற்பத்தியாகி ஏற்றுமதி செய்யப்படுகிறது. பருத்தியும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. பீடபூமியின் பல பாகங்களில் ஐரோப்பியர் தோட்டங்களில் கற்ருழை நட்டு வளர்த்துக் கற்ருழை நார் ஏற்றுமதியாகிறது. சிறிதளவு கரும்பும் பயிர் செய்யப்படுகிறது. வனப் பிரதேசத்திலிருந்து மரத் தடிகளும் மரவள்ளிக் கிழங்கும் ஏற்றுமதியாகின்றன. நாட்டின் வடபாகத்தில் ஸெட்ஸ் ஈயின் (tsetse fly) உபத்திரவத்தால் மாடு வளர்த்தல் முடியாததாகிறது. ஆனுல், தென்பாகத்தில் ஆப்பிரிக்கர் இத் தொழிலை நடத்துகின்றனர். அங்கிருந்து தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அங்கோலா நாட்டின் கடற்கரைப் பிரதேசத்தின் தென்பாகத்தில் பெருமளவில் மீன்வளமிருப்பதால், அங்கு மீன் பிடிக்கும் தொழில் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. அதிக அளவில் மீன்களை டப்பியில் அடைத்தும் ஏற்றுமதி செய்கிருர்கள். பக்குவப்படுத்தப்பட்ட மீன்வகைகளை ஐரோப்பிய நாடுகட்கும் காயவைத்த மீன்வகைகளைக் காங்கோலியக் குடியரசுப் பிரதேசத்துக்கும் அனுப்புகின்றனர். மாஸாமீட்ஸ் (Mossamedes) என்னும் துறைமுகத்தில் இத் தொழில் அதிக அபிவிருத்தி அடைந்திருக்கிறது.

உலோகங்கள்

நாட்டின் வடகிழக்குப் பாகத்தில் கிடைக்கும் வைரங்கள் வெகு விலையுயர்ந்த ஏற்றுமதிப் பொருளாகிறது. இந்த வைரங்கள் முழுவதும் இங்கிலாந்துக்கே ஏற்றுமதியாகிறது. இரும்பும் மாங்கனீஸும் அங்குக் கிடைக்கும் இதர உலோகங்கள். தங்கமும்

மைக்காவும் சிறிதளவே வெட்டியெடுக்கப்படுகின்றன. பெட்ரோல் எண்ணெயும் அங்குக் கிணறுகளிலிருந்து எடுக்கப்பட்டு, லுவாண்டா பட்டணத்தில் சுத்திசெய்யப்படுகிறது.

அங்கோலாப் பிரதேசத்தில் கைத்தொழில்கள் அதிகமில்லை. லுவாண்டா பட்டணத்தில் ஒரு பருத்திச் சாலையும், வேறு சில இடங்களில் சிமென்டு, சோப்பு என்பன செய்யும் சிறிய ஆலைகளும் காணப்படுகின்றன. இப் பிரதேசத்தின் செல்வம் முழுவதும், போர்ச்சுகல் நாட்டில் வசிக்கும் ஒரு சிறிய செல்வந்தர் கூட்டமே தம் கையில் அடக்கிவைத்துள்ளது. நாட்டு மக்களுக்கு வைத்திய சாலை, பள்ளிகள் முதலிய வசதிகளும் செய்துகொடுப்பதில்லை.

பட்டணங்கள்

இப் பிரதேசத்தின் தலைநகரம் லூவாண்டா. ஜனத்தொகை 1½ இலட்சம்; அதில் 20 ஆயிரம் பேர் போர்த்துகீஸியர். இது ஒரு நல்ல துறைமுகம். இப் பட்டணத்தில் ஆலைத் தொழில்கள், பருத்தி, சோப்பு, தேயிலைத் தொழில்கள் நடைபெறுகின்றன. இதன் துறைமுகம் லோபிட்டோ. இதன் வழியாகத்தான் இப் பகுதியில் அடிமை வியாபாரம் அதிகம் நடந்ததாகக் கூறப்படுகிறது. இத் துறைமுகத்துக்கு சமீபத்தில் முத்துச்சிப்பி எடுப்பதுண்டு. இந்தத் துறைமுகம் வழியாகத்தான் கடாங்கா பிரதேசத்து உலோகப் பொருள்கள் அதிகம் ஏற்றுமதியாகின்றன. பெங்குவிலா ரயில் பாதையிலுள்ள ஒரு முக்கியப் பட்டணமான லோலோ லிஸ்பன் இந் நாட்டின் புதிய தலைநகரமாக ஆகலாம்.


வியாபாரம்

இப் பிரதேசத்தில் இறக்குமதியாகும் பொருள்கள் முக்கியமாகத் துணிவகைகள், இயந்திரங்கள், நிலக்கரி, பெட்ரோல் எண்ணெய், கோதுமை மா என்பன. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானது காப்பி. இது அதிகமாக அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகிறது. வைரம், சோளம், சர்க்கரை, கற்றாழை நார், நிலக்கடலை, மரத்தடி, தேங்காய், பருத்தி, மீன் வகைகள் என்பனவும் ஏற்றுமதியாகின்றன. ஏற்றுமதியாகும் பொருள்களில் கால்பாகம் போர்ச்சுகலுக்கே செல்கிறது.

11. கிழக்கு ஆப்பிரிக்கா

இப் பிரதேசம் ஆப்பிரிக்காவின் மத்தியில் மேற்கே பிளவுப் பள்ளத்தாக்கை எல்லையாகக்கொண்டு கிழக்கில் இந்து மஹா சமுத்திரம்வரை வியாபித்திருக்கிறது. இதன் வடக்கு எல்லையை 5° அட்சாம்சமாகவும், தெற்கு எல்லையை 15° அட்சாம்ச மாகவும் கூறலாம். இப் பிரதேசத்தின் கடற்கரையின் மத்தியில் ஜான்ஸிபார் தீவு அமைந்துள்ளது. இப் பகுதியின் இயற்கை அமைப்பு வடக்கிலிருந்து தெற்காகச் செல்லும் பல மேகலைகளாக அமைந்துள்ளது. இப் பிரதேசத்தின் மேற்கில் விசாலமான தடா கப் பீடபூமியைக் காண்கிறோம். அதன் சராசரி உயரம் சுமார் 4,000′. இதன் கிழக்கில் பெரிய பிளவுப் பள்ளத்தாக்குகள் அமைந் துள்ளன. இந்தப் பிளவுப் பள்ளத்தாக்கு ருடால்ஃப் ஏரியிலிருந்து மியாஸா ஏரிவரையிலும் நீண்டு கிடக்கிறது. இத் தடாகங்களின் நீர்மட்டம், கடல் மட்டத்துக்குமேல் 1,500′ இருக்கும். பிளவுப் பள்ளத்தாக்கின் மேற்குக் கிளை தாங்கனீகா தடாகம் முதல் ஆல்பர்ட் தடாகம்வரை செல்கிறது. கென்யா நாட்டில் இந்தப் பிளவுப் பள்ளத்தாக்கின் தரைமட்டம் 5,000′ உயரமிருக்கிறது. பிளவுப் பள்ளத்தாக்கில் சில இடங்களில் மிகவும் ஆழமாகப் பிளவு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில், மியாஸா, தாங்கனீகா தடாகங்களில் மிகவும் ஆழமான பாகங்கள் கடல் மட்டத்துக்கும் கீழிருக்கின்றன.

பிளவுப் பள்ளத்தாக்கின் கிழக்குப் பிரிவின் இரு பாகத்திலும் கென்யா மலைகளும் எல்கன் மலைகளும் அமைந்துள்ளன. இவை முற்காலத்தில் எரிமலைகளாக இருந்தவை. கென்யா மலைச் சிகரங்களில் வருடம் முழுவதும் பனி உறைந்து காணப்படும். பிளவுப் பள்ளத்தாக்குகளின் கிழக்கே பீடபூமி நீண்டு, கடற் கரைப் பகுதியை அணுகுந்தோறும் படிப்படியாக உயரம் குறை கிறது. கடற்கரையை அடுத்த சமநிலத்தின் அகலம் சுமார் 45 மைல் எனலாம். சில பாகங்களில், அதாவது, பாம்யாஸா நகருக்கு



கிழக்கு ஆப்ரிக்கா—
பிளவுப் பள்ளத்தாக்குப் பிரதேசம்.

படம் 8

வடக்கிலும், டாஸ் அலாம் நகருக்கு சமீபத்திலும் இது மிகவும் அகலமாயிருக்கிறது.

பிளவுப் பள்ளத்தாக்கின் இரு பக்கத்திலும் உள்ள பாறைகள் முற்காலத்தில் எரிமலைகளால் ஏற்பட்டவை எனக் கூறலாம். தற் சமயம் அங்கு எரிமலை ஏதுமில்லை. அந்தப் பாகத்தைத் தவிர மற்ற இடங்களில் பீடபூமியின் பாறைகள் பழங்காலப் படிகப் பாறை களாலானவை. இப் பிரதேசத்தில் தங்கம், செம்பு, தகரம், ஈயம், வைரங்கள், நிலக்கரி முதலிய உலோகப் பொருள்கள் அதிக அளவில் பூமிக்கடியில் இருப்பதாகக் கருதப்பட்டாலும், அவை இன்னும் பயன்படுத்தப்படவில்லை.

தடாகப் பீடபூமியிலும், பிளவுப் பள்ளத்தாக்குப் பிரதேசத் திலுமுள்ள பல பெரிய தடாகங்களையும், அவற்றின் அமைப்பை யும் சரியாகக் காணலாம். இங்குள்ள ஏரிகளில் முக்கியமான விக்டோரியா ஏரி, ஆல்பர்ட் ஏரி, எட்வர்ட் ஏரி, ருடால்ஃப் ஏரி, தாங்கனிகா ஏரி முதலியவற்றைக் கவனிக்கவேண்டியது அவசியம். தாங்கனிகா ஏரியின் நீர்மட்டம் 2,500′ ஆகிறது. இப் பிரதேசத் தில் பாயும் சிற்றாறுகள் படகுப் போக்குவரவுக்கு ஏற்றவை அல்ல. ஆனால், பெரிய தடாகங்களில் படகுப் போக்குவரவு நடைபெறு கிறது.

இயற்கை அமைப்பில் பெரிய வேறுபாடுகள் ஏற்படுவது போல இப்போது காலநிலையிலும் மழை அளவிலும் வேறுபாடு கள் காணப்படுகின்றன. இப் பிரதேசம் உஷ்ண மண்டலத்திலிருப் பதால், அதன் ஒவ்வொரு பாகத்திலும் சூரியன் வருடத்தில் இரண்டு தடவை நேர் உச்சியில் வருகிறது. சூரிய வெப்பம் அதிக மாயிருக்கும்போதெல்லாம் நல்ல மழையும் பெய்கிறது.

பீடபூமிப் பகுதியில் கோடைக்காலத்தில் 3″-க்குமேல் 40″ வரை மழை பெய்கிறது. இப் பகுதியைப் பொதுவாகப் புல் தரைப் பிரதேசம் என்று கூறினாலும், சில வருடங்களில் மழை குறைந்துபோவதால், இங்கு மிகக் குள்ளமான மரங்களும் முட் செடிகளும் காணப்படுகின்றன. மண் வளமுள்ளதாயிருந்தாலும் தண்ணீர் சுலபமாகக் கிடைக்காததால், இந்தப் பகுதியில் ஜன நெருக்கம் அதிகமில்லை. ஏரிகளை அடுத்த பிரதேசங்களில், முக்கிய மாக விக்டோரியா ஏரியை அடுத்த பிரதேசங்களில் ஜனநெருக்கம் அதிகம். பீடபூமியிலுள்ள உகாண்டா பிரதேசத்தில் சற்றே அபிவிருத்தி காணப்படுகிறது.

கடற்கரையை அடுத்த சமநிலப் பிரதேசத்தில் பொதுவாக 4″-க்குமேல் வருட மழை பெய்கிறது.

இப் பகுதியிலுள்ள மலிண்டி துறைமுகம் சமீபத்தில், 1498ஆம் வருடம் வாஸ்கோடகாமா வந்திறங்குமுன்பே, இப் பிரதேசத்தில் அரேபிய வியாபாரிகள் குடியேறியிருந்தனர். அரேபியர்கள் உள்நாட்டில் அதிகம் சென்று குடியேறவில்லை. உள்நாட்டில் சென்று தந்தம் சேகரிப்பதற்கோ, நீக்ரோக்களைப் பிடித்து அடிமைகளாக விற்பதற்காகவோ மட்டுமே சென்றனர். போர்த்துகீஸியர் 18ஆம் நூற்றாண்டில்தான் இங்கு வந்து குடியேறினர். உள்நாட்டில் முதன்முதல் சென்று குடியேறியவர்கள் கிறிஸ்துவப் பாதிரிகள். வேறு சிலரும், குறிப்பாக பர்டன், பிராங் முதலியோர் உள்நாட்டில் சென்று, ஆப்பிரிக்கர்களின் வாழ்க்கை முறையையும் நாட்டின் நிலவரத்தையும் அறிந்து வந்தனர். அவர்கள்தாம் 1857 முதல் 63 வரையுள்ள வருடங்களில் தாங்கனீகா ஏரியைக் கண்டறிந்ததோடு, நைல் நதியின் உற்பத்தி ஸ்தானத்தையும் கண்டறிந்தனர்.

1886ஆம் வருடத்தில், இங்கு பிரிட்டிஷாரும் ஜெர்மானியரும் ஆதிக்கம் செலுத்தினர். பிரிட்டிஷார் கென்யா, உகாண்டா நாடுகளிலும், ஜெர்மானியர் அதன் தெற்கே தாங்கனீகாவிலும் தங்களது ஆட்சியை நிலைநாட்டினர். சிறிது காலத்துக்குப்பின் ஜான்ஸிபார், கெம்பா தீவுகள் பிரிட்டிஷ் பாதுகாப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. உகாண்டா நாட்டில் மலைகளும் பீடபூமிகளும் உள்ளதாலும், ஸவானு புல்தரைப் பிரதேசத்தில் சிங்கம் போன்ற காட்டு மிருகங்கள் அதிகமாக வசிப்பதாலும் பம்பாஸா, விக்டோரியா தடாகத்தின் கரையிலுள்ள கிஸமு பட்டணம்வரை ஒரு ரயில்பாதை போடப்பட்டது. இதை 1901-ல் கட்டி முடிக்க இந்தியத் தொழிலாளர்களே பெரிதும் உதவினர். 1918-ல் முடிந்த உலக மகாயுத்தத்துக்குப்பின், தாங்கனீகா நாட்டை ஜெர்மனியிடமிருந்து பறித்து, பிரிட்டிஷாரிடம் பாதுகாப்பு நாடாக ஒப்படைத்தனர்.

ருவாண்டா—உருண்டி

இவ்விரு நாடுகளும் 1962ஆம் ஆண்டில் சுதந்திரமடைந்தன. அதற்குமுன் 40 வருடமாக இங்கு பெல்ஜியம் நாட்டவர் ஆட்சி செலுத்தினர். இதன் விஸ்தீரணம் 10,000 சதுரமைல்; ஜனத்தொகை 26 இலட்சம். இது ஒரு குடியரசு நாடு. இந் நாடு கீவு ஏரிக்குக் கிழக்கிலிருக்கிறது. உருண்டி இராச்சியம் 11,000 சதுர மைலுள்ளது; ஜனத்தொகை 22 இலட்சம். இந் நாடு தாங்கனீகா ஏரிக்கு வடக்கிலும் வடகிழக்கிலும் இருக்கிறது. இந் நாடுகளில் கோடைக்காலத்தில் நல்ல மழை பெய்கிறது. அதனால் ஜனத்தொகை சதுர மைலுக்கு 200-க்கும்மேல் காணப்படுகிறது.

இங்கு விளையும் பொருள்களில் முக்கியமானவை சோளம், மர வள்ளிக் கிழங்கு, அவரை, மொச்சை வகைகள் என்பன. ஆடு மாடுகள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. பெல்ஜிய நாட்டவர் இங்குப் பருத்தி, காப்பி, கொய்னு என்பன பயிர் செய்ய ஊக்கமளித்தனர். சிறிதளவு தகரம் இங்கு வெட்டியெடுக்கப் படுகிறது.

ருவாண்டா குடியரசின் தலைநகரம் கிகாலி (Kigeli). ஜனத் தொகை 7 ஆயிரம். உருண்டி நாட்டின் தலைநகரம் உசும்புரா (Usumbura); ஜனத்தொகை 80 ஆயிரம்.

உகாண்டா

உகாண்டா இராச்சியம் 1962-ல் சுதந்திரமடைந்தது. அதோடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும் (Commonwealth) ஓர் அங்கமாயிருக்கிறது. இதன் விஸ்தீரணம் சுமார் ஓர் இலட்சம் சதுரமைல்; ஜனத்தொகை 67 இலட்சம். அதில் 70,000 பேர் இந்தியர்கள். சுமார் 1,000 ஐரோப்பியர்களும் இங்கு வசிக்கின் றனர். ஆப்பிரிக்கர்கள் பொதுவாக நீக்ரோ இனத்தவர். அதில் பாதிக்குமேல் பாண்டு இனத்தைச் சார்ந்தவர். உகாண்டா, விக்டோரியா தடாகத்துக்கு வடக்கிலும் வடமேற்கிலும் நிலை பெறுகிறது. உகாண்டாவுக்குக் கிழக்கில் கென்யா இராச்சியமும், வடக்கில் சூடான் பிரதேசமும், மேற்கில் காங்கோலியக் குடியரசும் அமைந்திருக்கின்றன.

உகாண்டாவின் வடபாகம் வறட்சியானது. அங்கு ஆடுகள் மேய்வதற்குப் போதுமான புல் தரைகளும் குற்றுச் செடிகளுமே காணப்படுகின்றன. மேற்கில் ருவன் ஸோரி மலைகள் காணப்படு கின்றன. அம் மலைகளின் உச்சியில் பனிக்கட்டி உறைந்திருப் பதைக் காணலாம். இம் மலைத்தொடரைச் சந்திரனின் மலைகள் என்றுகூடக் குறிப்பிடுகிறார்கள். பொதுவாக, இப் பிரதேசம் ஸவானு புல் தரைகளாலான பீடபூமிப் பிரதேசமாகும். ஆங் காங்கு வனங்களும் சில இடங்களில் ஆழமான பள்ளத்தாக்கு களும் காணப்படுகின்றன.

இந் நாட்டில் 4 மாகாணங்கள் உள்ளன. கிழக்கு மாகா ணத்தில்தான் ஜனத்தொகை அதிகம். இங்குச் சதுர மைலுக்கு 130 பேர் வசிக்கிறார்கள். உகாண்டா மாகாணத்தில்தான் அதிக முன்னேற்றம் காணப்படுகிறது. இங்குள்ள முக்கியப் பட்டணங்கள் கம்பாலா (Kampala), என்டபே (Entepa). மேற்கு மாகாணத்தில் உலோகப் பொருள்கள் அதிகமிருப் பதாகக் கருதப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் காலநிலை அதிக

வறட்சியாக இருப்பதாலும், போக்குவரவு அபிவிருத்தி அடையாததாலும் மாடு மேய்க்கும் சில இனத்தவர் மட்டுமே அங்கு வசிக்கின்றனர்.

உகாண்டா பிரதேசம் முழுவதும் உயர்ந்த பீடபூமி ஆதலாலும், அதன் சராசரி உயரம் 3000′-க்கு மேலிருப்பதாலும் இங்கு வருடம் முழுவதும் வெப்பம் அதிகமாகத் தோன்றவில்லை. இந் நாட்டின் தெற்கில் விக்டோரியா தடாகம் இருப்பதால், வெப்பம் குறைய ஏதுவாகிறது. என்டபே நகரில் சராசரி மாதவாரி வெப்பநிலை 70° F என்று சொல்லலாம். வருடத்தில் ஒவ்வொரு மாதமும் இந் நாட்டில் மழை பெய்கிறது. மார்ச்சு, ஏப்ரல் மாதங்களிலும் செப்டம்பர், அக்டோபர் மாதங்களிலும் சூரியன் பூமத்தியரேகையைக் கடந்து வடக்கிலும் கிழக்கிலும் செல்லும் போது, மழை சற்று அதிகமாகப் பெய்கிறது. நாட்டின் தெற்கில் வருட மழை 80″; வடக்கில் சற்றுக் குறைவு. அங்கு வருட மழை 40″.

உகாண்டா குடியரசின் ஜனங்களின் முக்கியத் தொழில் விவசாயமும் ஆடு வளர்த்தலும். இங்கு விளையும் முக்கியப் பொருள்கள் நிலக்கடலை, சோளம், வாழை. இப் பிரதேசத்திலும், ஆப்பிரிக்க உஷ்ண மண்டலப் பிரதேசங்களின் இதர பாகங்களைப்போல மாடுகட்குப் பலவித நோய்கள் ஏற்படுவதுண்டு. ஸெட்ஸ் ஈயின் தொல்லை இங்கு மிக அதிகம். ஆனால், தற்காலத்தில் புதிய மருத்துவ வசதிகளால் நோய்களைக் கட்டுப்படுத்துவதோடு, மாடுகளையும் வெளியில் அதிக தூரம் சென்று மேய விடுவதில்லை. இங்குப் பெரிய தடாகங்களில் சமீபத்தில் வசிக்கும் ஆப்பிரிக்க மக்கள் மீன்பிடித்தலையும் ஒரு முக்கியத் தொழிலாக நடத்துகின்றனர்; சிறிதளவு மீன் ஏற்றுமதியும் செய்கின்றனர்.

உகாண்டாவில் பருத்தியும் காப்பிக் கொட்டையும் அதிக அளவில் பயிரிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு விளையும் பருத்தி நல்ல தரமானது என்று கருதப்படுகிறது. இது தேசத்தின் தெற்கிலும் கிழக்கிலுமே அதிகம் பயிராகிறது. பருத்திச் செடி அறுவடைசெய்யும் காலத்தில் இங்குள்ள தொழிலாளர்களைத் தவிர அண்டை நாடுகளான சூடான், காங்கோலியப் பிரதேசங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கில் வேலையாட்கள் இங்கு வந்து அறுவடையிலும், பஞ்சு எடுக்கும் ஆலைகளிலும் வேலைசெய்வதுண்டு.

காப்பிச் செடி முக்கியமாக எல்கன் மலைப் பிரதேசத்தின் மலைச்சரிவுகளில் பயிராகிறது. சோளமும் புகையிலையும் உகாண்டா மாகாணத்தில் அதிகம் பயிர் செய்யப்பட்டு ஏற்று

மதியாகின்றன. மேற்கு மாகாணத்தின் ருவன் ஸோரி மலைச்சரிவு களில் தேயிலைத் தோட்டங்கள் அதிகம் காணப்படுகின்றன. விக்டோரியா தடாகத்தை அடுத்துள்ள சமநிலங்களில் இந்தி யருக்குச் சொந்தமான அநேக கரும்புத் தோட்டங்கள் உண்டு.

உலோகச் செல்வம்

இங்கு உலோகச் செல்வம் அதிகம். ருவன் ஸோரி மலைப் பகுதியில், செம்பு, கோபால்ட், யுரேனியம் முதலிய உலோகங் கள் அதிகம் வெட்டியெடுக்கப்படுகின்றன. கம்பாலா பட்டணத் திலிருந்து மேற்கே செல்லும் ரெயில் பாதை, இங்குச் சுரங்கத் தொழில் அபிவிருத்தி அடையப் பெரிதும் உதவியாயிருக்கிறது. நாட்டின் கிழக்கு மாகாணத்தில் இரும்பும் பாஸ்பேட்டும் வெட்டி யெடுக்கப்படுகின்றன.

உகாண்டாவில் சமீப காலம்வரையில், சீனி தயாரிப்பதும் பருத்தியிலிருந்து கொட்டையைப் பிரிப்பதும் தவிர வேறு முக்கிய மான தொழில் எதுவுமில்லை. நிலக்கரி கிடைப்பது அரிதாகையால், ரெயில் இன்ஜின்கள்கூடப் பெட்ரோல் எண்ணெயில்தான் ஓட்டப் படுகின்றன. தற்காலத்தில் ஓவன் நீர்வீழ்ச்சியில் (Owun falls) அணைகள் கட்டப்பட்டு, அதிலிருந்து மின்சக்தி எடுக்கப்படுகிறது. இந்த மின்சக்தியின் உதவியால் பருத்தி ஆலைகளும் சிமெண்டு ஆலைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ருவன் ஸோரி மலைக்கு சமீபத் திலுள்ள செம்பு வெட்டியெடுக்கப்படும் சுரங்கங்களிலும், கிழக்கு மாகாணத்தின் இரும்பு, பாஸ்பேட் சுரங்கங்களிலும் மின்சக்தி பயன்படுத்தப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி கென்யா நாட்டிலும் பயன்படுத்தப்படுகிறது.

உகாண்டா நாட்டின் பழைய தலைநகரமான என்டபே, விக் டோரியா ஏரியின் கரையில் அமைந்திருக்கிறது. இங்கிலாந்தி லிருந்து கிழக்கு ஆப்பிரிக்காவுக்கும் தென்னுப்பிரிக்காவுக்கும் செல்லும் விமானங்கள் தங்கிச் செல்ல இங்கு ஒரு விமானத் தாவளம் உண்டு. இங்கு உஷ்ண மண்டலத்தில் ஏற்படும் வியா திகளை ஆராய்ச்சி செய்ய ஒரு மருத்துவ ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ளது.

இந் நாட்டின் தலைநகரம் கம்பாலா; ஜனத்தொகை 60,000. இது ஒரு முக்கிய வியாபார ஸ்தலமும் ஆகும். இங்கு இந்தியர்கள் 20,000 பேர் வசிக்கின்றனர். இதன் அருகில்தான் கிழக்கு ஆப் பிரிக்காவின் முக்கிய சர்வகலாசாலை அமைந்துள்ளது. இதைச் சுற்றியுள்ள பகுதியில்தான் அதிகம் பருத்தி, காப்பி, சீனி என்பன உற்பத்தியாகின்றன.

ஜிஞ்சா (Jinja) பட்டணம் இங்குள்ள ஒரு முக்கிய ஆலைத் தொழில் கேந்திரமாகும். இங்குப் பருத்தி நூற்பும் நெசவு ஆலைகளும் முக்கியமானவை.

உகாண்டாவில் வியாபாரப் பொருள்கள் எல்லாம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவது கென்யா, உகாண்டா ரெயில் பாதைகள்மூலமாகவும், மம்பாஸா துறைமுகம் மூலமாகவும்தாம். கம்பாலா, ஜிஞ்சா நகரங்களிலிருந்து நாட்டின் பல பாகங்களுக்கும் பாதைகள் செல்கின்றன. விக்டோரியா ஏரியின் பல பாகங்களிலும் படகுப் போக்குவரவு நடைபெறுகிறது. உகாண்டாவில் முக்கிய ஏற்றுமதிப் பொருள்கள் பருத்தி, காப்பி என்பன. இதர ஏற்றுமதிப் பொருள்கள் பருத்திக் கொட்டை, தேயிலை, சோளம், உலோகப் பொருள்கள், தோல் என்பன.

இங்கு இறக்குமதியாகும் முக்கியப் பொருள்கள் துணிவகைகள், இயந்திரங்கள், மோட்டார்கள், லாரிகள், சணல், சாக்கு என்பன. உகாண்டாவின் வியாபாரம் பெரும்பாலும் இங்கிலாந்து, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, , இந்தியா ஆகிய நாடுகளுடன் நடைபெறுகிறது.

கென்யா

கென்யா இராச்சியம் 1963-ல் சுதந்திரமடைந்தது; பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் ஓர் அங்கமாயிருக்கிறது. 2¼ இலட்சம் சதுர மைல் விஸ்திரணம்கொண்ட இந் நாட்டின் ஜனத்தொகை 85 இலட்சம். இதில் இந்தியர்கள் 2 இலட்சம் பேரும், ஐரோப்பியர்கள் 60,000 பேரும், அரேபியர் 40,000 பேருமாவர்.

கென்யா நாட்டின் வடக்குப் பாகம் அதிக வறட்சியானதால் அங்கு ஜனநெருக்கம் அதிகமில்லை. பெரும்பாலும் ஜனங்கள் தென்பாகத்திலேயே கடற்கரைப் பிரதேசத்திலோ, உயர்ந்த பீடபூமியிலோ வசிக்கின்றனர். கடற்கரைப் பகுதியில் உஷ்ணம் அதிகமாயிருப்பதால், தென்பாகத்தில் வருட மழை 40-50″ வரை பெய்கிறது. ஏப்ரல், மே மாதங்களில் மழை அதிகம். கடற்கரையை அடுத்த சமநிலப் பிரதேசத்துக்கும் உள் நாட்டிலுள்ள பீடபூமிப் பிரதேசத்துக்கும் இடையிலுள்ள சிறு குன்றுப் பிரதேசங்களில் மழை அதிகம் இல்லை. இங்கு வருட மழை 20″-க்கும் குறைவாகவே இருக்கிறது. கென்யா பீடபூமியிலும், அதற்குமேல், அதாவது, 5,000′ உயரத்துக்கும் மேல் உள்ள பீடபூமிகளிலும் கால நிலை வெகு நன்றாக அமைந்திருக்கிறது. கென்யா மலைகளின் உயரம் 17,000′.

கென்யா மலைகளுக்கு மேற்கில்தான் ஆப்பிரிக்காவிலுள்ள மிகப் பெரிய பிளவுப் பள்ளத்தாக்கு இருக்கிறது. இந்தப் பிளவுப் பள்ளத்தாக்குக்கு வடக்கே செங்கடல் பகுதியிலிருந்து, அபிஸினியா மலைகள்வழியாகக் கென்யா, தாங்கனீகா இராச்சியங்களூடே தெற்கில் மியாஸா ஏரிவரை செல்கிறது. இதன் ஒரு மேற்குக் கிளை மியாஸா ஏரியிலிருந்து தாங்கனீகா, எட்வர்ட் ஏரிகள் வழியாக ஆல்பர்ட் ஏரி வரை செல்கிறது. இந்தப் பிளவுப் பள்ளத்தாக்கில் உள்ள தடாகங்கள் அகலம் குறைந்தவையாகவும், நீளம் அதிகமானவையாகவும், வெகு ஆழமுள்ளவையாகவுமிருக்கின்றன. தாங்கனீகா ஏரி சில இடங்களில் 4,000′ வரை ஆழமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. விக்டோரியா ஏரி இந்தப் பிளவுப் பள்ளத்தாக்கில் இல்லை. பிளவுப் பள்ளத்தாக்கின் இரு பிரிவுகளுக்கும் மத்தியில் அமைந்துள்ள இந்தத் தடாகம் அதிக ஆழமில்லை.

கென்யா பீடபூமியிலும், பிளவுப் பள்ளத்தாக்குப் பகுதியிலும் அதிக உயரத்தின் காரணமாக வெப்பம் குறைவாக இருக்கிறது. அங்கு வருட மழை சராசரி 40″.

கென்யாவின் ஜனத்தொகை 85 இலட்சம் என்பதை முன்பே குறிப்பிட்டோம். அங்கு ஆப்பிரிக்கர்களோடு இந்தியரும், அரேபியரும், ஐரோப்பியரும் சேர்ந்து வாழ்கின்றனர். அரேபியர் பொதுவாகக் கடற்கரையை அடுத்த பகுதிகளில் வாழ்கின்றனர். ஐரோப்பியர்களிலும், இந்தியர்களிலும், பாதிப் பேர் நைரோபியைச் சுற்றியுள்ள பீடபூமியில் வாழ்கின்றனர். முன் காலத்தில் இங்கு ரெயில்பாதை அமைக்க வந்த இந்தியர்களின் சந்ததிகளான இவர்கள், இக் காலத்தில் பெரும்பாலும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ஐரோப்பியர்களில் அதிகம் பேர் பீடபூமிப் பகுதியில் பயிர்த் தொழிலிலும், ஆடு வளர்த்தலிலும் ஈடுபட்டுள்ளனர். நல்ல தரமான நிலங்கள் எல்லாம் ஐரோப்பியர் கைவசம் இருப்பது பற்றி ஆப்பிரிக்க மக்களிடையே சில சமயம் குமுறல் ஏற்படுவதுண்டு.

இயற்கைப் பிரதேசம்

கென்யா நாட்டை 5 விதமான இயற்கைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம்:

1. வறட்சியான வடக்கு பாகம்
2. கடற்கரையடுத்த சமநிலப் பகுதி
3. பீடபூமியின் சரிவு பாகம்

4. கென்யா மலைப்பிரதேசம்

5. விக்டோரியா தடாகப் பீடபூமிப் பிரதேசம்.

தேசத்தின் முக்கால் பாகமும் வடக்கிலுள்ள வறண்ட பாகமாகும். இப் பிரதேசத்தில் நீர் கிடைப்பதரிது. இங்கு ஆங்காங்கே ஆப்பிரிக்கர்கள் மாடுகள் மேய்த்துத் தொழில் நடத்துகின்றனர். பொதுவாக இங்கு ஜனவாசம் மிகக் குறைவு.

கென்யாவின் கடற்கரைப் பிரதேசங்கள் பத்துப் பதினைந்து மைல் அகலமுள்ளவை; மம்பாஸா துறைமுகத்துக்கு வடக்கில் 50 மைல்வரையிலும், தெற்கில் 50 மைல்வரையிலும் வியாபித்துள்ளன. இங்கு வருட மழை 40"-க்கும் அதிகம். கடற்கரையை அடுத்த பகுதியில் சதுப்பு நிலங்கள் காணப்பட்டாலும், தென்னை அதிகம் வளர்க்கப்பட்டு, தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உள்நாட்டில் ஆப்பிரிக்கர்கள் நெல்லும், கரும்பும், சோளமும் பயிர் செய்கின்றனர். கற்றாழையும் அதிகம் பயிர்செய்யப்பட்டு, கற்றாழை நார் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கற்றாழை நாரிலிருந்து கயிறு, பாய், சாக்கு என்பன தயாரிக்கின்றனர்.

கடற்கரையை அடுத்துள்ள ஒரு தீவின் கிழக்கு பாகத்தில் மம்பாஸா துறைமுகம் இருக்கிறது. இதன் ஜனத்தொகை 2 இலட்சம். அதில் இந்தியர்களும் அரேபியரும் ½ இலட்சத்துக்கு மேலிருக்கின்றனர்; ஐரோப்பியர் 2,000 பேர்; ஆப்பிரிக்கர்கள் 1 இலட்சம் பேர்; இது ஒரு பழைய அரேபியத் துறைமுகம். தீவின் தென்கிழக்கு பாகத்திலுள்ள கிளிந்தினி (Kilindini) துறைமுகத்தில் மிகப் பெரிய கப்பல்கள் வந்து தங்க வசதியுண்டு. கென்யா, உகாண்டா இராச்சியங்களுக்கும் இதுவே முக்கியத் துறைமுகம். இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானவை காப்பி, கற்றாழை நார், தோல் என்பன. மம்பாஸாவுக்கு அருகில் தேங்காயெண்ணெய் ஆலைகள் காணப்படுகின்றன.

பீடபூமியின் சரிவுப் பிரதேசம்

கடற்கரை சமநிலத்திலிருந்து பீடபூமிக்குச் செல்லும் சரிவுப் பிரதேசத்தில் வருட மழை 10"-க்கும் குறைவாக உள்ளது. இப் பிரதேசம் புல் தரையாகவும், முட்செடிகள் நிறைந்தனவாகவுமுள்ளது; வறட்சியானதால் மாடு வளர்த்தலுக்கு ஏற்றதன்று. ஆனாலும் கின்னுயி, மஸாய் முதலிய இனத்தைச் சார்ந்த ஆப்பிரிக்கர்கள் மாடு வளர்த்தலைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இங்குச் ஸெட்ஸ் ஈயின் தொல்லை அதிகமாகையால் அதற்கு வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இங்குக் காட்டு

மிருகங்களை அழியாமல் பாதுகாக்க அநேகப் பாதுகாப்பு நிலையங்கள் உள்ளன. இப் பிரதேசங்களில் சிங்கம், ஒட்டகைச்சிவிங்கி, யானை, மான் என்பவை ஏராளமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

கென்யா மலைப்பிரதேசம்

இப் பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 5,000′-க்குமேல் 30,000′ வரை வியாபித்துள்ளது. இது கென்யாவில் மிக முக்கியமான பிரதேசமாகும். இதன் வழியாகப் பிளவுப் பள்ளத்தாக்குச் செல்கிறது. இதன் அகலம் 40 மைல் இருக்கும். பீடபூமிப் பிரதேசம் பெரும்பாகமும் வனப்பிரதேசமாகையால், ஸிடார் மரத்தடிகளை வெட்டிப் பென்சில் செய்ய உபயோகிக்கின்றனர். காடுகளில்லாத புல்தரைப் பிரதேசங்களில் பயிர்த்தொழில் நடைபெறுகிறது. இங்கு விளைபவை கோதுமை, தினை, மொச்சை வகைகள், நிலக்கடலை, கரும்பு என்பன.

முன் காலத்தில் இப் பிரதேசத்தில் 70 இலட்சம் ஏக்கர் நிலம் ஐரோப்பியர்கள் கைவசமிருந்தது. அவர்கள் அதில் கோதுமையும் பார்லியும் பயிர்செய்தனர். தற்காலத்தில் அங்கு ஆப்பிரிக்கர்களுக்கும் பயிர்த்தொழில் செய்ய வசதி ஏற்பட்டு வருகிறது. மழை அதிகமான இடங்களில் தேயிலை, காப்பி, சோளம் என்பன பயிர் செய்யப்படுகின்றன.

கென்யா நாட்டின் தலைநகரான நைரோபி இங்குதானிருக்கிறது. இங்கிருந்து மம்பாஸா துறைமுகத்துக்கு ரெயில் பாதை உண்டு. ஜனத்தொகை 3 இலட்சம். அதில் 20,000 ஐரோப்பியரும், ஓர் இலட்சம் இந்தியரும் ஆவர். இதர பட்டணங்களில் முக்கியமானவை நகரு (Nakaru). இங்கு ஐரோப்பியர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். லெடார்ட் நகரம் ஒரு தங்கச் சுரங்கக் கேந்திரம். இங்கிருந்து விக்டோரியா தடாகத்திலுள்ள கிஸுமு நகருக்கு ரெயில்பாதை உண்டு.

விக்டோரியா தடாகப் பீடபூமிப் பிரதேசம்

இப் பிரதேசத்தில் புல் தரைகள் அதிகம். காடுகளும் காணப்படுகின்றன. ஆங்காங்கு ஆப்பிரிக்கர்களின் கிராமங்களும் காணப்படுகின்றன. இங்கு விளையும் முக்கியப் பொருள்கள் தினை, சோளம், வாழை என்பன. சிறிது பருத்தியும் பயிர் செய்யப்பட்டு ஏற்றுமதியாகிறது. இங்குள்ள கரும்புத் தோட்டங்கள் இந்தியர் கைவசம் உள்ளன. விக்டோரியா ஏரியின் கரையிலுள்ள கிஸுமு ஏரியிலிருந்து மம்பாஸாவுக்கு ரெயில் பாதை செல்கிறது.

இங்கிருந்து தடாகத்தின் அக்கரையிலுள்ள என்டபே நகருக்குக் கப்பல் போக்குவரவு நடைபெறுகிறது.

கென்யா நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் முக்கியப் பொருள்கள் கற்றாழை நார், காப்பி, தேயிலை, தோல் பதனிட அவசியமான பொருள்கள் என்பன. இங்கு இறக்குமதியாகும் பொருள்கள் துணி, இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், சைக்கிள்கள், பெட்ரோல் எண்ணெய் என்பன. இறக்குமதிகளில் பாதிக்குமேல் இங்கிலாந்திலிருந்து வருகின்றன. ஏற்றுமதிகளில் பெரும்பாகமும் இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகட்குச் செல்கின்றன.

தாங்கனீகா

இந்த இராச்சியம் 1961-ல் சுதந்திரம் பெற்று, அதற்கு அடுத்த வருடம் குடியரசாயிற்று. இது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலும் ஓர் அங்கமாகும். சுமார் 3½ இலட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள இந் நாட்டில் 95 இலட்சம் ஆப்பிரிக்கர்களும், 1 இலட்சம் இந்தியர்களும், ¼ இலட்சம் ஐரோப்பியர்களும், ¼ இலட்சம் அரேபியரும் வசிக்கிறார்கள். இந்த இராச்சியம் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரைக்கும் பிளவுப் பள்ளத்தாக்குத் தடாகங்களான தாங்கனிகா, மியாஸா ஆகியவற்றுக்குமிடையில் நிலை கொள்கிறது. கடற்கரையை அடுத்த சமநிலப் பிரதேசம் மிகக் குறுகலானது. நாட்டின் பெரும்பாகமும் 3,000′-க்கும் மேற்பட்ட பீடபூமிப் பிரதேசம் என்றே சொல்லலாம்.

இந்த நாட்டுக்கும் கென்யா நாட்டுக்குமுள்ள எல்லையினருகில் கிலிமினியாரோ மலைகள் இருக்கின்றன. அவற்றின் உயரம் 19,320′. இதுதான் ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த மலைச்சிகரமாகும். நாட்டின் தெற்கில் பீடபூமி சற்றே உயரம் குறைவானது.

இப் பாகத்தின் இயற்கைத் தாவரம் புல் தரைப் பிரதேசம் எனலாம். அவ் விடங்களில் வன விலங்குகள் அதிகமாகக் காணப்பட்டு ஒரு காலத்தில் வேட்டையாடுவோருக்குப் பெரிய விளையாட்டு மைதானமாக விளங்கிற்று. பள்ளத்தாக்குகளிலும் கடற்கரையடுத்த சம நிலங்களிலும் காடுகள் காணப்படுகின்றன.

தொழில்கள்

பீடபூமிப் பிரதேசத்திலுள்ள புல் தரைகளில் அதிக அளவில் ஆடு மாடுகள் மேய்த்து வருகின்றனர். சுமார் 70 இலட்சம்

மாடுகளும், 70 இலட்சம் வெள்ளாடு, செம்மறியாடுகளுமங்கு வளர்க்கப்படுகின்றன. சமீப காலம்வரையில் ஆப்பிரிக்கர்கள் தங்கள் மந்தைகளைப் பல இடங்களிலும் ஓட்டிச்சென்று மேய்த்து வருகின்றனர். ஆனால், தற்காலத்தில் நவீன முறையில் இத் தொழிலை நடத்துகின்றனர். ஆடு மாடுகளைப் பெரிய பண்ணையில் வளர்த்து இறைச்சி, தோல் என்பவற்றை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்கின்றனர். டார் எஸ் ஸலாம் நகரில் இறைச்சியைப் பக்குவப்படுத்தி வெளிநாடுகட்கனுப்பத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுவருகின்றன.

இங்குள்ள விளைபொருள்கள் அநேகமாக கென்யா நாட்டில் உள்ளவைபோலவே இருக்கின்றன. கடற்கரைப் பகுதியில் தென்னை, நெல், கரும்பு, பருத்தி என்பவை பயிர் செய்யப் படுகின்றன. தாழ்ந்த பீடபூமிப் பிரதேசத்திலிருந்து தோல், வெண்ணெய் என்பனவும், உயர்ந்த பீடபூமிப் பிரதேசத்தி லிருந்து காப்பியும் கற்றாழை நாரும், விக்டோரியா ஏரியை அடுத்த பகுதியில் காப்பி, பருத்தி, நெல், கரும்பு என்பனவும் பயிர் செய்யப்படுகின்றன. ஆப்பிரிக்கர்கள் பீடபூமிப் பகுதி யில் உணவுப் பொருளான சோளம், தினை, மொச்சை வகைகள் நிலக்கடலை என்பன பயிர் செய்கிறார்கள். விக்டோரியா ஏரியின் மூலாம்ஸா பகுதிக்குத் தெற்கில் வைரம் அதிகம் வெட்டி யெடுக்கப்படுகிறது. வைரம் விலைமதிப்புள்ளதாகையால் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆப்பிரிக்கர்களை வெகு ஜாக்கிரதை யாகக் கண்காணிப்பதோடு சுரங்கப் பகுதியிலேயே அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்து, அப் பிரதேசத்தைச் சுற்றி முள் வேலியிட்டுக் காக்கின்றனர். கள்ளக் கடத்தலைத் தவிர்க்கவே இம் முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தாங்கனீகாவின் பல பாகங்களிலும் இரும்பும், நிலக்கரியும் வெட்டியெடுக்கப்படுகின்றன. மைக்கா, ஈயம், தகரம் இவை யும் சிறிதளவில் வெட்டியெடுக்கப்படுகின்றன. இன்னும் பல உலோகங்களும் இங்குக் கிடைக்கலாம் என்று கருதப்படுகிறது. வடக்குத் தாங்கனீகாவில் இந்தியர்களால் நடத்தப்படும் இரும்பு, உருக்கு ஆலைகள் காணப்படுகின்றன.

ஆலைத் தொழில்களில் முக்கியமாக விளைபொருள்களைப் பயன்படுத்தும் தொழில்களே அதிகம் நடைபெறுகின்றன. பருத்தி, கற்றாழை நார், காப்பி, தேயிலை, புகையிலை, எண்ணெய் விதை என்பன தயார் செய்யும் தொழில்களே நடைபெறுகின்றன. மேலும், சிமென்ட் ஆலை, கண்ணாடி ஆலை, பெட்ரோல் சுத்தி கரிப்பு ஆலை என்பனவும் டார் எஸ் ஸலாம் நகரில் நடைபெறு

கின்றன. முவாம்ஸா நகரில் ஒரு பருத்தி ஆலேயும் நடைபெறுகிறது.

இந் நாட்டின் தலேநகரம் டாரஸ்ஸலாம் பட்டணம். இதன் ஜனத்தொகை 1½ இலட்சம். ஜனங்கள் பெரும்பாலும் ஆப்பிரிக்கர்கள். ஆனாலும் இந்தியர்களும் அநேகம் பேர் இங்கு வசிக்கின்றனர். முதலில் இங்கு அரேபியர்களே குடியேறினர். இது செம்படவர்களின் சிறு நகரமாக ஆரம்பிக்கப்பட்டு தற்காலத்தில் ஒரு நவநாகரிக நகராக விளங்குகிறது. இங்குத் துறைமுகம் வழியாக ஏற்றுமதியாகும் பொருள்கள் தேங்காய், பருத்தி, தோல் வகைகள் என்பன.

இங்குள்ள இதர பட்டணங்கள் டெபாரா (Tabora), அருஷா (Arusha), மோஷி (Moshi) என்பன. அருஷாவிலும், மோஷியிலும் ஐரோப்பியர்கள் அதிகம் வசிக்கின்றனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் கற்ருழை, தங்கா துறைமுகம் வழியாக வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது; தாங்கனிகா நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் கற்ருழை, நார், காப்பி, பருத்தி, முந்திரிப் பருப்பு, வைரம், தங்கம், தோல் வகைகள், மரத்தடி என்பன. ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பாகம் இங்கிலாந்துக்கே அனுப்பப்படுகிறது. இங்கிருந்து முந்திரிப் பருப்பு நம் நாட்டிலுள்ள கேரளத்துக்கு அனுப்பப்பட்டு, அங்குப் பக்குவப் படுத்தப்பட்டுத் தரம் பிரிக்கப்பட்டு, அமெரிக்கா முதலிய நாடுகட்கு அனுப்பப்படுகிறது. கடற்கரைப் பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கும் நெல்லும் அதிகம் பயிராகிறது. தாங்கனிகாவின் ஏற்றுமதியில் சால்பாகம் கற்ருழை நார். இப் பொருள் உலகிலேயே அதிகம் உற்பத்தி செய்யப்படுவது இங்குதான். கிலிமினியாரே மலேக்கும், கடற்கரைப் பிரதேசத்துக்குமிடையிலுள்ள தங்கா மாகாணத்தில் 3,000 ஏக்கருக்குமேல் அதிக விஸ்தீர்ணமுள்ள தோட்டங்களில் கற்ருழை பயிர் செய்யப்பட்டு, கற்ருழை நார் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கற்ருழை நார். சணல் நாரைவிட மிருதுவானது. இது பெரும்பாலும் இங்கிலாந்து அமெரிக்கா, கானடா நாடுகட்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது கயிறு பின்னவும், பாய் முடையவும் பயன்படுத்தப்படுகிறது.

காப்பியும், சிறிதளவு தேயிலேயும் ஐரோப்பியர்களால் தோட்டக் கிருஷியாகச் செய்யப்படுகின்றன. காப்பியும் பருத்தியும் ஆப்பிரிக்கர்களாலும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆப்பிரிக்கர்கள் கூட்டுறவு முறையில் தாங்கள் உற்பத்தி செய்யும் காப்பியை விற்கின்றனர். ஐரோப்பியர்கள் உற்பத்தி செய்யும் அளவைவிட இரு மடங்கு ஆப்பிரிக்கர்கள் உற்பத்தி செய்கிருர்கள். விக்டோ

ரியா ஏரியின் வடபாகத்தில் பருத்தி அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் உற்பத்தியிலும் ஆப்பிரிக்கர்கள் கூட்டுறவு முறையையே கையாண்டு, தங்கள் பருத்தியை, பருத்தி ஆலைகள் நடத்திவரும் இந்தியர்கட்கு விற்பனை செய்கின்றனர். பருத்தி ஏற்றுமதி இங்கு இந்தியர்களே செய்யும் முக்கியத் தொழிலாகும். இப் பிரதேசத்தில் வாழையையே ஆப்பிரிக்கர்கள் முக்கிய உணவாகப் பயன்படுத்துகின்றனர். சிறிது சோளமும் இங்குப் பயிரிடப்படுகிறது. பீடபூமிச் சரிவுகளிலேயே மாடுகளை அதிகம் வளர்க்கின்றனர். சமவெளிப் பகுதியில் ஸெட்ஸ் ஈயின் தொல்லை அதிகமாகையால், அங்கு மாடுகளை வளர்க்க வசதியில்லை. வெகு காலமாக ஆப்பிரிக்கர்கள் இப் பகுதியில் நிலக்கடலையைப் பயிர் செய்து உணவாகப் பயன்படுத்துகின்றனர். சமீப காலத்தில் ஐரோப்பியர்கள் அதிக அளவில் தோட்டக் கிருஷியாக இதைப் பயிர்செய்ய முயன்றது பலனளிக்கவில்லை.

உலோகச் செல்வம்

தாங்கனீகா நாட்டில் உலோகச் செல்வம் அதிகமிருக்கிறது. ஆனால், பெருமளவில் சுரங்கத் தொழில் செய்யப் போக்குவரவு மார்க்கங்கள் இன்னும் சரியாக அமையவில்லை. தங்கமும் வைரமும் மட்டுமே இப்போது அதிக அளவில் வெட்டியெடுக்கப்படுகின்றன. இவ்வுலோகங்கள் சிறிய எடையுள்ளவையானாலும் விலை மதிப்பானவையாகையால், இவற்றின் சுரங்கத் தொழில் முன்னேற்றமடைந்துள்ளது.

மியாஸா ஏரிக்கு வடக்கிலும், முவாம்ஸா (Mwamza) பகுதியிலும் தங்கம் வெட்டியெடுக்கப்படுகிறது.

இங்கு இறக்குமதியாகும் பொருள்களில் முக்கியமானவை இரும்பு, உருக்குப் பொருள்கள், துணி வகைகள், மோட்டார், பெட்ரோல், இயந்திரங்கள் என்பன. இவை பெரும்பாலும் இங்கிலாந்து, ஜப்பான், இந்தியா, மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன.

ஜான்ஸிபார், பெம்பா தீவுகள்

பூமத்தியரேகைக்குச் சற்றுத் தெற்கில் நிலைகொள்ளும் இத் தீவுகளுக்கும், ஆப்பிரிக்கக் கடற்கரைக்கும் 22 மைல் தூரமுண்டு. ஸான்ஸிபார் தீவின் விஸ்தீரணம் 640 சதுரமைல். பெம்பா தீவின் விஸ்தீரணம் 350 சதுர மைல். இத் தீவுகள் எத்தனையோ நூற்றுண்டுகளாகப் பல வியாபார மார்க்கங்கள் சந்திக்குமிடமாகவும்,

உலகிலேயே மிகப் பெரிய அடிமை வியாபாரக் கேந்திரமாகவு மிருந்தது.

1963ஆம் வருடத்தில் அது சுதந்திர நாடாயிற்று. அதன் ஜனத்தொகை 3¼ இலட்சம். ஜனங்கள் பெரும்பாலும் ஆப்பிரிக்கர்கள். ஆனாலும் அங்கு ½ இலட்சம் அரேபியரும், ¼ இலட்சம் இந்தியரும், 3,000 ஐரோப்பியரும் வாழ்கின்றனர். அரேபியரும் இந்தியரும் பெரும்பாலும் வியாபாரிகள். ஜனங்கள் பாதிக்குமேல் ஸான்ஸிபாரிலேயே இருக்கின்றனர். ஜனத்தொகை 58,000.

இந்த நாடு தீவுகளால் ஆனபடியால் இங்கு வெப்பம் அதிகமில்லை. வருடம் முழுவதும் நல்ல மழை பெய்வதால் அங்குப் பயிர்த் தொழில் அபிவிருத்தியடைந்துள்ளது. ஆரஞ்சு உட்பட அநேகப் பழ வகைகள் பயிர் செய்யப்படுகின்றன. இங்கு மிகவும் அதிகமாகப் பயிரிடப்படுவது தென்னையும் கிராம்பும். தேங்காயைவிடக் கிராம்பு வியாபாரத்தில்தான் பணச்செழிப்பு அதிகம்.

உலகில் உற்பத்தியாகும் கிராம்பில் பெரும்பாகமும் இங்கு உற்பத்தி ஆகிறது. இந்தக் கிருஷியை அரேபியர்களும் இந்தியர்களுமே தோட்டப் பயிராக நடத்துகின்றனர். சில ஆப்பிரிக்கர்களும் இதில் ஈடுபட்டுள்ளனர். மொத்தம் 80,000 ஏக்கர் நிலத்தில் இக் கிருஷி நடைபெறுகிறது. இதில் 85% பெம்பா தீவிலேயே நடைபெறுகிறது.

இக் கிருஷிக்கு மடகாஸ்கர் தீவிலிருந்து மட்டுமே சிறிது போட்டி உண்டு. இத் தீவில் 50 இலட்சம் தென்னை மரங்கள் உள்ளனவாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தேங்காய் சேகரித்தலும், தேங்காய் எண்ணெய் எடுத்தலும், கயிறு உற்பத்தியுமிங்கு நடைபெறுகின்றன. எண்ணெயிலிருந்து சோப் தயாரிக்கின்றனர். புகையிலை, நெல், கொக்கோ என்பனவும் ஆங்காங்குப் பயிர் செய்யப்படுகின்றன.

ஸான்ஸிபார் நகரின் ஜனத்தொகை 60,000. இங்கு நல்ல துறைமுகமிருப்பதால் கப்பல் போக்குவரவு நடைபெறுகிறது. முன் காலத்தில் கிழக்கு ஆப்பிரிக்காவில் இதுதான் மிகப் பெரிய நகரமாக விளங்கிற்று. ஆனால், தற்காலத்தில் பம்பாஸா, டாரஸ் ஸலாம் முதலிய பட்டணங்கள் ஏற்பட்டபின் இதன் முக்கியத்துவம் சற்றுக் குறைந்தது.

கிழக்கு ஆப்பிரிக்காவில் அநேகமாக எல்லோராலும் பேசப்பட்டு வரும் ஆப்பிரிக்க மொழியான ஸ்வாஹிலி (Swahili) மொழி இங்குதான் ஆரம்பமாயிற்று. இம் மொழி அடிப்படையில் மற்

ரூர் ஆப்பிரிக்க மொழியான பாண்டுவை ஒத்திருந்தாலும், இதில் அநேக அரபி வார்த்தைகளும், சிறிது பாரசீக, ஆங்கில, இந்துஸ்தானிய, போர்ச்சுகீசிய வார்த்தைகளும் சேர்ந்துள்ளன. கிழக்கு ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதியில் டர்பன் முதல் ஜிகோதிவரையிலும், தாங்கனீகா, கென்யா, தெற்கு உகாண்டா, கிழக்கு காங்கோலியா குடியரசு இங்கெல்லாம் இம் மொழி பேசப்படுகிறது.

வியாபாரம்

இங்கு இறக்குமதியாகும் பொருள்கள் அரிசி, சீனி, கோதுமை மாவு, நெல், புகையிலை, சாக்கு என்பன. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் மிகவும் முக்கியமானது கிராம்பு. கிராம்பு எண்ணெய், பிண்ணாக்கு, சோப்பு என்பனவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இறக்குமதியிலும் ஏற்றுமதியிலும் ½ பாகம் இங்கிலாந்தோடு நடைபெறுகிறது. இந்தியா, கென்யா, தாங்கனீகா முதலிய நாடுகளுடனும் வியாபாரம் நடைபெறுகிறது.

12. ஆப்பிரிக்காவின் கிழக்குக் கொம்புப் பிரதேசம்

இப்பிரதேசத்தில் இத்தியோப்பியா இராச்சியமும், ஸோமாலியாவும், பிரெஞ்சு ஸோமாலியன் பகுதியும் உட்படுகிறது. ஸோமாலியா என்பது, முன்னர் பிரிட்டிஷாராலும், இத்தாலியராலும் ஆளப்பட்டு வந்த பிரதேசம். மற்றப் பகுதிகளுடன் ஒப்பிடும்போது இதை ஒரு சிறிய பகுதி எனலாம். இயற்கை அமைப்பிலும், அதன் பல பாகங்களிலும் வேற்றுமை காணப்படுகிறது. பல காரணங்களால் இப் பிரதேசம் முன்னேற்றமடையவில்லை. இப் பகுதியில் வியாபாரமும் சிறிதளவே நடைபெறுகிறது.

பூமத்திய ரேகையிலிருந்து வடக்கே 15° வரையில் வியாபித்துள்ள இப் பீடபூமிப் பிரதேசத்தின் மத்தியில் கூடிப் பிளவுப் பள்ளத்தாக்குச் செல்கிறது. பிளவுப்பள்ளத்தாக்கின் இரு பக்கங்களிலும் பல யுகங்களிலும் எரிமலைச் சம்பவங்கள் ஏற்பட்டு அதனுல் சில இடங்களில் 10,000′-க்குமேல் உயரமான மலைச்சிகரங்கள் ஏற்பட்டன. ராஸ்-டேஷன் (Ras-dashan) என்னுமிடத்தில் 15,000′ உயரத்துக்கும் மேலுள்ள அந்த மலைச் சிகரத்தில் பனிக்கட்டி உறைந்திருப்பதைக் காணலாம்.

இத்தியோப்பியப் பீடபூமியில் அநேக நதிகள் காணப்படுகின்றன. முக்கியமாக மேற்கிலும் தெற்கிலும் இவை ஆழமான பள்ளத்தாக்குகளை ஏற்படுத்தியிருக்கின்றன. சில இடங்களில் பள்ளத்தாக்குகள் ஒரு மைல் ஆழங்கூட இருக்குமாம். இந் நதிகளில் கோடை காலத்தில் அதிக நீர் நிரம்புகிறது. இவற்றில் முக்கியமானது நீல நைல். இது சுமார் 6,000′ உயரத்திலுள்ள தானு தடாகத்தில் உற்பத்தியாகிறது. இத் தடாகத்தின் விஸ்தீர்ணம் 1,200 சதுர மைல்.

இப் பிரதேசம் பெரும்பாலும் பீடபூமியாக இருப்பதால் இங்கு உஷ்ணம் குறைவு. அடிஸப்பாபா பட்டணத்தில் மிகவும் அதிக உஷ்ணமான மாதத்தில் 60°-யும், மிகவும் அதிகக் குளிரான மாதத்தில் 59°யும் ஆக இருக்கிறது. இப் பட்டணம் கடல்மட்டத் துக்குமேல் 8,000′ உயரத்திலிருக்கிறது. கடற்கரையடுத்த பிரதேசங்களில் கடற்காற்றுக் காரணமாக உஷ்ணம் குறைவு. இப் பிரதேசத்தில் கோடைகாலத்தில் அதிக மழை பெய்கிறது. தென் மேற்கு பாகத்தில்தான் மழை அதிகம். அங்கு வருட மழை 80″. வடக்கிலும் தெற்கிலும் மழை குறைவு.

மிகவும் உயரமான பாகங்களில் மரங்கள் அதிகம் காணப் படுவதில்லை. புல்வெளிகளே காணப்படுகின்றன. பீடபூமியில் 12,000′ உயரத்துக்குமேல் இயற்கைத் தாவரமே காணப்படுவ தில்லை. இப் பிரதேசத்தில் சதுப்பு நிலங்களிலும், நதிகளிலும் நீர் யானை, காண்டா மிருகம் என்பன காணப்படுகின்றன. நீர் யானைகள் தான தடாகத்திலும் அதிகம் உண்டு. சிங்கமும், சிறுத்தையும், வரிக்குதிரையும், மானும் பீடபூமியின் கிழக்கில் காணப்படுகின்றன. ஆடு மாடுகள் எங்கும் காணப்படு கின்றன.

இத்தியோப்பியா

முன்பு அபிஸினியா என்று அறியப்பட்டு வந்த இத்தியோப் பியா இராச்சியம் பெரும்பாலும் 6,000′ உயரத்துக்கு மேலுள்ள ஒரு பீடபூமிப் பிரதேசமாகும். அதன் மத்தியில்கூடிப் பிளவுப் பள்ளத்தாக்குச் செல்வதால், அதில் அநேக தடாகங்கள் காணப் படுகின்றன. பிளவுப் பள்ளத்தாக்குக்கு வடக்கில் தான தடாகம் அமைந்துள்ளது. நதிகள் இங்கு வெகு ஆழமான பள்ளத்தாக்குகளை ஏற்படுத்தியிருப்பதால், அவை போக்குவரவுக்கு அதிகத் தடை யாக இருக்கின்றன.

இங்கு நல்ல மழை பெய்வதுண்டு. பிப்ரவரி முதல் மே மாதம் வரையில் அநேகமாகத் தினமும் மழை பெய்வதுண்டு. அதன் பின்னர் மிகவும் பலத்த மழை பெய்து சில சமயங்களில் பெரு வெள்ளத்தை உண்டாக்கிவிடுவதுண்டு. சாலைகளில் நட மாடுவதுகூடக் கஷ்டமாகிவிடும்.

இத்தியோப்பியாவில் ஜனத்தொகை சுமார் 2 கோடி. ஜனங்கள் ஹெமடிக் (Hamitic) இனத்தைச் சார்ந்தவர்கள். சிலர் முகம்மதியர்கள். ஆனால், பலர் கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த வர்கள். அரச குடும்பத்தினரும் கிறிஸ்துவ மதத்தினரே.

பீடபூமியில் சில இடங்களில் வனங்கள் காணப்பட்டாலும், வேறு சில இடங்களில் புல் தரைகளே காணப்படுகின்றன. நிலம் செழிப்பானதால் பயிர்த்தொழில் நன்கு நடைபெறுகிறது. தாழ் வான பகுதிகளில் தினையும் சோளமும், உயரமான பாகங்களில் கோதுமையும் பார்லியும் பயிர் செய்யப்படுகின்றன. ஆடு மாடுகள் வளர்க்கப்பட்டுத் தோல் அதிகமாக ஏற்றுமதி செய்யப்படு கிறது. இத்தியோப்பியாவின் மேற்கில் காப்பி. காட்டுச்செடியாக வளர்வுதாகச் சொல்லப்படுகிறது. ஹரார் (Harar) பட்டணத் தைச் சுற்றியுள்ள பகுதியில் காப்பி அதிகம் பயிர் செய்யப்பட்டு இத்தியோப்பியாவின் ஏற்றுமதியில் பாதிக்குமேல் பங்கு பெறுகிறது. இங்கு சாமான்கள் ஏற்றிச்செல்வது பெரும்பாகமும் ஒட்டகங்களின்மேல்தான்.

தற்காலத்தில் பயிர்த்தொழில் முன்னேற்றமடைய வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தலைநகரான அடிஸபா பாவுக்கு 40 மைல் தொலைவில் கரும்பு பயிர் செய்யப்பட்டு, சர்க்கரை ஆலைகளும் காணப்படுகின்றன. பருத்தி, புகையிலை, நெல், தேயிலை முதலியனவும் பயிர் செய்யப்படுகின்றன.

நாட்டின் தலைநகரான ஆடிஸபாபாவின் ஜனத்தொகை 4½ இலட்சம். இதைச் சுற்றியுள்ள குன்றுகளில் யூக்கலிப்டஸ் மரம் அதிகமாகக் காணப்படுகிறது. தலைநகரில் மட்டும்தான் நல்ல சாலைகளும் கட்டடங்களும், மின்சார வசதி களும் உள.

இங்கிருந்து ஒரு ரெயில்பாதை ஃபிரெஞ்சு ஸோமாலியன் நாட்டிலுள்ள ஜிபோதி (Gipodi) பட்டணத்துக்குச் செல்கிறது. இதன்.நீளம் 500 மைல். ஜிபோதி வழியாகத்தான் இந் நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி நடைபெறுகிறது.

ஹரார் (Harar) ஒரு பழங்காலப் பட்டணம். இங்கு முகம்மதி யர் அதிகமாக வசிக்கின்றனர். இங்கு காப்பிக் கிருஷி மிகவும் முக்கியம்.

எரிட்ரியா (Eritrea)

சூடான் நாட்டுக்கும், இத்தியோப்பியாவுக்கு மிடையிலுள்ள எரிட்ரியா முன்னர் இத்தாலியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. 1952அம் வருடம் இந் நாடு ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தப்படி இத்தியோப்பியாவுடன் சேர்க்கப்பட்டது. அதன்மூலம் இப் பகு திக்கு ஓரளவு சுதந்திரம் கிடைத்தது. இந்தத் தேசம் செங்கடலை யடுத்துப் பெரும்பாலும் சமவெளிப் பிரதேசமானாலும் வடக்கில்

10,000' உயரமான மலைகள் உண்டு. கடற்கரைப் பிரதேசத்தில் மழை குறைவு. மஸாவா (Massawa) என்னுமிடத்தில் வருட மழை 7". ஆனால், இங்குக் காணப்படும் முட்செடிகள், குத்துச் செடிகள் ஆடுகளுக்கு உணவாகப் பயன்படுகின்றன. அங்குள்ள 10 இலட்சம் ஜனங்களில் பெரும்பாலோர் நாடோடிகளாகவே மந்தைகளை ஓட்டிச் சென்று பிழைக்கின்றனர். அவர்களில் சிலர் முகம்மதிய மதத்தையும், சிலர் கிறிஸ்துவ மதத்தையும் சார்ந்தவர்கள்.

ஆடுமாடுகளின் தோல்தான் இங்கு முக்கிய வியாபாரப் பொருள். நீர்ப்பாசன வசதியால் சில இடங்களில் பருத்தி பயிர் செய்யப்படுகிறது. இதன் ஜனத்தொகை 27,000. இங்குள்ள முக்கியத் துறைமுகப் பட்டணம் மஸாவா. இதன் தெற்கில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதியாகிறது.

இப் பகுதியின் தலைநகரம் அஸ்மாரா பட்டணம், 8,000' உயரத்திலுள்ளது. அதன் ஜனத்தொகை $1\frac{1}{4}$ இலட்சம். அஸ்மாரா விலிருந்து மஸாவா துறைமுகத்துக்கு ரெயில்பாதை உண்டு.

ஃபிரெஞ்சு ஸோமாலிலாந்து

அரேபியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு உட்பட்ட ஏடன் பட்டணம்போல பிரெஞ்சு ஸோமாலிலாந்து ஏடனுக்கு எதிர்க் கரையில் இருந்துகொண்டு இக் கடற்கரைப் பகுதியைக் காவல் செய்கிறது. இங்கு விளைபொருள்கள் ஏதுமில்லை. இங்குள்ள முக்கியத் துறைமுகமான ஜிபோதி பட்டணத்தின் ஜனத்தொகை 41,000. அங்குப் பிரெஞ்சு நாட்டவரும் அதிகம் பேர் வசிக்கின்றனர். அங்கிருந்து ஒரு ரெயில்பாதை இத்தியோப்பியாவிலுள்ள அடிஸபாபா பட்டணத்துக்குச் செல்கிறது. இதன் நீளம் 500 மைல்.

ஸோமாலியா

முன்காலத்தில் பிரிட்டிஷ், இத்தாலிய ஆட்சிக்கு உட்பட்டிருந்த இந் நாடு, தற்சமயம் 1960 முதல் குடியரசாகத் திகழ்கிறது. ஜனங்கள் பெரும்பாலும் முகம்மதியர்; நடோடிகளாக மந்தைகளை ஓட்டிச்செல்பவர். இப் பிரதேசதில் மழை மிகக் குறைவு. பர்பரா என்னும் இடத்தில் வருடமழை $2\frac{1}{2}$"தான். ஆடுகள் மேய்ப்பதற்குப் போதுமான புல் தரைகள் அங்குக் காணப்படுகின்றன. ஆனால், நீர்ப்பாசனம் இல்லாமல் கிருஷி செய்வது கடினமாகும். இத்தி

யோப்பிய மலைகளில் பெய்யும் மழை சிற்ருறுகள்மூலம் இங்குக் கிடைக்கும்போது இங்குள்ள ஜனங்கள் சிறிது பருத்தியும், கரும்பும், நெல்லும், சோளமும், வாழையும் பயிர் செய்கின்றனர். மற்ற இடங்களில் ஸோமாலியர் நாடோடிகளாகத் திரிகின்றனர். இவர்களின் மொத்த ஜனத்தொகை 20 இலட்சம். ஆடுகளும், தோல், உப்பு முதலியவையும் இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. இப் பிரதேசத்தில் சற்றே காணப்படும் நிலக்கரி, உலோகம் என்பன இன்னும் பயன்படுத்தப்படவில்லை. இங்குள்ள முக்கியப் பட்டணம் பர்பரா. இதன் ஜனத்தொகை 30,000. ஆனுல், கோடை காலத்தில் மிகவும் உஷ்ணமாக இருப்பதால் ஜனங்களில் பாதிப் பேர் மலைவாசஸ்தலங்களுக்குப் போய்விடுவதுண்டு. இப் பிரதேசத்தின் தலைநகரமும், முக்கியத் துறைமுகப் பட்டினமும் மொகதிஷு (Mogadeshu). இதன் ஜனத்தொகை ஓர் இலட்சம். இங்கிருந்து சாலையும் ரெயில்பாதையும் உள்நாட்டுக்குச் செல்கின்றன.

13. இந்திய சமுத்திரத் தீவுகள்

மடகாஸ்கர் தீவு: மலகாஸி

மடகாஸ்கர் உலகிலுள்ள பெரிய தீவுகளில் ஒன்று. தெற்கு அட்சரேகை 12°க்கும் 20°க்கும் இடையில் அமைந்துள்ள இத் தீவின் நீளம் சுமார் 9,000 மைல். அது மிகவும் அகலமான இடத்தில் 360 மைல் அகலமுள்ளது. தீவின் மொத்த விஸ்தீரணம் சுமார் 2½ இலட்சம் சதுர மைல். இங்குள்ள ஜனத் தொகை 55 இலட்சம். அதில் ஓர் இலட்சத்துக்குமேல் ஃபிரெஞ்சு நாட்டவூர் வசிக்கின்றனர். அரேபியர்களும், இந்தியர்களும், சீனர்களும் சுமார் 20,000 பேர் அங்கு உண்டு. அங்கேயே சுதேசி களான மலகாஸி ஜனங்கள் ஆதியில் மலேயா, இந்தோனேஷியா முதலிய நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர். பின்னர் நீக்ரோ சாதியாருடன் கலப்பு மணங்கள் ஏற்பட்டன என்று தெரிகிறது. தீவின் மேற்கு பாகத்திலும், தெற்கு பாகத்திலும் சில ஆப்பிரிக்க இனத்தவர் வசிக்கின்றனர். வெகுகாலமாக பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்த இப் பிரதேசம் இப்போது பிரான்ஸுடன் தொடர்புள்ள குடியரசாகத் திகழ்கிறது. இத் தீவு ஆப்பிரிக்கா கண்டத்திலிருந்து 240 மைல் அகன்றிருந்தாலும் இது ஆப்பிரிக்கா கண்டத்தோடு மிகவும் தொடர்புள்ள நாடாகும்; ஆப்பிரிக்க பூகண்டத்துப் பீடபூமியின் ஒரு பாகம் என்றே இதைச் சொல்ல வேண்டும். கிழக்கு பாகத்தில் இங்குள்ள பீடபூமி உயரமாகவும், மேற்கு நோக்கிச் சரிந்தும் இருக்கின்றது.

மலகாஸித் தீவு தென்கிழக்குப் பருவக் காற்று வீசும் பிர தேசத்திலிருப்பதால், அதை மூன்றாகப் பிரிக்கலாம்:

1. கிழக்குக் கடற்கரைப் பிரதேசம்

இங்கு வருடம் முழுவதும் 100"க்கும் குறைவாக மழை பெய் கிறது. வருடம் முழுவதும் மழை பெய்கிறதென்றாலும், கோடை

காலத்தில் மழை வெகு அதிகம். இங்குள்ள மலைச் சரிவுகளில் அடர்ந்த காடுகளும், அதில் பெரிய ரப்பர் மரங்களும் காணப்படு கின்றன. அங்குக் காணப்படும் சமநிலப் பிரதேசங்களில் நெல்லும், கரும்பும் பயிர் செய்யப்படுகின்றன. மலைச்சரிவுகளில் காப்பித் தோட்டங்கள் காணப்படுகின்றன.

2. பீடபூமிப் பிரதேசம்

இங்குக் கோடைகாலத்தில் மழை அதிகம். குளிர்காலத்தில் மழை குறைவு. கடல் மட்டத்துக்கு 4,500′ உயரத்திலிருக்கும் அன்டனன் அரிவோ (Antanan-arivo) பட்டணத்தில் வருட மழை 56″. அதில் பெரும்பாகமும் டிசம்பர் முதல் மார்ச்வரையில் பெய் கிறது. இப் பிரதேசம் புல் தரைப் பிரதேசமானாலும் இங்குள்ள நிலம் வளமற்றதானகையால் இங்குக் கிருஷி அதிகமில்லை. மாடு வளர்த்தலே இங்குள்ள முக்கியத் தொழில்.

3. மேற்குக் கடற்கரைப் பிரதேசம்

இப் பிரதேசம் மழை நிழல் பிரதேசம் ஆனபடியால் (rain shadow region), இங்கு மழை குறைவு. தென்மேற்கில் மழை மிகக் குறைவு. அங்கு வருட மழை 20″க்கும் குறைவு. ஆங் காங்கே குற்றுச் செடிகள் மட்டும் காணப்படுகின்றன. பீடபூமி யிலிருந்து வரும் சிற்றாறுகளைப் பயன்படுத்திச் சில இடங்களில் பருத்தியும் கற்றாழையும் பயிர் செய்யப்படுகின்றன.

இத் தீவின் ஜனத்தொகை 50 இலட்சம். ஜனங்கள் பெரும் பாலும் மலகாஸியரே. பிரெஞ்சு தேசத்தவர் 50,000 பேர் இங்கு வசிக்கின்றனர். இந்தியரும், அரேபியரும், சீனரும் இங்கு உண்டு. உணவு விஷயத்தில் இத் தீவு தன்னிறைவு பெற்றுள்ளது. நெல்லும், மரவள்ளியும், துவரைவகைகளும், சர்க்கரைவள்ளியும் ஏராள மாகப் பயிரிடப்படுகின்றன. உலோகங்களில் சிறிதளவு தங்கமும், கிராஃபைட்டும் (graphite) ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இத் தீவின் தலைநகரமும், பெரிய பட்டணமுமான டனனரிவே (Tananarive) பீடபூமியின் மத்திய பாகத்தில் அமைந்துள்ளது. இதன் ஜனத்தொகை 2½ இலட்சம். இங்கிருந்து முக்கியத் துறைமுகமான டாமதாவேக்கு (Tamatarve) ஒரு ரெயில்பாதை செல்கிறது. டனனரிவே பட்டணத்திலிருந்து ஃபிரான்ஸ் நாட்டுக்கு ஆகாய விமானங்கள் சென்று வருகின்றன. மலகாஸியிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானவை நெல், காப்பி, கரும்பு, துணிவகைகள் என்பன. இறக்குமதியாகும் பொருள்கள்

இயந்திரங்கள், பெட்ரோல், லாகிரி வகைகள், மருந்துகள், நிலக்கரி, சிமெண்டு என்பன.

மொரிஷியஸ்

மலகாஸி தீவுக்குக் கிழக்கேயுள்ள இத் தீவில் ஆதியில் ஃபிரெஞ்சுக்காரர் குடியேறினர். பின்னர் 1810ஆம் வருடம் அது பிரிட்டிஷார் ஆட்சிக்கு மாறிற்று. இப்போதும் அங்கு ஃபிரெஞ்சு மொழியே பேசப்படுகிறது. அங்கு ஃபிரெஞ்சு சட்டமே அமலில் இருக்கிறது. அங்குள்ள ஐரோப்பியரும் ஃபிரெஞ்சு மக்களே. இத் தீவின் விஸ்தீரணம் 720 சதுரமைல்; இதன் ஜனத்தொகை சுமார் 7 இலட்சம் பேர். அங்குள்ள ஜனங்களில் மூன்றில் இரண்டு பாகத்தவர் இந்திய இனத்தைச் சார்ந்தவர். சுமார் ¼ இலட்சம் சீனர்களும் அங்கு வசிக்கின்றனர். இந்தத் தீவில் ஜனநெருக்கம் சதுர மைலுக்கு 1,000 பேர் என்று கூறலாம். அதில் பாதிப்பேர் பட்டணங்களிலேயே வசிக்கின்றனர். இந்தத் தீவு மகர ரேகையை அடுத்திருப்பதால், அங்குக் கோடைக் காலத்தில் நல்ல மழை பெய்கிறது. சில இடங்களில் வருட மழை 200"-க்கும் மேலிருக்கிறது.

சில சமயங்களில் சூறாவளிக் காற்றின்மூலம் பொருட்சேதம் ஏற்படுவதுண்டு. இத் தீவில் முக்கியமாகப் பயிராவது கரும்பு. பயிர்செய்யப்படும் நிலத்தில் ¾ பாகத்துக்குமேல் இது பயிர்செய்யப்பட்டு, ஏற்றுமதிப் பொருள்களில் சீனியே முக்கிய இடம் பெறுகிறது. ஏற்றுமதி முழுவதும் இங்கிலாந்துக்கே அனுப்பப்படுகிறது. சோளம், நெல், தேயிலே, புகையிலே என்பன சிறிதளவே பயிர்செய்யப்படுகின்றன. அங்குள்ள மக்களுக்கு அவசியமான உணவு வகைகள் பெரும்பாகமும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இத் தீவின் தலைநகரான போர்ட் லூயிஸ் (Fort Louis), தீவின் வடமேற்குக் கடற்கரையில் அமைந்திருக்கிறது. இதன் ஜனத்தொகை சுமார் ஓர் இலட்சம். இங்குள்ள துறைமுகம் வசதியாக அமைந்திருப்பதால், இத் தீவின் வியாபாரம் முழுவதும் இதன் வழியாக நடைபெறுகிறது.

இத் தீவில் இருந்துகொண்டே பிரிட்டிஷ் சர்க்கார், இதனே அடுத்துள்ள பல சிறிய தீவுகளை ஆட்சிசெய்துவருகிறது.

ஸீஷெல்ஸ் தீவுகள்

இதர தீவுகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது ஸீஷெல்ஸ் தீவுகள். 92 தீவுகள் கொண்ட இக் கூட்டத்தின் விஸ்

திரணம் 156 சதுரமைல். இதில் முக்கியமானது மாஹே (Mahde) தீவு. இதற்கு அடுத்தது பிராஸ்லின் தீவு. இதன் விஸ்திரணம் 20 சதுரமைல். இதன் மொத்த ஜனத்தொகை 42,000. ஜனங்கள் பெரும்பாலும், ஆப்பிரிக்கர்கள். ஆனாலும், இந்தியர்களும் வசிக்கின்றனர். பொதுவாக சோளம், கரும்பு, வாழை, மரவள்ளி முதலியவை பயிர்செய்யப்பட்டாலும், இங்கு மிகவும் முக்கியப் பயிர் தென்னையும், ஏலம், கிராம்புபோன்ற வாசனைப் பொருள்களுமாகும். பிராஸ்லின் தீவில் உள்ள தென்னை மரங்களில், ஓர் இளநீரில் இரு தேங்காய் இருக்குமாம். இவ்வித மரம் உலகில் வேறு எங்கும் இல்லை.

14. தெற்கு ஆப்பிரிக்க நாடுகள்

தெற்கு ஆப்பிரிக்க நாடுகள் என்ற பெரிய பொருளாதார மேகலையில் பல இராச்சியப் பிரிவுகள் உள்ளன. சுமார் 20 இலட்சம் சதுரமைல் விஸ்தீரணமும் 3 கோடி ஜனத்தொகையுமுள்ள இப் பிர தேசத்தில் 35 இலட்சம் வெள்ளையர்கள் வசிக்கின்றனர். இப் பிரதேசம் சுமார் 10° தெற்கு அட்சாம்சம்முதல் 35° தெற்கு அட்சாம்சம்வரை வியாபித்திருப்பதால், இங்கு காலநிலை வேறுபாடு கள் காணப்பட்டாலும், இயற்கை அமைப்பிலும் பொருளாதார விஷயங்களிலும் இங்குள்ள நாடுகளுக்கிடையில் ஒற்றுமை காணப் படுகிறது. இங்குள்ள மிகப் பெரிய இராச்சியப் பிரிவான தென் ஞப்பிரிக்கக் குடியரசு தவிர, போர்த்துகீஸியக் கிழக்கு ஆப்பிரிக் காவும், பிரிட்டிஷ் காமன்வெல்த்தைச் சார்ந்த வேறு சில நாடு களும் இம் மேகலையில் அடங்கியுள்ளன. ஆப்பிரிக்காவில் பொது வாக இரயில் பாதைகள் அதிகமில்லாவிட்டாலும், தென்ஞப் பிரிக்கக் குடியரசு நாட்டில் ரெயில் பாதைகள் அதிகம். தென் மேற்கு ஆப்பிரிக்காவோடும், ரொடீசிய நாடுகளோடும், இந்த ரெயில் பாதைகள் தொடர்பு கொண்டுள்ளன. நியாஸாலாந்து, டிரான்ஸ்வால், ரொடீசியா முதலிய பிரதேசங்கள் போர்த் துறைமுகமான லாரன்ஸோ மார்க்சஸ், பெய்ரா முதலிய பெரிய துறைமுகங்களைச் சார்ந்திருப்பதால், போர்த்துகீஸியக் கிழக்கு ஆப்பிரிக்கா இந்த மேகலையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும், ஆப்பிரிக்காவில் வேறு எங்கும் இல்லாத விதத்தில் இப் பிரதேசத் தில் உலோகப் பொருள்கள் சேகரித்தல் மிக முக்கியமானது.

இயற்கை அமைப்பு

போர்த்துகீஸியக் கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள சமநிலப் பிரதேசம் தவிர, தென்ஞப்பிரிக்காவின் மற்றப் பாகங்களை ஒரு பீடபூமி எனலாம். அப் பீடபூமியின் பாகங்கள் உயர்ந்து மலை

களாகக் காணப்படுகின்றன. இப் பிரதேசத்தில்தான் இங்காமி தடாகம், மக்கரிக்கரி உட்குழிந்த பிரதேசம் என்பன காணப்படுகின்றன. இங்குள்ள பீடபூமியின் சராசரி உயரம் 3000′-க்கும் மேல் எனக் கூறலாம். பீடபூமியின் மேற்குப் பாகத்தில் தென்னுப்பிரிக்காவில் சில இடங்களில் 6000′ வரை உயரம் காணப்படுகிறது. தென்கிழக்குப் பாகத்திலுள்ள டிரேகன்ஸ்பர்க் மலைகளில் சில மலைச்சிகரங்கள் 10,000′ வரை உயரமுள்ளது.

இப் பிரதேசத்தின் முக்கிய நதி ஜாம்பஸி. ஆனல், இதில் நீர்விழ்ச்சிகளும் துரிதப் போக்கும் காணப்படுவதாலும், அதன் தாழ்ந்த பாகங்களில் சில சமயம் வெள்ளம் ஏற்படுவதாலும், கோடையில் நீர் குறைவதாலும் இது போக்குவரவு மார்க்கமாக அதிகம் பயன்படுவதில்லை. இப் பிரதேசத்தின் கிழக்குப் பாகத்தில் காணும் இப்போப்போ நதியும் போக்குவரவுக்கு அதிகம் பயன்படுவதில்லை. ஆரஞ்சு நதி டிரேகன்ஸ்பர்க் மலைகளில் உற்பத்தியாகிறது. இதிலும் துரிதப் போக்குகளும் நீர்விழ்ச்சிகளும் அதிகமாகையால், இதுவும் போக்குவரவுக்குப் பயன்படுவதில்லை.

இம் மேகலையில் மியாஸா தடாகம் முக்கியமானது. பிளவுப் பள்ளத்தாக்கின் தென்கிழக்கில் அமைந்திருக்கும் இவ்வேரி சில இடங்களில் 700′ ஆழமிருக்கிறது. பங்வேலு தடாகம் 20′ ஆழங்கூட இல்லை. மேலும், அதைச் சுற்றிலும் சதுப்பு நிலங்கள் அதிகம். இங்காமி தடாகமும் அவ்விதமே சதுப்பு நிலமாகக் காட்சியளிக்கிறது.

காலநிலை

வடக்குதெற்காகச் சுமார் 1800 மைல் வியாபித்திருக்கும் இப் பிரதேசத்தின் காலநிலை ஆங்காங்கு மாறுபடுவது இயற்கை. பொதுவாக வடக்கே உஷ்ண மண்டலக் காலநிலையும், தெற்கே மிதமண்டலக் காலநிலையும் அநுபவப்படுகிறது. மிக உயரமான இடங்களைத் தவிர மற்ற இடங்களில் உஷ்ணம் அதிகமாகும். வெப்பநிலையைவிட மழை அளவும், அது பெய்யும் காலமுமே அங்குள்ள இயற்கைத் தாவரத்தைப் பாதிக்கிறது. மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் வெப்பம் பொதுவாகக் குறைவு. அங்கு பெக்ஸ்வலா என்ற குளிர் நீரோட்டம் ஓடுவதே காரணமாகும். கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தில் உஷ்ணமான மொஸாம்பிக் நீரோட்டம் ஓடுவதால், அங்கு வெப்பநிலை தணியக் காரணமில்லை. மேற்குக் கடற்கரைப் பிரதேசத்திலுள்ள சுவகாப்மண்ட் (Swakopmund) என்னுமிடத்தில் கோடைக்காலத்தில் 64°F, குளிர்காலத்தில் 54°F வெப்பம் காணப்படுகிறது. கிழக்குக்

கடற்கரையிலுள்ள டர்பன் என்னுமிடத்தில் கோடைகாலத்திலும் குளிர்காலத்திலும் வெப்பம் காணப்படுகிறது. இங்கு அதிக மழை கோடைக்காலத்தில் பெய்கிறது. தெற்குக் கோடியிலுள்ள கேப் டவுன் பட்டணத்தில்மட்டும் குளிர்காலத்தில் மழை அதிகம்.

இப் பிரதேசத்தில் அடர்ந்த வனங்கள் அதிகமில்லை. ஆனால், ஆங்காங்கே சிதறின விதத்தில் மரங்கள் காணப்படுகின்றன. நதிகள் கடலில் சேருமிடத்துச் சதுப்பு நிலங்கள் காணப்படுகின்றன. அவற்றை அடுத்து மரங்கள் நெருக்கமாகக் காணப்படுகின்றன. மழை குறைவான இடங்களில் மரங்கள் குறைந்து புல் தரைகளே காணப்படுகின்றன. இப் பிரதேசங்களில் வேகமாக ஓடும் மிருகங்கள் அதிகம். மான்வகைகள் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றன. இப் பிரதேசத்தின் வடக்குப் பாகத்தைத் தவிர மற்ற இடங்களில் காட்டு மிருகங்களை அநேகமாக அழித்துவிட்டனர். வரிக் குதிரை, காண்டா மிருகம், நீர்யானை, காட்டு எருமை, யானை என்பன இப் பிரதேசத்திலிருந்து முற்றும் அழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறலாம். மற்றக் கொடிய விலங்குகளான சிங்கம், புலி, காட்டு நாய் என்பன ஆங்காங்கே காணப்படுகின்றன. தென்மேற்கு ஆப்பிரிக்காவில் பலவிதமான குரங்குகளும், விஷப்பாம்புகளும், தீக்கோழிகளும் காணப்படுகின்றன.

இங்குள்ள ஆப்பிரிக்க இனத்தவர் நீக்ரோ மக்களின் பான்டு (Bantu) வகுப்பைச் சார்ந்தவர். ஆனால், அது தவிர வேறு எத்தனையோ சிறு பிரிவுகளைச் சார்ந்தவரும் உண்டு. அவர்களில் ஜுலு என்ற வகுப்பைச் சார்ந்தவர், போர்த்திறமை மிக்கவர் என்று கூறுவதுண்டு. நீக்ரோ இனத்தவர் எல்லாருமே பயிர்த் தொழிலிலும், ஆடு வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளனர். நீக்ரோக்களைத் தவிர ஹாட் அன்ட் டாட் என்ற இனத்தினரும், புஷ்மென் என்ற இனத்தினரும் காணப்படுகின்றனர். புஷ்மென் என்பவர்கள் மஞ்சள் கலந்த நிறமுள்ளவர்களாகவும், குள்ளமானவர்களாகவும், சுருண்ட ரோமம் கொண்டவர்களாகவும் வேட்டையாடி வாழ்கின்றனர். அவர்கள்தாம் அப் பிரதேசத்தின் ஆதிக்குடிகள் எனக் கருதப்படுகின்றனர். கடந்த நூற்றுண்டின் மத்தியில் தென்னுப்பிரிக்காவில் இரண்டு பிரிட்டிஷ் குடியேற்றப் பிரதேசங்களும் (கேப், நேட்டால் என்பன), இரண்டு போயர் குடியரசு நாடுகளும் (டிரான்ஸ்வால், ஆரஞ்சு ஃப்ரீஸ்டேட் என்பன) இருந்தன. பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கும், போயர் குடியரசு நாடுகளுக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டுவந்தது. சண்டை ஏற்படும்போது டிரான்ஸ்வால் பிரதேசத்தில் ராண்ட் (Rand) என்னுமிடத்தில் தங்கமிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

அதனால் சமாதானம் ஏற்பட்டு, 1910ஆம் வருடத்தில் இந் நான்கு நாடுகளும் சேர்த்துத் (கேப், நேட்டால், டிரான்ஸ் வால், ஆரஞ்சு ஃப்ரீ ஸ்டேட்) தென்னாப்பிரிக்க யூனியன் என்ற ஒரே இராச்சியமாகத் தாபிக்கப்பட்டது. 1961-ல் அது குடியர சாக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்கக் குடியரசு நாட்டில் அங்குள்ளவர் இன ஒதுக்கல் கொள்கையைக் கையாண்டு, அங்குள்ள ஆப்பிரிக்கர் களுக்கும் ஆசியருக்கும் ஓட்டுரிமை, இராச்சிய உரிமை என்பன வற்றை மறுப்பதால், அங்குப் பெரிய பிரச்சினைகள் எழுந்து கொண்டிருக்கின்றன. ஐரோப்பியர்களின் பயிர்த்தொழிலுக்கும், உலோகம் வெட்டி எடுத்தலுக்கும் கறுப்பு மக்கள்தாம் உழைக் கின்றனர். அங்கு முதலில் குடியேறியவர் பயிர்த் தொழில் மட்டும் செய்தனர். தங்கமும் வைரமும் கண்டுபிடிக்கப்பட்ட பின்பு நாடு செழிப்படைந்தது. ரெயில் பாதைகள் ஏற்படுத்தப் பட்டன. சுரங்கங்களில் வேலை செய்ய ஆப்பிரிக்கர்களை அமர்த் தினர். ஆசியரில், இந்தியரும் சீனரும்கூட இதில் சேர்க்கப்பட் டனர். மொஸாம்பிக் பிரதேசத்தில் அரேபியர்கள் அதிகம் வந்து சேர்ந்தனர். உலோகச் செல்வங்கள் மட்டுமல்லாமல் விளை பொருள்களிலும் இப் பிரதேசம் முன்னேற்றமடைந்துள்ளது. சோளம், தேயிலை, கம்பளி, தோல், புகையிலை, சீனி, கற்றாழை நார் என்பன இங்குள்ள முக்கிய விளைபொருள்கள். கிருஷிப் பொருள்களைவிட உலோகப் பொருள்களின் ஏற்றுமதிதான் இங்கு மிக அதிகம். இங்கு ஐரோப்பிய இனத்து ஆடுமாடுகள் வளர்க் கப்படுகின்றன. ஸெட்ஸ் ஈ, தூங்கும் வியாதி என்பன ஏற்பட் டாலும், அவை பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டுவருகின்றன. இங்கு ஏற்றுமதி வியாபாரம் செழிக்கவேண்டுமானால், போக்கு வரவு மார்க்கங்கள் பெருகவேண்டும். படகுப் போக்குவரத்துக் கேற்ற நதிகள் இங்கு இல்லை. முக்கியமாக சாலைகளைத் தவிர மற்றவை மழைக்காலத்தில் பயன்படுவதில்லை. சாலை மார்க்கங் களையும் முன்னேற்றவேண்டும்.

இங்குள்ள இராச்சியப் பிரிவுகள் எல்லாவற்றிலும், ஐரோப்பி யரைவிட ஆப்பிரிக்க மக்களே அதிகம். கறுப்பு மக்களுக்கு இராச்சிய உரிமைகளை மறுப்பது எவ்வளவு நாள் நீடிக்கும் என்று சொல்வதற்கில்லை.

மொஸாம்பிக் (போர்த்துகீஸியக் கிழக்கு ஆப்பிரிக்கா)

ஆப்பிரிக்காவில் போர்த்துகீஸியரின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் இது மிகப் பெரிய பிரதேசம். வடக்கில் 11°

தெற்கு அட்சாம்சம் முதல் தெற்கில் 27° தெற்கு அட்சாம்சம் வரை வியாபித்திருக்கும். இப் பிரதேசத்தின் விஸ்தீரணம் சுமார் 3 இலட்சம் சதுர மைல். இதன் ஜனத்தொகை 68 இலட்சம். ஜனங்களில் சுமார் 60 ஆயிரம் பேர் போர்த்துகீஸிய நாட்டவர். இவர்கள் லாரன்ஸோ மார்க்கஸ், பெய்ரா முதலிய பட்டணங் களில் வசிக்கின்றனர். இந்தியர்களும் அரேபியர்களும் சுமார் 60,000 பேர் அந் நாட்டில் காணப்படுகின்றனர். போர்த்துகீஸியர் பெரும்பாலும் மொத்த வியாபாரத்திலும், அரசாங்க உத்தி யோகங்களிலும் இருக்கின்றனர். ஆப்பிரிக்கர்கள் பெரும்பாலும் பயிர் செய்பவர்களாவர். அவர்களில் அநேகம் பேர் அருகி லுள்ள டிரான்ஸ்வால், வடக்கு ரொடீசியா என்னுமிடங்களிலுள்ள சுரங்கங்களில் பணிபுரிகின்றனர்.

மொஸாம்பிக் நாட்டின் கடற்கரை 1600 மைல் நீளமுடையது. ஆப்பிரிக்காவின் வேறு எந்தப் பாகத்தையும்விட இங்கு மிக அகல மான கடற்கரை சமநிலப் பிரதேசம் காணப்படுகிறது. ஜாம்பஸி நதிக்குத் தெற்கே அது மிகவும் அகலமாக இருக்கிறது. இந்தச் சம நிலப் பிரதேசம் நதிப்பள்ளத்தாக்குகள்மூலம் உள்நாட்டிலும் செல்கிறது. ஜாம்பஸி நதி பாயும் பிரதேசத்தில் நதி முகத்தி லிருந்து 400 மைல் உள்நாட்டில் செல்லும்வரை நிலம் 600′ உயரத்தில்தான் இருக்கிறது. இந் நாட்டில் உயரமான பகுதி, ஜாம்பஸி நதி பாயும் பகுதிக்கு வடக்கில் காணப்படுகிறது.

இங்குப் பாயும் நதிகளில் மிகவும் முக்கியமானது ஜாம்பஸி. அதன் முகத்துவாரத்தில் உள்ள டெல்டாப் பிரதேசம் சதுப்பு நிலம் ஆனபடியாலும், நதியில் சில இடங்களில் துரிதப் போக்குக் காணப்படுவதாலும், காலத்துக்கேற்றவாறு நதியில் நீர் குறைந்து போவதாயிருப்பதாலும், இந் நதி படகுப் போக்குவரவுக்கு ஏற்றதல்ல. கோடையில் மழை பெய்யும்போது நதியில் அதிக வெள்ளம் ஏற்படுவதுண்டு. ஆனால், குளிர்காலத்தில் வெள்ளம் குறைந்துபோகும். நாட்டின் வடபாகத்திலுள்ள லிம்போபோ (Limpopo) நதியிலும் இவ்விதமே நேருவதால், அதிலும் படகுப் போக்குவரத்து அதிகமில்லை. இந் நதிகளின் முகத்துவாரத்தில் முக்கியத் துறைமுகங்கள் ஒன்றுமில்லை.

காலநிலை

இந் நாட்டில் கடற்கரைப் பிரதேசத்தில் ஏற்படும் கால நிலைக்கும், உள்நாட்டில் பீடபூமியில் ஏற்படும் காலநிலைக்கும் வேற்றுமை உண்டு. அங்குக் கடற்கரையை அடுத்து, மொஸாம்பிக் என்ற வெப்ப நீரோட்டம் தெற்கு நோக்கிப் பாய்வதால், அங்கு வெப்பம் அதிகம். உள்நாட்டுப் பீடபூமியில் வெப்பம் குறைவு.

நாட்டின் தென்பாகத்தில் கடற்கரையையடுத்து மலைகள் ஒன்றுமில்லாததால் அங்கு மழை குறைவு. லாரன்ஸோ மார்கஸ் பட்டணத்தில் வருட மழை 27''தான். சில வருடங்களில் மழை குறைந்துபோவதால், அங்குள்ள சோளப் பயிருக்கு நஷ்டம் ஏற்படுவதுண்டு. நாட்டின் வடபாகத்தில் பீடபூமி இருப்பதால், அங்கு மழை சற்று அதிகம். பெய்ரா பட்டணத்தில் வருட மழை 58''-க்கும் அதிகம். உள்நாட்டில் உயர்ந்த பகுதிகளைத் தவிர மற்ற இடங்களில் வருட மழை 30''-க்கும் குறைவு.

கடற்கரையை அடுத்த பகுதிகளில் சதுப்பு நிலங்கள் அதிகம். நதி பாயும் பிரதேசங்களிலும், பீடபூமியின் சரிவுகளிலும் வனங்கள் காணப்படுகின்றன. நாட்டின் பெரும் பாகத்திலும் முட்செடிகள் நிறைந்த புல் வெளிகளே காணப்படுகின்றன. வேல முட்செடியை அங்குப் பல இடங்களிலும் காணலாம்.

விளைபொருள்கள்

இந் நாட்டில் விவசாயமே முக்கியத் தொழில். மண்வளம் மிக்க பூமியானதால், இங்குப் பலவிதமான பயிர்களும் செய்ய வசதியுண்டு. இங்குள்ள முக்கிய விளைபொருள்கள் சோளம், கரும்பு, தேங்காய், பருத்தி, கற்றாழை நார் என்பன. ஆப்பிரிக்க மக்கள் பெரும்பாலும் தினையையும் சோளத்தையுமே உணவாக உபயோகிக்கின்றனர். சம நிலங்களில் தென்னை அதிகம் பயிர் செய்யப்படுகிறது. அங்குள்ள மக்கள் சிறு தோப்புகளில் தென்னைப் பயிர் செய்தாலும், ஐரோப்பியர்கள் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் தென்னந் தோப்புகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். லாரன்ஸோ மார்கஸ் தோப்புகளில் தேங்காய் எண்ணெய் மில்கள் அநேகம் உண்டு.

நாட்டின் வடபாகத்தில் கற்றாழை அதிகம் பயிர் செய்யப்பட்டு, கற்றாழை நார் அதிகம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஜாம்பஸி நதியின் கரையிலும் அதற்குத் தெற்கிலும் கரும்பு அதிகம் பயிர் செய்யப்படுகிறது; சீனி அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சமீப காலத்தில் பருத்தியும் நாட்டின் வடபாகத்தில் அதிகம் பயிர் செய்யப்படுகிறது; இங்கு விளையும் பருத்தி அதிகமாகப் போர்ச்சுகல் நாட்டுக்கே ஏற்றுமதி ஆகிறது.

தென் கிழக்கு ஆசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நெல், தற்காலத்தில் அளவு குறைந்துவிட்டதால், நெற்பயிர் இங்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. அதிக உற்பத்தியான வருடங்களில் தென் ஆப்பிரிக்கக் குடியரசு நாட்டுக்கும் ஏற்றுமதி

செய்யப்படுகிறது. நாட்டின் பல பாகங்களிலும் நிலக்கடலையும், சோளமும், மரவள்ளியும், சில இடங்களில் தேயிலை, புகையிலையும் பயிராகின்றன. நாட்டின் பல பாகங்களிலும், முந்திரிப் பருப்பு காட்டு மரமாக வளருகிறது. அதை ஆப்பிரிக்கர்களே சேகரித்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். மரத்தடி ஏற்றுமதி தற்காலத்தில் முக்கியமடைந்துவருகிறது. வட அமெரிக்காவிலிருந்து வந்துகொண்டிருந்த தடிகளின் அளவு குறைந்துவிட்டதால், இங்கிருந்து மரத்தடிகள் தென் ஆப்பிரிக்கக் குடியரசு நாடுகளுக்கும் ரொடீசியாவுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந் நாட்டில் ஸெட்ஸ் ஈயின் தொல்லையால் ஆடு வளர்த்தல் முக்கியமடையவில்லை. ஆங்காங்கே சில மந்தைகள் காணப்படுகின்றன.

உலோகச் செல்வம்

முற்காலத்தில் இப் பிரதேசத்தில் தங்கம் வெட்டியெடுக்கப் பட்டதாகச் சொன்னாலும், தற்காலத்தில் அது அதிக முக்கியத்துவம் பெறவில்லை. நிலக்கரி சில இடங்களில் வெட்டியெடுக்கப் பட்டாலும், போக்குவரவு மார்க்கங்கள் சரிவர இல்லாததால், இன்னமும் முன்னேற்றமடையவில்லை.

முக்கியப் பட்டணங்கள்

இந் நாட்டிலுள்ள முக்கியப் பட்டணங்கள் அங்குள்ள துறை முகங்களே. லாரன்ஸோ மார்க்கஸ், பெய்ரா இவ்விரு துறைமுகங் களும் இந் நாட்டின் விளைபொருள்களைமட்டுமல்லாமல் சமீபத்திலுள்ள ரொடீசியா, தென்னாப்பிரிக்கக் குடியரசு நாடுகளின் பொருள்களையும் ஏற்றுமதி செய்ய உதவுகின்றன. இந் நாட்டின் தலைநகரான லாரன்ஸோ மார்கஸ்,முக்கியத் துறைமுகமாகவுமிருக்கிறது. இதன் ஜனத்தொகை சுமார் ஓர் இலட்சம். சமீபத்திலுள்ள டிரான்ஸ்வால் நாட்டிலிருந்து சுரங்கப் பொருள்களும், ஆலைத் தொழிற் பொருள்களும் ஏற்றுமதி செய்ய உதவுகின்றன. கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதயிலேயே இது மிக முக்கியமான துறைமுகப் பட்டினம். இங்கு சீனி ஆலைத்தொழில், எண்ணெய்த் தொழில், பருத்தி ஆலைத்தொழில் என்பன முக்கியம் அடைந்துவருகின்றன.

பெய்ராவிலிருந்து, அங்கோலா நாட்டிலுள்ள லாவீற்று பட்டணம்வரை ரெயில் பாதைகள் உண்டு. இந்தத் துறைமுகம் வழியாக ரொடீசியா நாட்டின் ஏற்றுமதிப் பொருள்கள் மட்டுமன்றி, காங்கோ நாட்டு உலோகப் பொருள்களும் ஏற்றுமதி ஆகின்றன.

மொஸாம்பிக்

நாட்டின் வடக்கிலுள்ள பயிர்த்தொழிற் பகுதிகளின் விளை பொருள்கள் ஏற்றுமதி செய்ய உதவுகின்றன. இதன் அருகில் உருவாகிவரும் நகலா (Nacala) துறைமுகம் கட்டி முடியும்போது இதன் முக்கியத்துவம் சற்றே குறையலாம்.

வியாபாரம்

இந் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் முக்கியப் பொருள்கள் கற்றாழை நார், சீனி, தேங்காய், தங்கம். இங்கு இறக்குமதியாகும் பொருள்களில் முக்கியமானவை துணிவகைகள், இயந்திரங்கள், பெட்ரோல் என்பன. வியாபாரம் பெரும்பாலும் போர்த்துகீஸிய நாட்டுடன் நடக்கிறது. அமெரிக்காவும் இங்கிலாந்தும் இங்குள்ள இறக்குமதி வியாபாரத்தில் பங்குகொள்கின்றன.

நியாஸாலாந்து, வடக்குத் தெற்கு ரொடீசியா

பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவதற்காக நியாஸாலாந்து, வடக்கு ரொடீசியா, தெற்கு ரொடீசியா இம் மூன்று நாடுகளையும் சேர்த்து ஒரு கவர்னர் ஜெனரல் அதிகாரத்தின்கீழ் 1953ஆம் வருடம் ஒரு கூட்டு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனால், 1963-ல் அந்தக் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.

நியாஸாலாந்து (மலாவி)

சுதந்திரமடைந்தபின் மலாவி என்று பெயர் கொண்ட இந் நாடு 37,400 சதுர மைல் விஸ்தீரணம் கொண்டது. அதில் 10,500 சதுர மைல் நீர்ப்பரப்புடையது. நியாஸா தடாகத்துக்கு மேற்கிலும், தெற்கிலும் அமைந்துள்ள இந் நாட்டின் ஜனத் தொகை 32 இலட்சம். அதில் ஐரோப்பியர் 10,000-க்கும் குறைவு.

இயற்கை அமைப்பில் இந் நாட்டை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. நியாஸா நாட்டுக்கு மேற்கிலுள்ள பீடபூமிப் பிரதேசம். இது இரு பிளவுப் பள்ளத்தாக்குகளுக்கிடையில் அமைந்திருக்கிறது. இப் பீடபூமிக்கு மேற்கிலுள்ள பள்ளத்தாக்கில் ஜாம்பஸி நதியின் ஓர் உபநதியான லுவாங்வா (Luangwa) நதி பாய்கிறது. இப் பீடபூமியின் கிழக்கிலுள்ள பள்ளத்தாக்கில் நியாஸா தடாகம் அமைந்துள்ளது.

2. தெற்கு நியாஸாலாந்து: இப் பகுதியில் ஜாம்பஸி நதியின் ஓர் உப நதியான ஷீரே நதி பாய்கிறது. நியாஸா தடாகம்

அமைந்துள்ள பள்ளத்தாக்கின் தொடர்ச்சியே அது. இதன் மேற்கில், வடக்கிலுள்ள பீடபூமியின் தொடர்ச்சி காணப்படுகிறது. கிழக்கில் ஷிரே பீடபூமியும், நாட்டின் தென் கிழக்குக் கோடியில் மிளாஞ்சே (Mlange) மலைகளும் காணப்படுகின்றன.

காலநிலை

நியாஸாலாந்து முழுவதும் அக்டோபர் முதல் ஏப்ரல் வரையில் நல்ல மழை பெய்கிறது. நிலத்தின் உயரத்தைப் பொறுத்துச் சற்றே காலநிலை மாறுபடுகிறது. பொதுவாகத் தென்பாகத்தைவிட வடக்கில் மழை அதிகம். ஸொம்பா (Zomba) பட்டணத்தில் வருட மழை 54". இன்கடா-பே (Nkata-Bay) என்னுமிடத்தில் வருட மழை 66". இவற்றின் வருட மழையில் அதிக வேற்றுமை தோன்ருவிட்டாலும், இச் சிறு வேற்றுமையும் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது.

விளைபொருள்கள்

இந் நாட்டவரின் முக்கியத் தொழில் கிருஷியே. இங்குள்ள முக்கிய விளைபொருள்கள் புகையிலையும் தேயிலையும். புகையிலையும் பருத்தியும் ஆப்பிரிக்க மக்களால் பயிர் செய்யப்படுகின்றன. தேயிலைத் தோட்டங்கள் மிளாஞ்சே மலைச்சரிவுகளில் ஐரோப்பியர்களால் பயிர் செய்யப்படுகின்றன. ஆப்பிரிக்காவிலேயே இங்குதான் தேயிலைப் பயிர் முக்கியம்.

மியாஸா தடாகத்தின் வடமேற்கிலுள்ள பீடபூமியில் துங் (Tung) மரங்கள் அதிகம் வளர்க்கப்படுகின்றன. இவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. அங்குள்ள வேலையாட்களின் உபயோகத்துக்காக நெல்லும் பயிர் செய்யப்படுகிறது; அங்குள்ள ஜனங்களின் உணவுப் பொருள்களான நிலக்கடலை, சோளம் என்பனவும் பயிர் செய்யப்படுகின்றன. மியாஸா தடாகத்திலிருந்து மீன் அதிகம் பிடிக்கப்படுகிறது.

முக்கியப் பட்டணங்கள்

இந் நாட்டில் முக்கியப் பட்டணங்கள் அதிகமில்லை. இந் நாட்டின் தலைநகரமான ஸொம்லாவின் ஜனத்தொகை 7,500. இங்கு விமானத் தாவளம் உண்டு. இங்கிருந்து பெய்ராவுக்கு ரெயில் பாதை செல்கிறது.

இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் புகையிலை, தேயிலை, பருத்தி, துங் எண்ணெய், சோளம், நெல் என்பன. இங்கு இறக்கு

மதியாகும் முக்கியப் பொருள்கள் இயந்திரங்கள், ஆலைத் தொழிற் பொருள்கள், மோட்டார் என்பன. வியாபாரம் பெரும்பாலும் இங்கிலாந்து நாட்டுடனேயே நடைபெறுகிறது.

வடக்கு ரொடீசியா (ஸாம்பியா)

வடக்கு ரொடீசியாவின் ஜனத்தொகையை 25 இலட்சம் என மதிப்பிடலாம். அவர்களில் சுமார் ¾ இலட்சம் பேர் ஐரோப்பிய இனத்தைச் சார்ந்தவர்; ஆசியாவைச் சார்ந்தவர்கள் சுமார் 6,000 பேர். இந் நாட்டின் விஸ்திரணம் சுமார் 3 இலட்சம் சதுர மைல். ஸாம்பியா என்ற பெயருடன் இந் நாடு சமீப காலத்தில் சுதந்திரமடைந்தது.

ஸாம்பியா என்ற இந் நாடு பெரும்பாலும் 3,000′-க்குமேல் 5,000 அடி உயரமுள்ள பீடபூமியாக இருக்கிறது. ஆனால், வடகிழக்கில் உள்ள முச்சிங்கா மலைகள் (Muchinga Mountains) 6,000 அடிக்கும் மேற்பட்டது. மலைகளுக்குக் கிழக்கில் உள்ள பள்ளத்தாக்கில் லுவாங்வா (Luangwa) நதி பாய்கிறது. இந் நாட்டிலுள்ள முக்கிய நதி ஜாம்பஸி. அதன் உபநதிகளில் காஃப்யூ (Kafue), லுவாங்வா (Luangwa) என்ற நதிகளே மிகப் பெரியவை. ஜாம்பஸி நதியே 300 மைலுக்கும் அதிக நீளத்தில் இந் நாட்டின் தெற்கு எல்லையாக அமைந்துள்ளது. இந் நாட்டின் வடக்குப் பாகம் ஓர் உட்குழிந்த பிரதேசமாகி, அதில் பாங்வேலு (Bangweulu) தடாகம் காணப்படுகிறது.

ஸாம்பியாவிலுள்ள நதிகளில் பெரியவைகளில் வருடம் முழுவதும் தண்ணீர் காணப்படுகிறது. ஆனால், சிறிய நதிகள் கோடையில் வறண்டுபோகின்றன. ஜாம்பஸி நதியின் நீளம் 1,300 மைல். அதில் அநேக நீர்வீழ்ச்சிகள் காணப்படுகின்றன. அவற்றில் முக்கியமானது விக்டோரியா நீர்வீழ்ச்சி. இந் நீர்வீழ்ச்சியிலிருந்து 300 மைல் தூரத்தில் நதியில் ஒரு பெரிய அணை கட்டப்பட்டு, அங்கு மின்சக்தி எடுக்கப்படுகிறது. மிகக் குறைந்த செலவில் எடுக்கப்படும் இச் சக்தி மத்திய ஆப்பிரிக்காவில் பல இடங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

காலநிலை

இங்கு ஏற்படும் காலநிலையை மூன்று விதமாகப் பிரிக்கலாம்:

1. கோடைக்காலம்: இது செப்டம்பர் முதல் நவம்பர்வரை அநுபவிக்கப்படுகிறது.

2. மழைக்காலம்: டிஸம்பர்முதல் ஏப்ரல்வரை இந் நாட்டில் அதிக மழை பெய்கிறது. இங்கு வருட மழை 30″-க்குமேல் 50″ வரை பெய்கிறது. நாட்டின் வடபாகத்தில் மழை அதிகம் பெய்கிறது.

3. குளிர்காலம்: மே மாதம்முதல் ஆகஸ்ட்வரை இங்குக் குளிர்காலம் எனலாம். பகலில் வெயில் அடித்தாலும் இரவில் மிகக் குளிராக இருக்கும்.

ஸாம்பியா நாட்டின் இயற்கைத் தாவரம், ஸவானா புல் பிரதேசம் என்றே சொல்ல வேண்டும். இங்கு அடர்ந்த புல்லும், ஆங்காங்கே வனங்களும் காணப்படுகின்றன. மழை அதிகமான பகுதிகளில் வனங்கள் காணப்படுகின்றன. நாட்டின் தென்பாகத்தில் பெரும்பாலும் புல்தரைகளே காணப்படுவதால், அங்குள்ள மக்களுக்கு மாடு வளர்த்தல் ஒரு முக்கியத் தொழிலாக இருக்கிறது.

பயிர்த் தொழில்

இங்கு விளையும் பொருள்களில் முக்கியமானவை கோதுமை, புகையிலை, சோளம் என்பன. சோளம் அதிகம் பயிர் செய்யப்படுவது நாட்டின் தென்பகுதியில்தான். இங்கு ஆப்பிரிக்கர்களும், ஐரோப்பியர்களும் பயிர்த்தொழில் செய்கின்றனர். இங்குப் புகையிலை அதிகம் பயிர் செய்யப்படுகிறது. இங்குப் பயிர் செய்யப்படும் புகையிலை மிகவும் உயர்ந்த ரகத்தைச் சார்ந்தது.

இந் நாட்டில் சமீபகாலத்தில் நெல்லும் பயிர் செய்கின்றனர். ஐரோப்பியர்கள் இப் பயிரில் ஈடுபட்டு நல்ல மகசூல் கண்டிருக்கின்றனர். இங்கு விளையும் உருளைக்கிழங்கு, நிலக்கடலை என்பன உள்நாட்டின் தேவைக்கே போதுமானவையாக இல்லை. பொதுவாக உணவுப் பொருள்கள் உள்நாட்டின் தேவைக்கே குறைவாக உற்பத்தி செய்யப்படுவதால், அருகிலுள்ள நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால், இங்குச் சுரங்கத் தொழில் மிகவும் அபிவிருத்தி அடைந்திருப்பதால், உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கும் செல்வ நிலை காணப்படுகிறது.

உலோகச் செல்வம்

ஸாம்பியா நாட்டிலுள்ள சுரங்கங்களின் செல்வம் குறிப்பிடத்தக்கது. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் மிக முக்கியமானது உலோகங்களே. 1930ஆம் வருடம்முதல் செம்பு

அதிகமாக வெட்டியெடுக்கப்படுகிறது. செம்பு வெட்டியெடுக்கப் படும் நகரங்களில் உலகிலேயே மிகப் பெரியது, அங்குள்ள இன் சாங்கா (Nchanga) சுரங்கம் என்று கூறப்படுகிறது. இது காங்கோ குடியரசு நாட்டிலுள்ள கடாங்கா செம்புச் சுரங்கத்துக்கு மிக அருகிலேயே இருக்கிறது. இந்த உலோகத்தை வெட்டி, அயல் நாடுகளுக்கு அனுப்பி, அதன்மூலம் கிடைக்கக் கூடிய வருமானத்தால் இங்கு செல்வ நிலை செழிப்படைந்திருக்கிறது. அதன் மூலம் நாட்டின் பல பாகங்களிலும் நல்ல பாதைகளும், பள்ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரிகளும் அமைக் கப்பட்டுள்ளன. சமீப காலங்களில் இங்குள்ள சுரங்கங் களிலிருந்து சுமார் 5 இலட்சம் டன் செம்பு வெட்டியெடுக்கப் பட்டது. இத் தொழிலுக்கு வேண்டிய நிலக்கரி, சமீபத்தில் கிடைக் காததாலும், தூரத்திலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருப்ப தாலும் உற்பத்தி குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. தற்சமயத் தில் தெற்கு ரொடீசியாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்தும், தென் ஆப்பிரிக்கக் குடியரசு நாட்டிலிருந்தும் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. ஆனல், இத் தொழிலுக்கு வேண்டிய மின்சக்தி ஜாம்பஸி நதியிலுள்ள கரிபா அணையிலிருந்து கிடைக்கிறது.

செம்பு தவிர ஈயம், துத்தநாகம் முதலிய உலோகங்கள் சிறி தளவு வெட்டியெடுக்கப்படுகின்றன. பிரோக்கன்ஹில் என்னு மிடத்திலுள்ள இச் சுரங்கம் வெகுகாலமாகவே பயன்படுத்தப் பட்டு வருகிறது. லுஸாக்கா பட்டணத்துக்குத் தெற்கிலுள்ள சிலங்கா என்னுமிடத்தில் சிமெண்டு ஆலை உள்ளது.

முக்கியப் பட்டணங்கள்

இங்குள்ள முக்கியப் பட்டணங்கள் ரெயில் பாதையை அடுத்தே அமைந்துள்ளன. விக்டோரியா நீர்வீழ்ச்சியின் சமீபத்தில் அமைந்துள்ள லிவிங்ஸ்டன் பட்டணம் இந் நாட்டின் வடபாகத்தி லுள்ள ஒரே முக்கியப் பட்டணம். இதன் ஜனத்தெகை 14,000 பேர். அதில் சுமார் 6,000 பேர் ஐரோப்பிய இனத்தைச் சார்ந்த வர். இது முற்காலத்தில் நாட்டின் தலைநகராக விளங்கியது. இங்கு ஒரு பெரிய விமானத் தாவளம் அமைந்துள்ளது. நாட்டின் தலைநகரான லுஸாக்கா பட்டணம் நாட்டின் மத்தியில் அமைந் துள்ளது. இதன் ஜனத்தொகை 75,000 பேர். இதில் 12,000 பேர் ஐரோப்பியர். இப் பட்டணத்தைச் சுற்றியுள்ள பகுதியில் சோளம், புகையிலை, நிலக்கடலை என்பன பயிர் செய்யப்படு கின்றன. செம்புச் சுரங்கங்களுக்குச் சமீபத்தில் இருப்பதோடும், இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து 4,000 அடி இருப்பதாலும் காலநிலையும் வெகு நன்ருக அமைந்துள்ளது.

பிரோக்கன்ஹில் பட்டணம் 60,000 ஜனத்தொகை கொண்டது. இங்கு 6,000 ஐரோப்பியர் வசிக்கின்றனர். இதனை அடுத்துள்ள பகுதியில் ஈயமும், துத்தநாகமும் வெட்டியெடுக்கப்படுகின்றன.

பிரோக்கன்ஹில் பட்டணத்துக்கு வடக்கில் ரெயில் பாதை தொடர்ந்து சென்று காங்கோ நாட்டுக்குச் செல்கிறது. அது மேலும் தொடர்ந்து சென்று அங்கோலா நாட்டில் பிரவேசிக்கிறது. தெற்கே லிவிங்ஸ்டன் பட்டணத்திலிருந்து வடக்கே பிரோக்கன்ஹில் பட்டணம்வரை செல்வது தவிர, இங்கு வேறு ரெயில் பாதை இல்லை. ஆனால், நாட்டின் பல பாகங்களுக்கும் நல்ல சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வியாபாரம்

இந் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் செம்பு, ஈயம், துத்தநாகம், புகையிலை, தோல், மரத்தடிகள் என்பன. இங்கு இறக்குமதியாகும் பொருள்கள் துணிவகைகள், உணவுப் பொருள்கள், யந்திரங்கள் என்பன. இங்குள்ள வியாபாரம் பெரும்பாலும் இங்கிலாந்துடனேயே நடைபெறுகிறது. சிறிதளவு அமெரிக்காவுடனும் தென்னாப்பிரிக்க நாட்டுடனும் நடைபெறுகிறது. இறக்குமதியாகும் பொருள்களின் மதிப்பைவிட ஏற்றுமதியாகும் பொருள்களின் மதிப்பே அதிகம்.

தென் ரொடீசியா

சுமார் $1\frac{1}{2}$ இலட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள இந் நாட்டின் ஜனத்தொகை சுமார் 30 இலட்சம். அதில் சுமார் $2\frac{1}{4}$ இலட்சம் பேர் ஐரோப்பிய இனத்தைச் சார்ந்தவர்கள். இந் நாட்டில் $\frac{2}{8}$ பாகம் ஐரோப்பியர்களின் கைவசமாயிருப்பதால், வெள்ளையர்களுக்கும் ஆப்பிரிக்கர்களுக்கும் அங்கு ஓர் உரிமைப் போராட்டம் நடந்துவருகிறது.

ஸாம்பியா நாட்டைப்போலவே இப் பிரதேசம் கடல் மட்டத்துக்குமேல் சுமார் 5,000′ உயரமான பீடபூமியாகும். தென் மேற்கிலிருந்து வடமேற்காக ஒரு குன்றுப் பிரதேசம் செல்வதால், வடமேற்காக ஓடும் உபநதிகள் ஸாம்பஸியில் சென்று சேருகின்றன. தென்கிழக்காக ஓடும் நதிகள் மொஸாம்பிக் வழியாக இந்துமகா சமுத்திரத்தில் சென்று சேருகின்றன. அவற்றில் முக்கியமானவை லிம்போப்போ, ஸாபி (Sabi), லுண்டி (Lundi) முதலியவை.

காலநிலை

ஸாம்பியா நாட்டைப்போலவே செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் கோடைக்காலமும், அதன் பின்னர் மழைக்காலமும் ஏற்படுகின்றன. மேமுதல் ஆகஸ்டு வரையிலுள்ள குளிர்காலத்தில் மழை பெய்வதில்லை. இந் நாட்டின் பல பாகங்களிலும் வருட மழையில் அதிக வித்தியாசம் ஏற்படுகிறது. நாட்டின் மேற்கில் மழை குறைவு. வருட மழை 15"-க்குமேல் 20"தான். நாட்டின் கிழக்கில் மழை அதிகம். கிழக்கு எல்லையில் வருட மழை 60"-க்கும் மேல் பெய்வதுண்டு.

பயிர்த் தொழில்

இங்குப் பயிர்செய்யப்படும் முக்கியத் தானியம் சோளம். சிறிதளவு கோதுமையும் பார்லியும் குளிர்காலத்தில் பயிர் செய்யப்படுகின்றன. உருளைக் கிழங்கும், பலவிதப் பழவகைகளும் பயிர் செய்யப்படுகின்றன.

ஏற்றுமதிக்காகப் பயிர் செய்யப்படுவதில் புகையிலை மிக முக்கியமானது. ஆனால், தொடர்ச்சியாக இரண்டு வருடத்துக்கு மேல் இது ஒரே நிலத்தில் பயிர் செய்யப்படுவதில்லை. நிலக்கடலையும் இங்கு அதிகம் பயிராகிறது. நாட்டின் வடமேற்குப் பாகத்தில் மாடு வளர்த்தல் முக்கியத் தொழில்.

உலோகச் செல்வம்

இங்கு வெட்டியெடுக்கப்படும் உலோகங்களில் மிக முக்கியமானது ஆஸ்பெஸ்டாஸ். இது மிகவும் உயர்ந்த தரமானதும், உலகத்தின் பல பாகங்களிலும் விலை மதிப்புள்ளதுமாக அமைந்திருக்கிறது. பூலவாயோ (Bulawayo), சாலிஸ்பரி (Salisbury) பட்டணங்களுக்கிடையில் தங்கம், குரோம் முதலிய உலோகங்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. நாட்டின் வடக்கில் விங்கி (Winkie) என்னுமிடத்தில் ஒரு முக்கியமான நிலக்கரிச் சுரங்கம் உண்டு. அங்கிருந்து ஒரு ரெயில் பாதை வடக்கு ரொடீசியாவுக்குச் செல்வதால், நிலக்கரி அங்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அது தவிர இங்குள்ள சுரங்கத் தொழிலுக்கும், ரெயில் இஞ்சின்களுக்கும் இந் நிலக்கரியையே பயன்படுத்துகிறார்கள். கியூ-கியூ (Que-Que) என்னுமிடத்தில் இரும்புக் கனிகளும், சுண்ணாம்புப் பாறைகளும் காணப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்திச் சிறிதளவு சுண்ணாம்பும் எஃகும் தயாரிக்கப்படுகின்றன.

ஸாபீ நதிப் பள்ளத்தாக்கில் செம்பும் நிலக்கரியும் வெட்டியெடுக்கப்படுகின்றன.

நாட்டின் தலைநகரான ஸாலிஸ்பரி பட்டணம் புகையிலைத் தொழிலுக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. உலகிலேயே மிகப் பெரிய புகையிலை ஏல விற்பனை இங்குதான் நடைபெறுகிறது. இப் பட்டணத்தின் ஜனத்தொகை சுமார் 3 இலட்சம். அதில் $\frac{1}{8}$ பாகம் ஐரோப்பிய இனத்தவர். பூலவாயோ பட்டணம் ஒரு ரெயில்வே கேந்திரமாகும். இதன் ஜனத்தொகை 2 இலட்சம். இங்கு மோட்டார் டயர் உற்பத்தி செய்யும் ஆலைகள் உண்டு. இவ்விரு பட்டணங்களுக்கும் வேண்டிய மின்சக்தி கரீபா அணைக் கட்டிலிருந்து கிடைக்கிறது. தெற்கு ரொடீசியாவின் இரு முக்கியப் பட்டணங்கள் ஸாலிஸ்பரி, பூலவாயோ. இவ்விரு பட்டணங்களுக்கு மிடையிலுள்ள ரெயில்பாதையில் பல கிளைகள் காணப்படுகின்றன. ஸாலிஸ்பரிக்கும் லுஸாக்காவுக்கும் நல்ல ரோடுகள் உண்டு.

வியாபாரம்

இந் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கிய மானது புகையிலை, ஆஸ்பெஸ்ட்டாஸ், நிலக்கரி, குரோம், தங்கம், தோல் என்பன. இங்கு இறக்குமதியாகும் பொருள் களில் முக்கியமானது துணிவகைகள், இயந்திர சாமான்கள், உணவுப் பொருள்கள் என்பன. வியாபாரம் பெரும்பாலும் தென் ஆப்பிரிக்கக் குடியரசு நாட்டுடனும், அமெரிக்கா, இங்கிலாந்துடனும் நடைபெறுகிறது. இங்கிருந்து ஏற்றுமதி இறக்கு மதியாகும் பொருள்கள் யாவும் போர்த்துகீஸிய கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள பெய்ரா (Beira) துறைமுகம் வழியாக நடை பெறுகிறது.

பஸூட்டோலாந்து (Basutoland)

நேட்டால், ஆரஞ்சு மாகாணம், கேப் மாகாணம்

இவைகளுக்கிடையில் அமைந்துள்ள இந் நாடு அதிக மலை அடர்ந்த பிரதேசம். இப் பிரதேசத்தில் வியாபித்துள்ள ட்ரேக்கன்ஸ்பர்க் மலைகளும், அதைச் சார்ந்த மிக ஆழமான பள்ளத்தாக்குகளுமே காணப்படுகின்றன. சுமார் $6\frac{1}{2}$ இலட்சம் ஆப்பிரிக்கர்கள் வசிக்கும் இந் நாட்டில் அவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதற்கு முதற்படியாக அங்கு ஒரு சட்டசபை ஏற்படுத்தப் பட்டுள்ளது. எட்டு அங்கத்தினர் உள்ள இச் சபையில் 4 பேர் ஆப்பிரிக்கர்கள். சுமார் $2\frac{3}{4}$ இலட்சம் சதுரமைல் விஸ்தீரண முள்ள இந் நாட்டில் ஜனநெருக்கம் அதிகமானபடியால் மக்கள் தென்னாப்பிரிக்கக் குடியரசில் வேலைசெய்து வாழ்கின்றனர். புல்

தரையுள்ள பகுதிகளில் ஆடுமாடுகளை வளர்க்கின்றனர். தற்சமயம் சிறிது கல்வி அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. ஆனாலும், சிறுவர்களில் ஆறில் ஒருவரே பள்ளி செல்லுகின்றனர்.

நாட்டின் கிழக்கு எல்லையில்தான் ஜனங்கள் அதிகம் வசிக்கின்றனர். இங்குதான் நாட்டின் தலைநகரான மாஸேகு அமைந்துள்ளது. இங்கிருந்து ஆரஞ்சு மாகாணத்திலுள்ள ப்ளம்ஃபாண்டேயின் (Bloemfontein) பட்டணத்துக்கு ஒரு ரோடு செல்கிறது. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்கள் கம்பளி, கோதுமை, துவரை வகைகள்; இறக்குமதியாகும் பொருள்கள் துணிவகைகள், இரும்புச் சாமான்கள் என்பன.

பெச்சவானாலாந்து

பிரிட்டிஷ் பாதுகாப்பிலுள்ள இந் நாடு 2¼ இலட்சம் சதுர மைல் விஸ்திரணமுள்ளது. இந் நாட்டின் ஜனத்தொகை 3¼ இலட்சம். இந் நாட்டின் தென்பாகத்தில் காலஹாரிப்பாலையும், மத்திய பாகத்தில் புல்தரைப் பிரதேசமும், குற்றுச் செடிகளும் காணப்படுகின்றன. வடபாகத்தில் காடுகள் காணப்படுகின்றன. இங்குள்ள ஆப்பிரிக்க மக்கள் மாடு வளர்த்தலை முக்கியத் தொழிலாகக் கொண்டவர்கள். சிறிதளவு பயிர்த்தொழில் காணப்பட்டாலும், உணவுவகைகள் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இப் பகுதியில் ஆஸ்பெஸ்ட்டாஸ் சிறிதளவு வெட்டியெடுக்கப் படுகிறது. நிலக்கரியும், தங்கமும், வெள்ளியும் அங்குக் கிடைக்கும் என்று கருதப்பட்டாலும் நல்ல போக்குவரவு மார்க்கங்கள் இல்லாததால் அவை இன்னும் பயன்படுத்தப்படவில்லை. இங்குள்ள பட்டணங்களில் முக்கியமானது ஸெரோலி. ஜனத்தொகை 10,000.

சுவாஸிலாந்து

சுமார் 6,700 சதுர மைல் விஸ்திரணமுள்ள இப் பகுதியில் 2 இலட்சம் ஆப்பிரிக்கர்களும், 10,000 ஐரோப்பியரும் வசிக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் இது மிகச் சிறியது. இங்குள்ள ஆப்பிரிக்க ஜனங்கள் பொதுவாக மாடு வளர்த்தலைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

தென்மேற்கு ஆப்பிரிக்கா

தென்மேற்கு ஆப்பிரிக்கா ஒரு காலத்தில் ஜெர்மானியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. முதலாவது உலக மகா யுத்தத்

துக்குப்பின் லீக் ஆஃப் நேஷன்ஸ் என்ற உலக மகாசபை ஜெர்மானியரிடமிருந்து அதைப் பிரித்து, தென்னுப்பிரிக்கக் குடியரசு நாட்டிடம் பாதுகாப்புப் பிரதேசமாக ஒப்படைத்தது. இரண்டாவது உலக மகாயுத்தத்துக்குப்பின் ஏற்பட்ட ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பழைய உலக மகாசபையின் வாரிசாக நினைத்து அப் பிரதேசத்தில் தன் அதிகாரத்தைச் செலுத்த முயன்ற போதிலும், தென்னுப்பிரிக்கக் குடியரசு சர்க்கார் அதற்கு இணங்கியதாகத் தெரியவில்லை. தென்னுப்பிரிக்கக் குடியரசு தென்மேற்கு ஆப்பிரிக்காவைத் தனது மாகாணங்களில் ஒன்ருகவே கருதி, வெள்ளையர்களையும் கறுப்பர்களையும் பிரித்துக் கறுப்பர்களுக்கு ஓட்டுரிமைகூட மறுத்துத் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது.

தென்மேற்கு ஆப்பிரிக்கா, தெற்கே ஆரஞ்சு நதி முதல் வடக்கே அங்கோலா நாட்டு எல்லை வரையில் சுமார் 800 மைல் நீளத்துக்கு வியாபித்திருக்கிறது. அதன் விஸ்தீரணம் சுமார் 3¼ இலட்சம் சதுர மைல். அதன் ஜனத்தொகை சுமார் 5 இலட்சம். அதில் சுமார் 70,000 பேர் ஐரோப்பிய இனத்தைச் சார்ந்தவர். அதைத் தென்னுப்பிரிக்கப் பீடபூமியின் ஒரு பாகம் என்றே சொல்லவேண்டும். அதன் மத்திய பாகம் மலைப்பிரதேசமாக இருக்கிறது. அதன் இரு பக்கங்களிலும் கிழக்கே காலஹாரிப் பாலைவனமும், மேற்கே நமிப் (Namip) பாலைவனமும் காணப்படுகின்றன. நமிப் பாலைவனம் ஒரு மணற்காடு. இது கடற்கரை அடுத்தும் உள்நாட்டில் சுமார் 60 மைல் வரையிலும் வியாபித்திருக்கிறது.

இந் நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் உட்குழிந்த பிரதேசங்கள் காணப்படுகின்றன. அவற்றில் காணும் சிற்ருறுகள் கடலில் சென்று சேருவதில்லை. அவற்றுள் சில ஆற்றின் நீர் மிகவும் உப்பாக இருப்பதால் கோடைகாலத்தில் அங்குப் பல இடங்களில் உப்பு உறைந்து காணப்படுவதுண்டு. தென்மேற்கு ஆப்பிரிக்காவை ஓர் அர்த்த பாலைவனம் என்றே கூறலாம். நாட்டின் வட பாகத்தில் வருட மழை 20". அங்குச் சற்றே புல் தரைகள் காணப்படுகின்றன. மத்திய பீடபூமியிலும் புல் தரைகள் உண்டு. ஆனுல், அதற்குத் தெற்கிலும் கிழக்கிலும் முட்செடிகளே காணப்படுகின்றன.

இவ்விதமான பகுதியில் ஜனவாசம் குறைவாயிருப்பதில் ஆச்சரியமில்லை. காலஹாரி, நமிப் பாலைவனங்களுக்கிடையிலுள்ள பீடபூமியிலேயே ஜனங்கள் அதிகம் காணப்படுகின்றனர், ஐரோப்

பியர்களில் ½ பாகம் பேர் ஜெர்மானியர். மற்றவர்கள் தென் ஆப்பிரிக்கக் குடியரசு நாட்டிலிருந்து வந்தவர். அங்குள்ள ஆப்பிரிக்க மக்களின் முக்கியத் தொழில் ஆடு மாடு வளர்த்தலே. இங்கு ஆப்பிரிக்கர்கள் வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து வருகின்றனர்.

நாட்டின் தென் பாகத்தில் வறட்சியான பகுதியில் வசிக்கும் புஷ்மென் என்ற ஆப்பிரிக்க இனத்தவர் முற்றிலும் நாகரிகமற்றவர்களாகத் தோல் ஆடை உடுத்திக் கிடைத்ததை உண்டு வாழ்கின்றனர்; ஸ்திர வாசம் இல்லாமல் மூங்கிலும் புல்லும் கொண்ட குடிசைகளில் வசிக்கின்றனர்.

இங்குள்ள ஆப்பிரிக்கர்களின் முக்கியத் தொழில் மாடு வளர்த்தல். ஐரோப்பியர்கள் பெருமளவில் மாடுகள் வளர்த்து வெண்ணெய், இறைச்சி முதலியவற்றைத் தென்னாப்பிரிக்கக் குடியரசு நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். நாட்டின் தென்பாகத்தில் மழை குறைவாகையால் அங்கு ஆடு வளர்த்தல் முக்கியத் தொழில். இங்கு வளர்க்கப்படும் ஆடுகளில் ஒரு முக்கிய இனம் 1909ஆம் வருடத்தில் மத்திய ஆசியாவிலிருந்து ஜெர்மானியரால் கொண்டுவரப்பட்ட காராக்குல் (Karakul) இனமாகும். இவ் வகை ஆட்டின் குட்டிகளில் கறுப்பு நிறமானவற்றின் தோலை அமெரிக்கர்கள் வெகுவாக விரும்புவதால், இது பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒரு வருடத்தில் இவ் வகைத் தோல்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புக்கு அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந் நாட்டின் கடற்கரையில் மீன்பிடித்தல் ஒரு முக்கியத் தொழில். அங்கு வால்விஸ்பே (Walvis Bay) என்னுமிடத்தில் மீனைப் பக்குவப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். கடற்கரைப் பிரதேசத்தில் வால்விஸ்பே முதல் தெற்கே ஆரஞ்சு நதியின் முகத்துவாரம் வரையிலுள்ள மணற் பகுதியில் ஆழமாகத் தோண்டி வைரங்கள் எடுக்கப்படுகின்றன. ஏற்றுமதிப் பொருள்களில் மிகவும் உயர்ந்தவை வைரங்களே. இது தவிரச் சிறிதளவு செம்பு, ஈயம், துத்தநாகம், மாங்கனிஸ் என்பனவும் வெட்டியெடுக்கப்படுகின்றன.

கடற்கரைப் பகுதியில் வறண்ட பாகங்களிலிருந்து பறவை உரங்களும் சேகரிக்கப்படுகின்றன. இந் நாட்டின் தலைநகரம் விண்ட்ஹாக் (Wind Hock). இதன் ஜனத்தொகை சுமார் 35,000. இங்கிருந்து தென்னாப்பிரிக்கக் குடியரசு நாட்டுக்கும் வால்விஸ்பே பட்டணங்களுக்கும் ரெயில்பாதை செல்கிறது.

இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் முக்கியமானவை வைரங்கள், ஈயம், காராகுல் ஆட்டின் தோல், வெண்ணெய், மீன் வகைகள், கம்பளி, தோல் என்பன. இங்கு இறக்குமதி செய்யப்படுபவை துணி வகைகள், உணவுப் பொருள்கள், இயந்திரங்கள், எண்ணெய் வகைகள் என்பன. இங்குள்ள வியாபாரம் முழுவதும் தென்னாப்பிரிக்கக் குடியரசு நாட்டுடனேயே நடைபெறுகிறது. டர்பன் துறைமுகத்தை அடுத்து சர்க்கரை ஆலைகள் அநேகம் உண்டு. நேட்டால் மாகாணத்தில் விளையும் பொருள்களில் சோளமும் நிலக்கடலையும் உட்படும். இங்கு வாட்டில் மரங்களும் அதிகம் வளர்க்கப்படுவதாகக் கூறினோம். இம் மரப்பட்டைகளிலிருந்து திராவகம் எடுத்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. இத் தொழில் செய்யும் முக்கிய கேந்திரம் பீட்டர்மாரிஸ்பர்க் பட்டணம்.

உலோகப் பொருள்கள்

உலோகப் பொருள்களே இந் நாட்டின் முக்கியச் செல்வம். ஒரே இடத்தில் பலவிதமான உலோகங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. உலகிலேயே அதிக அளவில் தங்கம் இங்கு வெட்டியெடுக்கப்படுகிறது. ரான்ட் (Rant) என்னும் பகுதியில் முதன்முதலில் 1866-ல் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. தற்காலத்தில் இத் தங்கச் சுரங்கப் பகுதியில் ஜோகன்னஸ்பர்க் பட்டணம் பிரசித்தியாக விளங்குகிறது. இப் பட்டணத்தைச் சுற்றி 40 தங்கச் சுரங்கங்கள் உள்ளன. தங்கச் சுரங்கங்களில் பூமிக்கு அடியில் வேலை செய்வது ஆப்பிரிக்கர்களே. சுரங்கத்துக்கு வெளியில் சுத்திகரிப்பு வேலை செய்வது ஐரோப்பியர்கள்.

சுரங்கங்களில் வேலை செய்ய ஆப்பிரிக்கர்கள், தூர நாடுகளிலிருந்துகூட வருவதாகக் கூறப்படுகிறது. சமீபத்திலுள்ள பஸுட்டோலாந்து, பெச்சுவாலாந்து முதலிய நாடுகளிலிருந்து மட்டுமன்றி, மலாவி, ரொடீசியா முதலிய நாடுகளிலிருந்தும் வேலை செய்ய ஆட்கள் வருவதுண்டு.

1930ஆம் வருட அளவில் தங்கச் சுரங்கத் தொழில் ட்ரான்ஸ்வால் மாகாணத்திலுள்ள ரான்ட் பகுதியில் 60 மைல் நீளமும் சில மைல் அகலமும் உள்ள இடத்தில் நடந்தது. ஆனால், இன்று சுமார் 300 மைல் வியாபித்திருக்கும் பகுதியில் நடைபெறுகிறது. ஆரஞ்சு ஃப்ரீஸ்டேட்டின் வடபாகம்வரை முக்கியமான சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அங்கு வெல்கம் (Welkom) என்னுமிடத்தில் ஒரு முக்கியமான சுரங்கம் உண்டு.

தங்கம் வெட்டியெடுக்கப்படும் இடத்திலேயே யுரேனியம் கிடைப்பதால் அதையும் ஏற்றுமதி செய்கிறார்கள்.

கேப் மாகாணத்திலுள்ள கிம்பர்லி பட்டணத்துக்கருகிலும் பிரிட்டோயா பட்டணத்துக்கருகிலும் வைரங்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. உலகத்திலேயே இந் நாட்டில்தான் வைரங்கள் அதிகம் கிடைக்கின்றன. வைரக் கற்களை சரியானபடி பட்டை தீட்டுவதற்கு முற்காலத்தில் ஹாலந்திலுள்ள ஆம்ஸ்டர்டாமுக்கு அனுப்பி வந்தனர். ஆனால், 1930ஆம் வருடம் அந் நாடு யுத்தப் பிரதேசம் ஆகிவிட்டபடியால், இந் நாட்டிலேயே கேப் டவுன், டர்பன் நகரங்களில் இத் தொழில் ஆரம்பிக்கப் பட்டது. இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் தங்கத்துக்கு அடுத்தபடியாக விலை உயர்ந்தது வைரம்.

நிலக்கரி வெட்டி எடுப்பதும் இங்கு ஒரு முக்கியத் தொழில். இங்கு நல்ல தரமான நிலக்கரி நேட்டாலிலுள்ள நியூகாஸில் என்னுமிடத்தில் கிடைக்கிறது. இதுவும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ட்ரான்ஸ்வால் மாகாணத்தில் சிறிது செம்பும் வெட்டியெடுக்கப்படுகிறது. அங்கு நல்ல தரம் இரும்புக் கனிகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அதையொட்டி இரும்பு, எஃகு ஆலைகளும் ஏற்பட்டுள்ளன. குரோம் என்னும் தாதுப்பொருள் இங்கு அதிக அளவில் வெட்டியெடுக்கப்பட்டு, அமெரிக்கா முதலிய நாடுகட்கு ஏற்றுமதியாகிறது. இப் பொருள் தோல் பதனிடுவதில் பயன்படுத்தப் படுகிறது. இவை தவிர மாங்கனீஸ், ஆஸ்பெஸ்ட்டாஸ், பிளாட்டினம் என்பனவும் வெட்டியெடுக்கப்படுகின்றன.

ஆப்பிரிக்காவிலேயே தொழில்வளம் மிக்கது இந் நாடுதான். அந் நாட்டின் வருமானத்தில் பாதிக்குமேல் சுரங்கத் தொழில், ஆலைத்தொழில், வியாபாரம்மூலம் கிடைக்கிறது. இங்குள்ள வற்றில் மிகப் பழமையானவை சினி ஆலைத்தொழில், தோல் பதனிடுதல், பழங்களைப் பக்குவப்படுத்துதல் என்பன. சினி ஆலைத் தொழில் டர்பனிலும், தோல் பதனிடுதல் போர்ட் எலிஸபெத்திலும், பழத்தொழில் கேப் மாகாணத்திலும் நடைபெறுகின்றன. தற்காலத்தில் இரும்பு, எஃகு ஆலைத்தொழில்கள் பிரிட்டோரியா பட்டணத்தில் அதிகம் நடைபெறுகின்றன. தோல் பொருள்கள் பூட்ஸ், ஷூஸ் என்பன போர்ட் எலிஸபெத், ஜோகன்னஸ்பர்க், டர்பன், பிரிட்டோரியா முதலிய பட்டணங்களில் நடைபெறுகின்றன. பருத்தி ஆலைத் தொழில் அதிகம் நடைபெறவில்லையானு

லும் டர்பன் நகரில் கம்பளிகள் தயாரிக்கும் ஆலை உண்டு. இங்குள்ள இதர ஆலைகள் சிமெண்ட், ரப்பர் ஆலைகள் என்பன.

தென்னுப்பிரிக்காவிலேயே மிகப் பெரிய பட்டணமான ஜோகன்னஸ்பர்க்கின் ஜனத்தொகை 11 இலட்சம். இதில் $\frac{1}{4}$ பாகம் ஐரோப்பியர். 1866ஆம் வருடம் இப் பகுதியில் தங்கம் கண்டுபிடிக்கப்படுமுன் குடிசைகளாகக் காணப்பட்ட இவ்வூர், இப்போது பெரிய நகராக வளர்ந்துள்ளது. ராண்ட் தங்கச் சுரங்கப் பகுதியிலுள்ள இப் பட்டணம் ஆலைத் தொழிலுக்கும் பிரசித்திபெற்றது.

பிரிட்டோரியா பட்டணத்தின் ஜனத்தொகை $4\frac{1}{2}$ இலட்சம். நாட்டின் தலைநகரான இது, ஜோகன்னஸ்பர்க் நகருக்கு 36 மைல் வடக்கில் அமைந்துள்ளது.

கேப் மாகாணத்திலுள்ள கிம்பர்லி பட்டணம் 77,000 ஜனத்தொகையுள்ளது; வைரச் சுரங்கப் பகுதியின் கேந்திரமாகும். நாட்டின் முக்கியத் தலைநகரான டர்பன் பட்டணத்தின் ஜனத்தொகை 7 இலட்சம். இங்கு ஐரோப்பியரும், ஆப்பிரிக்கரும், இந்தியரும் சம அளவில் வசிக்கின்றனர். இங்குள்ள துறைமுகம் மிகப் பெரிய கப்பல்கள் வந்து தங்கிச்செல்ல ஏற்ற வசதியுடையதாக அமைந்துள்ளது.

டர்பன் பட்டணத்திலிருந்து 56 மைல் உள்நாட்டிலுள்ள பீட்டர்ஸ் மாரிஸ்பர்க் நேட்டாலின் தலைநகரம். இதன் ஜனத்தொகை 1 இலட்சம். இங்குத் திராவகம் தயாரித்தல் முக்கியத் தொழில்.

தென்னுப்பிரிக்காவின் மிகப் பழைய பட்டணமும், பெரியதுமான கேப் டவுன் $7\frac{3}{4}$ இலட்சம் ஜனத்தொகை கொண்டது. இந் நாட்டின் சட்டசபை இங்குதான் கூடுகிறது. இந் நகரின் துறைமுகத்தில் ஐரோப்பாவிலிருந்து, ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் கப்பல்கள் இங்குத் தங்கிப் போவதுண்டு. இங்கிருந்து முக்கியமாக ஏற்றுமதியாவது பழங்களும் பழரசமுமே.

ஈஸ்ட் லண்டன் துறைமுகம் $1\frac{1}{4}$ இலட்சம் ஜனத்தொகை கொண்டது. இதன் பின்புறத்தில் பால் பண்ணைகள் அநேகம் உண்டு. போர்ட் எலிஸபெத் துறைமுகத்தில் தோல் பதனிடும் ஆலையும், காலணி தயாரிக்கும் ஆலையும் உண்டு.

தென்னுப்பிரிக்காவின் கிழக்கு பாகத்தில் ரெயில்பாதைகள் அநேகம் காணப்படுகின்றன. எல்லா முக்கியப் பட்டணங்களும்

ரெயில்பாதையால் இணைக்கப்பட்டுள்ளன. இங்கிருந்து தென் மேற்கு ஆப்பிரிக்கா, ரொடீசியா, மொசாம்பிக், காங்கோலியக் குடியரசு முதலிய நாடுகளுக்கும் ரெயில் பாதைகள் செல்கின்றன. உள்நாட்டிலேயே எல்லா முக்கிய நகருக்கும் விமானப் போக்கு வரவு ஏற்பட்டிருப்பதோடு, ஐரோப்பாவுக்கும் இங்கிருந்து விமானப் போக்குவரவு உண்டு.

இங்கிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் மிக்க விலைமதிப் புள்ளது தங்கம். சமீப காலத்தில் அங்கிருந்து ஒரு வருடத்தில் 300 கோடி ரூபாய் மதிப்புக்குமேல் தங்கம் ஏற்றுமதியாயிற்று. அதற்கு அடுத்தபடியாக ஏற்றுமதியாகும் பொருள் ஆட்டு உரோமம். ஒரு வருடத்தில் ஏற்றுமதியாகும் கம்பளியின் விலை மதிப்பு 70 கோடி ரூபாய். மற்ற ஏற்றுமதிப் பொருள்களாவன :

யுரேனியம்	(65	கோடி	ரூபாய்	மதிப்புக்கு)
வைரங்கள்	(55	,,	,,	,,)
பழங்கள்	(25	,,	,,	,,)
தோல்வகைகள்	(17	,,	,,	,,)
ஆஸ்பெஸ்ட்டாஸ்	(13	,,	,,	,,)
இயந்திரங்கள்	(12	,,	,,	,,)
செம்பு	(11	,,	,,	,,)
சோளம்	(9	,,	,,	,,)

இதர ஏற்றுமதிப் பொருள்கள், நிலக்கரி, வாட்டில் மரத் திராவகம், மது என்பன. ஏற்றுமதியில் பெரும்பாகமும் இங்கிலாந்துக்கே செல்கிறது. சற்றே ரொடீசியாவுக்கும், அமெரிக்கா, இத்தாலி, ஃபிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகட்கும் செல்கிறது. இங்கு இறக்குமதியாவன, இயந்திரங்கள், மோட்டார் கார் என்பன (சுமார் 275 கோடி ரூபாய் மதிப்புக்கு).

துணிவகைகள்	(சுமார்	100	கோடி	ரூபாய்	மதிப்புக்கு)
பெட்ரோல்	(,,	65	,,	,,	,,)
மருந்துகள், உரம்	(,,	30	,,	,,	,,)
உணவுவகை காப்பி, டீ என்பன	(,,	25	,,	,,	,,)
மரத்தடி என்பன	(,,	15	,,	,,	,,)

இறக்குமதியில் பெரும்பாகமும் இங்கிலாந்திலிருந்தே வருகின்றது. அமெரிக்காவும் இதில் பங்கு கொள்கிறது.

தென் ஆப்பிரிக்கக் குடியரசு நாடுகள்

சுமார் $4\frac{3}{4}$ இலட்சம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள தென்னுப்பிரிக்கக் குடியரசு நாட்டில் மொத்தம் ஜனத்தொகை 158 இலட்சம் பேர். அதில் ஐரோப்பிய இனத்தைச் சார்ந்தவர் 30 இலட்சம் பேர். ஆப்பிரிக்க மக்கள் 110 இலட்சமும், ஆசிய மக்கள் சுமார் 5 இலட்சமும் அங்கு வசிக்கின்றனர். பல இனத்தவரின் கலப்பு மணத்தால் ஏற்பட்ட ஜாதியார் 15 இலட்சம் பேர் அங்கு உண்டு.

தென்னுப்பிரிக்கக் குடியரசு நாடு 4 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன : நன்னம்பிக்கை முனை மாகாணம், டிரான்ஸ்வால், ஆரஞ்சு ஃபிரீஸ்டேட், நேட்டால். முன் காலத்தில் ஜெர்மானியர் வசமிருந்த தென்மேற்கு ஆப்பிரிக்கப் பிரதேசம் 1914ஆம் வருஷத்திய உலக மகாயுத்தத்திற்குப்பின் தென்னுப்பிரிக்கக் குடியரசு நாட்டின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டது. ஆனுல், தற்காலத்தில் அப் பிரதேசத்தையும் தன் மாகாணங்களில் ஒன்ருகச் சேர்த்துக்கொள்ளப் போவதாக இந் நாடு அறிவித்தது. இவ் விஷயம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தாரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டும் இதில் இன்னும் ஒரு தீர்மானமும் ஏற்படவில்லை.

இந் நாட்டிலுள்ள ஐரோப்பிய இனத்தவர், பெரும்பாலும் ஹாலந்து, இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவர். ஐரோப்பியரில் முதலில் இங்கு வந்து 1652ஆம் வருடம் குடியேறியவர் ஹாலந்து மக்களேயாவர். அவர்களது இன்றைய சந்ததிகள் டச்சு பாஷையை ஒட்டிய ஒரு மொழி பேசுகின்றனர். அம் மொழியின் பெயர் ஆப்பிரிக்கன்ஸ் (Afrikanss). அங்குள்ள ஐரோப்பியர்களில் $\frac{1}{3}$ பாகம் பேர் இங்கிலாந்தைச் சார்ந்தவர். இங்கிலாந்து நாட்டவர் பெருமளவில் 1820ஆம் வருடத்தில் அங்குச் சென்று குடியேறினர். ஆங்கில மொழிக்கும் ஆப்பிரிக்கன்ஸ் மொழிக்கும் அந் நாட்டில் சம அந்தஸ்து உண்டு. ஃபிரெஞ்சு நாட்டவரும் சிலர் அங்குச் சென்று குடியேறியுள்ளனர்.

அங்கு வசிக்கும் ஆப்பிரிக்க நீக்ரோ ஜாதியாரில் பாண்டு இனத்தவர்தாம் அதிகம். அங்குள்ள ஆதி குடிகளாகிய புஷ்மென், ஹாண்ட் அண்ட் டாட் என்பவர்கள் பாலைப் பகுதிகளில் நடோடிகளாக வாழ்கின்றனர். 110 பேர் கொண்ட பாண்டு ஜாதியார் தற்காலத்தில் மிகவும் முன்னேறி வருகின்றனர். வெளிநாடுகளில் சென்று, டாக்டர்களாகவும், இஞ்சினீயர்

களாகவும், வக்கீல்களாகவும் பயிற்சி பெற்றுப் பெரும்பாலோர் மேல்நாட்டு நாகரிகத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

அங்குள்ள ஆசிய மக்கள் அனைவரும் இந்தியாவிலிருந்து சென்றவர்களே. ஆதியில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய அங்குச் சென்றவர்கள், பெரும்பாலும் நேட்டால் மாகாணத்திலும், சிறிதளவு டிரான்ஸ்வால், கேப் மாகாணங்களிலும் வசிக்கின்றனர். அவர்களில் சிலர் மிகப் பெரிய செல்வர்களாயிருக்கின்றனர். பெரும்பாலரும் சிறு தொழில் செய்வோராகவும் வியாபாரிகளாகவும், வக்கீல்களாகவும், டாக்டர்களாகவும் இருக்கின்றனர். டர்பன் பிரதேசத்தில் $\frac{1}{8}$ பாகம் நிலம் அவர்கள் கைவசமிருக்கிறது. ட்ரான்ஸ்வால் மாகாணத்தில் சீனர்கள் சிலர் வசிக்கின்றனர். கேப் டவுன் பட்டணத்தில் சுமார் 35 ஆயிரம் மலேய ஜாதியினர் வசிக்கின்றனர். அவர்களில் அதிகம் பேர் முகம்மதிய மதத்தைச் சார்ந்தவர்.

ஐரோப்பியருக்கும், நீக்ரோக்களுக்கும் ஏற்பட்ட கலப்பு மணத்தால் உண்டான கலப்பு இனத்தவர் சுமார் 15 இலட்சம் பேர் கேப் மாகாணத்தில் வசிக்கின்றனர். அவர்கள் தங்களை நீக்ரோ எனக் கூறிக்கொள்வதில்லை. அவர்கள் ஐரோப்பியர் என யாரும் ஒப்புக்கொள்வதில்லை. இவ்விதத் திரிசங்கு சொர்க்கத்தில் அவர்கள் வசிக்கின்றனர்.

இந் நாடு 1961-ல் குடியரசாயிற்று. இந் நாட்டின் சட்ட சபையில் ஐரோப்பியர்களே அங்கம் வகிக்கலாம். அதன் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பதும் ஐரோப்பியர்களே. கறுப்பு நிறத்தவருக்கு ஓட்டுரிமை இல்லை. நாட்டின் தலைநகரம் பிரிட்டோரியா பட்டணம். ஆனால், கேப் டவுன் பட்டணத்தில்தான் சட்டசபை கூடுவது வழக்கம். ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஓர் ஆட்சிமன்றம் உண்டு. அதன் அங்கத்தினர்களும் ஐரோப்பியர்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுவர்.

தென்னாப்பிரிக்கக் குடியரசு நாட்டுச் சர்க்கார் கையாளும் இவ்வித இன ஒதுக்கல் கொள்கையை உலகத்து நாடுகள் எல்லாம் கண்டித்திருக்கின்றன.

ஆப்பிரிக்கர்களை வெள்ளையர் வசிக்கும் பகுதிகளிலிருந்து ஒதுக்கிவைக்கும் கொள்கையைத் தவிர, இந்தியர்களையும் ஒதுக்கி வைக்கின்றனர். அவர்கள் அந் நாட்டில் அந்நியர்கள் என்றே கருதப்படுகின்றனர். இந்தியர்களுக்கு ஓட்டுரிமை இல்லை; ஆட்சியில் பங்கில்லை. இனி இந்தியர் எவரும் அந் நாட்டில் பிரவேசிக்கக்

கூடாது. அங்குள்ளவரும் கூடிய சீக்கிரம் வெளியேறும்படி கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

இயற்கை அமைப்பு

தென்னாப்பிரிக்கக் குடியரசு நாடு சுமார் 3000' சராசரி உயரமுள்ள ஒரு பீடபூமிப் பிரதேசம் என்றே சொல்லவேண்டும். ஆங்காங்கே சில மலைகளும் காணப்படுகின்றன. பீடபூமியின் பல பாகங்களிலும் உலோகச் சுரங்கங்கள் காணப்படுகின்றன. பீடபூமியின் ஓரங்கள் உயர்ந்து மலைகளாகக் காணப்படுகின்றன. கிழக்கு ஓரத்திலுள்ள ட்ரேகன்ஸ்பர்க் மலைகளே மிகவும் உயர்ந்தவை. அதன் உயரம் 11 ஆயிரம் அடி. பீடபூமியின் மேற்கு ஓரம் 6000' உயரம். பீடபூமியின் தென்பாகத்திலும் மலைகள் காணப்படுகின்றன. இம் மலைகளின் இடையிலுள்ள பள்ளத்தாக்குகளுக்குப் பெரிய காரூ (Karroo) சிறிய காரூ என்று பெயர். இந் நாட்டின் கடற்கரைச் சமநிலப் பகுதி வெகு குறுகியது. இந் நாட்டின் முக்கிய நதிகள் ஆரஞ்சு நதியும், அதன் உபநதியான வால் நதியுமாகும். இவை இரண்டும் ட்ரேகன்ஸ்பர்க் மலையில் உற்பத்தியாகி, மேற்கு நோக்கிப் பாய்கின்றன. நாட்டின் வடக்கில் லிம்போபோ நதி பாய்கிறது. பீடபூமியின் கிழக்குத் தெற்குச் சரிவுகளில் சில சிறிய நதிகள் பாய்கின்றன. இந் நதிகள் ஒன்றிலும் படகுகள் செல்ல முடியாது. இந் நதிகளில் நீர் வீழ்ச்சியும், துரிதப் போக்கும் காணப்படுவதாலும், நதி முகத் துவாரங்கள் மணல் மேடுகளால் அடைபட்டிருப்பதாலும், கோடைக்காலத்தில் நீர் வற்றிவிடுவதாலும், அவை போக்கு வரவு மார்க்கங்களாகப் பயன்படுவதில்லை. மின்சாரம் எடுக்கவும் பயன்படுவதில்லை. நாட்டின் மேற்குப் பாகத்தில் காணப்படும் சில உட்குழிந்த பிரதேசங்களில் மழைக்காலத்தில் மாத்திரம் சிறிது நீர் தேங்கி நிற்பதுண்டு.

இந் நாடு முழுவதும் பீடபூமிப் பிரதேசம்; ஆகையால் இங்கு உஷ்ணம் குறைவாகவே இருக்கிறது. பிரிட்டோரியா பட்டணத்தில் வருட உஷ்ணம் 63°F. கேப் டவுன் பட்டணத்தில் வருட உஷ்ணம் 62° F. குளிர்காலத்தில் குளிர் சற்றே அதிகமாக இருப்பதுண்டு. இந் நாட்டின் மேற்குக் கடற்கரையில் ஒரு குளிர்ந்த பெஸ்க்வலா நீரோட்டமும், கிழக்குக் கரையில் வெப்பமான மொஸாம்பிக் நீரோட்டமும் செல்லுவதால், இவை அப் பகுதிகளில் வெப்பத்தைப் பாதிக்கின்றன. மேற்குக் கடற்கரைப் பகுதியில் உள்ள போர்ட் நல்லத் பட்டினத்தில் வருட வெப்பநிலை 52° F. கிழக்குக் கடற்கரையில் உள்ள டர்பன் துறைமுகத்தில் வருட வெப்பநிலை 70° F.

இந் நாட்டில் தென் கிழக்கு வியாபாரக் காற்றுகள் வருடம் முழுவதும் வீசுவதாலும், கோடையில் அவை மிகப் பலமாக வீசுவதாலும், இந் நாட்டில் கோடைக்காலத்தில் அதிக் மழை பெய்கிறது. மேற்கே போகுந்தோறும் மழை குறைவு. கிழக்கில் உள்ள நேட்டால் கடற்கரையில் ட்ரேகன்ஸ்பர்க் மலேயிலும் மழை அதிகம். பிரிட்டோரியா பட்டணத்தில் வருட மழை 26″. போர்ட் நல்லத் பட்டினத்தில் வருட மழை 2″தான்.

நேட்டால் மாகாணத்தில் வனங்கள் காணப்படுகின்றன. ட்ரேகன்ஸ்பர்க் மலேகளில் காணப்படும் வனங்களில் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட வாட்டில் மரங்கள் (Wattle) அதிகம் வளர்க்கப்படுகின்றன. இம் மரப் பட்டைகளின் சாயம் தோல் பதனிட உதவுகிறது. மலேகளின் மேற்கில் புல் பிரதேசங்களே காணப்படுகின்றன. இப் புல் பிரதேசத்துக்கு வெல்டு என்று பெயர். அதற்கு மேற்கில் குற்றுச் செடிகளும் காலஹாரிப் பாலேயும் காணப்படுகின்றன. கேப் மாகாணத்தில், மத்திய தரைக் காலநிலே ஏற்படுகிறது. ஆப்பிரிக்காவுக்கு வடமேற்கில் என்ன காலநிலே ஏற்படுகிறதோ, அதே காலநிலே, இங்கும் காணப்படுகிறது.

இந் நாட்டின் இயற்கைத் தாவரம் பெரும்பாலும் மிதமண்டலப் புல் பிரதேசமானபடியால் இங்குள்ள முக்கியத் தொழில் மாடு வளர்த்தல். வருட மழை 20″க்கு மேற்பட்ட பகுதிகளே இத் தொழிலுக்கு மிகவும் ஏற்றது. வறட்சியான காலங்களில் நீர் கிடைப்பது அரிதாகையால் இத் தொழிலுக்குச் சில வருடங்களில் குந்தகம் ஏற்படுவதுண்டு. ஆப்பிரிக்க மக்கள், மாடுகளின் தரத்தைவிட எண்ணிக்கையைப் பெரிதும் மதிப்பதால் அவற்றின் தரத்தை உயர்த்த முயல்வதில்லே. சமீப காலத்தில் ஐரோப்பியர்கள் புதுவித மாடுகளே இறக்குமதி செய்து, இத் தொழிலே அபிவிருத்தி செய்கிறார்கள். நாட்டின் கிழக்கு, தெற்குப் பிரதேசங்களிலும், கேப் மாகாணத்தில் நீர் வசதியுள்ள இடங்களிலும் பால் பண்ணேகள் அநேகம் காணப்படுகின்றன. பாலும், வெண்ணெயும், பாலடைக்கட்டியும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு, சில வருடங்களில் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆடு வளர்த்தலும் இங்கு ஒரு முக்கியத் தொழிலாகும். இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் முக்கியப் பொருள் கம்பளி. வருடந்தோறும் சுமார் 70 கோடி ரூபாய் மதிப்புள்ள கம்பளி ஏற்றுமதியாகிறது. கேப் மாகாணத்தின் வடபாகத்திலும், காரு

பள்ளத்தாக்கிலும், ட்ரேக்கன்ஸ்பர்க் மலைகளிலும் 7000′ உயரம் வரையில் ஆடுகள் அதிகம் வளர்க்கப்பட்டு, அவற்றின் கம்பளி வெளிநாடுகட்கு ஏற்றுமதியாகிறது. கம்பளி ஆடைகள் செய்யும் ஆலைகளும் அந் நாட்டிலேயே அமைக்கப்பட்டுவருகின்றன. அங்குக் கோழிகளும் அதிகம் வளர்க்கப்பட்டு, முட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சிறு காரு பகுதியில் கோழிகள் அதிகம் வளர்க்கப்பட்டு, அவற்றின் இறகுகள் அலங்காரப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இந் நாட்டின் மண் அதிகச் செழிப்பற்றதாலும், பொதுவாக மழை குறைவாகையாலும், இங்குப் பயிர்த்தொழில் அதிகம் முன்னேற்றமடையவில்லை. பீடபூமியில் நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டுவருகின்றன. ஆனுல், ஆரஞ்சு, வால்,லிம்போப்போ நதிகளில் அணைகள் கட்டிப் பழத் தோட்டங்களுக்கும், ஆடு மாடு வளர்த்தலுக்கும் பயன்படுத்துகிருர்கள்.

இந் நாட்டில் விளையும் தானியங்களில் முக்கியமானது சோளம். வீருட மழை 20″க்கும் மேற்பட்ட இடங்களில் இது பயிராகிறது. ட்ரான்ஸ்வால், ஆரஞ்சு மாகாணங்களிலும், நேட்டால் பிரதேசத்தின் மலை அடிவாரங்களிலும் பயிர் செய்யப் படுகிறது. மக்களின் முக்கிய உணவோடு மாட்டுத் தீவனமாக வும் இது பயன்படுகிறது. கேப் மாகாணத்தில் மட்டுமே கோதுமை பயிராகிறது. சோளத்தைவிட இது குறைந்த அளவில் பயிர்செய்யப்பட்டாலும், இது அந் நாட்டின் அவசியத்துக்குப் போதுமானதாக இல்லை.

கேப் மாகாணத்தில் பழத் தோட்டக் கிருஷி மிக முக்கியம். நாட்டின் இதர பாகங்களிலும் பழத் தோட்டங்கள் வளர்க்கப் பட்டு, பழங்களே ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கேப் மாகாணத்தின் வடமேற்கில் பெருமளவில் ஆப்பிளும், ஆரஞ்சும், திராட்சையும், பெயர், பீச், ஆப்ரிக்காட் முதலிய பழவகைகளும் பயிர் செய்யப்படுகின்றன. கேப் டவுனிலிருந்து 120 மைல் பிரதேசத்தில் அதிகமாகப் பயிர் செய்யப்பட்டு உலர வைத்த பழங்களாகவும், டப்பியில் அடைத்த பழங்களாகவும், ஜாம், ஒயின் என்பனவாகவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்குள்ள பயிர்களில் திராட்சை மிக முக்கியம். ஜனவரி, பிப்ரவரி மாதங்களில், நூற்றுக்கணக்கான பேர் இத் தொழிலில் ஈடுபடுவர். திராட்சை முழுவதும், ஒயின், பிராந்தி என்ற மது வகைகளாகத் தயாரிக்கப்படுகின்றன. மற்றப் பழங்கள், நீர் வசதியுள்ள பிற பகுதிகளிலும் பயிர் செய்யப்படுகின்றன,

பயிர்த்தொழில் ஏற்றுமதியில் கம்பளிக்கு அடுத்தபடியாக பழங்களே அதிக விலை உயர்ந்தவை. நேட்டால் மாகாணத்தில் வாழையும் மாம்பழமும் உற்பத்தி செய்யப்பட்டாலும், அவை ஏற்றுமதி செய்யப்படுவதில்லை.

ட்ரான்ஸ்வால் மாகாணத்திலும் புகையிலை அதிகம் பயிராகிறது. நாட்டிலேயே சுருட்டு, சிகரெட் தயாரிக்கப்பட்டாலும் சிறிதளவு ஏற்றுமதியும் ஆகிறது. அதே பகுதிகளில் சிறிதளவு பருத்தியும் பயிராகிறது. எதிர்பார்த்தபடி அதிக அளவில் பயிர் செய்யமுடியாததால் பருத்தி இந் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டு, துணி உற்பத்திக்கு உதவுகிறது.

நேட்டால் மாகாணத்தின் கடற்கரையில் கரும்பு அதிகம் பயிர் செய்யப்படுகிறது. இதில் ஐரோப்பியர்களும் ஆப்பிரிக்கர்களும் ஈடுபடுகின்றனர். சிறிதளவு சோளம், நிலக்கடலை, புகையிலை என்பவற்றைப் பயிர் செய்கின்றனர். ஐரோப்பியர்கள் வெகு சிலரே; நாட்டின் பாதிப் பாகம் அவர்கள் கையில் உள்ளது. அவர்களே பெரிய அளவில் ஆடு மாடு வளர்த்தலை நடத்துகின்றனர். நாட்டின் வடமேற்கில் ஆஸ்பெஸ்டாஸ் வெட்டியெடுக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நல்ல தர இரும்புக் கனிகள் அங்குக் காணப்படுகின்றன. ஆப்பிரிக்க மக்களின் நன்மைக்காக, ஒவ்வொரு குடும்பத்துக்கும் 7 ஏக்கர் நிலமும், 15 மாடுகளும் கொடுத்து, அவர்களைக் குடி அமர்த்தும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

Books for reference:

1. *Africa* by L. Dudley Stamp (Chapman & Holl) 1962.
2. *Africa* by L. S. Suggate (Harrap) 1964.
3. *Africa* by Fitzgerald (Methuen).
4. *West Africa* by R. J. Harrison Church (Longmans) 1957.
5. *South Africa* by Moneca Cole (Methuen).

பொருள் குறிப்பு அகர வரிசை

ம

ய

ர

ல

வ

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை — 9

1965 வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்			ரூ. பை.
* 1.	பொருளாதாரம் - II	சி. வேலாயுதம்	9—00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	திருமதி ஆர். தாமரஜாட்சி	12—00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம் - I	தி. சி. மோகன்	12—00
4.	பொருளாதாரம் ஓர் அறிமுகம் - II	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10—75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7—00
* 6.	பணவியலும் பாங்கியலும் - II	சி. வேலாயுதம்	11—50
7.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல்	7—50
* 8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	பி. வி. ஸ்ரீநிவாசன்	5—50
* 9.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம்	4—75
10.	இந்தியப் பொருளியல் - I	எம். பாலசுப்பிரமணியன்	10—00
11.	இந்தியப் பொருளியல் - II	எம். லூர்துநாதன்	4—25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை - I	சி. சுந்தரராஜன்	10—75
13.	நமது பொருளாதாரப் பிரச்சினை - II	எஸ். குழந்தைநாதன்	10—50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு - I	கி. சி. இராமசாமி	6—00
15.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு - II	,,	6—00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	தி. சி. மோகன்	5—00

* மூல நூல் (Original Book)

			ரூ. பை.
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு - I	மு. க. சுப்பிரமணியம்	11—00
18.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம் - I	மா. குமாரசாமி	10—00
19.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி - I	தே. வேலப்பன்	10—00
20.	பணம்—சிறு விளக்கம்	கோ. இராதாகிருஷ்ணன்	10—00
*21.	வணிக இயலின் தத்துவங்கள்	ரு. ஆளுடைய பிள்ளை	9—50
22.	பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி	சு. ரா. கருப்பண்ணன்	11—00

வரலாறு

*23.	பிரிட்டன் வரலாறு - I	கி. ர. அனுமந்தன்	10—00
*24.	பிரிட்டன் வரலாறு - II	,,	9—75
*25.	ஐரோப்பிய வரலாறு - I	டி. வி. சொக்கப்பா	4—50
26.	ஐரோப்பா—கடந்த ஐந்து நூற்றாண்டு காலச் சரித்திரம்	வை. விருத்தகிரீசன்	15—00
27.	இங்கிலாந்து வரலாறு - I	இரா. அண்ணாமலை	13—00
28.	இங்கிலாந்து வரலாறு - II	பா. மாணிக்கவேலு	13—00
29.	இங்கிலாந்தின் வரலாறு - I	க. த. திருநாவுக்கரசு	15—00
30.	இந்தியாவின் சிறப்பு வரலாறு - I	தி. வெ. குப்புசாமி	7—50

அரசியல்

*31.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4—75
32.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	8—50
33.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8—50
34.	பன்னாட்டு அரசியல் - I	திருமதி நூர்ஜஹான்பாவா	*16—00
35.	பொதுத்துறை ஆட்சி இயல் - I	வீ. கண்ணையா	9—00
36.	பொதுத்துறை ஆட்சி இயல் - II	அ. ஜெகதீசன்	7—25

			ரூ.பை.
உளவியல்			
37.	குழந்தை உளவியல் - I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8—00
38.	குழந்தை உளவியல் - II	கி. ர. அப்புள்ளாச்சாரி	7—00
39.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7—00
40.	இளையோர் உளவியல் - I	தி. இரா. அரங்கராசன்	12—00
41.	இளையோர் உளவியல் - II	,,	9—00
42.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9—25
43.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரிப்பர்ராஜ்	11—00
44.	பித்தரின் உள்ளம்	,,	3—00
தத்துவம்			
45.	இந்து சமயத் தத்துவம்	ஞா. ராஜாபகதூர்	5—50
அறவியல்			
46.	அறவியல்—ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	8—50
அளவையியல்			
47.	அளவை இயல்—தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	2—50
மானிடவியல்			
*48.	மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	4—75
49.	பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன்	5—50
சமூகவியல்			
50.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன்	10—00
புவியியல்			
*51.	ஆசியா - I	கொ. சேஷ. நரசிம்மன்	9—50
*52.	ஆசியா - II	,,	8—75
*53.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	8—50
*54.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	8—25

* மூல நூல் (Original Book)

			ரூ. பை.
*55.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	4—00
56.	புவிப்புறவியல் - II	நா. அனந்தபத்மநாபன்	6—00
*57.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	9—00
*58.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	6—25
*59.	சமுத்திரவியல்	கோ. இராமசுவாமி	6—50
60.	கால நிலை இயல் - I	கொ. சேஷ. நரசிம்மன்	10—00
61.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	11—00
*62.	புவி அமைப்பு இயல்	சி. விசுவநாதன்	4—75
புள்ளியியல்			
*63.	புள்ளியியல் - அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10—00
64.	புள்ளியியல் முறைகள் - I	கோ. சண்முகசுந்தரம்	10—00
65.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6—50
விலங்கியல்			
*66.	விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	12—00
பௌதிகவியல்			
67.	ஒளிநூல்	ச. சம்பத்து	10—00
பொது நூல்கள்			
68.	மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3—25
69.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	எஸ். இலட்சுமி	3—50
70.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8—00
71.	சேர்க்கை - நூல்	ஆ. சுப்பிரமணியன்	2—50
72.	நீரிழிவு - க்ஷயரோகம்	ஜி. வேங்கடசாமி, ஏ. கதிரேசன்	2—50

* மூல நூல் (Original Book)

தமிழ் வெளியீட்டுக் கழகப் புதிய வெளியீடுகள்–1966

வரலாறு
கிரேக்க நாட்டு வரலாறு-I, II, III — ஜே. பி. ப்யூரி

அரசியல்
ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர் — பிளமனட்ஸ்
பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்-I, II — லியனுர்ட் டி. ஒயிட்

பொருளாதாரம்
பென்ஹாம் பொருளாதாரம்-I, II — ஃபிரெடெரிக் பென்ஹாம்
வரவுசெலவுத் திட்டம் — ஆர். ரங்காச்சாரி

தத்துவம்
அறிவு ஆராய்ச்சி இயல் — ஆர். இராமானுஜாச்சாரி
மேலைநாட்டுத் தத்துவம் — ரா. ஸ்ரீ. தேசிகன்
அத்துவித தத்துவம் — T. M. P. மஹாதேவன்

உளவியல்
குமர உள்ளம் — டாக்டர் எம். அறம்

புவியியல்
தென் அமெரிக்கா — எம். என். பத்மநாபன்
தென் கண்டங்கள்—ஆப்பிரிக்கா — எஸ். முத்துக் கிருஷ்ணக் கரையாளர்
தென் கிழக்கு ஆசியா—புவியியல் — ஜி. கிருஷ்ணமூர்த்தி

கணிதம்
வகை நுண்கணிதம் — டி.கே.மாணிக்கவாசகம்பிள்ளை
தொகை நுண்கணிதம் — தி. கோவிந்தராசன்
ஆயத்தொலை வடிவகணிதம் — டி.கே.மாணிக்கவாசகம்பிள்ளை

விஞ்ஞானம்
வானவெளி வெற்றி — டாக்டர் எம். ஏ. தங்கராஜ்
ரேடியோ — டாக்டர் பி.திருஞானசம்பந்தம்
எக்ஸ்-ரே — பெ. நா. அப்புசாமி
பாம்புகள் — பெ. மா. அண்ணுமலை
தாவரம்-வாழ்வும் வரலாறும்-I — டாக்டர் சி. சீனிவாசன்

மருத்துவம்
மகப்பேறும் மாதர் நோயும் — ஏ. கப்ளான்
பாக்டீரியா — சு. சுந்தரம்
உணவும் ஊட்டமும் — வி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்

பொறியியல்
நீங்களே வீட்டைக் கட்டலாம் — ஆர். எஸ். தேஷ்பாண்டே

சட்டம்
குற்ற இயல் சட்டம் — எம். சண்முக சுப்பிரமணியம்

பொது
கரும்பு — கு. பெரியசுவாமி
முற்காலச் சோழர் கலையும் சிற்பமும் — எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்

இவற்றுடன் மேலும் 11 நூல்களும் ஆக 42 நூல்கள்